# சைவ சமய இலக்கிய அகராதி

## தொகுதி – I

ஆசிரியர்

'செந்தமிழ்ச் செல்வர்', 'தமிழாகரர்',
'நல்லாசிரியர்', 'திருக்குறள் செம்மல்'

**முனைவர் ச. சாம்பசிவனார்**

தமிழ் மாருதம்

அ.பெ. எண் 35
மதுரை–625 016

நூல் விவரக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : சைவ சமய இலக்கிய அகராதி (தொகுதி – 1) |
| நூலாசிரியர் | : முனைவர் ச. சாம்பசிவனார் |
| வெளியீடு | : தமிழ்மாருதம்,<br>அ. பெ. எண். 35,<br>67/1, பாரத வங்கி அலுவலர் 1வது குடியிருப்பு,<br>புறவழிச்சாலை,<br>மதுரை – 625 016. (தொலைபேசி : 2384246) |
| உரிமை | : ஆசிரியருக்கு. |
| பதிப்பு | : முதற்பதிப்பு, நவம்பர், 2006 |
| பக்கம் | : 184 |
| படிகள் | : 1000 |
| அச்சிட்டோர் | : அமுதச்சகம், மதுரை – 625 016.<br>(தொலைபேசி : 2382029) |
| விலை | : ரூ. 75/– |

**"SAIVA SAMAYA ILAKKIYA AGARATHI"**
**(Vol. I)**

**By**
**DR. S. SAMBASIVANAR, M.A., Ph.D.,**

This book is published with the Financial Assistance of Tirumala - Tirupati Devasthanams under their scheme to publish religious books. My sincere thanks to T.T.D. - Author.

Published by
DR. S. SAMBASIVANAR,
Tamil Maarudham,
P.B.No. 35,
67/1, State Bank Staff Ist Colony,
Bye Pass Road,
Madurai - 625 016.

# முன்னுரை

*"அன்பும் சிவமும் ஒன்றேயாம்!*
*அன்பாய் வாழ்தலே மெய்யேயாம்!*
*அன்பால் சிவத்தை உணர்தல்தான்*
*அதுவே முத்திக் குறைவிடமாம்!*
*அன்பால் அடியவர் வாழ்ந்தமையால்*
*அவனியும் சிறக்க எண்ணினரே!*
*அன்பால் நூல்கள் ஆக்கிவைத்தார்!*
*அவற்றுக் கிணைதான் வேறுண்டோ?" (சிவனார் விடுபூக்கள்)*

"சைவம் என்பது 'சிவசம்பந்தம்' என்று பொருள் தரும். 'சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது' என்பது திருமந்திரம். 'சிவம்' என்பது 'சிவன்' எனவும் வழங்கும். வேற்றுச் சமயத்தவரும் விரும்பிக் காதலித்து மேற்கொண்டொழுகும் வீறு சிறந்தது, 'சிவம்' எனும் இச்செந்தமிழ்ச் சொல்! 'சிவம் என்பது தமிழ்ச்சொல்' என மேனாட்டு மொழிநூல் வல்லுநரான கிரையர்சன் முதலியோர் நடுநின்று கண்டுரைத்துள்ளனர்.

"சிவசம்பந்தம் சைவம் ஆதலால், சிவத்துக்கும் உயிர்கட்கும் உள்ள சம்பந்தம் 'சைவம்'; சிவத்துக்கும் உயிரில்லாத உலகிற்கும் உள்ளதொடர்பு 'சைவம்'. ஆகவே, உயிர்கட்கும் உலகிற்கும் உள்ள தொடர்பு சைவமாம். உயிரின் வேறாய் அதற்கு நிலைக்களமாய் விளங்கும் உடம்பு, உலகியற் பொருளாய் விடுவதால் உயிர்க்கும் உடம்புக்கும் உளதாகிய தொடர்பும் சைவமாம். உயிர்க்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பாவது 'அன்பு' என்றார் திருவள்ளுவர். 'சிவம்' எனக் கண்டார் திருமூலர். அதனால் அவர் 'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் . . .' என்று விளக்கினார். இச்சம்பந்தத்தை அறிந்தொழுகும் திருநெறி, சைவம் ஆயிற்று!" (தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபை 65ஆம் ஆண்டு நிறைவு விழாத் தலைமையுரை) என்பது 'சைவம்' என்பதற்கான 'உரைவேந்தர்' ஔவை சு. துரைசாமிப்பிள்ளை தரும் விளக்கம்.

இத்தகு மேன்மைகொள் சைவ சமயத்தில் தோன்றிய நூல்கள் எண்ணில் பலவாம். சங்க இலக்கியமாகிய 'திருமுருகாற்றுப்படை' தொடங்கி இக்காலம் வரை, சிவனடியார்களும் முருக பத்தர்களும் பாடிய சைவ சமய இலக்கியங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. பன்னிரு திருமுறைகள், பெரியபுராணம், தலபுராணங்கள், 'பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம்' எனும் சிற்றிலக்கியங்கள்.

கீர்த்தனைகள், காவடிச் சிந்து, வழிபாட்டுப் பாடல்கள், சைவ சித்தாந்த நூல்கள் எனப் பலவும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. ஒரு நூறு ஆண்டுக்கு முன்னிருந்த நூல்கூடக் காலப்போக்கில் பெயரளவில் மட்டுமே தெரியு மளவுக்கு உள்ளது. இவ் ஆய்வில் இடம்பெற்றுள்ள பல நூல்களைப் பலரும் பார்த்தறியார்; கேட்டறியார். இத்தகைய நூல்கள் பற்றிய குறிப்பும் இதன்கண் உள்ளன.

**'சைவ சமய இலக்கிய அகராதி'** எனும் இவ் ஆய்வில், பெரும்பாலும் கிடைத்த நூல்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. 417 நூல்களின் வரலாறு செம்மையாகச் சொல்லப்பட்டுள்ளது.

'நூலின் தலைப்பு ; அதனையடுத்து நூலாசிரியரின் பெயர்; பின்னர் அந்த நூலின் அமைப்பு, யாப்பு வடிவம், பாடல் எண்ணிக்கை, சொல்லப்படும் பொருள்' எனும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூலையும் படித்துப் பார்த்து, அதிலுள்ள சுவையான அல்லது பயனுள்ள ஒரு பாடலும் தரப்பட்டுள்ளது. அப்பாடலைக் காண்பவர் எவரும், அந்நூலின்கண் ஆர்வங்கொண்டு, அந்நூலினைப் படிக்கத் தலைப்படுவர். **இத்தகைய அமைப்பினை வேறு இலக்கிய அகராதிகளில் காண்டல் அரிது.**

சுருங்கிய கால எல்லைக்குள் – அஃதாவது ஓராண்டுக் காலத்தில் செய்து முடிக்கப்பட்ட ஆய்வு இது! இதில் இடம்பெற்றுள்ள பல நூல்களைக் கண்டறிவதற்குச் சென்னை, தஞ்சை முதலான ஊர்கட்குச் சென்று நூலகங்களைப் பார்வையிட வேண்டிய தாயிற்று!

மேலும் இதேபோல் இரண்டு அல்லது மூன்று தொகுதிகள் வெளியிடலாம். ஆனால், அரிய நூலகங்கள் இருக்குமிடம் சென்று பல நாட்கள் தங்கிச் செய்யவேண்டிய பணி இது!

இந்த அளவிலேனும் 'சைவ சமய இலக்கிய அகராதி' எனும் ஆய்வினைச் செய்து முடிக்க இசைவு தந்த, பல்கலைக்கழகத் துணைவேந்தர் – **பெருமைமிகு பேராசிரியர் ப. க. பொன்னுசாமி** அவர்கட்கு என் மனங்கனிந்த நன்றியை உளப்படுத்துகின்றேன்.

இப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளர், ஆட்சிக் குழு உறுப்பினர், இசுலாமியத் துறைத்தலைவர், முனைவர் உயர்திரு பி.எம். அஜ்மல்கான் அவர்கட்கும், பல்கலைக் கழகப் பதிவாளர் பெருமைமிகு. முனைவர் வ. அழகப்பன் அவர்கட்கும், பிற ஆட்சிக் குழு உறுப்பினர்கட்கும், அலுவலர்கட்கும் என் மனமுவந்த நன்றி! என்னை இத்துறையில் பெரிதும் ஈடுபடுத்தி இத்தகைய ஆக்கப் பணிகள் இடையறாது செய்வதற்குத் துணைபுரியும், துறைத்தலைவர் முனைவர் திரு. ச. கங்காதரன் அவர்கட்கும், இத்துறையைச் சார்ந்த முனைவர் (திருமதி) எம். தேவகி அவர்கட்கும் என் நன்றியை உளப்படுத்துகின்றேன்.

இந்நூல் வெளிவர நிதி உதவியளித்த திருமலை – திருப்பதி தேவத்தானத்தினர்க்கு என் நன்றி!

இதனை விரைவில் கணினிமூலம் ஆப்செட்டில் அச்சடித்துக் கொடுத்த அமுதச்சகத்தார்க்கு என் நன்றி!

தமிழ்ப்பெருமக்கள் – குறிப்பாகச் சைவ மெய்யன்பர்கள் இதனை வாங்கிப் படித்துச் சைவ இலக்கியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் வேண்டுகோள்!

என்னை இப்பணியில் ஈடுபடுத்திய தோன்றாத் துணையாய் இருந்துவரும் எம்பெருமான் திருவருளை நினைந்து வழுத்துவன்.

வாழ்க தமிழ்!

அன்பன்

மதுரை – 16 முனைவர் *ச. சாம்பசிவனார்*

30–11–2006

தி. வ. ஆண்டு 2038

## DECLARATION

If any dispute or criticism arises in connection with this printed book, I am full responsible at my own risk.

Madurai -16. Signature of the author,

Date:30-11-2006

# சைவ சமய இலக்கிய அகராதி
## தொகுதி - 1

## ‘ஒ’

## அகப்பேய்ச் சித்தர் பாடல்கள்

*அகப்பேய்ச் சித்தர்*

அலையும் மனத்தைப் பேயாக உருவகப் படுத்திப் பாடியிருப்பதால், 'அகப்பேய்ச் சித்தர்' எனப்பட்டார்.

மனத்தை ஒரு பேயாகக் கருதி, அதற்குப் பெண் உருக்கொடுத்து, அதனைத் தம்முன் நிறுத்திப் பாடியுள்ளார், இச்சித்தர்.

பாடல்தோறும் 'அகப்பேய்' என முடிகிறது.

இதில், ஈறடி கொண்ட பாடல் 90 உள்ளன.

*"சைவ மானதடி அகப்பேய்*
*தானாய் நின்றதடி!*
*சைவம் இல்லை யாகில் அகப்பேய்*
*சலம் வரும் கண்டாயே?"*

என்பனபோல் வரும் பாடல்களைக் காணலாம்.

## அகிலாண்ட நாயகி பதிகம்

*மாதவச் சிவஞான சுவாமிகள்*

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள செப்பறையுடன் இயைந்துள்ள இராசவல்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை அகிலாண்ட நாயகி மீது பாடப்பட்டது. 10 பாடல்கள் கொண்டது.

*"பண்டைவினை யாலும்வரு பழவினையி னாலும்உறு*
*பாழ்த்த,கன் மத்தி னாலும்*
*பாழான மாயைப் புணர்ச்சியா லும்தொலையில்*
*பலபல தநுக்கள் தூக்கிக்*
*கொண்டு சுழல் பாவியேன் செய்கின்ற பிழையெலாம்*
*குணம் எனக் கருதி . . ."*

என்பன போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்கள் கொண்ட நூல்.

## அங்கயற்கண்ணி மாலை

*உ.வே. சாமிநாதையர்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுத்துப் பாடுவது. 'அங்கயற்கண்ணி', மதுரையில் கோயில் கொண்டு

எழுந்தருளியுள்ள அம்பாளின் திருப்பெயர். அவ் அம்மை மீது பாடப்பட்ட 'தரவு கொச்சகக் கலிப்பா' எனும் யாப்பில் அமைந்தது. 58 பாடல்கள் உள்ளன. பாடல்தோறும் 'அங்கயற்கண் நாயகியே" என முடிவது.

*"பாடியலுந் தமிழ்நூல்கள் பலபடித்து மறிவின்றி*
*வாடியநெஞ் சகமுடைய மாண்பிலியை யாள்குவையோ*
*தேடியமா றனக் கரியர் சித்தரென வந்தெல்லாம்*
*ஆடியமுத் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே?'*

என்பது அவற்றில் ஒன்று. இவ்வாறே 'வேண்டுதல்' அமைந்த பாடல்களைக் காணலாம்.

## *அசோக சால வாசம்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்,*

அசோகம் – மரத்தில் ஒருவகை. சாலம் –மரம்.

அசோக சாலம் – அசோக மரம். வாசம் – தங்குதல்

அசோக மரங்கள் அடர்ந்த சோலையில் தங்குதல் என்று பொருள்.

இதற்கு வேறொரு பொருள்:–

சோகம் – துன்பம்; அ சோகம் – துன்பமில்லாமை.

சால – மிகுதி; வாசம் – தங்குதல்.

துன்பமில்லாத இடம், இறைவனின் திருவடிகளே.

எனவே அசோகமாக விளங்கும் அத் திருவடிகளில் கலந்து வாழ்தல் பேரின்பம்.

முதலில் உலக இன்பத்தை விரும்பிய தலைவி, படிப்படியாக இறைஞானம் எய்தி, முருகன் திருவடி எனும் அசோகமான இடத்தில் கலந்து பேரின்பம் எய்தினாள் எனும் கருத்தில் இஃது அமைந்துள்ளது.

இதன்கண், 'முதற்பத்து' முதல் 'எட்டாம் பத்து' வரை 8 பத்து 80 பாடல்கள் உள்ளன. முதல் 3 பத்தில், தலைவி அழகு, செல்வப் பெருமை, இயற்கைக் காட்சிகள், முருகப் பெருமானின் சிறப்பு, அடியார்க்கு அருளல் முதலாயின சொல்லப்பட்டுள்ளன.

4 முதல் 7ஆம் பத்து முடிய, குமரகுருதாச சுவாமிகளின் கால் முறிவு, மருத்துவமனையில் தங்குதல், அடியார் துயரம், மயூரக் காட்சி, முரிந்த காலை இணைக்கும் வேல் காட்சி, அடியார் பூசனை முதலாயின சொல்லப்படுகின்றன. இறுதி 8ஆம் பத்தில், தலைவி தன்னை மறந்து, தலைவன் நாமத்தையே கூறி அவனையே அடையத் தலைப்பட்டாள். உலக இன்பம் துறந்தாள்; துவராடையை உடுத்தினாள். உருத்திராக்கம் அணிந்தாள்; திருநீறு பூசினாள்; தற்போதம் இழந்து, பரபோதத்தில் திளைத்தாள்; மண்ணுலகில் பிறந்த பயனை அடைந்தாள் என்பன போன்ற செய்திகள் சுவைபடச் சொல்லப்பட்டுள்ளன.

*"ஆடகந றுந்தொழில்கள் சால்கடக வங்கையல*
*ராருமுறை கும்பிடுந் ளாயருள்*
*நாடகவெ னெஞ்சிலுள நாயகசி கண்டியிவர்*
*நாதவயி றங்குகர நான்மறை . . . !"*

என்பனபோல் சந்தக் குழிப்பில் வரும் பாடல்கள் உண்டு!

## அடைக்கலம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

முருகப்பெருமானிடம், 'நான் நின் அடைக்கலமே' என்று பாடுவதால் இந்நூல் 'அடைக்கலம்' எனப்பட்டது. இதில் 10 பாடல்கள் உள்ளன. 'இந்தளம்' என்ற பண்ணில் பாடத்தக்கது.

*"அஞ்சும்ஆகி ஆறும்ஆகி ஆதிஅந்தம் நாப்பண் இன்றி*
*விஞ்சியே நிறைந்ததுஆகி வேளுடைக் கையான் என்றுஆகித்*
*துஞ்சல் தோற்றம் நீத்த அதீத சுப்பிர மணியம் ஆன தேவே!*
*தஞ்சமேவு உன் அடிப்பண்பு ஓதும்தாசன் நான்நின் அடைக்கலமே!"*

எனப் பாடல்தோறும் 'அடைக்கலமே' என முடிவது!

## அட்டாட்ட விக்கிரக லீலை

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

அட்டம் + அட்டம் = அட்டாட்டம். அட்டம் = 8 X 8 = 64 லீலைகளைக் கூறுவது என்று பொருள்.

இது ஒரே ஒருபாடல் கொண்டது. 48 சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவில் அமைந்தது.

*"சந்திர சேகரமர்த்த நாரீசுரஞ்*
*சக்கரப் பிரதானம் . . . !"*

என்று தொடங்குகிறது பாடல்!

## அண்ணாமலைச் சதகம்

*திருச்சிற்றம்பல நாவலர்*

சதகம் = நூறு. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் சதகமும் ஒன்று.

'அண்ணாமலை' என்பது திருவண்ணாமலையைக் குறிக்கும்.

நூலின் தொடக்கத்தில், 'காப்புச் செய்யுள், 'நூற்பெயர்' என 2 பாடல்களும், நூலின் இறுதியில் 'அவையடக்கம், வாழி' எனும் 2 பாடல்களும் நீங்கலாக 10 பாடல்கள் உள்ளன.

ஒவ்வொரு பாடலின் இறுதியும், 'அண்ணாமலைத் தேவனே!' என முடிவு பெறுகிறது.

இந்நூலில், 'சைவமுறை, பதினாறு பேறுகள், விபூதி இடும் காலம், 32 அறங்கள் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு செய்திகள்' சொல்லப்பட்டுள்ளன.

*"ஆற்றுமண லாலே யிலிங்கமே பாணித்*
*தருச்சனை புரிந்தபேருக்*
*காயுளுண் டாம்பசஞ் சாணிலிங் கப்பூசை*
*யாற்றுவோர்க் கர்த்த முண்டா*
*நீற்றிலிங் கார்ச்சனம் முத்தியுண் டாநித்த*
*நியதியா யாற்றோர மண்*
*ணேயலிங் கஞ்செய்து பூசித்த பேர்க்கின்ப*
*நிதிமைந்தர் பேறுமுண்டாம் . . ."*

என்பது சிவலிங்க வகைப்பலன் கூறுவது. இவ்வாறே வரும் பாடல்கள் பலவாம்!

## அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

*அண்ணாமலை ரெட்டியார்.*

கழுகுமலைக் குமரன் மீது பாடப்பட்டது. பண்ணோடு பாடக்கூடியது. முருகனுக்குக் காவடி எடுப்போர், தம் துன்பம் காணாதவாறு, காவடிச் சிந்துப் பாடல்கள் பாடிச் செல்வர். அதற்காகப் பாடப்பட்டது. 22 பாடல்கள் கொண்டது.

*"பொன்னுலவு சின்னிகுள நன்னகரண் ணாமலைதன்*
*புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் – முந்தி*
*வெந்திற லரக்கர்களை வென்றவன் . . . !"*

என்பன போன்ற சந்தப் பாடல்கள் கொண்டது.

## அபிராமி அந்தாதி

*அபிராமி பட்டர்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'அந்நாதி'யும் ஒன்று!

அந்தம் +ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல்.

ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப்பாடுவது. அவ்வாறே, நூலின் இறுதிச் செய்யுளின் ஈற்று அசை அல்லது சீர், தொடக்கச் செய்யுளின் முதலசை அல்லது முதற்சீரோடு இயைபுபடப் பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

இவ் 'அந்தாதி'யில், இறுதிப் பாடலின் இறுதி 'உதிக்கின்றவே' என முடிகின்றது. முதற்செய்யுள் 'உதிக்கின்ற' என்று தொடங்குகின்றது.

இதில், 'காப்பு'ச் செய்யுள் – 1; 'பயன்' – 1 ஆக 2 தவிர 100 பாடல்கள் உள்ளன.

சோழநாட்டைச் சேர்ந்த 'திருக்கடவூர்' என்ற ஊரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு, 'அபிராமி' என்று பெயர். 'அபிராமி' என்பதற்கு, 'மிக்க அழகுடையவள்' என்று பொருள்.

அந்தாதி நூல்களில் தலைசிறந்தது 'அபிராமி அந்தாதி' என்பர். அம்பிகையின் அருள்திறத்தை அபிராமி பட்டர், நயந்து, வியந்து, மகிழ்ந்து, நெகிழ்ந்து பாடுகின்றார். சக்தி வழிபாடுடையோர் இந்நூலைக் கற்றுப் பயன்பெறுகின்றனர்.

இந்நூலில் சொல்நயம், பொருள்நயம், உவமை நயம், கற்பனைப் பொலிவு என்னும் பல்வேறு சிறப்புக்கள் அமைந்துள்ளன. அம்பிகையின் அருட்தன்மை இனிது விளக்கப்படுகின்றது.

மார்க்கண்டேயனுக்காக இறைவன், காலனைக் காலால் உதைத்த திருத்தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே 60ஆம் ஆண்டு, 80ஆம் ஆண்டு நிறைவு விழாக்களை இத்தலத்தில் கொண்டாடுவது சிறப்பு என்பர் அறிஞர்.

*"விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன*
*வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்*
*பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்*
*குழிக்கே யழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்!

## *அப்பர் தேவாரம்*

*திருநாவுக்கரசர்.*

தே+ஆரம் = தேவாரம்; தே+வாரம் = தேவாரம். தே– தெய்வம்; ஆரம் – மாலை. தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை போன்றது. வாரம் = இசைப்பாட்டு, அன்பு, உரிமை எனப் பல பொருள். இன்றமிழ் இசைப்பாட்டால் பாடப்படுவது; தெய்வத்தின்பால் அன்பு காட்டப்படுவது; இறைவனுக்கும் உயிர்கட்கும் உரிமை கூறுவது என்றெல்லாம் பொருள் சொல்லப்படும்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், 4,5,6 எனும் 3 திருமுறைகள் அப்பர் தேவாரமாகும். பொதுவாகச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவரும் பாடிய பாடல்களைத் 'தேவாரம்' என்று கூறுவது வழக்கு. எனினும் அப்பர் பாடியனவே 'தேவாரம்' என்பது பழைய வழக்கு.

அப்பர் பாடியவை 49,000 பதிகங்கள் அதாவது 4,90,000 பாடல்கள். ஆனால் கிடைத்தவையோ 312 பதிகங்கள், பாடல்கள் 3065 ஆகும்.

4ஆம் திருமுறையில் 'திருநேரிசை', 'திருவிருத்தம்' அமைந்துள்ளன. இத்திருமுறையில் அமைந்த பண்கள் : 10 அவை:– இந்தளம்; காந்தார பஞ்சமம்; காந்தாரம்; குறிஞ்சி; கொல்லி; சாதாரி; சீகாமரம்; பழந்தக்கராகம்; பழம் பஞ்சுரம்; பியந்தைக் காந்தாரம் என்பன. இத்திருமுறையில் அமைந்த அற்புதத் திருப்பதிகங்கள்: ஏழு.

5ஆம் திருமுறை முழுதும் 'திருக்குறுந்தொகை' எனப்படும். இதில் அமைந்த அற்புதத் திருப்பதிகங்கள் 3.

6ஆம் திருமுறை முழுதும் 'திருத்தாண்டகப் பதிகங்கள்'. இதில் அமைந்த அற்புதத் திருப்பதிகங்கள்:4.

பாடப்பட்ட திருத்தலங்கள்: 125. இவற்றில் ஒரு திருப்பதிகம் மட்டும் பெற்றவை: 76;

இரண்டு திருப்பதிகம் பெற்றவை: 23. மூன்று திருப்பதிகம் பெற்றவை: 7. நான்கும் நான்குக்கு மேற்பட்டவையாகிய திருப்பதிகம் பெற்றவை: 19.

இவற்றுள் மிகுதியான திருப்பதிகங்கள் பெற்றவை இரண்டு; அவை திருவாரூர்; திருவதிகை.

அப்பர் பாடல்களில் உவமைகள், உருவகங்கள் மிகுதியாக உண்டு. சிவபெருமானின் அருட்செயல்கள், பெருங்கருணை, புராணச் செய்திகள் எனப் பலவும் உண்டு. சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

நாள்தோறும் இதனைப் பாராயணம் செய்து பயன்பெறுவோர் பலர். சைவத் திருக்கோயில்களில் நாளும் தேவாரம் பாடுதற்கென ஓதுவார்கள் உண்டு!

*"சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்*
*கற்றுணைப் பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சி வாயவே!"*

என்பது திருவைந்தெழுத்தின் பெருமை பேசுவது. இவ்வாறே அனைத்துப் பாடல்களும் இறைவனின் திருவருளைப் பேசும்!

## அமரர் கோ

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.

அமரர் – தேவர்; கோ–அரசன். தேவர்கட்கு அரசன் முருகப் பெருமான்.

இஃது, ஆறுமுகம் பெருமான் அருளினால் வாக்குப் பெற்றுப் பாடப்பட்ட சிறப்புடையது.

பாடல்தோறும் 'அமரர் கோவே' என முடிவது. தொடக்கத்தில் பன்னிரு சீர்க் கழிநெடி ஆசிரிய விருத்தப்பாக்கள் மூன்று 'தெய்வ வணக்கம்' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளன. அடுத்து 'அமரர் கோ' என்ற தலைப்பில் 6 பாடல்கள் உள்ளன.

முதல் 3 பாடல்களில் முதல்வனாகிய முருகன்; அவன் திருப்பெயரான சடக்க மந்திரம்; ஞானசக்தியான வேற்படை சொல்லப்பட்டுள்ளன.

அடுத்த 6 பாடல்களில் – சுவாமிகட்குத் துறவு வேட்கை தோன்றுதல்; அடைக்கலம் வேண்டடல்; சிற்றின்பத்தில் வீழாமல் காத்தல்; ஞானத்தை உணர்த்த விண்ணப்பித்தல்; பதிஞானத்தை அருள வேண்டுதல்; திருவடியைப் பெற வேண்டுதல் ஆகியன சொல்லப்பட்டுள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

*"படிறற்ற வாகமம் பகர்பொருளோர் மூன்றனுட்*
*பசுவினை யனாதி யாகப்*
*பந்தித்த பாசமுட னப்பசுவு மாசற்ற*
*பதியுடைய செய லின்றியே . . . !"*

என்பன போல் சைவசித்தாந்தக் கருத்துடைய பாடல்களைக் காணலாம்.

## அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

*மாதவச் சிவஞான சுவாமிகள்.*

'பிள்ளைத்தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. இஃது (1) ஆண்பாற் பிள்ளைத் தமிழ்; (2) பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். கடவுளையோ, அடியார்களையோ, வள்ளல்களையோ குழந்தையாகப் பாவித்துப் பருவம் 1க்குப் பத்துப் பாடல் வீதம் 10 பருவவங்களில் 100 பாடல் பாடப்படும். 'பிள்ளைத்தமிழ்'க்குப் 'பிள்ளைப் பாட்டு' எனும் பெயர் உண்டு.

இந்நூலின்கண், 'விநாயகர் கடவுள் வணக்கம்' பாடலுட்பட மொத்தம் 103 பாடல்கள் உள்ளன.

குளத்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அமுதாம்பிகை அம்பாள் மீது பாடப்பட்டது இது!

*"ஒழுங்குபடு மண்டகோ டிகடொறு நிலாவுறூஉ*
*மொண்கமல மாநிதிகளும்*
*ஒலிகொண்ட வெண்சங்க நிதிகளுஞ்*
*சார்ந்தவர்க் குதவுநின் கரநோக்கிவான் . . ."*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## அம்பலவாணர் வருகை

*இராமலிங்க அடிகளார்.*

அம்பலவாணர் – தில்லை நடராசப் பெருமான்.

அப்பெருமானை 'வாரீர், வாரீர்!' என வரவேற்கும் முறையில் பாடப்பட்டது.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது.

*"வாரீர், சிதம்பர வல்லி சிவகாம*
*வல்லி மணாளரே வாரீர்*
*மணிமன்ற வாணரே வாரீர்!"*

எனத் தொடங்குவது. இது 'பல்லவி'. இதனையடுத்து, 3 அடி கொண்ட கண்ணிகள் 105 உள்ளன.

*"அச்சம் தவிர்த் தென்னை ஆட்கொண்டருளிய*
*அந்தண ரே! இங்கு வாரீர்!*
*அம்பலத் தையரே வாரீர்!"*

என்பது அவற்றில் ஒன்று!.

பார்க்க:-

திருஅருட்பா

## *அம்பைத் தலபுராணம்*

*இ. அரிகரமையர்.*

புராணம் = பழைய வரலாறு.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 'அம்பாசமுத்திரம்' என்ற ஊர் 'அம்பை' என மருவி வழங்கி வருகின்றது.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திருப்பெயர் : காசிபலிங்கம்

நூலில் முதற்கண் 'பாயிரம்' முதலாயின : 19 பாடல்

அடுத்து 'நாட்டுச் சருக்கம்' முதல், 'காசிபர் கபில முனிவராய் அவதரித்த சருக்கம்' வரை 20 சருக்கங்கள்; மொத்தத் திருவிருத்தப் பாக்கள் 1221.

இந்நூலில், தலவிசேடம், மூர்த்தி விசேடம், பல்வேறு தீர்த்தங்கள் விசேடம், அகத்தியமுனிவர் வரலாறு எனப் பலவும் உள்ளன.

*"அம்பரமா வுடையானே! யாரணமா வுடையானே யருண னென்னும்*
*விம்பமுனத் தொளியானே வித்தர்முனத் தொளியானே வேதங் கூறு*
*நம்பனெனு முருத்திரனே ஞானவர முருத்திரனே நாயே னுள்ளம்*
*பம்பநிலைத் தாண்டவனே பரமநிலைத் தாண்டவனே பகவனீயே!*

என்பன போன்ற மடக்கு அணிப்பாடல்களைக் காணலாம்.

## *அருட்பிரகாச மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று! மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவதால் இப்பெயர் வந்தது.

பிரகாசம் – ஒளி.

இறைவன், இராமலிங்க அடிகளாரைத் தேடி வந்து கதவைத் தட்டித் திறக்கச் செய்து ஞானம் வழங்கினன். இவ்வரலாறு பாடல்தோறும் கூறப்படுகிறது.

இது, திருவருட்பா, 5ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. 100 பாடல்கள் கொண்டது.

சிவபெருமானை, 'அருள்நட நாயகனே, சைவ பரம்பொருளே, மாணிக்கமணியே' என்றெல்லாம் போற்றிப் புகழும் பாடல்கள் பலவுள.

*"ஒருநாளன் றிரவில்அடி வருந்தநடந் தடியேன்*
*உற்றஇடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து*
*மருநாள் மலரடிஒன் றுள்ளகத்தே பெயர்த்து*

*வைத்துமகிழ்ந் தெனை அழைத்து வாங்கிதனை என்று*
*தருநாளில் யான்மறுப்ப மறித்தும்வலிந் தெனது*
*தடங்கைதனிற் கொடுத்திங்கே சார்கஎன உரைத்தாய்*
*ஒருநாளில் அதனருமை அறிந்துமகிழ் கின்றேன்*
*மணிமன்றுள் நடம்புரியும் மாணிக்க மலையே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## அருட்புலம்பல்

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

இறைவனது திருவருளைப் பெறுதற்காகப் பாடிய புலம்பல். இதில், ஈரடி கொண்ட பாடல்கள் 117 உள்ளன.

*"வாழ்த்தி அவனை வழிபட்டால் மன்னுயிர்கள்*
*தோற்றம் அழியான்காண் சொல்இறந்த சோதியன்காண்!"*

என்பது இவற்றில் ஒன்று!

## அருட்பெருஞ்சோதி அகவல்

*இராமலிங்க அடிகளார்.*

'அகவல்' என்பது யாப்பு வகைகளில் ஒன்று.

அருள் – அருட்சத்தி. இறைவனை 'அருட்பெருஞ்சோதி' என வழங்கும் முறை தொன்று தொட்டு இருந்துவருவது.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது. அடி 1க்கு 4 சீர் வீதம் அமைந்துள்ளது. இவ்வகையில் 1596 அடிகள் உள்ளன. நூலின் இறுதியில் 'வெண் செந்துறை' யாப்பில் 2 அடிகள் உள்ளன.

*"அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி*
*அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி*
*அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்*
*அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் சோதி!"*

எனத் தொடங்குவது.

பார்க்க:–

திருஅருட்பா

## அருணாசல சதகம்

*சபாபதி முதலியார்.*

சதகம் = நூறு. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் சதகமும் ஒன்று.

'அருணாசலம்' என்பது திருவண்ணாமலை.

இந்நூலில், முதற்கண் 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 101 பாடல்கள் உள்ளன. 'கலிவிருத்தத்தால்' ஆனது.

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'அருணாசலா அருணாசலா' என முடிவது.

நூலில் ஆங்காங்கே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

*"பாசக்கிடம் பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு*
*மாசற்றமா மறைபேசுமம் மாயைப்பசு வாமென்னுளே*
*தேசிற்பொலி பதியாகுநீ திகழ்கின்றதற் புதமல்லவோ*
*ஆசைக்குமே னிமிர்சோதியே அருணாசலா அருணாசலா!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *அருள் திறத்து அலைச்சல்*

*இராமலிங்க அடிகளார்.*

இது, திருவொற்றியூர் இறைவன் மீது பாடப்பட்டது. அவனின் அருளைப் பெறுதற்காக மனம் அலையும் அலைச்சலைக் குறித்துப் பாடப்பட்டது.

திருவருட்பா, இரண்டாம் திருமுறையில் உள்ளது இப்பகுதி.

'வெண்டளைக் கொச்சக ஒருபோகு' என்ற யாப்பு வடிவத்தில் அமைந்தது. 36 பாடல்கள் கொண்டது.

*"பாடுகின்றோர் பாடப் பரிசளிக்கும் புண்ணியனே!*
*தேடுகின்றோர் தேடநிற்கும் தியாகப் பெருமானே!*
*ஊடுகின்றோர் இல்லாத ஒற்றியப்பா அம்பலத்துள்*
*ஆடுகின்ற சேவடிகண் டல்லல்எல்லாம் தீரேனோ?"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## *அருள்மிகு இரெட்டியப்பட்டி ஆண்டவர் கலிவெண்பா*

*கி. பழநியப்பன்*

'விநாயகர் துதி, காப்பு' நீங்கலாக 153 கண்ணிகள் கொண்டது இது! 1856ஆம் ஆண்டில் தோன்றிய இரட்டியபட்டி சுவாமிகளைப் பற்றியது. அவரின் அருள் வரலாற்றை விரித்துரைப்பது.

*"தீராத நோயெல்லாம் தீர்ந்திடவும் புத்தியில்*
*மாறாட்டம் கண்டநிலை மாறிடவும் – யாராலும்*
*செயற்கரிய செய்கைபல செய்வித்தும் . . ."*

போன்ற அற்புதச் செயல்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

## அருள்மொழி மாலை

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது, சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவதால் இப்பெயர் வந்தது.

இறைவனின் அருள்மொழி, ஈண்டு மாலையாகத் தொடுக்கப்பட்டது.

ஒரு நங்கையின் மனைக்குப் பிச்சைத் தேவர் வந்தபோது, அவர் பல பொருள்பட உரையாட, அதைக்கேட்ட அந்நங்கை, தன் தோழியிடம் கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது.

இது, திருவருட்பா இரண்டாம் திருமுறையில் உள்ளது. அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவால் ஆனது. இதன்கண் 31, பாடல்கள் உள்ளன.

இதில் கடைசி 2 பாடல்கள், 'இங்கித மாலை' என்ற பகுதியில் சிற்சில வேறுபாட்டுடன் காணப்படுகின்றன.

*"என்மே லருள்கூர்ந் தொற்றியுளீ*
*ரென்னை யணைய நினைவீரேற்*
*பொன்மேல் வெள்ளி யாமென்றேன்*
*பொன்மேற் பச்சை யறியென்றார்*
*மின்மேற் சடையீ ரீதெல்லாம்*
*விளையாட் டென்றே னன்றென்றார்*
*அன்மேற் குழலா யென்னடியவ்*
*வையர் மொழிந்த வருண்மொழியே!*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## அருள் விளக்க மாலை

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

மாலைபோலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது.

திருவருள் கைவரப்பெற்ற அடிகளார், தம் உள்ளத்து எழுச்சிகளைச் சொல் மாலையாகத் தொடுத்து விளக்குகின்றார்.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவால் அமைந்தது. 100 பாடல்கள் கொண்டது.

நூலின் தலைப்புக்கு ஏற்பப் பாடல்தோறும், 'அணிந்தருளே' என முடிவது.

*"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த*
*குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே?*
*ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ஙீரே!*
*உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே!*
*மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!*
*மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே!*
*ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்*
*ஆடுகின்ற அரசே!என் அலங்கல்அணிந் தருளே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:-

திருஅருட்பா

## அலங்கார எச்சரிக்கை

*குமட பழ. பழனியப்பச் செட்டியார்.*

முருகனைப் பற்றிய 20 பாடல்கள் கொண்டது.

*"அஞ்சலென் றோர்களை ஆதரித்துக் காக்கும்*
*ஆறுமுகக் கடவுள்"*

போன்ற பகுதிகள் உடையது.

## அவையாம்பிகை சதகம்

*கிருஷ்ணையர்.*

சதகம் = நூறு. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. நூறு பாடல்கள் கொண்டது. மயிலாபுரியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அவையாம்பிகை பேரில் பாடப்பட்டது. பன்னிரு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது.

அம்பிகையின் பல்வேறு சிறப்புக்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன. பாடல்கள், குமர குருபரரின் பிள்ளைத்தமிழ் போல் சுவையுடையன.

*"பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த*
*பழமே யருட்பழமே*
*பரிபா கத்துப் பத்தர்நெஞ்சிற் படர்ந்த*
*பழமே நவமுடியே . . . !"*

என்பது அவற்றில் ஒன்று. இவ்வாறே பிறவும்!

## அற்புதத் திருவந்தாதி

*காரைக்கால் அம்மையார். (அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்)*

சைவத்திருமுறை 12ல் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

அந்தம் + ஆதி = அந்தாதி. ஒரு செய்யுளில் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாகத் தொடுக்கப்படுவது. அவ்வாறே, நூலின் கடைசிச் செய்யுளின் இறுதி, நூலின் முதற்பாடலின் முதற்சீரோடு பொருந்தப் பாடுவது. இதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர்.

இந்நூலில் 100 வெண்பாக்களும், இறுதியில் பாடற் பயன்கூறும் 1 பாடலுமாக 101 பாடல்கள் உள்ளன.

இவ் 'அற்புதத் திருவந்தாதி' ஏனைய அந்தாதி நூல்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டது. அற்புதமான தெய்வத் திருப்பாடல்கள் கொண்டதால் 'அற்புதத் திருவந்தாதி' எனப் பெயர் பெற்றது. இது, ஓதுவதற்கு இனிமையும் எளிமையும் உடையது. அறிதற்கரிய சிவஞானத்தின் இயல்பைத் தெளிவாக விளக்குவது. மெய்யன்போடு ஓதுபவர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மையது.

சிவபெருமானின் அருட்கோலங்கள், திருவருட் செயல்கள், அடியார்களின் இயல்புகள் ஆகியன இதன்கண் சொல்லப்பட்டுள்ளன. இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் பாடல்கள், அனைவர்க்கும் ஆரா இன்பம் தருவன.

*"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றும் திருவுருவம் காண்கிலேன் – என்றும் தான்*
*எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் (கு) என்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது?"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## அனுபோக வெண்பா

அம்பலவாண தேசிக மூர்த்திகள்.

இது, பண்டார சாத்திர நூல்கள் பதினான்கில் ஒன்று.

அனுபோகம் – ஒன்றில் தோய்ந்து, ஒன்றிய காலத்து, உளதாம் பயிற்சியின் மிகுதி.

சிவதன்மத்திலும் சிவானுபவத்திலும் திளைத்து விளைந்த பயிற்சி நிலைகளைக் கூறுவதாக, வெண்பா யாப்பில் அமைந்ததால் 'அனுபோக வெண்பா' எனப்பட்டது.

ஆன்மாக்களுக்கு அறிவு விளக்கம் திருவருளாலன்றி விளையாது. அத்திருவருளும் குருவின் உபதேசத்தாலன்றிக் கைகூடாது. உயிர்கள், தம்மை ஈசனுக்கு அடிமையாக உணர்ந்து உண்மை அன்பு செய்யப் பிறவி நீங்கப் பெற்றுப் பேரின்பம் எய்தும். உயிர்கள் மலநீக்கமும், இருவினையொப்பும் எய்திய போது, தற்போதம் கெட்டுத் திருவடியையே சார்ந்து நிற்கும். அக்காலத்து உயிர்களுக்கு வினை ஏறாமையால் அருளனுபவம் ஒன்றையே தாரகமாகக் கொண்டு, சீவித்திருக்கும். சிவம் வேறு, சீவன் வேறு என்று அறியவாராத அருள் அனுபவ அத்துவிதத்தில், சிவானந்தப் பெருவாழ்வு எய்தி, என்றும் இன்பம் பெருக இருக்கும் என்பன போன்ற கருத்துக்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

இந்நூல் 218 வெண்பாக்கள் கொண்டது.

*"இச்சை அறிவுதொழில் எல்லாமெய் யாவியின்மேல்*
*வைச்சன்றோ தீர்த்தான் மலமனைத்தும் – நச்சும்*
*அவனா யிருக்கைக் கருள்பெற்றா ரன்றோ*
*சிவனா யிருப்பரெனத் தேர்"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *அன்பு மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவதால் உண்டான பெயர். இறைவன் மீது கொண்ட 'அன்பு' பொருளாகக் கொண்டு பாடப்பட்ட மாலை.

இது, திருவருட்பா – 5ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இதன்கண் 31 பாடல்கள் உள்ளன.

இந்நூலில் சிவபெருமானின் பல்வேறு அருட்செயல்களும், சிவனடியார்களின் வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன.

*"அந்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்*
*அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே*
*இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியுங் காட்டி*
*இதுகாட்டி அதுகாட்டி என்நிலையுங் காட்டிச்*
*சந்தோட சித்தர்கள்தந் தனிச்சூதுங் காட்டிச்*
*சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி*
*வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்தஇடங் காட்டி*
*மகிழ்வித்தாய் நின் அருளின்*
*வண்மைஎவர்க் குளதே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா



## *ஆசிரியவியல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

யாப்புவகைகளில் ஒன்று 'ஆசிரியப்பா'. இதன்கண் 'ஆசிரியப்பா' வகைகளும் அதன் இனங்களும் வந்துள்ளன. அனைத்துமே முருகனைப் பற்றியன. **162** பாடல்கள் உள்ளன.

*"தொம்பத நிலைதான் றொல்லத் துவிதமே!*
*அம்பதி நிலைதா னருளத் துவிதமே!*
*பம்பசி நிலைதான் பரமாத் துவிதமே!*
*எம்பி ரான்சே யெனைச்சே ரசியிலே!"*

என்பது 'அடிமறி மண்டில வாசிரியப்பா". இவ்வாறே பிறவும் வரும்!

## *ஆணிப்பொன்னம்பலக் காட்சி*

*இராமலிங்க அடிகளார்.*

ஆணிப்பொன் – மாற்று உயர்ந்த பொன்.

தில்லை நடராசப் பெருான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலில் இறைவன் நடனமாடும் திருச்சிற்றம்பலம் உள்ளது. அது 'ஆணிப் பொன்னம்பலம்' எனச் சொல்லப்பட்டுள்ளது. அந்த அம்பலத்தில் கண்ட காட்சிகள் இப்பகுதியில் இயம்பப்பட்டுள்ளன.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

தொடக்கத்தில் 'பல்லவி'; அடுத்துக் 'கண்ணிகள்' என அமைந்துள்ளது. பண்ணோடு பாடுதற்குரியது.

*"ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்*
*அற்புதக் காட்சியடி – அம்மா*
*அற்புதக் காட்சியடி!"*

என்று தொடங்கி, அடுத்து **3**அடி கொண்ட கண்ணிகள் **33** உள்ளன.

*"சந்நிதி யில்சென்று நான்பெற்ற பேறது*
*சாமி அறிவாரடி – அம்மா*
*சாமி அறிவாரடி!*
*ஆணிப்பொன் னம்பலத்தே கண்ட காட்சிகள்*
*அற்புதக் காட்சியடி – அம்மா*
*அற்புதக் காட்சியடி!"*

என முடிகின்றது!

பார்க்க:-

திருஅருட்பா

## *ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்*

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'கலம்பகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. கலப்பு + அகம் = கலம்பகம்.

பல்வேறு உறுப்புக்கள் கலந்து, அகம், புறம் என்ற துறைகளும் விரவி வருவதால் 'கலம்பகம்' எனப்பட்டது.

'ஆளுடைய பிள்ளையார்' என்பது திருஞான சம்பந்தரைக் குறிக்கும். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதால் இப்பெயர் அமைந்தது.

பொதுவாக 100 பாடல்களால் பாடப்படுவது மரபு. ஆனால் இந்நூலில் 49 பாடல்களே கிடைத்துள்ளன.

இவற்றில், ஞானசம்பந்தரின் பெருமைகள் பலவும் அருமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

*"பண்டமுது செய்ததுமை நங்கையருள் மேவுசிவ ஞானம்*
*பைந்தவள நன்சிவிகை செம்பொன்அணி நீடுகிற தாளம்*
*கொண்டதரன் உம்பர்பரன் எங்கள்பெரு மானருள் படைத்துக்*
*கொடுத்ததமி ழைத்தவகு லத்தவர்க ளுக்குலகில் இன்பம் . . . !"*

என்பன போன்ற சந்தப்பாக்களும் உள்ளன.

## *ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்*

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் பதினொராம் திருமுறையைச் சார்ந்தது.

சண்பை – சீகாழி. ஆளுடைய பிள்ளையார் – சம்பந்தர். ஆளுடைய பிள்ளையார் தோன்றிய 'சண்பை' என்ற 'சீகாழிப் பதி'யைக் 'கட்டளைக் கலித்துறை'யாகிய திருவிருத்தத்தால் போற்றும் நூலாதலின் இப்பெயர் பெற்றது.

இந்நூலில் 11 பாடல்கள் உள்ளன.

இவற்றில், திருஞான சம்பந்தர் செய்த அருஞ் செயல்களான, "ஞானப்பாலுண்டு தேவாரம் பாடியது, பாம்பு தீண்டி இறந்தவனை உயிர்ப்பித்தது, திருமறைக் காட்டில் மறைக்கதவம் அடைக்கப் பாடியது, வையை ஆற்றில், ஏடு எதிரேறச் செல்லுமாறு செய்தது, சமணரை வென்றது, திருநல்லூர்ப் பெருமணத்தில் வாழ்க்கைத் துணையோடு பேரொளியில் கலந்து மறைந்தது"

ஆகிய பலவும் சொல்லப்பட்டுள்ளன.

*"அந்தமுந் தும்பிற வித்துயர்*
*தீர அரனடிக்கே*
*பந்தமுந் தும்தமிழ் செய்த*
*பராபரன் பைந்தடந்தேன்*
*வந்துமுந் தும்நந்தம் முத்தால்*
*கொடுப்ப வயற்கயலே*
*சந்தமுந் தும்பொழிற் சண்பையர்*
*காவலன் சம்பந்தனே!"*

என்பது போன்ற பாடல்களைக் காணலாம்.

## ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'ஆளுடைய பிள்ளையார்' என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும். அவருடைய வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதால் 'திருத்தொகை' எனப்பட்டது. 65 அடிகள் கொண்டது.

ஞானசம்பந்தப் பெருமான், சிவபெருமான் திருவருளால் உமாதேவியார் அளித்த திருமுலைப் பாலுண்டு தேவாரப் பாக்கள் பாடத் தொடங்கியது முதல், திருநல்லூர்ப் பெருமணத்தில் திருவருட்பேரொளியில் கலந்தது வரையுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்கின்றது.

*". . . .*
*பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியாரும்*
*கொற்றக் கதிர்வேல் குலச்சிறையும் கொண்டாடும்*
*அற்றைப் பொழுதத்(து) அமணரிடு வெந்தீயைப்*
*பற்றிச் சுடுக, போய்ப் பாண்டியனை என்னவல்லான்! . . ."*

என்பன போன்ற வரலாற்றுச் செய்திகள் உள்ளன!

## ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

ஆளுடைய பிள்ளையார் – திருஞான சம்பந்தர்.

'அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை' என்னும் மூவகை யாப்பில், கோவையாகத் தொடுக்கப்பட்ட தாதலின் 'மும்மணிக் கோவை' எனப்பட்டது.

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'கோவை'யும் ஒன்று! கிளவிகளாக

வகுத்துத் துறைகளாக விரித்து, ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப் பெற்றுப் பாடப்படுவதால் 'கோவை' எனப்பட்டது.

இந்நூலின்கண், யாப்பு 1க்கு 10 பாடல் வீதம் 3 யாப்பு வகைக்கு மொத்தம் 30 பாடல்கள் உள்ளன. இவற்றில், சம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகள், அவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகச் சிறப்பு, சம்பந்தப் பெருமானைக் காதலித்த தலைவியின் துன்பத்தை எடுத்துரைக்கும் அகத்துறைப் பாடல்" ஆகியன இடம்பெற்றுள்ளன.

*"…….*
*காழி நாட்டுக் கவுணியர் குலத்தை*
*வாழத் தோன்றிய வண்டமிழ் விரகன் . . .*
*முட்டைமுன் கவரும் பெட்டையங் குருகே!*
*வாடை அடிப்ப வைகறைப் போதில்*
*தனிநீ போந்து பனிநீர் ஒழுகக்*
*கூசிக் குளிர்ந்து பேசா திருந்து*
*மேனி வெளுத்த காரணம் உரையாய்*
*இங்குத் தணந்தெய்தி நுமரும்*
*இன்னம்வந் திலரோ சொல்லிளங் குருகே!"*

என்பது நாரையை நோக்கித் தலைவி கூறியதாக அமைந்த அகத் துறைச் செய்யுள். இவ்வாறே சுவைமிக்க பாடல்கள் பல உள்ளன.

## ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

அந்தம் + ஆதி = அந்தாதி, அந்தம் – இறுதி; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப்பாடுவது. அவ்வாறே நூலின் இறுதிச் செய்யுளின் ஈற்றுச்சீரோ, அசையோ, நூல் தொடக்கத்தில் உள்ள முதற்பாட்டின் முதற்சீர் அல்லது அசையோடு பொருந்தப் பாடுவது. இதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர்.

இவ் 'அந்தாதி'யில் 100ஆவது பாடலின் இறுதி 'பாரகத்தே' என்று முடிந்துள்ளது. தொடக்கப் பாடல், 'பார்' எனத் தொடங்குகிறது.

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'அந்தாதி'யும் ஒன்று.

'ஆளுடைய பிள்ளையார்' என்பது திருஞானசம்பந்தருக்குரிய பெயர். அவர் மீது பாடப்பட்ட அந்தாதி இது!

இந்நூலில் 100 கட்டளைக் கலித்துறைப் பாடல்களும், இறுதியில் 1 வெண்பாவும் உள்ளன.

"சிவபெருமானை அன்றி மற்றொருவரையும் போற்றாத சிறப்புடைய திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து போற்றும் அடியார்கள், இறைவனின் திருவடிகளை எளிதிற் பெறுவர்; சம்பந்தரிடத்து அளவற்ற அன்பு உடையவர் சிறுத்தொண்ட நாயனார் எனவே இந் நாயனாரைப் போற்றுவோர் சம்பந்தரின் திருவடித் துணையை எளிதில் பெறுவர்; திருமாலும் நான்முகனும் தேடியும் காண்டற்கரிய சிவபிரானைத் தாம் கண்டதோடன்றித் தம் தந்தைக்கும் காட்டியருளிய சிவஞானச் செல்வர் சம்பந்தர்; அவரைச் செந்தமிழ்ப் பாக்களால் போற்றிப் பரவத் தாம் எத்துணையோ தவம் செய்திருக்க வேண்டும்!" என்றெல்லாம் கூறும் நம்பியாண்டார் நம்பி, சம்பந்தரைக் 'கவுணியர் தீபன், பரசமயக் கோளரி, அருகாணி, தமிழாகரன், தமிழ்விரகன், சைவ சிகாமணி' எனப் பல சிறப்புப் பெயர்களால் போற்றுகின்றார்.

கவுணியர் – சம்பந்தர் பிறந்த குலத்தின் பெயர்; பரசமயக் கோளரி – மற்ற மதங்களை வெல்வதில் சிங்கம் போன்றவர்; அருகு + அசனி = அருகாசனி; சமணர்களுக்கு இடி போன்றவர். தமிழாகரன் – தமிழ்ச் சுரங்கம்; தமிழ் விரகன் – தமிழில் வல்லவர்.

*"பெறுவது நிச்சயம் அஞ்சல், நெஞ்*
*சே! பிர மாபுரத்து*
*மறுவறு பொற்கழல் ஞானசம்*
*பந்தனை வாழ்த்துதலால்*
*வெறியுறு கொன்றை மறியுறு*
*செங்கை விடையெடுத்த*
*பொறியுறு பொற்கொடி எம்பெரு*
*மானமர் பொன்னுலகே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

ஆளுடைய பிள்ளையார் = திருஞான சம்பந்தர். அவர், சீகாழியில் திருவுலாப் போந்தருளிய இயல்பினை விரித்துரைத்துப் போற்றுவதாகலின் 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை' எனப்பட்டது.

'கலி வெண்பா' யாப்பில் பாடப்பட்டது; 143 கண்ணிகள் கொண்டது.

இதன்கண், பாட்டுடைத் தலைவராம் சம்பந்தரின் இயல்பு, விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

'உலா' நூலில், 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாக 7 பருவ மகளிர், உலாப் போந்த தலைவனைக் காதலிப்பதாகப் பாடுவது மரபு. இவ்வுலா நூலில், எழுவகைப் பருவ மகளிர் செய்திகள் தனித்தனியே கூறப்படவில்லை; பொதுவாகக் கூறப்பட்டுள்ளன.

*"....*
*ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை*
*மான மறையவற்றின் வான்பொருளை – ஆனசீர்த்*
*தத்துவனைச் சித்தனைச் சைவத் தவர்அரசை*
*வித்தகத்தால் ஓங்கு விடலையை – முத்தமிழின்*
*செஞ்சொற் பொருள் பயந்த சிங்கத்தை . . . !"*

என்பன போன்ற பகுதிகள் உள்ளன.

## ஆற்றூர்ப் புராணம்

*மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.*

புராணம் – பழைய வரலாறு

'ஆற்றூர்' என்பது, சோழ நாட்டில் மாயூரத்திற்கு வடக்கே மண்ணியாற்றின் தென்கரையில் உள்ள சிவத்தலம். சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் சொல்லப்படும் 'மந்தாரம்' என்பது இத்தலத்தைக் குறிப்பது என்பர்.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திருப்பெயர்: மந்தாரவனேசர்; அம்பிகையின் திருப்பெயர்: அஞ்சனாட்சி. இந்நூலின் தொடக்கத்தில் 'கடவுள் வாழ்த்து' முதலாயின – 26 பாடல்கள். அடுத்துத் 'திருநாட்டுப் படலம்' முதல் 'முனிவர் முதலியோர் பூசித்த படலம்' வரை 14 படலங்கள் உள்ளன. மொத்தம் விருத்தப் பாக்கள் 525 ஆகும்.

இதன்கண், சிவபெருமான் பெருமைகள், சைவ சித்தாந்தக் கருத்துக்கள், தல வரலாறு, சொல்லணி, பொருளணிகள் ஆகியன மலிந்து காணப்படுகின்றன.

*"ஓவாத புறச்சமயப் பிணக்குமுழு மையுமொருவி யுண்மை தேர்ந்து*
*தாவாத பெருஞ்சைவ சித்தாந்தத் துறைபடிந்து தவமி லாரை*
*மேவாத வெண்ணீறுங் கண்மணியு மைந்தெழுத்து மேவிக் கொண்டு*
*தூவாத சுகத்தழுந்து நாயன்மார் கழல்பரவித் தொழுது வாழ்வாம்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## ஆனந்த லகரி

*(மொ.பெ) வீரைக் கவிராச பண்டிதர்.*

வடமொழியில் ஆதிசங்கரர் அருளியதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார் இக் கவிராச பண்டிதர். இது, ஒரு தோத்திர நூல்.

ஆனந்தம் – இன்பம்; லகரி – பெருக்கம்.

தேவியின் இன்பப் பெருக்கைச் சொல்லும் நூல். இந்நூலில், 40 ஆசிரிய விருத்தப் பாக்கள் உள்ளன.

*"ஆதி சுந்தரி வடிவினை யயன்முதற் புலவோ*
*ரேது கண்டள விடுவது தமையிக ழிமையோர்*
*மாத ரிங்கிவண் மகிழ்நரோ டுறைகுவ மெனினோர்*
*பேதை கொங்கைகள் பெறுகுவ மெனமறுகுவரால்!"*

என்பது தேவியுடைய திருவழகை வியந்தது. இவ்வாறே பிறவும் வரும்!.

‘இ’

## *இங்கித மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று! மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவதால் இப்பெயர் வந்தது.

இங்கிதம் = நயம். இன்பம், குறிப்புப் பொருள் தோன்றப் பேசுவது, எழுதுவது ஆகும். இஃது இருபொருள் படவும், பலபொருள் படவும் அமையும். இங்கிதத்தால் அமைந்த மாலை ஆதலின் 'இங்கித மாலை' எனப்பட்டது.

இது, திருவருட்பா இரண்டாம் திருமுறையில் அமைந்துள்ளது. இந்நூலின் முதற்கண், 'கலைமகள் வாழ்த்து, காப்பு' எனும் 2 பாடல்கள் உள்ளன. இவை தவிர 165 பாடல்கள் உள்ளன. 'அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா'வால் ஆனது. இவ் 'இங்கிதமாலை'யில் நயந்து பேசப்படுபவன் இறைவன். இஃது இலக்கணத்தில், 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' எனப்படும். தலைவி ஒருத்தி, தன் தோழிக்குச் சொல்வதாக அமைந்துள்ளது. பாடல் முழுதும் திருஒற்றியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவனின் புகழ் பேசுவதாம்.

*"கண்ணின் மணிபோ லிங்குநிற்கும்*
*கள்வ ரிவரூ ரொற்றியதாம்*
*பண்ணின் மொழியாய் நின்பாலோர்*
*பறவைப் பெயர்வேண் டினம்படைத்தான்*
*மண்ணின் மிசையோர் பறவையதா*
*வாழ்வா யென்றா ரென்னென்றே*
*னெண்ணி யறிநீ யென்கின்றா*
*ரிதுதான் சேடி யென்னேடீ!"*

என்பன போன்ற பாடல்கள் இப்பகுதியில் வந்துள்ளன.

பார்க்க:-

திருஅருட்பா

## *இடர்களையும் பிள்ளையார் திருப்பள்ளி எழுச்சி*

*கி. பழநியப்பனார்.*

பிள்ளையாருக்கென முதன்முதல் பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சி இது! பிள்ளையாரின் திருவிளையாடல் முழுதும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

பண்ணோடு பாடுதற்கும் உரியது. காப்பு, ஆசிரியப்பா, முடிப்பு தவிர, 2 அடி கொண்ட கண்ணி 15 கொண்டது.

*"ஓங்காரம் பிரணவமாய் உருக்கொண்டு சிவசத்தி*
*உவந்ததனால் யானைமுக உத்தமனாய்த் தோன்றியவர்!"*

போன்றவை இடம் பெற்றுள்ளன.

## இரங்கல் மாலை

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று! மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. தலைவனுடன் கூடப் பெறாத தலைவி வருந்தித், தன் தோழிக்குக் கூறுவதாக அமைந்த அகப்பொருட் பாடல்.

திருவொற்றியூர்த் தியாகேசரே – தலைவர். அவர், தம்மைக் கூடாதிருப்பது கண்டு அடிகளார் தம்மைத் தலைவியாகக் கருதித் தோழிக்குக் கூறுவதாகப் பாடியது.

இது, திருவருட்பா – இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனது. 31 பாடல்கள் கொண்டது. இறைவனின் பெருமை பாராட்டும் பகுதிகள் உள்ளன.

*"தெறித்து மணிகள் அலைசிறக்கும்*
*திருவாழ் ஒற்றித் தேவர்எனை*
*வறித்திங் கெளியேன் வருந்தாமல்*
*மாலை யிட்ட நாள்அலது*
*மறித்தும் ஒருநாள் வந்தென்னை*
*மருவி அணைய நானறியேன்!*
*குறித்திங் குழன்றேன் மாதேஎன்*
*குறையை எவர்க்குக் கூறுவனே!"*

என்பது, தலைவி, தன் நிலையைத் தோழிக்குக் கூறுவதாக அமைந்த செய்யுள்.

பார்க்க:–

திருஅருட்பா

## இரத்தின விநாயகர் இரட்டை மணிமாலை

*சி.சு. கண்ணாயிரம்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது.

கோயம்புத்தூரில் ஒருபகுதியாக விளங்கும் இரத்தின சபாபதிபுரத்தில் (ஆர்.

எஸ். புரம்) எழுந்தருளியுள்ள இரத்தின விநாயகர் மீது பாடப்பட்டது. காப்புச் செய்யுள் தவிர, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை எனும் இரு யாப்பு வகையில் 20 பாடல்கள் கொண்டது. நூலின் இறுதியில் 'வாழ்த்து'ச் செய்யுளும் உண்டு.

*"வானும் நிலனும் வலம்வந்தும் மாமயிலோன்*
*தானும் அடையாத் தனிக்கனி . . ."*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## இருபா இருபஃது

*அருணந்தி சிவாசாரியார்*

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று.

இருபா – இரண்டு வகைப்பா; இருபஃது – இருபது.

வெண்பாவும், ஆசிரியப்பாவும் ஆகிய 2ம் மாறி மாறி வர, அவ்வகையில் 20 பாடல்கள் கொண்டது. அஃதாவது வெண்பா – 10; ஆசிரியப்பா – 10.

மெய்கண்ட சாத்திரம் 14ல், பாவகையிலும் தொகை வகையிலும் பெயர் பெற்ற நூல் இதுவொன்றேயாகும். மேலும் அந்தாதித் தொடையிலும் அமைந்துள்ளது.

சைவசித்தாந்தச் செந்நெறியில் காணும் பல அரிய உண்மைகள் இந்நூலில் சொல்லப் பட்டுள்ளன. இவ்வுண்மைகளை இந்நூலாசிரியர் விளக்கும் முறையே தனித்தன்மை கொண்டது. ஆசிரியர், தம் மனத்தில் எழுந்த ஐயங்களைத் தம் குருவினிடம் வினவுவதாகவும், அவற்றிற்கு, அவர் விடை கூறுவதாகவும் அமைந்துள்ளது. ஆனால் இவ்வகையில் 2ஆவது பாடல் மட்டுமே அமைந்துள்ளது. வெண்பாப் பாக்கள் 10ல், முதலும் 19ஆவதும் ஆகிய 2 பாடல் தவிர எஞ்சிய 8ம், ஆசிரியரை வினாவுமுகமாகவே அமைந்துள்ளன. ஆசிரியப்பாவாக அமைந்த 10 பாடலில், 2, 18, 20 ஆகியன தவிர எஞ்சிய 7ல், ஆசிரியர் தம் குருவிடம் ஒன்றை வினவ, அதற்கு அவர் விடைதர, மறுபடியும் வினவ, அதற்கு மேலும் அவர் விடைதர இவ்வாறு அமைந்துள்ளது.

இறுதியில் ஒரு வினாவுடன் நிறைவு பெறுகின்றது இந்நூல்!

இந்நூல் கூறும் பொருளை 3 வகையாகப் பிரிக்கலாம். (1) குரு வணக்கம்; (2) முப்பொருள் உண்மை; (3) குருவருள்.

*"அருள்முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்று*
*இருள்கண்டவா(று) என்கொல் எந்தாய் – மருள்கொண்ட*
*மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா என்னுடைய*
*மாலையாம் மாற்ற மதி!"*

என்பன போன்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களை இந்நூலிற் காணலாம்.

## *இறந்த காலத்து இரங்கல்*

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

கடந்த காலத்தில் நிகழ்ந்தன எண்ணி இரங்கிப் பாடுதல்.

இதில், ஈரடி கொண்ட 14 பாடல்கள் உள்ளன.

*"எண்ணிறந்த சென்மம் எடுத்தும் சிவபூசை*
*பண்ணிப் பிழையாமல் பதிஇழந்து கெட்டேனே!"*

போன்ற பாடல்கள் உண்டு!

## *இஷ்டலிங்க அபிஷேக மாலை*

*சிவப்பிரகாச சுவாமிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. வீர சைவர்களின் வழிபடு பரம்பொருள், 'இட்டலிங்கப் பெருமான்' ஆகும், 'அபிஷேகம்' என்பது இறைவனைத் தீர்த்த நீராட்டி வழிபடுதல். இஷ்டம் – இஷ்டி –பார்க்கப்படுவது. இலிங்கம் – சிவபெருமான்.

இதில், 'பன்னிரு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்'பாக்கள் 10 உள்ளன.

இலிங்கப் பெருமானை வழிபாடு செய்யும் போது பாடித் துதிப்பதற்கு ஏற்றது இது! பாராயணம் செய்பவரின் மனத்தை உருக்கும் இயல்பினது. இட்டலிங்க பூசையானது, நிரஞ்சன லிங்கத் தியானமாக மலர்வதும், இட்டலிங்கப் பெருமான் திருமேனி, அடிப்பீடம் முதல் மேல்வட்டம் வரை ஆறு மற்றும் நாளம், சிகை ஆக எண்வகைத் தலங்களில் சிவமூர்த்தம் சந்திரசேகரர் முதல் அதிசூக்கும சுபாவ சூனியநிலை ஈறாக அமைத்துக் கூறும் இயல்பும், இருவகை நெறிகளால் பேரின்பம் கிட்டும் என்பதும், நின்மல சாக்கிராவத்தையின் இயல்பும் விளக்கப்பட்டுள்ளன.

*"நல்லதில நெய்யாடி ஆனிடத்து ஐந்தாடி*
*நவைஇல்ஐ யமுதம் ஆடி*
*நல்குகா ரணகாரிய முறையின் அன்றியே*
*நறுநெய்பால் தயிர் ஆடியே . . . !"*

என்பன போல் வரும் பாடல்களைக் காணலாம்!

## *இஷ்டலிங்க குறுங்கழி நெடில்*

*சிவப்பிரகாச சுவாமிகள்*

'குறுங்கழி நெடில்' என்பது யாப்பு வகைகளில் 'ஆசிரியப்பா' விரியைச் சேர்ந்தது. இஷ்டம் – பார்க்கப்படுவது. இலிங்கம் – சிவபெருமான்.

இதன்கண் 10 விருத்தப்பாக்கள் உள்ளன. பாடல்தோறும் 'ஈசனே! மாசிலாமணியே!' என்று முடிவது. பாராயணம் செய்வோரை நெகிழ வைக்கும் தன்மையது. இதில் சிவபுண்ணியம், கன்மமல நீக்கம் முதலான செய்திகள்

சொல்லப்பட்டுள்ளன.

*"முந்துஇரு வினையும் தமஎன இருப்பின்*
*முற்றுஅவற் றின்பயன் தருவாய்!*
*வந்தவை நினஎன்று இருப்பின்அங்கு அவற்றை*
*மாற்றிவீ டுறஅருள் குவையே . . . !"*

என்பன போல் வரும் பாடல்கள் உண்டு!

## இஷ்டலிங்க கைத்தல மாலை

*சிவப்பிரகாச சுவாமிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலைபோலத் தொடுத்துப் பாடப்படுவது.

'கைத்தல மாலை' என்பது கையாகிய தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்று பொருள்படும்.

இஷ்டம் – பார்க்கப்படுவது. இலிங்கம் – சிவபெருமான்.

இது, 'ஒருவிகற்ப எதுகைக் கலிநிலைத் துறை' என்ற யாப்பில் அமைந்தது; 10 பாடல்கள் கொண்டது. பாடல் தோறும் 'என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே' என முடிவது.

இறைவனின் சிறப்பியல்புகள் இதன்கண் சொல்லப்பட்டுள்ளன.

*"பன்னு பாமறை தமிழினால் பாடும்நம் பிக்குப்*
*பொன்னும் ஆடையும் அணிகளும் ஊர்தியும் பொருளும்*
*இன்னும் ஈபவன் அருளினா மேவிவீற் றிருப்ப*
*என்ன மாதவம் செய்ததோ எனதுகைத் தலமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## இஷ்டலிங்க நிரஞ்சனமாலை

*சிவப்பிரகாச சுவாமிகள்*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவது. நிரஞ்சனம் – நிரஞ்சன லிங்கம். அதாவது 'பாவலிங்கம்'. இஷ்டம் – பார்க்கப்படுவது. இலிங்கம் – சிவபெருமான்.

இதில் 'கட்டளைக் கலித்துறை' என்ற யாப்பில் அமைந்த 31 பாடல்கள் உள்ளன.

உலக உற்பத்தி, திரிவித இலிங்கங்கள், ஆன்ம ஞானம், இட்டலிங்க வைராக்கியம் முதலான நுண்பொருள்கள், இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

*"அங்கையில் நெல்லி எனவந்து என் அங்கை அமர்ந்தஇளம்*
*திங்கள்அம் கண்ணி நினைஅன்றிப் போய்ப்பிற தெய்வம் தொழில்*

*கொங்கு அவிழ் பூந்துணர்க் கற்பக நீழல் குடிமுனிந்து*
*பொங்குளரி வெந்நிர யத்தூடு இருப்பப் பொருந்துவதே!"*

என்பது இதில் வரும் பாடல். இவ்வாறே பிறவும்!

## இஷ்டலிங்க நெடுங்கழிநெடில்

*சிவப்பிரகாச சுவாமிகள்*

'நெடுங்கழி நெடில்' என்பது யாப்பு வகைகளில் ஒன்று. 'ஆசிரியப்பா' எனும் யாப்பின் உட்பிரிவு. இஷ்டம் – பார்க்கப்படுவது. இலிங்கம் – சிவபெருமான். இதில், 14 சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்கள் 10 உள்ளன.

இது, சிவபெருமானைப் பாடித் துதிக்கும் பாராயண நூல். இனிய ஓசை, அரிய பொருள், அழகிய அணி, வீர சைவ நுண்பொருள்கள் ஆகியன இதில் சொல்லப்பட்டுள்ளன. இதனை ஒரு முறை ஓதினாலும் உள்ளம் தூய்மையடையும்.

*"மனம் எனும் வயமா என்வயப் படாமல்*
*மயங்குறும் ஐம்புல வீதி*
*மறிபடாது ஓடு நின்றது முறையோ*
*மறித்துஅதை நிறுத்தி என் தனக்கு*
*நினையலது உதவு வார்இலை அதனால்*
*நினைப்பர வுற்றனன் அதனை*
*நிறுத்திநீ இவர்ந்து பின்னர்நீ வேண்டு*
*நெறிகளில் சென்றிட விடுவாய். . . !"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்!

‘உ’

## உடற்கூற்று வண்ணம்

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

'வண்ணம்' என்பது, சந்தக் குழிப்புகளை ஆதாரமாகக் கொண்டுவருவது.

சந்தக் குழிப்புகளாவன: தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய என எட்டாம்.

இவ் எட்டும், தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா என எட்டோடு கூடிப் பதினாறாம்.

இப்பதினாறின் மேல், ன–னா என்ற உயிர்மெய்கள் தனித்து வந்தாலும், இவற்றோடு த், ம் என்ற ஒற்றுகள் வந்தாலும் இவ் ஒற்றுகள் தனித்து வந்தாலும், 'அரைச்சந்தம்' எனப்படும்.

சந்தங்களின் சில பல சேர்ந்தது ஒரு துள்ளல். துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பு. ஒரு குழிப்பும் ஒரு சிறு தொங்கல் துள்ளலும் சேர்ந்தது ஒரு 'கலை'யாம்.

'கலை' எட்டுக் கொண்டது ஒரு 'வண்ணம்'.

அடிக்கு 4 கலையாகவும், எட்டுக் கலையாகவும், பதினாறு கலையாகவும் வரும்.

16 முழுச் சந்தங்களை எட்டு அரைச் சந்தங்களால் பெருக்கச் சந்தங்கள் 128 ஆகும். இங்குச் சொல்லப்படும் 'வண்ணம்' வேறு; தொல்காப்பியத்தில் சொல்லப்படும் 'வண்ணம்' வேறு!

பட்டினத்தார் பாடிய பாடல்கள் 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இவ் 'உடற்கூற்று வண்ணம்' காணப்படவில்லை. எனவே, 11ஆம் திருமுறையில் இடம்பெற்ற பட்டினத்தார் வேறு, 'உடற்கூற்று வண்ணம்' பாடியவர் பிற்காலத்தவர் என்பர்.

> *"ஒருமட மாது ஒருவனுமாகி*
> *இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி . . ."*

என்று தொடங்கும் இவ் உடற்கூற்று வண்ணத்தில், பிறப்பு முதல் இறப்பு வரை சொல்லப்பட்டுள்ளது.

## உண்மைநெறி விளக்கம்

*சீர்காழித் தத்துவநாதர்*

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று.

ஆணவ மலத்தால் கட்டுண்டு அறிவின்றிக் கிடக்கும் உயிர், இறைவன்

திருவருளால் வினைமாசுகள் நீங்கி முத்திப்பேறு அடையும். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெறுவதைப் பத்துவகையான படிகளில் (தசகாரியம்) வைத்து விளக்குவது இந்நூல். இவ்வுண்மைகளை நெறிப்படுத்தி விளக்கும் நூல் ஆதலின் 'உண்மை நெறி விளக்கம்' எனப்படும்.

இந்நூல், 'பாயிரம்' நீங்கலாக 7 பாடல்கள் கொண்டது. கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்களால் ஆனது.

*"எப்பொருள்வந்(து) உற்றிடினும் அப்பொருளைப் பார்த்(து) இங்(கு)*
*எய்தும் உயிர் தனைக்கண்(டு), இவ் உயிர்க்கு மேலாம்*
*ஒப்பில்அருள் கண்டு சிவத்(து) உண்மை கண்டு . . ."*

என்பனபோல் வரும் பாடல்களைக் காணலாம்.

## உண்மை விளக்கம்

*திருவதிகை மனவாசகம் கடந்தார்.*

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று. சைவசித்தாந்தம் கூறும் பொருள் மூன்று. அவை; பதி, பசு, பாசம். இவற்றை முறையே 'மேற்பொருள், இடைப்பொருள், கீழ்ப்பொருள்' என்றும் கூறுவர். மேற்பொருளாய் இருப்பவன் இறைவன் (பதி); இடைப்பட்ட பொருளாய் இருப்பவை உயிர்கள் (பசு); கீழ்ப்பட்ட பொருளாய் உள்ளவை 'ஆணவம், கன்மம், மாயை' (பாசம்). இம் முப்பொருள் பற்றிய உண்மைகளை விளக்கிக் கூறும் நூல் ஆதலின் 'உண்மை விளக்கம்' எனப்பட்டது. 36 தத்துவங்கள், ஆணவம், வினை, ஆன்மா, சிவம், ஐந்தெழுத்து, முத்தி, வழிபாடு ஆகியவை இந்நூலில் கூறப் படுகின்றன. தில்லையில் இறைவன் ஆடும் திருக்கூத்தின் தத்துவத்தை இனிது விளக்கிக் காட்டுவதில் தலைசிறந்தது இந்நூல்.

இந்நூல் வெண்பா யாப்பினால் ஆனது. காப்புச் செய்யுள் உட்பட 54 வெண்பாக்கள் உள்ளன. நூல், வினாவும் விடையுமாக அமைந்துள்ளது. 8 வகை வினாக்களுக்கு விடைகூறுமுகமாக வெண்பாக்கள் அமைந்துள்ளன.

*"அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்*
*அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் – அஞ்செழுத்தே*
*ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக்கு அப்பாலாம்*
*மோனந்த மாமுத்தி யும்"*

என்பது திருவைந்தெழுத்தின் சிறப்பைக் கூறுவது. இவ்வாறு வருவன உள.

## உபதேசப் பஃறொடை

*தட்சிணாமூர்த்தி தேசிகர்.*

'பஃறொடை வெண்பா' என்பது வெண்பாவினுள் ஒருவகை. பல தொடைகளைப் பெற்று வருவதால் வந்த காரணப் பெயர். வெண்டளை பிழையாது,

12 அடிக்குள் வந்தால், அது 'பஃறொடை வெண்பா' ஆகும். அதற்கு மேல் வந்தால் 'கலி வெண்பா' எனப்படும். இந்நூல், 'பண்டார சாத்திரம்' 14ல் ஒன்று.

இவ், 'உபதேசப் பஃறொடை', உயிர், இறை, கட்டு, வீடு இவைகளைப் பற்றி அறிந்து உய்ய எண்ணிய மாணவனுக்குத் தடைநீக்கும் சாதனங்களாகத் 'தீட்சை, திருவைந்தெழுத்து, சிவபூசை, சிவத் தியானம்', முதலியன அமைய வேண்டும் என்று அறிவித்து, மல நீக்கம் பெறும் உபாயங்களை உபதேசித்துத் தன்னைப் பேரின்பத்து இருத்திய பேருதவிக்காக ஆசாரியனைத் துதிக்கும் துதிப்பாடலாக முடிவது. இந்நூலின் தொடக்கத்தில் 'குருவணக்கம்' இறுதியில் 1 வெண்பா உள்ளது. மொத்தம் 199 கண்ணிகளால் ஆனது.

*"எள்ளுக்குள் எண்ணெயென எங்கும் நிறைந்(து) அகலா(து)*
*எள்ளப் படாஇயல்பாம் இன்பநிலை . . ."*

போன்ற தத்துவக் கருத்துக்கள் மிகுதியாக இடம்பெற்ற நூல் இது!

## *உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

சதகம் = நூறு. சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

'உள்ளூர்' என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியக் கடவுள் மீது பாடப்பட்டது. 100 பாடல்கள் கொண்டது. பாடல்தோறும் 'உள்ளூரில் வளர் சிவ சுப்பிரமணிய தேவே!' என்று முடிவது. பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாவால் ஆனது.

இந்நூலில் முருகப் பெருமானின் கருணைத் திறம் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

*"சுத்தமா மாயையின் றோற்றமோ ரைந்தில்வினை*
*சோர்சுத்த வித்தையென்றும்*
*தொழிலேறி ஞானங் குறைந்ததத் துவமெனச்*
*சொல்லுமீச் சுவரமென்றும் . . . !"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

# 'எ'

## *எழுத்தறியும் பெருமான் மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது, சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவது.

'எழுத்தறியும் பெருமான்' திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.

'எழுத்து' என்பது 'வியாகரணம்'. சிவபெருமான் ஆடும் போது, அவரது உடுக்கையிலிருந்து 'டுக்', 'ரிங்', 'ரிணே' என்ற மூன்று ஒலிகள் பிறந்தன. அவற்றைக் கொண்டே 'பாணினி' என்பவர் 'வியாகரணம்' எழுதினார் என்பர். இதனால் ஒற்றியூர்த் தியாகேசருக்கு, 'வியாகரணப் பெருமாள்' என்று பெயர்.

கல்வி பயிலாதவர்க்கு எழுத்திலக்கணம் கற்பிக்க ஒரு மண்டபம் கட்டி. அதற்கு 'வியாகரண தான மண்டபம்' எனப் பெயரிட்டு, அங்கு எழுந்தருளச் செய்த இறைவனுக்கு, 'வியாகரணப் பெருமாள்' என்று பெயரிட்டனர்.

இனி இது குறித்த மற்றொரு செய்தி :– மாந்தாதா என்ற சோழமன்னன், ஆங்காங்குள்ள கோயில்கட்கு அமைந்த கட்டளையைக் குறைத்து எழுதுமாறு பணித்த ஓலையில், 'திருவொற்றியூர் நீங்கலாக' என்ற ஒருவரியை அவ் எழுத்திடையே இடமறிந்து இறைவன் புகுத்தினான். ஆதலின் 'எழுத்தறியும் பெருமான்' எனப் பெயர்பெற்றார்.

இது, 'திருவருட்பா' முதலாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

இந்நூலில் 31 பாடல்கள் உள்ளன. 'கொச்சகக் கலிப்பா' என்ற யாப்பில் பாடப்பட்டுள்ளது. பாடல் தோறும் 'எழுத்தறியும் பெருமானே' என முடிவது.

*"நில்லா உடம்பை நிலைஎன்றே நேசிக்கும்*
*பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்*
*சொல்லா மனநோயால் சோர்வுற் றலையும் அல்லல்*
*எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமானே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

# ‘க’

## *கச்சிக் கலம்பகம்*

*பூண்டி அரங்கநாத முதலியார்.*

'கலம்பகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. கலப்பு + அகம் = கலம்பகம். பல்வகைப்பட்ட பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையைக் 'கதம்பம்' என்று சொல்வதைப் போலப் பல்வேறு உறுப்புக்களைக் கொண்டு பாடப்படுவதால் 'கலம்பகம்' எனப்பட்டது.

'புயவகுப்பு, அம்மானை, காலம்' முதலான 18 வகை உறுப்புக்கள் கொண்டு, உலக நிகழ்ச்சி கருதிய துறைகள் விரவிவரக் 'கலிப்பா' முதலான பல்வகை யாப்பு அமைய, அந்தாதித் தொடை வரும்படி, ஒருவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்படுவது.

'கச்சிக் கலம்பகம்' என்னும் இந்நூல், 'கச்சி' எனப்படும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதர் மீது பாடப்பட்டது. நூலின் முதற்கண், காப்புச் செய்யுளும், 'நால்வர் துதி'யுமாகிய 2 தவிர 100 செய்யுட்கள் உள்ளன.

*"சிறுகாலின் மணமளவுந் திருக்காஞ்சி யுள்ளீர்!*
*சேயிழையாட் ககலுமிடைத் திருக்காஞ்சி யுள்ளீர்!*
*மறியோடு மழுவிடமார் மாசுணந்துன் புடையீர்!*
*மங்கையணிந் திடுமுத்தம் மாசுணந்துன் புடையீர். . . !*

என்பது 'மடக்கு' என்பதில் இடம் பெற்ற பாடல். இவ்வாறே பிறவும் வந்துள்ளன.

## *கச்சித் திருவகவல்*

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

'அகவல்' என்பது யாப்பு வகையில் வரும் 'ஆசிரியப்பா' வாகும்.

'கச்சி' என்பது காஞ்சிபுரம்.

காஞ்சிபுரத்து இறைவனாம் ஏகாம்பரநாதர் மீது பாடப்பட்டது.

70 அடிகள் கொண்டது. நிலையாமையை விரித்துரைப்பது.

*"திருமால் பயந்த திசைமுக னமைத்து . . .*
*முத்தி நாதனை மூவா முதல்வனை*
*அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்*
*கண்ட அண்ணலைக் கச்சிற் கடவுளை*
*ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்!*
*போக மாதரைப் போற்றுத லொழிந்தே!'*

என்பது அவற்றில் ஒன்று!

## கடம்பவனவல்லி பதிகம்

*உ.வே. சாமிநாதையர்.*

பதிகம் – 10 பாடல் கொண்டது.

'கடம்பவன வல்லி', மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அங்கயற்கண்ணியின் வேறுபெயர்.

அம் அம்மை மீது பாடப்பட்டது. 'கட்டளைக் கலித்துறை' என்ற யாப்பில், 11 பாடல்கள் உள்ளன.

*"வலக்கண் டிருவிடக் கண்வாணி*
*நெற்றியில் வாய்த்தொளிரும்*
*புலக்க ணறிவு மகளென*
*நூல்கள் புகல்வதுகேட்*
*டல்க்கண் விலக்குநின் றாடைந்*
*தேனரு ளன்பார்கள் மும்*
*மலக்கண் ணடையுறு கண்டீர்*
*கடம்பவன வல்லியே!"*

என்பது இப்பதிகத்தில் வருவது. இதன்கண் 'மும்மலம்' சொல்லப் பட்டுள்ளது, சைவ சித்தாந்தத்தை அடியொற்றியதாம். இவ்வாறே பிறவும் வரும்.

## கண்ணுடையம்மன் பள்ளு

*முத்துக்குட்டிப் புலவர்.* இவரின் வேறுபெயர் சைவ முத்து நாயகம்.

தமிழில் உள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று 'பள்ளு'. பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியின் ஊரில் நிகழும் சில நிகழ்ச்சிகளை நாடகமாக்கிக் காட்டுவது இந்நூலின் இயல்பு.

சிவகங்கைக்கு அருகில் உள்ள 'பனசை' எனப்படும் நாட்டரசன் கோட்டையில் எழுந்தருளியிருக்கும் கண்ணுடைய நாயகி அம்பாள் மீது பாடப்பட்டது இது. கலிப்பா, சிந்து, சந்தவிருத்தம் முதலிய யாப்புகளில் அமைந்த நூல். தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுள் 1; பாயிரம் உட்பட 139 செய்யுள்கள் உடையது.

*"கண்ணுடை யம்மன் கருணைவைத் தால்,பண்டு*
*காய்ந்த மரமும் கனிசொரியும்*
*பெண்ணுடன் ஆணும் பெறுவார்கள் அம்மன்*
*பேரிடப் பேரிடப் பிள்ளையடி?"*

என்பன போன்ற கவிதைகள் உள்ளன.

## கந்தகோட்ட மும்மணிக்கோவை

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

'கோவை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. இது, கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து, ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப்பட்டுப் பாடப்படுவது. மூன்று மணிகளாலான கோவை போல, 'அகவற்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை' எனும் மூவகை யாப்பில் பாடப்பட்டது. காஞ்சிப் பதியைச் சார்ந்த ஐயன் பேட்டையில் உள்ள கந்த கோட்டத்து முருகனைப் பற்றிய நூல்.

*"தொண்டயர்ந் தாரே யண்டர்க ளாயினார்*
*தொண்டயர்ந் தாரே சுடர்நிட்ட ராயினார்*
*தொண்டயர்ந் தாரே தொல்சித்த ராயினார்*
*தொண்டயர்ந் தாரே தோய்முத்த ராயினார்... !"*

என்பது அவற்றில் ஒன்று!

## கந்த புராணம்

*கச்சியப்ப சிவாசாரியார்.*

புராணம் – பழைய வரலாறு

கந்தன் + புராணம் = கந்தபுராணம், கந்தனாகிய முருகப் பெருமானைப் பற்றிய பழைய வரலாறு என்று பொருள்.

வடமொழியில் உள்ள கந்தபுராணம், ஆறு சம்மிதைகளை உடையது. அவை:– சங்கர சம்மிதை; சனற்குமார சம்மிதை; சூத சம்மிதை, பிரம சம்மிதை, விஷ்ணு சம்மிதை, சூர சம்மிதை.

இவற்றுள் சங்கர சம்மிதை, 12 காண்டங்கள் கொண்டது. அவற்றுள் முதல் காண்டமான சிவரகசியகாண்டம் 7 உட்பிரிவுகள் கொண்டது. அவை:– சம்பவ காண்டம்; அசுர காண்டம்; மகேந்திர ணகாண்டம்; யுத்த காண்டம்; தேவ காண்டம்; தட்ச காண்டம்; உபதேச காண்டம்.

வேதவியாசர் செய்த கந்தபுராணத்தின் இந்த ஏழு காண்டங்களில் முதல் ஆறு காண்டங்களைத் தமிழில் தந்தவர் தவக்கவி கச்சியப்ப சிவாசாரியார் ஆவர்.

இந்நூலில் உள்ள செய்யுட்கள்: 10,345, நூலின் தொடக்கம், 'திகட சக்கரச் செம்முக மைந்துளான்' என்று ஆரம்பமாகிறது. இது, முருகப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்தது.

இந்த நூல் அரங்கேற்றமான போது, பேரவையில் இருந்த புலவர் ஒருவர், 'திகட சக்கரம்' என்பதற்குரிய புணர்ச்சி விதி, தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களில் இல்லையே? என்று தடையெழுப்ப, முருகனருளால், மறுநாள் அப்பேரவையில், 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலில், 'திகழ் + தசம் = திகடசம்' என்று புணர்தற்குரிய விதி சொல்லப்பட்டுள்ளதாகக் கூறினார் கச்சியப்பர் என்பது வரலாறு.

*"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய!"*

என்பது முருகப் பெருமானின் திருவவதாரம் கூறுவது. இவ்வாறு பிறவும் வரும்!

## கந்தரலங்காரம்

*அருணகிரிநாதர்.*

கந்தர் + அலங்காரம் = கந்தரலங்காரம். 'கந்தன்' என்பது 'கந்தர்' என வந்தது. அலங்காரம் – அணிகள். கந்தப் பெருமானுடைய அலங்காரங்களைக் கூறுவது என்பது பொருள். முருகப் பெருமானின் பாதாதிகேச வடிவ நலன்கள், அவனது ஊர்தி, படை, கொடி, திருப்பெயர்ச் சிறப்பு ஆகியவற்றை விளக்கும் நூல். முருகனுக்கு உகந்த பாமாலை இது. அறம் செய்வதன் இன்றியமையாமை, யமபயம், யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, சிவயோகம் முதலான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. இதனை நாளும் ஓதுவோர், துன்பம் நீங்கி, முருகன் அருளைப் பெறுவர்.

இதன்கண், 'காப்பு'ச் செய்யுள், தவிர, 107 பாடல்கள் உள்ளன.

*"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை,முரு காஎனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணை, வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!"*

என்பது அவற்றில் ஒன்று.

## கந்தரநுபூதி

*அருணகிரிநாதர்.*

கந்தர் + அநுபூதி = கந்தரநுபூதி. 'கந்தன்' என்பது 'கந்தர்' என்றாயிற்று. 'கந்தன்' என்பதற்கு 3 பொருள் உண்டு: பகைவரின் ஆற்றலை வற்றச் செய்பவன்; 6 திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தியவன்; ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாக விளங்குபவன். அநு+பூதி = அநுபூதி. அநு–உடன்; பூதி – ஆதல்.

ஆன்மா, இறைவனிடம் ஒன்றுபடுதல் என்பதாம். எனவே, ஆன்மா, கந்தக் கடவுளுடன் ஒன்றுபட்டு (அத்துவிதமாகி) அதனால் விளையும் மெய்யுணர்வே 'கந்தரநுபூதி' யாகும்.

இது ஒரு மந்திர நூல். ஆழ்ந்து அகன்று நுணுகிய அரிய பெரிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் ஒப்பற்ற நூல். அருட் பண்புகள் ஒருங்கே அமைந்த சுருங்கிய நூல்.

முருகப் பெருமானுடைய துதிநூல்களில் இது மிகவும் சிறப்புடையது. நாள்தோறும் பாராயணம் செய்தற்குரியது.

இதன்கண், 'காப்புச் செய்யுள் 1, தவிர, 51 பாடல்கள் உள்ளன. ஆறு ஆதாரங்களில் 'அகர' முதல் 'க்ஷகர' முடிவாக 51 அக்கரங்கள் உள்ளன. அம்மந்திரங்களை 'மாத்ருகா மந்திரம்' என்றும், 'மாலாமந்திரம்' என்றும் கூறுவர்.

இம் மாத்ருகா மந்திரங்களாகிய 51 மந்திரமலர்களை, 'அன்பு' என்ற நாரினால், நாவிலே அழகாக, மனம் என்ற தாமரைப் பூவைக் குஞ்சகமாக நடுவே அமைத்து, மாலையாகத் தொடுத்து, அதில், 'ஞானம்' என்ற நறுமணம் கமழவும், 'புத்தி' என்ற வண்டு பாடவும் அமைத்து, அம்மாலையை ஆறுமுகப் பெருமானின் அடிமலர்கட்கு அணிவிக்க வேண்டும் என்பார் அருணகிரிநாதர்!

இதன் பெருமை உணர்ந்த தாயுமானவர்,

*"கந்தரநு பூதி பெற்றுக்*
*கந்தரநு பூதி சொன்ன*
*எந்தை யருள்நாடி*
*இருக்கும்நாள் எந்நாளோ?"*

என்கிறார்.

*"பேராசை யெனும் பிணியிற் பிணிபட்*
*டோரா வினையே னுழலத் தகுமோ?*
*வீரா முதுசூர் படவே லெறியுஞ்*
*சூரா சுரலோக துரந்தரனே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## கந்தரிரட்டை மணிமாலை

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. இரட்டை–இரண்டு. கந்தர் – முருகன். இரண்டு மணிகளால் ஆகிய மாலை போல 'நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை' என்னும் இருவகை யாப்பினால் ஆனது.

முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

யாப்பு 1க்குப் பாடல் 10 வீதம், இருவகை யாப்புக்கு 20 பாடல்கள் உள்ளன.

'உருவம், சொரூபம், சுவாபம், விசேடம், வியாத்தியும் வியாபகமும், குணம், நிறம்', முதலான எண் வகைகளும்; சக்தி காரியமும் பிறவும் சொல்லப்பட்டுள்ளன.

*"சாவும் பிறப்பு மருவாவொர் நித்திய தத்துவமாய்*
*யாவுந் தனக்கு ளடங்கநின் றோய்தோற்ற நாசமென்னும்*
*நோவில் வருந்தும் பசுக்களை வீட்டு னுழைக்கவெனா*
*மேவுங் கருணையி னோராறு நின்குணம் வேலவனே!"*

என்பது 'குணம்' என்ற தலைப்பில் வருவது. இவ்வாறே பிறவும் வரும்!

## கந்தரொலிய லந்தாதி

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளுக்கு முதலாக வரத்தொடுப்பது. கந்தர் – முருகப்பெருமான். ஒலியல் – ஓசை.

இதன்கண் 'காப்பு'ச் செய்யுள் 1 நீங்கலாக, 30 செய்யுட்கள் உள்ளன.

*"நாயக நீயென்று நானென்று நீத்த நடுநிலையாம்*
*ஞேயத்திற் றேயத் துடனமுந் தான்றவர் நிற்குநிலை . . . !"*

என்பன போல் வரும் பாடல்களைக் காணலாம்.

## கந்தர் கலிவெண்பா

*குமர குருபர அடிகள்.*

'கலிவெண்பா' என்னும் யாப்பில், முருகப் பெருமானைப் பற்றிப் பாடப்பட்டது.

இங்குச் சொல்லப்படும் 'கந்தர்', திருச்செந்தூர்த் தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளாவர். அவர் மீது, பாடப்பட்டது.

5 வயதுவரை ஊமையாக இருந்த குமரகுருபர அடிகள், திருச்செந்தில் முருகன் அருளால் வாய் திறக்கப் பெற்று, முதல் முதலாகப் பாடிய நூல் இது!

இதில் 122 கண்ணிகள் உள்ளன. '1 கண்ணி' என்பது 2 அடிகள் கொண்டது.

இந்நூலில் முருகனின் பல்வேறு அற்புதங்கள், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் முதலாயின அடங்கியுள்ளன.

*". . . . . . . பிறியாக்*
*கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்*
*குருபரனென் றோர் திருப்பேர் கொண்டு – திருநோக்கால்*
*ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டு நிலம்*
*ஏழுமத்து வாக்க ளிருமூன்றும் – பாழாக*
*ஆணவ மான படலம் கிழித்தறிவிற்*
*காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி . . . !"*

என்பனபோல் வரும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல சொல்லப்பட்டுள்ளன.

## கந்தர் சட்டி கவசம்

*தேவராய அடிகள்*

முருகன் உறையும் ஆறுபடை வீடுகள் : திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமி மலை), குன்றுதோறாடல் (திருத்தணிகை முதலிய மலைகள்), பழமுதிர்சோலை (அழகர் கோயில்)

என்பனவாகும். இந்த ஆறு திருப்பதிகளிலும் உறையும் முருகப் பெருமான் மீது இக் கவசம் ஆறு பிரிவுகளாகப் பாடப்பெற்றுள்ளது. எனினும் திருச்செந்தூர் பற்றிய பகுதி மட்டுமே அனைவராலும் படிக்கப் பெறுகிறது. அது, 'சட்டியை நோக்கச் சரவண பவனார்' என்று தொடங்கும் பகுதியாகும். இது தவிர மேலும் 5 பகுதிகள் இந்நூலில் உள்ளன.

'சட்டி' என்பதற்கு 'ஆறு' என்று பொருள். 'ஆறு' என்ற எண் முருகனின் பெருமைகளை உணர்த்தப் பல வழிகளிலும் பயன்படுகிறது. அவருக்குரிய படை வீடுகள் ஆறு; அவர் திருமுகங்கள் ஆறு; அவரைக் குறிக்கும் மறை எழுத்து ஆறு; அவரைக் குறித்து நோன்பு நோற்போர், ஆறாம் நாளாகிய 'சட்டி'யில் நோற்பது சிறப்பு. அவரைப் பாலூட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்டிர் அறுவர். 'கவசம்' என்பதற்கு 'மேல் உறை' என்று பொருள். முருகக் கடவுளின் திருவருள், மக்கட்குத் துணையாகி, மேலுறை போன்று இருந்து, பிறர் செய்யும் கேடுகளும், பகை, பாவம், அச்சம், பழி முதலாயினவும் மக்களைச் சேராதபடி காத்தருளுமாறு வேண்டுதலால் இது 'கவசம்' எனப்பட்டது.

> *"துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்*
> *பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்*
> *நிட்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்*
> *சட்டி கவசந் தனை"*

என்பது காப்புச் செய்யுள்; திருப்பரங்குன்றம் – 79; திருச்செந்தூர் – 238; திருவாவினன்குடி – 144; திருவோகம் – 74; குன்றுதோறாடல் – 157; பழமுதிர்சோலை – 80 ஆக 772 அடிகள் கொண்டது இந்நூல்!

## கந்தர் நான்மணிமாலை

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலை போலத் தொடுக்கப்படுவது.

நால்வகை மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போல, 'நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், நேரிசையாசிரியப்பா' என்னும் நால்வகை யாப்பினால் தொடுக்கப்பட்டது.

யாப்பு 1க்குப் 10 பாடல் வீதம் 4 வகை யாப்புக்கு 40 பாடல்கள் உள்ளன.

முருகனின் பெருமை பேசுவது.

> *"அன்றலர்ந்த பூக்கொண் டருச்சிக்கு நாகரிகல்*
> *வென்றமுரு கா! பாழ்த்த வேட்கைமனங் – கொன்றவர்பால்*
> *எல்லாநின் கூத்தாக வேயிருக்கு மாற்றார்செய்*
> *பொல்லாங்கு மில்லாமற் போம்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *கயற்கண்ணி மாலை*

*உ. வே. சாமிநாத ஐயர்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுத்துப் பாடுவது.

'கயற்கண்ணி', மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அங்கயற்கண்ணி அம்பாள் மீது பாடப்பட்டது.

இதன்கண் 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 100 பாடல்கள் உள்ளன. பாடல் தோறும், 'கயற்கண்ணியே' என முடிவு பெறுகிறது. கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்துள்ளது.

இறைவியின் பெருமை பேசப்படுகின்றது; 'வேண்டுதல்' முறையில் அமைந்துள்ளது.

*"குயவாய் மகளிர் நலவாய்*
*நுடங்கு கொடியிடைவாய்*
*நயவா யுறுசெய்ய வாய்நசை*
*மேவுபு நான்மெலிந்தேன்*
*பயவாய் விழுந்து வருந்தா*
*வணமருள் பாலிப்பையே*
*கயவாய்க்கு முத்தி தருங்கூடல்*
*வாழுங் கயற்கண்ணியே!"*

என்பது இவற்றில் ஒன்று. பிறவும் இவ்வாறே வரும்!

## *கயிலாசநாதர் சதகம்*

*சேலம் சிதம்பரப் பிள்ளை.*

'சதகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

சதகம் – 100. ஒரு நூறு பாடல்கள் கொண்டது.

கயிலாசநாதர் மீது பாடப்பட்டது.

முதற்கண் 'காப்புச் செய்யுள் 1ம், இறுதியில் 'வாழ்த்து'ச் செய்யுள் 1ம் நீங்கலாக 100 பாடல்கள் உள்ளன.

இந்நூலில், 'செய்யுள் வகை, நால்வகைக் குலங்கள், கவிஞர் பெருமை, குருவின் இயல்பு' எனப் பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஒவ்வொரு செய்யுளும் 'கயிலையங்கிரி வாசனே' என முடிகிறது.

*"அணிகொளு மிலக்கிய விலக்கணக் கடன்மடுத்*
*தாகமது ரஞ்சித்திர*

*மாகும்வித் தாரநாற் கவிமழை பொழிந்தெவரு*
*மரிதரி தெனச் சொல்லவே. . .!"*

என்பது கவிஞரைப் பற்றியது. இவ்வாறே பிறவும்!

## கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி

*நக்கீர தேவ நாயனார்.*

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் = முடிவு. ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக வருமாறு பாடப்படுவது. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

100 பாடல்கள் கொண்டது. ஒற்றைப்படை எண்களில் அமைந்த 50 வெண்பாக்களும் திருக்கயிலையைப் போற்றுவனவாகவும்; இரட்டைப்படை எண்களில் அமைந்த ஐம்பது வெண்பாக்களும் திருக்காளத்தி மலையைப் போற்றுவனவாகவும் அமைந்துள்ளதால் நூலுக்கு இப்பெயர் வந்தது.

இறைவனின் சிறப்பும், அடியார்களின் சிறப்பும் இதன்கண் சொல்லப்பட்டுள்ளன.

*"பண்டு தொடங்கியும் பாவித்தும் நின்கழற்கே*
*தொண்டு படுவான் தொடர்வேனைக் – கண்டுகொண்(டு)*
*ஆளத் தயாவுண்டோ இல்லையோ சொல்லாயே*
*காளத்தி யாயுன் கருத்து!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## கருணை மாலை

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது, சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. முருகப் பெருமானின் அருள் வேண்டிப் பாடியது ஆதலின் 'கருணை மாலை' எனப்பட்டது.

இது, திருவருட்பா, முதல் திருமுறையில் உள்ளது. 'கலி விருத்தம்' என்ற யாப்பினால் பாடப்பட்டது. 30 பாடல்கள் கொண்டது.

திருத்தணிகை முருகன் மீது பாடப்பட்டது. அவனின் அருளை வியந்து பாடியது.

*"என்னை யென்னையீ தென்றன் மாதவம்*
*முன்னை நன்னெறி முயன்றி லேனைநின்*
*பொன்னை யின்னதாள் போற்ற வைத்தனை*
*அன்னை யென்னும் நல்தணிகை யண்ணலே?"*

என்பது அவற்றில் ஒன்று!

பாரக்க:–

திருஅருட்பா

### *கலியியல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

கலி – கலிப்பா. யாப்பு வகையில் 'கலிப்பா' என்பதும் ஒன்று. அதன் வகைகளும், இனங்களும் இப்பகுதியில் வந்துள்ளன. மொத்தம் 163 பாடல்கள் உள்ளன. அனைத்துமே முருகனைப் பற்றியன. 'நாகபந்தப்' பாடலும் உள்ளது.

*"மேலென்று சொலப்பட்ட பொருட்கெல்லா மேலாயெக்*
*காலுமிருந் தெங்கணுமாக் கழுமுபொரு ளொன்றதனைப்*
*பரசுப்ர மணியமெனப் பகருமுயர் சுருதியதன்*
*சரணச்செங் கமலமலர் தங்கியநுண் பூழிகளை . . . !"*

என்பது 'வெண்கலிப்பா'. இவ்வாறே பிறவும் வரும்!

### *கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்*

*மாதவச் சிவஞான சுவாமிகள்.*

'பிள்ளைத்தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. கடவுளையோ, அடியார்களையோ, வள்ளல்களையோ குழந்தையாகக் கருதிப் 10 பருவங்களாகப் பருவம் 1க்குப் பாடல் 10 வீதம் 100 பாடல்களால் பாடப்படுவது. இஃது (1) ஆண்பாற் பிள்ளைத்தமிழ்; (2) பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும்; 'காப்பு' முதலான 10 பருவங்களில் இறுதி 3 பருவ மட்டும் வேறுபட்டு வரும்.

'கலைசை' என்பது, 'தொட்டிக்கலை' என்பதன் மரூஉ'. இது, தொண்டைநாட்டில், சென்னைக்கு அருகே 'ஆவடி' என்ற ஊருக்கு அருகில் உள்ளது.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகருக்குச், 'செங்கழுநீர் விநாயகர்' என்று பெயர். அவர்மீது பாடப்பட்டது இது!

இப்பிள்ளைத்தமிழில் பருவம் 1க்குப் பத்துப்பாடல் என்றில்லாமல் 5 பாடல் வீதம் 10 பருவத்திற்கு 50 பாடல்களும் தொடக்கத்தில் 2 செய்யுளுமாக மொத்தம் 52 பாடல்கள் உள்ளன.

*"மலைவற முப்பொரு ளியல்புதெ*
*ளித்தரு ளொரு முதலே!*
*மலையென முற்படு வினைகள*
*றச்செயு மெமதுயிரே*
*அலையும னத்தையு நிலையினி*
*றுத்திடு மருளுருவே!*

*அமிழ்தினி னித்துட லிடனுமு*
*கிழ்த்தொளிர் சிவவிளைவே . . . !"*

என்பன போன்ற சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல்கியுள்ள பகுதிகள் நிறையவுண்டு!

## *கலைசைப் பதிற்றுப்பத்து அந்தாதி*

மாதவச் சிவஞான சுவாமிகள்

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல்.

'அந்தாதி' என்பது 2 அடிகளுக்கும், இரண்டு செய்யுட்களுக்குமிடையே காணப்படும். இவற்றுள் 2 அடிகளுக்கிடையில் அமைவதை 'அந்தாதித் தொடை' என்பர்; 2 செய்யுட்களின் இடையே! அமைவதைச் 'செய்யுள் அந்தாதி' என்பர். ஒன்றன் அந்தம் (முடிவு), அடுத்தன் 'ஆதி' (முதல்) யாக வருவதால் இப்பெயர் பெற்றது. இது வடசொல் புணர்ச்சி. தமிழ்நூல் வகைகளில், இவ் அந்தாதிகள், தொடர்நிலைச்செய்யுட்களில் ஒன்றாகிய 'சொற்றொடர் நிலை'யின்பாற்படும். 'செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே' என்பது தண்டியலங்காரம்.

செய்யுளந்தாதி, ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, சொல்லோ, அடியோ, அடுத்த செய்யுளின் முதலில் வருவது. நூலின் கடைசிச் செய்யுளின் இறுதி, முதற்செய்யுளின் முதலோடு ஒன்றி வந்தால், 'மண்டலித்தல்' எனப்படும்.

இவ் அந்தாதிகள், வெண்பா அல்லது விருத்தம் அல்லது கட்டளைக்கலித்துறையால் பாடப்படும். பெரும்பாலும் 100 செய்யுட்கள் உண்டு. சில நூல்களில் குறைந்த எண்ணிக்கையும் வரும்.

பத்துப் பத்துப் பாட்டுக்கு ஓர் யாப்பாகப் பத்துவகைச் செய்யுட்களால் இயற்றப்படும் அந்தாதி, 'பதிற்றுப்பத்தந்தாதி' எனப்படும்.

'கலைசை' என்பது, 'தொட்டிக்கலை' என்பதன் மரூஉ. இது, சென்னைக்கு அருகே 'ஆவடி' என்ற ஊருக்கு அருகில் உள்ளது. ஆங்கு எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்டது. இந்நூலின்கண், 'காப்புச் செய்யுள்' 1 தவிர 100 செய்யுட்கள் உள்ளன.

இவற்றில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ளன.

*"திருமால் பிரமன் றெளியா தழலா*
*யருமா லுறநீண் டருளங் கணனெம்*
*பெருமான் கலைசைப் பதியே ணியவா*
*விருமா மலமற் றெளியே னுயவே!"*

இதன்கண் பெரிய, கரிய ஆணவமலம் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறே னையவும் வரும்.

## *காசிக் கலம்பகம்*

*குமரகுருபர அடிகள்.*

'கலம்பகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. பலமலர்களால் ஆன மாலை, கதம்பம். அதுபோலப் பல உறுப்புக்கள் கலந்து பாடப்படுவது 'கலம்பகம்'.

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

காசியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள விசுவநாதர் மீது பாடப்பட்டது. அந்தாதித் தொடையில் அமைந்தது. 'மண்டலித்து' முடிவது.

இந்நூல், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர 100 பாடல்கள் கொண்டது. இத் தலத்து அம்பாள் பெயர்: விசாலாட்சியம்மை. காசி விசுவநாதரின் பல்வேறு சிறப்புக்களைக் கூறுவது இந்நூல்.

*"கண்ணிருக்குந் திருநுதலும் கனலிருக்குந்*
*திருக்கரமும் கலந்தோர் பேதைப்*
*பெண்ணிருக்கும் இடப்பாலும் பிறையிருக்கு*
*மவுலியுமாய்ப் பிரிக்க லாகா*
*எண்ணிருக்குங் கணத்தொடுமா னந்தவனத்*
*திருப்பாரை யெங்கே காண்பார்*
*பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ணனுங்கண்*
*ணனுமமரர் பலருந் தானே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *காசி யாத்திரை*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

காசியாத்திரை – காசிப்பயணம்.

நூலின் பெயர் இவ்வாறிருந்தாலும் முருகப்பெருமானின் பெருமைகளைக் கூறுவது. பல்வேறு தத்துவங்களை மொழிவது. சைவசித்தாந்தக் கருத்துக்களையும் உள்ளடக்கியது.

இதன்கண் 608 பாடல்கள் உள்ளன.

வெண்பா, கட்டளைக் கலித்துறை, கண்ணி எனப் பலவித யாப்பு வடிவங்களும் உள்ளன.

*"ஏகமெனுங் கூற்றிற் கிறையொன்றே மற்றொன்றற்*
*கேகனுருச் சீவனுமென் றேநவிலல் – பாகமிலா*
*வத்துவிதச் சொல்லிற் கருளிறையுஞ் சீவனுமே*
*நித்தியசம் பந்தமென னேர்!"*

என்பது சைவசித்தாந்தப் பொருளைக் கூறுவது. இவ்வாறே பிறவும் வரும்.

## *காஞ்சிப் புராணம்*

*மாதவச் சிவஞான சுவாமிகள்* (முதற் காண்டம்)

*கச்சியப்ப முனிவர்* (2ஆம் காண்டம்).

புராணம் – பழைய வரலாறு.

காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஏகாம்பர நாதர் – காமாட்சியம்மையைப் பற்றியது.

இந்நூலில், தொடக்கத்தில் 'காப்புச் செய்யுள்' முதலாக 26 திருவிருத்தங்கள் உள்ளன; அடுத்து, 'சிறப்புப்பாயிரம்' உள்ளது.

'திருநாட்டுப் படலம்' முதல் 'சிவபுண்ணியப் படலம்' வரை 64 படலங்கள், முதற்காண்டத்தில் உள்ளன. பாடல்கள் 2743. இவற்றைப் பாடியவர் மாதவச் சிவஞான சுவாமிகள்.

'திருக்கண் புதைத்த படலம்' முதல் 'இருபத்தெண்டளிப் படலம்' வரை 7 படலங்கள், 2ஆம் காண்டத்தில் உள்ளன. பாடல்கள்: 2110. இவற்றைப் பாடியவர் கச்சியப்ப முனிவர். ஆக 2 காண்டங்களிலும் மொத்தம் 4853 பாடல்கள் உள்ளன.

> *"கல்வரைப் பிராட்டி செவ்வேள் ஐங்கரன் கணங்கள் சூழப்*
> *பல்வகை ஊர்தியும்பர்ப் படரொளி யரசவீதி*
> *யெல்லையில் உயிர்கட்கெல்லாம் எண்ணருங் கருணை பூத்துப்*
> *புல்கொளித் திருவேகம்பன் திருவுலாப் போதச் செய்வோர்!"*

என்பது 'சிவபுண்ணியப் படலத்'தில் வருவது. இவ்வாறே பிறவும் வரும்.

## *காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்*

*வ. அழகிய சொக்கநாதபிள்ளை.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் பிள்ளைத்தமிழும் ஒன்று. கடவுளையோ, அடியாரையோ, வள்ளல்களையோ, குழந்தையாகக் கருதிப் பத்துப் பருவங்களில் பருவம் 1க்குப் பத்துப் பாடல் வீதம் 100 பாடல்களால் பாடப்படும். இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். கடைசி 3 பருவங்கள் மட்டும் வேறுபட்டு வரும்.

திருநெல்வேலியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள காந்திமதியம்மை மீது பாடப்பட்ட 'பெண்பாற் பிள்ளைத்தமிழ்' இது! நூலின் தொடக்கத்தில் 3ம், இறுதியில் 1ம் ஆக 4 பாடல் தவிர, 100 பாடல்கள் உள்ளன. சுவாமியின் பெயர் : நெல்லையப்பர்.

இந்நூலில், தலச்சிறப்பு, உவமை, கற்பனை, இறைவியின் அருட்செயல்கள் ஆகியன சொல்லப்பட்டுள்ளன.

அம்புலிப்பருவத்தில், 'சாம, பேத, தான, தண்டம்' என நால்வகை உபாயங்கள் அமையப் பாடுவது மரபு.

*"வாரா திருந்தா லினிநானுன் வடிவேல்*
*விழிக்கு மையெழுதேன்!*
*மதிவா ணுதற்குத் திலகமிடேன் மணியா*
*லிழைத்த பணியுனையேன் . . . !"*

என்பது வருகைப்பருவத்தில் வருவது. இவ்வாறே பிறவும் வரும்!

## கார் எட்டு

நக்கீர தேவநாயனார்.

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆவது திருமுறையைச் சார்ந்தது.

கார் – கார்காலம் அதாவது மழைக்காலம்.

கார்கால வரவினைக்கூறும் பாடல்கள் 8 உடையதாகலின் 'கார் எட்டு' எனப்பட்டது.

உலகமும் அதற்கு உறுதியாகிய அறம், பொருள், இன்பமும் நடத்தற்குக் காரணமாகிய மழையினது வரவினை எடுத்துரைக்கும் வாயிலாக, அம் மழைக்குக் காரணமாகிய இறைவனின் திருவருளை எண்ணச் செய்வது இந்நூல் எனலாம்.

இதன்கண் 8 நேரிசை வெண்பாக்கள் உள்ளன.

*"காந்தள் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியப்*
*பூந்தளவம் ஆரப் புகுந்தின்றே – ஏந்தொளிசேர்*
*அண்டம்போல் மீதிருண்ட ஆதியான் ஆய்மணிசேர்*
*கண்டம் போல் மீதிருண்ட கார்"*

என்பது இவற்றில் ஒன்று!

## குகப்பிரம அருட்பத்து

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

குகப்பிரமம் எனப்படும் முருகப் பெருமானின் அருளை வேண்டிப் பாடப்பட்ட 10 பாடல்கள் கொண்டது.

பன்னிரு சீர்க் கழிநெடி ஆசிரிய விருத்தப் பாக்கள்.

அடி 1க்கு 52 எழுத்து அமையப் பாடியது. சந்தத்துடன் பாடக்கூடியது.

*"தனாதன தனாதன தனாதன தனாதன*
*தனாதன தனாதன தனா"*

என்ற சந்தத்தில் அனைத்துப் பாடல்களும் அமைந்துள்ளன.

*"சராசர மெலாம்வனை பிரானுன துவேசவிர்*
*தனேரயி லெனாலுளதெனா . . ."*

என்பனபோல் வரும்.

## *குஞ்சரி மாலை*

*வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் 1.

குஞ்சரம் – யானை. குஞ்சரி – யானையால் வளர்க்கப் பெற்ற தெய்வயானை. தேவலோகத்து இந்திரனது ஐராவதயானை, தெய்வச் செயலாகத் தாமரைப்பூ மேல் கிடந்த பெண் குழந்தையைக் கொண்டுவர, இந்திரன் அன்போடு பேணி வளர்த்தான் என்பது புராணம். 'மாலை' என்பது மாலைபோல் தொடுக்கப்பட்ட நூலினைக் குறிக்கும்.

இந்நூலாசிரியர், முருகப் பெருமானை, உயிர்த் தந்தையாகக் கொண்டு போற்றுவது போன்று, வள்ளிநாயகியைப் பெற்ற தாயாகவும், தெய்வயானை யம்மையை வளர்ப்புத் தாயாகவும் கொண்டு பாராட்டுகிறார்.

நூலின் தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுளும், இறுதியில் நூற்பயனும் ஆகிய 2 பாடல்தவிர, 100 பாடல்கள் கொண்டது.

*"திருவளர் செந்தமிழ் பாடிவ*
*ரம்பெறு சிற்சிலர் தம்முடன்இங்(கு)*
*ஒருவனெ னக்குல வும்படி*
*நாடிஉ டைந்திடல் கண்டிலையோ*
*மருவல ரைப்பொரும் வேல்புனை*
*செந்தில்வ ரோதய னுக்குயிராம்*
*இருவருள் முன்னவள் என்றுல*
*கெங்கும்இ யம்பும்இ ளம்பிடியே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *குருநாத சதகம்*

*கருணையாநந்த சுவாமிகள்.*

சதகம் = நூறு. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

இந்நூலில் ஒவ்வொரு பாடலிறுதியிலும், 'குருநாதனே, குருநாதனே!' என முடிகின்றது.

தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுள் 2ம், இறுதியில் நேரிசை வெண்பா 1ம் நீங்கலாக 102 பாடல்கள் உள்ளன. 'கலிவிருத்தம்' என்ற யாப்பில் அமைந்துள்ளன.

*"சொல்லற்கரி தொருமாயைநின் சொருபத்தினி லுளவாகினால்*
*வெல்லத்தகும் பொருளுண்டரோ விளையாடினாய் வீடேறினாற்*
*புல்லற்கரி தாகாதெனப் புகலுஞ்சிலர் கதையாதல்போற்*
*கொல்லற் குளூசிகள் விற்குமோ குருநாதனே குருநாதனே!'*

என்பது இவற்றில் ஒன்று. இவ்வாறே பிறவும்!

## குருபரக் கண்ணி

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

'கண்ணி' என்பது இரண்டு அடிகளால் ஆவது.

குருபரன் – முருகப் பெருமான்.

இதன்கண் 50 கண்ணிகள் உள்ளன. அடிதோறும் 'குருபரனே!' என முடிவது. உலகியல் வாழ்க்கையைக் கூறுவது.

*"செல்வமிருந் தால்,வணங்கிச் செல்வமொழிந் தால்விடுவோர்*
*ஒல்குமிடை வேசியரை யொப்பார் குருபரனே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## குறுக்குத்துறைக் கலம்பகம்

*தி.சு. ஆறுமுகம்.*

'கலம்பகம்' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் 1.

பல்வகை உறுப்புக்களும் கலந்து வருவதால் பெற்ற பெயர். தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96 ல் 1.

திருநெல்வேலி நகரின் ஒருபகுதியாக விளங்குவது 'குறுக்குத்துறை'. ஆங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது. அகப்பொருளும் கலந்து அந்தாதித் தொடையில் பாடப்பட்ட இந்நூலின் இடையிடையே 'சித்திரக்கவிகளு'ம் கலந்துள்ளன.

நூலின் தொடக்கத்தில் 7 காப்புச் செய்யுளும், இறுதியில் 1 வெண்பாவும் உள்ளன. 100 பாடல்கள் கொண்டது இந்நூல்.

*"மருந்து போல்வடித் தெடுத்த இன்சொலை*
*அளந்து பேசிடும் வலைச்சியீர்!*
*மகிமை சேர்ந்ததிருவுரு மாமலை*
*மறுகில் மீன்களோ விலைசொலீர்!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## கொடிக் கவி

உமாபதி சிவாசாரியார்.

கொடி ஏறுவதற்காக அருளப்பட்ட கவி (பாடல்) ஆதலின் 'கொடிக்கவி' எனப்பட்டது. இதற்குக் 'கொடிப்பாட்டு' என்ற வேறுபெயரும் உண்டு.

தில்லையில் நடராசப் பெருமான் திருவிழாவில் கொடியேற்றும் போது அது ஏறாமல் தடைப்பட்டது. எனவே தில்லை வாழ் அந்தணர்கள், மனம் வருந்தினர். அப்போது, 'இங்கு உமாபதி சிவாசாரியார் வந்தால் கொடி, ஏறும்' என்ற ஓர் அசரீரி எழுந்தது. எனவே தில்லைவாழ் அந்தணர்கள், உமாபதிசிவம் இருந்த இடத்திற்குச்

சென்று வேண்டிக் கொள்ள, அவரும் கொடிமரத்தின் அருகே வந்து, இக் 'கொடிக் கவி'யைப் பாட உடனே கொடியும் ஏறியது.

'கொடியேற்றுதல்' என்பதற்குத் தத்துவக் கருத்தும் கூறப் படுவதுண்டு: கொடி மரத்தைச் சிவ வடிவாகவும்; கொடிச் சீலையை மறைப்புச் சக்தியாகவும்; அதில் வரையப்பட்டுள்ள இடபத்தை (காளை) உயிராகவும்; அக் கொடிக்கயிற்றை அருளாகவும்; அதோடு இணைந்துள்ள தருப்பைக் கயிறாம் பாசத்தோடு இணைந்துள்ள கொடிச்சீலையில் இணைப்புண்டு கிடக்கும் உயிர் கொடிக் கயிறாகிய அருளின் துணைகொண்டு, கொடிமரமாகிய சிவத்தைச் சேரவேண்டும் என்பது உட்கருத்து.

இந்நூல், சைவசித்தாந்த சாத்திரம் 14ல் ஒன்று. 4 பாடல்கள். முதற்பாடல் கட்டளைக் கலித்துறையால் ஆனது. எஞ்சிய 3ம் வெண்பாவால் ஆனவை.

மிகச் சுருங்கிய நூல் எனினும், உயிர் ஈடேறுதற்கென ஆசிரியர் தம் கருணையால் அருளப்பெற்றது ஆதலின் இந்நூல் படித்து இன்புறுதற்குரியது.

> *"வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
> *தாக்கால் உணர்வரிய தன்மையனை . . ."*

என்பன போன்ற பாடல்கள் மொத்தம் 4 உள்ளன.

## கோடீச்சுரக் கோவை

*கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர்.*

'கோவை' என்பது, தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. இஃது அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் முதன்மை வாய்ந்தது. இது கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோர்க்கப் பெற்றுப் பாடப்படுவதாகலின், 'கோவை' என்னும் பெயர் பெற்றது. அகப்பொருட்குரிய ஐந்திணைகளும் அமைந்திருத்தலின் இஃது 'ஐந்திணைக் கோவை' என்றும் கூறப்படும். பொருளால் தொடர்புடையது ஆதலின், இது, தொடர்நிலைச் செய்யுளின் பாற்படும்.

'கோவை'ச் செய்யுளில், (1) பாட்டுடைத் தலைவன்; (2) கிளவித் தலைவன் என இருவர் கூறப்படுவர். கடவுளையும், அரசர்கள் முதலானோரையும் பாட்டுடைத் தலைவர்களாக அமைத்துக் 'கோவை' பாடப்படும். எழுத்து முதலிய ஐவகை இலக்கணங்களிலும் வல்ல புலவர்களே 'கோவை' பாடத் தக்கவர்கள். 'யாவையும் பாடிக் கோவை பாடு' என்பது பழமொழி

'கோடீச்சுரக்கோவை' என்னும் இந்நூல், சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய கொட்டையூரில் கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானாம் கோடீச்சுரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது.

இத்தலத்துச் சிவபெருமான் திருமேனி, பல சிவலிங்கங்களால் அமைந்ததென்பதும், இவரை வழிபடுவதால் கோடிலிங்கங்களை வழிபட்ட பயன் கிட்டும் என்பதும் நம்பிக்கை.

இங்குள்ள அம்பிகையின் திருப்பெயர் 'பந்தாடியம்மை' என்பது.

இந்நூலின் தொடக்கத்தில் 'காப்புச் செய்யுள்' ஒன்று தவிர, 444 செய்யுட்கள் உள்ளன. இந்நூலில், தலச் செய்திகள், சிவபெருமானின் திருமேனி, பெருமை, திருவருட் செயல்கள், அணிநயங்கள் எனப்பல சிறப்புக்கள் உள்ளன.

*"தாயாய் உலகிற்குத் தந்தையு மாயருள் சங்கரர், செவ்*
*வாயார் மறையினர் கோடீச் சுரமன்ன மாதிறைவர் . . ."*

என்பனபோல் வரும் பாக்களைக் காணலாம்.

## கோட்டைவயல் ஸ்ரீ நடராஜர் உயிர்வருக்க மாலை

*உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்.*

கோட்டைவயல் எனும் ஊரில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமாள் மீது பாடப்பட்டது. காப்பு, வருக்கம், வாழ்த்துமாக 14 நேரிசை வெண்பாவால் ஆனது. பாக்கள் தோறும், 'கோட்டைவயல்' என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது. நடராசப் பெருமானைத் திடமுடை அன்போடு போற்றுபவர், மும்மை நலனும் முறையே பெறுவர் என்பது இந்நூலின் உட்பொருள்.

*'மொழிமுதல் ஆகிய எழுத்திற் கெல்லாம்*
*வருக்கம் உரைப்பது வருக்க மாலை'*

என்பது பன்னிருபாட்டியல் கூறும் இலக்கணம். இன்னபாவினால் பாடவேண்டும் என்ற வரையறை இன்மையால், ஆசிரியப்பாத் தவிர, பிறபாக்களினாலும் வருக்க மாலை பாடலாம் என்பதால், இவ் ஆசிரியர் வெண்பா யாப்பில் அமைத்துள்ளார். 'அ' முதல் 'ஔ' ஈறாகத் தொடங்கும் 12 வெண்பாக்கள்.

*"ஐந்தெழுத்து மோதியன்பா யக்குமணி பூண்டுதினம்*
*செந்தமிழா நான்மறையைச் செப்புவர்க்குச் – சொந்தமுடன்*
*கோட்டைவயல் வாழ்நடனன் கோதிலாப் பாக்கியங்கள்*
*தேட்டமாய் நல்கிடுவான் தேர்ந்து!"*

என்பன போல் வெண்பாக்கள் அமைந்துள்ளன.

## கோபப் பிரசாதம்

*நக்கீர தேவநாயனார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆவது திருமுறையைச் சார்ந்தது.

கோபம் – சினம்; பிரசாதம் – இறைவனின் திருவருள்.

அருட்கடலாகிய சிவபிரான், உயிர்களினிடத்துப் பேரருள் கொண்டவர்.

அருளே வடிவமாகவுடைய அவர், எவரிடத்திலாவது சினம் கொண்டவராயின், அதுவும் அவர்கள்பால் கொண்ட பேரருள் திறத்தின் விளைவினாலேயாம். எனவே இந்நூல் 'கோபப் பிரசாதம்' எனப்பட்டது.

இந்நூல், 100 அடிகள் கொண்ட ஒரே ஆசிரியப்பா மட்டுமே உடையது.

*"....*
*ஆலின் கீழிருந்(து) அறநெறி அருளியும்*
*இன்னவை பிறவும் எங்கள் ஈசன்*
*கோபப் பிரசாதம் கூறும் காலைக்*
*கடிமலர் இருந்தோன் கார்க்கடற் கிடந்தோன்...*
*கிருமி நாவாற் கிளத்தும் பரமே...!"*

என்பன போன்ற கருத்துக்களைக் காணலாம்!

## கோமதி அந்தாதி

*அண்ணாமலை ரெட்டியார்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் அந்தாதியும் ஒன்று. அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு, ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையப் பாடுவது. அவ்வாறே நூலின் கடைசிச் செய்யுளின் ஈற்றசையோ, சீரோ, தொடக்கச் செய்யுளின் முதல் அசை அல்லது முதற்சீரோடு பொருந்தவருமாறு பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

'கோமதி' என்பது, நெல்லை மாவட்டம் சங்கர நயினார் கோயிலில் எழுந்தருளியுள்ள கோமதி அம்பாளைக் குறிக்கும். அந்த அம்பாள் மீது பாடப்பட்ட நூல் இது.

100 பாடல்கள் கொண்டது இவ் அந்தாதி. ஆனால் கிடைத்தவை 44 பாடல்கள மட்டுமே! இந்நூலில்கண் திருத்தலச் சிறப்பு, உலக வழக்குச் செய்திகள் முதலாயின சொல்லப்பட்டுள்ளன.

## கோமதி சதரத்னமாலை

*ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவதால் இப்பெயர் பெற்றது. சதம் – நூறு.

நூறு இரத்தினங்களால் தொடுக்கப்பட்ட மாலை போல 100 பாடல்களால் யாக்கப்பட்டது. தொடக்கத்தில் காப்புச் செய்யுள் 1 உள்ளது.

'கோமதி' என்னும் பெயர், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை பெயர். இறைவன் : சங்கரநயினார்.

இந்நூலில், கோமதி அம்பிகையின் திருவருட்பேறு குறித்த செய்திகள் உள்ளன.

*"விரிந்தகிரி மலப்பிடிப்பை வெலாமாட்டா திங்கேநான்*
*தெரிந்துமிழி வினைபலவே செய்கின்றே னதனாலே*
*பரிந்துபுரந் திடுவாயோ பராமுகமா யிருப்பாயோ?*
*வெரிந்துவரு நமனார்முன் யாதுசெய்வேன் கோமதியே!"*

எனும் பாடல், சைவசித்தாந்தக் கருத்தை உள்ளடக்கியது. இவ்வாறே பிறவும் வரும்.

## கோமதியம்பிகை பிள்ளைத்தமிழ்

*முத்துவீரக் கவிராயர்.*

'பிள்ளைத்தமிழ்', சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. கடவுளையோ, அடியார்களையோ குழந்தையாகக் கருதிப் பத்துப் பருவங்களில், பருவம் 1க்குப் பத்துவீதம் 100 பாடல்களால் பாடப்படுவது. இது, ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். கடைசி 3 பருவமட்டும் மாறிவிடும்.

சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் கோமதியம்பிகை மீது பாடப்பட்ட சிற்றிலக்கியம் . காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் எனும் 10 பருவங்களும் 101 பாடல்களும் கொண்டது.

*". . . அன்னையாய் எவ்வுயிரையும் காக்கும் வல்லியோடு*
*அம்புலீ ஆடவாவே!"*

போன்ற பகுதிகள் உள்ளன.

## கோயிலூர்ப் புராணம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

புராணம் – பழைய வரலாறு.

கோயிலூர் – திருக்கோவலூர். திருவண்ணாமலைக்கு அருகே உள்ளது. இறைவன்: வீரட்டேசுவரர்; இறைவி: பெரிய நாயகி. அட்டவீரட்டத் தலங்களில் ஒன்று. இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பற்றிய புராண நூல்.

பாயிரம் தவிர, திருநாட்டுப்படலம், திருநகரப்படலம், நைமிசப் படலம், தலவிசேடப் படலம், வீரபாண்டியன் சமிவனம் அடைந்தபடலம், மாயப்புலி நீங்கிய படலம், கொற்ற வாளீசப்படலம், உபநிடதப் பொருளுரைத்த படலம், மதுப்பிரியர் துதியுரைத்த படலம், சுவேத ராசப்படலம், அன்னதான மகிமை உரைத்த படலம், சுதன்மை அருள் பெறுபடலம், தீர்த்த மகிமைப் படலம், சாப விமோசனப் படலம் எனப் 14 படலங்கள் கொண்டது. 849 திருவிருத்தப் பாக்கள் உடையது.

*“அறிதருநல் லாசிரியர் அடியடைந்த மாணவர்பால்*
*செறிதருமுப் பதப்பொருளுள் தெரிந்துபுகட் டிடுவதுபோல்*
*அறிதருவன் தொழிலுழவர் அள்ளலமை தருவயற்பால்*
*செறிதருபன் நெல்வித்துள் தெரிந்துவிதைத் திடுவரால்!”*

போன்ற அரிய உவமை நலங்கள் செறிந்த பாடல்கள் உண்டு.

## கோயில் திருஅகவல் 1, 2, 3

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

'கோயில்' என்பது சிதம்பரத்தைக் குறிக்கும்.

'அகவல்' என்னும் யாப்பில் அமைந்ததால், இப்பெயர் பெற்றது.

முதல் அகவல் 47 அடிகள்; 2ஆம் அகவல் – 38 அடிகள்; 3ஆம் அகவல் – 52 அடிகள் கொண்டது.

இவற்றில் தில்லை நடராசப் பெருமானின் அருட்டன்மை, தத்துவக் கருத்து, சைவசித்தாந்த நுண்பொருள் எனப்பலவும் சொல்லப்பட்டுள்ளன.

*“. . . .*
*பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்;*
*தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்;*
*பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்;*
*உணர்ந்தன மறக்கும்; மறந்தன உணரும்;*
*புணர்ந்தன பிரியும்; பிரிந்தன புணரும் . . .”*

என்பது முதல் அகவலில் வருவது.

*“. . . .*
*ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்*
*ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம் . . . !”*

என்பது 2ஆம் அகவலில் வருவது.

*“. . . .*
*பாவச் சரக்கொடு பாற்கடல் புக்குக்*
*காமக் காற்றெடுத்து அலைப்பக் கலங்கிக்*
*கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை*
*இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனை*
*நடுவன்வந் தழைத்திட நடுங்கும் யாக்கையை. . . !'*

என்பது 3ஆம் அகவலில் வருவது.

## கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது. கோயில் – சிதம்பரம்; திருப்பண்ணியர் – திருக் கூத்தாடும் நடராசர். விருத்தம் – யாப்பு வகையில் ஒன்று.

'கட்டளைக் கலித்துறை' என்னும் விருத்தங்களால் ஆனது. எனவே 'விருத்தம் எனப்பட்டது. 'கோயில்' எனப்படும் தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமான் மீது பாடப்பட்டது. அந்தாதித் தொடையில் அமைந்த 70 பாடல்கள் கொண்டது.

இவற்றில், இறைவனின் அருட்டன்மை, திருநடனச் சிறப்பு ஆகியன மொழியப்படுகின்றன.

*"அவநெறிக் கேவிழப் புக்கஇந்*
*நான்அழுந் தாமைவாங்கித்*
*தவநெறிக் கேஇட்ட தத்துவ*
*னே!அத் தவப்பயனாம்*
*சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ*
*னே!சென னந்தொறுஞ்செய்*
*பவமறுத் தாள்வதற் கோ,தில்லை*
*நட்டம் பயில்கின்றதே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## கோயில் நான்மணி மாலை

*பட்டினத்தார்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கியவகை 96ல் 1.

'வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரியவிருத்தம், நேரிசை ஆசிரியப்பா' என்னும் நால்வகை யாப்பில் 'மாலை' போலத் தொடுத்துப் பாடப்பட்டதாதலின் 'நான்மணிமாலை' எனப்பட்டது.

'கோயில்' என்பது தில்லைத் திருப்பதியாகிய சிதம்பரத்தைக் குறிக்கும். ஆங்கு எழுந்தருளியுள்ள நடராசப் பெருமான் மீது பாடப்பட்டதாகலின் 'கோயில் நான்மணிமாலை' எனப்பட்டது.

இதன்கண் யாப்பு 1க்கு 10 பாடல் **வீதம் 4 வகைக்**கு 40 பாடல்கள் உள்ளன.

இப்பாடல்களில் "இறைவனின் திருவடிவச் சிறப்பு; இறைவனின் 'தசாங்கம்' அதாவது 'படை, குடை, கொடி, முரசு, புரவி, களிறு, தேர், தார், மாலை, செங்கோல்' எனப்பத்து உறுப்புக்கள்: தலைவியின் நிலையைத் தோழி உரைக்கும் செய்தி; பல பிறவியில் உழன்று உழன்று, இறுதியில்தான் தில்லைச் சிற்றம்பலத்தானை நாடமுடிந்தது எனும் செய்தி; கார்ப்பருவம் கண்டு கலங்கிய தலைவிக்குச்

சொல்லுதல்; சிவனை நினைக்கும் தவமே மேம்பாட்டைக் கொடுக்கும்'' என்பன போன்ற அரிய செய்திகள் இயம்பப்பட்டுள்ளன.

*"பெறுகின்ற எண்ணிலி தாயரும்*
*பேறுறும் யானும் என்னை*
*உறுகின்ற துன்பங்கள் ஆயிரம்*
*கோடியும் ஒய்வொடுஞ் சென்(று)*
*இடுகின்ற நாள்களும் ஆகிக்*
*கிடந்த இடுக்கணெல்லாம்*
*அறுகின் றனதில்லை யாளுடை*
*யான்செம்பொன் அம்பலத்தே!"*

என்பது, பல்வேறு பிறவித் துன்பங்களையெல்லாம் ஒழிக்கும் அருளாளன் தில்லைச் சிற்றம்பலவன் என்ற பொருளில் அமைந்தது. இவ்வாறே பிறவும்!

## கோயிற் புராணம்

*உமாபதி சிவாசாரியார்.*

புராணம் – பழைய வரலாறு.

கோயில் – சிதம்பரம். இறைவன் எழுந்தருளியிருக்கும் ஏனைய தலங்கள் எல்லாம் 'கோயில்' ஆயினும் சிதம்பரத்தையே சிறப்பிப்பது 'கோயில்' என்ற சொல்.

வாக்கு மனாதீதராகிய சிவபெருமான், பரிபூரணராய்ச் சடசித்துப் பொருள்களில் எல்லாம் நிறைந்து நின்றாராயினும் ஆன்மாக்கள் உணர்ந்து முத்தியடைதல் அருமையாம் எனத் திருவுளம் கொண்டு, ஆன்மாக்களிடத்துக் கொண்ட அளவற்ற கருணையால் எண்ணிறந்த திருத்தலங்களில் எழுந்தருளி அருள் செய்வாராயினர். அவற்றுள் 68 தலங்கள், முத்தித் தலங்கள். அவற்றுள்ளும் ஆறு தலங்கள் சிறந்தன; அந்த ஆறிலும் மூன்றே சிறந்தன. அவை: திருவாரூர்; திருக்காசி; திருவம்பலம் (சிதம்பரம்). இவற்றுள் சிதம்பரத்தில் சென்று அம்பலவாணரின் திருவடி வணங்கியோர் 'சிவசாயுச்சியம்' பெறுவர். இத்தகு சிறப்புடையது 'கோயில்' எனப்படும் 'சிதம்பரம்'.

ஆங்கு எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானைப் பற்றிய நூல் 'கோயில் புராணம்'. கோயில் தேவாரப் பாடல் பெற்றது. இத்தலத்தின் வரலாறுகளைத் தெரிவிக்கும் நூல்கள் வடமொழியில் ஏறத்தாழ 36 உள்ளன.

'கோயிற் புராணம்' என்ற இந்நூலில், 'வியாக்கிரபாதச் சருக்கம், பதஞ்சலிச் சருக்கம்' நடராசச் சருக்கம், இரணிய வன்மச் சருக்கம், திருவிழாச் சருக்கம்' என 5 சருக்கங்கள்; காப்பு –1; பாயிரம் – 28 உட்பட 415 திருவிருத்தங்கள் உள்ளன.

*"ஆடிய பெருமான் வெய்யோ னலர்கதி ராயிரத்துக்*
*கூடிய மண்ட லம்போல் குறைவிலா வகைநி றைந்து*

*நாடரு ஞான மன்றுள் நாமுய்ய வயன்மால் முன்பு*
*தேடரு மேனி கொண்டு திருநடஞ் செய்யக் கண்டார்!"*

என்பது தில்லை நடராசச் சருக்கத்தில் வரும் பாட்டு! இவ்வாறே பிறவும் வரும்.

## *கௌமார விஜயம்*

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

கௌமார விஜயம் = கௌமாரத்தினது பெருமை.

'கௌமாரம்', குமார சம்பந்தமுடையது. அஃதாவது "பரமசிவனின் குமாரனாகத் தோன்றிய முருகன் எமது கடவுள்" எனக் கொள்ளும் நெறி 'கௌமாரம்' எனப்படும்.

இந்நூலில் முதற்கண் 'காப்புச் செய்யுள் 1ம் இறுதியில் 'நூற்பயன்' 1ம் தவிர; 'அவதாரம்' முதல் 'காப்புக் கூறல்' வரை 16 பகுதிகள் – 144 செய்யுட்கள் உள்ளன.

*"யாவருமெச்சிய சீலமுடைக்குக வீகைமுயன்றருளே!*
*யேழுவகைப் பவநோய்விலகத்தகு மீகை முயன்றருளே. . . !*

என்பது 'ஈகை' எனும் பகுதியில் வருவது. இவ்வாறே பிறவும்!

# 'ச'

## *சகலகலா வல்லிமாலை*

*குமரகுருபர அடிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

மாலை போலத் தொடுத்துப் பாடுவதால் இப்பெயர் ஏறபட்டது.

சகலகலாவல்லி – சரசுவதி.

சரசுவதி மீது பாடப்பெற்றது.

குமரகுருபர அடிகள், தில்லி சுல்தானை வாதில் வெல்லும் பொருட்டுக் கலைமகளை வேண்டிப் பாடியது இது. குமரகுருபாரின் தெய்வ அருட்செயலை வியந்த சுல்தான், காசியில் நிலம் முதலாயின கொடுத்து உதவினான்.

இம் 'மாலை' நூல் 10 பாடல்கள் கொண்டது.

*"மண்கண்ட வெண்குடைக் கீழாக*
*மேற்பட்ட மன்னருமென்*
*பண்கண் டளவிற் பணியச்செய்*
*வாய்! படைப் போன்முதலாம்*
*விண்கண்ட தெய்வம்,பல் கோடிஉண்*
*டேனும் விளம்பி லுன்போற்*
*கண்கண்ட தெய்வம் உளதோ*
*சகல கலாவல்லியே!"*

என்பது இதன் இறுதிப்பாடல்!

## *சங்கர நயினார் கோயில் அந்தாதி*

*கடிகை முத்துப்புலவர். (?)*

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

அந்தம் + ஆதி = அந்தாதி. ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக வரும்படிப் பாடுவது. 100 பாடல்களால் பாடப்படுவது.

சங்கரநயினார் கோயில் எனும் ஊர், நெல்லை மாவட்டத்தில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள சங்கரநாராயணப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலுக்குக் 'கூழை அந்தாதி', 'வரராசை அந்தாதி' என்ற வேறு பெயர்களும் உண்டு.

100 செய்யுட் கொண்ட இந்நூலில், கிடைத்தவை 98 மட்டுமே.

இந்நூலில் தலவிசேடம், சிவபெருமான் பெருமை, நெஞ்சறிவுறுத்தல், பிறதலச் செய்திகள், உவமை முதலான அணிகள் எனப் பலவும் அமைந்துள்ளன.

நூலின் தொடக்கத்தில் 'காப்புச்செய்யுள்' 1 உண்டு.

*"பானலங் கண்ணி யொருபாகர் முக்கட் பரமர்மலர்த்*
*தேனலங் கண்ணிறை தென்கூழைச் சங்கரர். . . "*

என்பன போல் வரும் பாடல்களைக் காணலாம்.

## *சங்கரன் கோயில் ஆவுடையம்பிகை அருட்பாமாலை*

*மீ. முத்துசாமி பிள்ளை*

'மாலை' என்பது சிற்றிலக்கியவகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது. சங்கரன் கோயிலில் எழுந்தருளியுள்ள 'கோமதி' என்றழைக்கப்படும் ஆவுடையம்பிகை மீது பாடப்பட்டது. இது, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்துள்ளது. விநாயகர் வணக்கம் தவிர 101 பாடல்கள் கொண்டது.

*"மின்னே நிகர்க்கும்பொய் யாக்கையை மெய்யா விழைந்தலைந்து*
*கொன்னே பொருள்பல ஈட்டிநின் கோவில் குறுகல்செயா*
*பொன்னே யனையநன் னாள்களைப் போக்கிப் புகலிழந்தேன்*
*அன்னே யருள்புன்னைக் கானுறை யுாவுடை யம்பிகையே!"*

என்பன போன்ற பாடல்கள் உள்ளன.

## *சங்கற்ப நிராகரணம்*

*உமாபதி சிவாசாரியார்.*

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று.

சங்கற்பம் – கொள்கை; நிராகரணம் – மறுத்தல். பிறசமயக் கொள்கைகளை மறுக்கும் நூல். மாயாவாதம், ஐக்கிய வாதம், பாடாண வாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகார வாதம், நிமித்த காரண பரிணாம வாதம், சைவ வாதம் எனும் இவ் ஒன்பதின்மரின் கொள்கைகள் இந்நூலில் மறுக்கப்படுகின்றன.

இந்நூல் 20 அகவற்பாக்களைக் கொண்டது. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளும், நூல் தோன்றுதற்குரிய காரணமும் களமும் குறித்த செய்யுளும் ஆக 2 உள்ளன.

(1) மாயாவாதம் : இவ்வுலகம் உண்மையல்ல, ஒரு தோற்றமே! உள்பொருள் போலத் தோன்றுவது மாயை என்பர். (2) ஐக்கியவாதம் : வீடுபேற்று நிலையில் இறையும் உயிரும் ஒன்றாகி ஒரு தன்மைத்தாக இலங்கும் என்பர். (3) பாடாண வாதம் : வீடுபேற்றுநிலையில் உயிர் யாதொரு துய்ப்புமின்றிக் 'கல்' எனக் கிடக்கும் என்பர். (4) பேதவாதம் : வீடு பேற்று நிலையில் இறையும், உயிரும் வேறுபட்டு

நிற்கும் என்பர். (5) சிவ சமவாதி : வீட்டுநிலையில் உயிர், இறைவனோடு ஒத்த தன்மையதாய், இறைவன் செய்யும் ஐந்தொழில்களையும் செய்யும் என்பர். (6) சிவசங்கிராந்த வர்தம் : வீட்டுநிலையில் உயிர், இறைவனின் இயல்புகள் அனைத்தையும் பெற்று, ஒன்றாய்க் கலந்துவிடும் என்பர். (7) ஈசுர அவிகார வாதம் : வீட்டுநிலையில் உயிர், இறைவனுடன் வேற்றுமை யற்றுக் கலந்துவிடும் என்பர். (8) நிமித்த காரண பரிணாம வாதம் : உலகிற்கு நிமித்த காரணனாகிய சிவபெருமானே உலகாக விரிந்து நிற்கின்றான் என்பர். (9) சைவவாதி : தன் நிலையில் இருக்கும் உயிர் பற்றியும், வீட்டுநிலையில் உயிரும் சிவமும் இயைந்திருக்கும் நிலை பற்றியும், சைவ சித்தாந்திகளின் கருத்தோடு வேறுபட்டுக் கூறுவர்.

இவை அனைத்தையும் தக்க காரணங்களால் மறுத்துரைக்கும் நூலே 'சங்கற்ப நிராகரணம்'.

*"மாயா வாதப் பேயா உனக்குத்*
*தேவரில் ஒருவர் உண்டாக*
*மேவரு நரகம் விடுதலோ அரிதே!"*

என்பன போன்ற பகுதிகளை இந்நூலில் காணலாம்.

## சட்டைமுனி ஞானம்

*சட்டை முனி*

'சட்டை முனி' என்ற சித்தர் பாடிய ஞானப்பாடல். இந்நூல், சிவபூசை விதிகளைக் கூறும் 6 எண்சீர் விருத்தப் பாக்கள் கொண்டது. அந்தாதித் தொடையில் அமைந்தது.

*"பண்ணியபின் யாமளைஐந் தெழுத்தைக் கேளாய்!*
*பண்பாகத் தீட்சையைந்தும் முடிந்த பின்பு*
*வண்ணியதோர் வாசியென்ற யோகத் துக்கு*
*மைந்தனே வைத்துப்ராணா யாமந் தீரும்!*
*கண்ணியதோர் இத்தனையும் அறிந்தி ருந்தாம்*
*காயசித்தி விக்கினங்கள் இல்லை இல்லை!*
*உண்ணியதோர் உலகமென்ன சித்தர் சொன்ன*
*உத்தமனே விட்டகுறை எடுக்கும் காணே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சண்முக கவசம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுரு தாச சுவாமிகள்.*

'கவசம்' என்பது, உடம்பைப் பாதுகாத்தற்குரிய ஒரு கருவி. சண்முகப் பெருமானிடம் முறையீடு செய்வதாகப் பாடப்பட்ட நூல், அனைவர்க்கும் பாதுகாப்பான கவசம் போல் பயன்படும் என்பதால் இப்பெயர் ஏற்பட்டது.

இந்நூல், அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தத்தால் ஆனது. உயிரெழுத்தில் தொடங்கும் பாடல்–12; மெய் 18 மொழிக்கு முதலில் வாராவாதலின் உயிரெழுத்தை இணைத்துத் தொடங்கும் பாடல் – 18 ஆக 30 பாக்கள் உள்ளன.

பாடல் தோறும் 'காக்க' என முடிவது. இதனைச் சைவ மெய்யன்பர்கள் நாளும் பாராயணம் செய்வர்.

*"அண்டமா யவனி யாகி யறியொணாப் பொருளதாகித்*
*தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வ மாகி*
*எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீசனான*
*திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## சண்முகானந்த சிவம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

சண்முகன் + ஆனந்தம் + சிவம் = சண்முகானந்த சிவம்.

சண்முகன் = ஆறுமுகக் கடவுள்; ஆனந்தம் – பேரின்பம்

'ஆறுமுகம் கொண்ட ஆனந்தமான சிவம்' என்பது பொருள்.

இதன்கண் 10 பாடல்கள் உள்ளன. கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்கள் கொண்டது. பாடல்தோறும் 'சண்முகானந்த சிவமே' என முடிவது.

இதில், பஞ்சசத்திகள், நிமித்த காரணன், பரநாதகலை, தத்துவமசி மகாவாக்கியம், அவத்தைகள், பதிஞானம் முதலாயின சொல்லப்படுகின்றன.

*"சருவ சங்கார காலத்தும் சிதாபாசர் . . .*
*காருண்ணிய மெய்க்குரவ னாகவந்து அருளில்*
*கடாச்சித்து மலம் அறுத்து. . . !"*

என்பனபோல் வரும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உள்ளன.

## சதமணி மாலை

*சிவப்பிரகாச சுவாமிகள்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலைபோலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது. சதம் – நூறு. ஒரு நூறுமணிகளால் கோக்கப்பட்ட மாலை போல ஒருநூறு பாடல்களால் ஆன நூல்.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார், தமிழ்மொழி வடமொழி என்னும் இரண்டு மொழிகளிலும் புலமை மிக்கவர். அவர், வடமொழியில் செய்த 'சதரத்னசங்கிரகம்' என்ற நூலினைச் சிவப்பிரகாச சுவாமிகள் 'சதமணிமாலை' எனத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூலின் தொடக்கத்தில், 'சிறப்புப்பாயிரம் –1; பாயிரம், காப்பு' என 2

பாடல்கள் உள்ளன. அடுத்து 98 பாடல்கள் உள்ளன.

இந்நூலுக்கு 'ஞானதீட்சை' என்ற வேறுபெயரும் உண்டு என்பர்.

இதில், இறைவனின் ஆக்கும் நிலை, உயிரின் அவத்தைகள், சிவதீக்கை முதலான சைவசித்தாந்தக் கருத்துக்கள் விளக்கமாக உரைக்கப்பட்டுள்ளன.

*"புகலில்இனி அனாதிமலம் புருடர்பசுத் துவம்என்று*
*பகருறுவர் அறிவறிந்தோர் பாசம்என உரைத்ததுதான்*
*விகலம்உறு மாயைஎனும் விதைமுளைக்குத் தவிடுஉமிபோல்*
*தகஉணர்க எனவிளம்பும் சைவம் எனப் படும்நூலே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சதாசிவக் கண்ணி

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

'கண்ணி' என்பது இரண்டு அடிகளால் அமைவது.

முருகப் பெருமானைச் 'சதாசிவம்' எனக்கொண்டு, பாடல்தோறும் 'சதாசிவமே' என முடிவது.

இதன்கண் 50 கண்ணிகள் உள்ளன.

*"சீராருஞ் செல்வஞ் சிறந்தசச்சி தானந்தத்*
*தாரான வாழ்வே தனியே சதாசிவமே!"*

என்று தொடங்குவது!

## சந்தமாலிகைத் திருப்புகழ்

*வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

'திருச்செந்தில் பிரபந்தம் பதினாறில் எட்டாவது நூலாக' விளங்குவது இது.

சந்தம் – வண்ணம். இக்காலத்தார் 'மெட்டு' என்பர்.

மாலிகை – மாலை. சந்தப்பாக்களால் ஆன, இறைவனின் புகழ்பாடும் நூல் என்பது பொருள்.

சந்தம், 'தந்த – தாந்த – தத்த – தாத்த – தன – தான – தன்ன – தய்ய' என்று எட்டானது போல, இந்த நூலும் திருச்செந்தில் பிரபந்தங்களில் 8வது வரிசையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் வேதாந்த; சிந்தாந்தக் கருத்துக்கள், கௌமாரக் கொள்கை, முருகனின் அருட்டன்மை, அடியவர் வரலாறு, திருச்செந்தில் சிறப்பு முதலான பல்வேறு கருத்துக்களைக் காணலாம். அருணகிரிநாதரின் திருப்புகழ் போலப் பொது மாதர்களியல்பு, உலகப் போக்கு, செல்வர் இயல்பு, உலோபர் குணங்கள், முதலாயினவும் சொல்லப்பட்டுள்ளன.

இந்நூலின் தொடக்கத்தில், காப்புச் செய்யுட்கள் 2ம், இறுதியில் 1 வெண்பாவும்

தவிர 100 பாடல்கள் உள்ளன.

*"முத்தைநேர் வெண்பல்உறு மாதர்*
*இச்சையால் நொந்துமனம் வாடி*
*முத்தர்மீ துஞ்சினவு தீமை – கொண்டிடாதே!*
*மொய்த்தநீ பங்குரவும் நீலம்*
*வெட்சிபோ லுந்தமிழ்வி னோதம்*
*முற்றும்ஓ தும்புலமை யாசை – குன்றிடாதே!"*

– இது, 'தத்தனா தந்ததன தான –– தந்ததானா' என்னும் சந்தத்தில் அமைந்தது. இவ்வாறே பிறபாக்களும்.

## சம்பந்தர் தேவாரம்

*திருஞான சம்பந்தர்.*

தே + ஆரம் = தேவாரம். தே – தெய்வம்; ஆரம் – மாலை.

தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை போன்ற பாக்கள்.

தே + வாரம் = தேவாரம். தே – தெய்வம் ; வாரம் – இசைப்பாட்டு.

தெய்வத்திற்கு இன்றமிழ் இசைப்பாட்டால் பாடப்படுவது. வாரம் – அன்பு. தெய்வத்தினிடத்தில் அன்பு காட்டும் நூல் என்றும் கூறலாம். வாரம் – உரிமை. இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பை – உரிமையை உள்ளவாறு தெளிவித்து, உயிர்கள் பயன்பெற உதவும் பாடல்கள் கொண்ட நூல் என்றும் கூறலாம்.

'தேவாரம்' என்ற சொல் 'வழிபாடு' என்ற பொருளிலும் வழங்கியுள்ளது. எனவே வழிபாட்டிற்குரிய இனிய இசைப்பாடல் என்றும் பொருள் கொள்ளலாம்.

தென்தமிழ் நாட்டில் சிவன் திருக்கோயில்களில் ஓதப்பெறுவது. தேவாரம் பாடியோர் மூவர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. இவற்றில் முதல் ஏழு திருமுறைகள் இம்மூவர் பாடிய 'தேவாரம்' ஆகும். எனினும் அப்பர் பாடிய பதிகங்கள் 'தேவாரம்'; சம்பந்தர் பாடிய பதிகங்கள் 'திருக்கடைக் காப்பு'; சுந்தரர் பாடிய பதிகங்கள் 'திருப்பாட்டு' என்று கூறுவது பழைய மரபு. சம்பந்தர் பாடியவை முதல் 3 திருமுறைகளாகும்.

இவர் பாடியவை ; 16,000 பதிகங்கள். பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்டது. அவ்வகையில், 1,60,000 பாடல்கள். ஆனால் கிடைத்தவை 384 பதிகங்கள்; அதாவது 3840 பாடல்கள் மட்டுமே!

சம்பந்தர் பாடிய தேவாரப் பண்கள்: நட்டபாடை, தக்க ராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ் மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார

பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி என 23 ஆகும்.

ஒரு திருத்தலத்திற்கு ஒரு பதிகம் உண்டு; பல பதிகங்களும் உண்டு. *சீகாழிப்* பதிக்கு மட்டுமே 66 பதிகங்கள்!

சம்பந்தர், 'ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை' எனப் பல்வேறு பாவகைகளில் பாடியுள்ளார்.

இவர் பாடிய திருத்தலங்கள் மொத்தம்: 219 ஆகும். பொதுவாகப் பாடியவை: 7. ஆக 226 எனக் கணக்கிடப்படுவதுண்டு.

இவர் பாடிய தேவாரப் பதிகங்கள் பண்ணோடு பாடத்தகுவன. இவை, தமிழகத்தில் பெரும் புரட்சியை உண்டு பண்ணின; சைவ சமயம் மேலும் வளர்ந்தோங்க இவர் பாடல்கள் பெருந்துணை புரிந்தன.

இவர் பாடல்களில் தமிழின் பெருமை பலவாறாகப் பேசப்பட்டுள்ளது; "திரு நெறிய தமிழ், சொல்ஆர் தமிழ்; நற்றமிழ்; இன்றமிழ்; செந்தமிழ்; ஒண்டமிழ்; முத்தமிழ்; தண்டமிழ்; அருந்தமிழ்; ஒளிர்பூந்தமிழ்" என்பன போன்ற அடைமொழிகளைக் காணலாம். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை இவர் பாக்களில் காணலாம்.

ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப்பாடலிலும் தம் பெயரைக் குறிப்பிடுவதோடு, அப்பதிகத்தை ஓதுவதால் உண்டாகும் நன்மைகளையும் கூறுவது சம்பந்தரின் இயல்பு.

பத்திச் சுவை நனி ததும்பும்படிப் பாடிய பாடல்களை நாளும் ஓதுவார் நற்பயன் பெறுவார். சைவத்திருக்கோயில்களில் நாளும் தேவாரம் பாடுதற்கென்றே 'ஓதுவார்கள்' உள்ளனர்.

சிவபெருமானின் அருட்டிறம், இயற்கை வருணனை, உவமை முதலான அணிநலன்கள், புராணச் செய்திகள், சாதிகள் பாராமை, சிவனடியார் பெருமை எனப்பலவும் இத்தேவாரப் பாக்களில் காணலாம்.

*"மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு!*
*சுந்தர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு!*
*தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு!*
*செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே!"*

என்பது திருநீற்றின் சிறப்பைக் கூறுவது. இவ்வாறு எளிமையும் இனிமையும் செறிந்த பாடல்களைக் காணலாம்!

## *சரவணப் பொய்கைத் திருவிளையாடல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.*

'சரவணப் பொய்கை' என்பது சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து

வெளிவந்த 6 தீப்பொறிகளும் ஆறுமுகமுடைய ஒரு குழந்தையாகித் தாமரை மலர்மேல் வீற்றிருந்த இடம். அதுகுறித்த திருவிளையாடலைக் குறிப்பது இந்நூல்.

10 பாடல்கள்; 4அடிப் பாடல், அடி 1க்கு 11 எழுத்து.

இத்திருப்பதிகத்தைக் காலை, மாலை ஓதி வழிபட்டால் குழந்தைகளுக்கு நேரும் 'பாலாரிட்ட தோஷங்கள்' நீங்கும்; சுகம் உண்டாம் என்பது நம்பிக்கை.

*"சீர்கொள் சேய்விளை யாடல் செய்திடவென்*
*றேர்கொள் சிந்தையி லெண்ணி யேபலவாம்*
*பேர்கொள் போதொரு பிள்ளை பள்ளிகொளல்*
*நேர்கொள் யோகதி லேறி லாவியதால்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சற்குரு மணிமாலை

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலைபோலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது.

நடராசப் பெருமான், தமக்குக் குருவாக எழுந்தருளித் 'திருவருள் ஞானம்' அளித்தருளியதை இராமலிங்க அடிகளார் இந்நூலில் போற்றிப் பரவுகின்றார்.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்களால் ஆனது. 25 பாடல்கள் உள்ளன. பாடல்தோறும் 'தனி நடராச, என்சற்குரு மணியே!' என முடிவது.

*"அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவே!*
*அடையாமல் அடைகின்ற அடைவினுள் அடைவே!*
*செறியாமல் செறிகின்ற செறிவினுட் செறிவே!*
*திளையாமல் திளைக்கின்ற திளைப்புறு திளைப்பே!*
*பிரியாமல் என்னுளம் கலந்தமெய்க் கலப்பே!*
*பிறவாமல் இறவாமல் எனைவைத்த பெருக்கே!*
*தறியாகி உணர்வாரும் உணர்வரும் பொருளே!*
*தனிநட ராசஎன் சற்குரு மணியே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## சன்மார்க்க சித்தியார்

*அம்பலவாண தேசிக மூர்த்திகள்.*

பண்டார சாத்திரம் பதினான்கில் ஒன்று.

இந்நூலில் முதலிலும் இறுதியிலும் உள்ள வெண்பாக்கள் 2ம் சிறப்புப் பாயிரம். இவைதவிர 28 வெண்பாக்கள் உள்ளன.

ஞானாசிரியனை அடைந்து, அவர் திருக்கரத்தால் நீறிடப் பெற்று, அவரை வணங்கி, அவரைத் தியானித்து, 'இவ்வுடல் பிராரத்த நுகர்ச்சிக்காக இறைவனால் உதவப்பட்ட ஒரு கருவி' எனத் தன்னின் வேறாக உணர்ந்து, சிவபரம் பொருளையே எண்ணாமலெண்ணியிருத்தல் ஞானமாம் என்பதை உணர்த்துவது இந்நூல்.

*"எங்கு மறிவாய் எழுந்தசிவா னந்தத்தைத்*
*தங்குநய னத்தடக்கித் தான் விழிக்கப் – பங்கமுறக்*
*கற்குநிட்டை யாகுங் கருதியறி வாய் நிறைந்து*
*நிற்குநிட்டை யல்லவென நில்!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## *சிகாமணி மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடர்ந்து பாடப்படுவதால் இப்பெயர் பெற்றது.

சிகாமணி – முடிமணி; தலைமணி எனப் பொருள்படும்.

'வைத்தீசுவரன் கோயில்' என இக்காலத்தில் வழங்கும் புள்ளிருக்கு வேளூரில் வீற்றிருக்கும் வைத்தியநாதப் பெருமானைப் பற்றி இது பாடப்பட்டது. அப்பெருமானைச் செய்யுள்தோறும் 'சிகாமணியே' என விளித்துச் சிறப்பித்தலால் இது 'சிகாமணிமாலை' எனப்படுகிறது.

இது, 'கட்டளைக்கலித்துறை' என்ற யாப்பில் பாடப்பட்டது. 15 பாடல்கள் கொண்டது. பாடல்தோறும் 'அமரர் சிகாமணியே' என்று முடிவது.

'திருவருட்பா'வில் 3ஆம் திருமுறையில் உள்ளது.

*"நானே நினக்குப் பணிசெயல்*
*வேண்டுநின் நாள்மலர்த்தாள்*
*தானே எனக்குத் துணைசெயல்*
*வேண்டும்தயா நிதியே!*
*கோனே கரும்பின் சுவையே!செம்*
*பாலொடு கூட்டுநறும்*
*தேனே வயித்திய நாதா*
*அமரர்சிகா மணியே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## சிக்கல் ஸ்ரீசிங்காரவேலர் வெண்பா அந்தாதி

*பிரஹ்மானந்த சுவாமிகள்.*

சிக்கல் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது பாடப்பட்டது. முதலில் 'காப்பு'ம், இறுதியில் 'நூற்பயனு'ம் ஆகிய 2 பாடல்கள் தவிர 100 பாடல்கள். அந்தாதித் தொடையில் அமைந்தது; நேரிசை வெண்பா யாப்புடையது.

*"தகும்தெய்வம் நீயன்றித் தாரணியில் அன்பர்*
*புகுந்தெய்வம் கோயிலுண்டோ போற்ற – உகந்தருளும்*
*அண்ணலே! சிக்கல் அருட்கடலே! உன்கழலை*
*எண்ண அருள்புரிவாய் இங்கு"*

என்பன போன்ற பாடல்கள் உள்ளன.

## சிங்கைப் பதிகம்

*சி. வீரபாகுப் பிள்ளை*

பதிகம் – 10 பாட்டு; சிங்கை – விக்கிரமசிங்கபுரம்.

இவ்வூரில் தோன்றிய அருளாளர் மாதவச் சிவஞான சுவாமிகள் மீது பாடப்பட்ட 10 பாடல்கள் கொண்டது.

மாதவச் சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீன முனிவர்களில் முதன்மையானவர். பல நூல்களை யாத்துள்ளார். அவற்றில் 'சிவஞான மாபாடியம்' புகழ் பெற்றது.

*"தமிழ நன்முனி யருள வந்தொரு*
*தண்ட மிழ்ச்சிவ ஞானநூற்*
*கமிழ்த மன்னசிற் றுரையும் பாடிய*
*வுரையும் ஒக்க அருள்பவன்!"*

என்பது அவற்றில் ஒன்று.

## சிதம்பரச் செய்யுட் கோவை

*குமரகுருபர அடிகள்.*

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

இது, கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து, ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப்படுவதாதலின் 'கோவை' எனும் பெயர் பெற்றது. கடவுளையும், அரசர்கள் முதலானோரையும் பாட்டுடைத் தலைவர்களாக அமைத்துப் பாடப்படும்.

இதன்கண் வெண்பா யாப்பின் பல்வேறு துறைகள் கொண்ட பாக்களும் கலிப்பாவகைகளும் இடம் பெற்றுள்ளன.

'சிதம்பரம்' என்பது தில்லைப்பதியாகும். ஆங்கு எழுந்தருளியுள்ள நடராசப்

பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலில் நடராசப் பெருமானின் தோற்றப் பொலிவும், அருட்டன்மை ஆகியனவும் சொல்லப்பட்டுள்ளன. 84 பாடல்கள் உள்ளன.

*"காளி யாடக் கனலுமிழ் கண்ணுதல்*
*மீளி யாடுதல் பாருமே*
*மீளி யாடல் வியந்தவ டோற்றெனக்*
*கூளிபாடிக் குனிப்பதும் பாருமே பாருமே?"*

என்பன போல் வரும்.

## *சிதம்பர மும்மணிக் கோவை*

*குமரகுருபர அடிகள்.*

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. இது, கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து, ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப்படுவது ஆதலின் 'கோவை' எனப்பட்டது.

மூன்று வேறு மணிகளாலான மாலையைப் போல, 'ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை' என்பன, அந்தாதியாக அமைய, 30 செய்யுட்கள் கொண்டது. எனவே 'மும்மணிக் கோவை' எனப்பட்டது.

சிதம்பரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளிய தில்லை நடராசப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலில் 'காப்பு'ச் செய்யுள் 1 நீங்க, 30 செய்யுட்கள் உள்ளன.

இதன்கண், நடராசப் பெருமானின் ஐவகைத் தொழில்கள், இல்லற – துறவறங்களின் இலக்கணம், தில்லையின் பெருமை, சைவசித்தாந்தக் கருத்துக்கள் எனப் பலவும் சொல்லப்பட்டுள்ளன.

*"ஆட்டுகின்றோ ரின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்*
*காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று – வேட்டதனை*
*உற்றுநெடு நாளாக வுண்ணுமோர் மால்யானை*
*பெற்றதொரு கூந்தற் பிடி!*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## *சிதம்பர விநாயகர் மாலை*

*அரசஞ் சண்முகனார்.*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

மாலை போலத் தொடுக்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது.

சோழவந்தானில் எழுந்தருளியுள்ள சிதம்பர விநாயகர் மீது பாடப்பட்டது. காப்புச் செய்யுள் தவிர, கொச்சகப்பா 30 கொண்டது.

*"கள்ள மனத்துக் கடையேனு முன்கருணை*
*வெள்ளத்துண் மூழ்கியின்ப மேவருள் செய்வாயோ? . . ."*

போன்ற பாடல்கள் உண்டு.

## *சித்தாந்த சிகாமணி*

ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள்.

"பண்டார சாத்திரம்' பதினான்கில் ஒன்று.

சித்தாந்தம் – முடிந்த முடிபு; சிகாமணி – தலைமாமணி. இந்நூலில் 91 வெண்பாக்கள் உள்ளன. நமக்குக் கண்கண்ட தெய்வம் குரு ஆதலால், 'அவனை நிந்தித்தல் கூடாது' என்று தொடங்கி, கூடாஒழுக்கத்தையும் மோகத்தையும் விட்டபின், 'வீடு' உளதாம் என்று வற்புறுத்தி, அதற்கு அடிப்படையான ஆணவமல இலக்கணத்தையும் அம்மலத்தைப் போக்கும் வழியையும் உணர்த்தி, நால்வகைச் சத்திநிபாதங்களின் இயல்பையும், அவற்றில் நின்றார் எய்தும் பயனையும், சிவதீக்கை முதலான கிரியைகளின் தத்துவத்தையும், 'சிவபூசை' சிவஞானிக்கும் இன்றியமையாதது என்பதையும், சிவலிங்கம், சிவனடியார்கள் இயல்புகளையும் கூறுகிறது இந்நூல்.

பின்னுள்ள 20 பாடல்கள், சிவபெருமானிடத்து அன்பு செய்வதற்கு அடிப்படையான நல்லொழுக்கப் போதனைகளை வற்புறுத்துகின்றன.

இந்நூல், சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கையும் முறையே கேட்டு, வழிவழியாக வரும் ஒரு ஞான ஆதீனத்தில் தீக்கைகளும் பெற்று, அந்நிலையில் ஒழுகும் சாதகர்களுக்கே உரியதாம் என்பர்.

*"நாமெங்கே முத்தி நடையெங்கே நன்னெஞ்சே!*
*தீமங்கை இன்பே திளைக்குமால் – காமன்கை*
*அம்புற்ற புண்மெய்யில் ஆறியபோ தன்றோ, தன்*
*செம்பொற்றாள் ஈவான் சிவன்"*

என்பது, 'போகம் தீர்ந்த பின்பே முத்தி' என்று கூறுகின்றது. இவ்வாறே பிற பாடல்களும்!

## *சித்தாந்த சிகாமணி*

*சிவப்பிரகாச சுவாமிகள்.*

சிந்தாந்தம் – முடிந்த முடிபு. சிகாமணி – மணிமுடி. 'சித்தாந்தத்தின் மணிமுடி' என்று பொருள்.

வடமொழியில் ரேணுகாசாரியயோகி என்ற ஞானியால் செய்யப்பட்ட 'வீர சைவ சித்தாந்த சிகாமணி' என்ற நூல், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமும், பிற யாப்பு வடிவமும் கொண்டது. நூலின் தொடக்கத்தில், 'பாயிரம்' என்ற பகுதியில் 11 பாடல்கள் உள்ளிட்டு 880

பாடலகள உளளன.

இதில், வீர சைவத் தத்துவ நுண்பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. தத்துவ ஆராய்ச்சி, அனுபூதி என்ற இருநிலைகளில் சிவஞான யோகியர்கள், இறைஞானத்தை அறிந்தும் அறிவிக்கவும் துணை புரிவது இந்நூல். இதனை, 'வீரசைவக் களஞ்சியம்' என்று கூறுவர்.

*"கயிற்றரவு இப்பி வெள்ளி*
*குற்றியில் கள்வன் மிக்க*
*வெயிற்படு கானல் தெண்ணீர்*
*விண்ணிற்கந் தர்வ ஊர்போல்*
*பயிர்ப்பறு நித்த சச்சி*
*தானந்த சிவத்தின் கண்ணே*
*செயப்படு பொருளாய்த் தோன்றும்*
*செப்பிய உலகம் அன்றே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *சித்தாந்தப் பஃறொடை*

*ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள்.*

சித்தாந்தம் + பல் + தொடை = சித்தாந்தப் பஃறொடை. சித்தாந்த சைவத்தினது உண்மையை உணர்த்தும் பஃறொடை வெண்பாவாலான நூல் என்று பொருள். 'பண்டார சாத்திரம்' 14ல் ஒன்று.

சித்தாந்தம் – முடிந்த முடிபு. வேறொன்றானும் மறுக்க முடியாததாய், அனுபவத்திற்கு எளியதாய், தடை விடைகளுக்குச் சலியாததாய் இருப்பது எதுவோ அதுவே சித்தாந்தம். ஏது, உதாரணம் இவற்றால் விளைந்த முடிபு சித்தாந்தம். ஈண்டுச் 'சித்தாந்தம்' என்பது சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தையே உணர்த்தும்.

திருவருள் கொண்டு இறைவன் உணர்த்த, நீ, 'உடல் நான் அல்லன்; கருவி கரணங்கள் நான் அல்லன்' என்பன முதலாக உணர்ந்து, உணர்த்த உணரும். 'சித்து நான்' என அறிந்து, அப்போதே தடைகளையும் அறிந்து, அவைதம்மைச் சாராது, அருளாகிய வாள் கொண்டு அறுத்து, அகற்றி, எப்போதும், திருவருளே கண்ணாக, திருவடியின்பத்திலேயே தோய்ந்து, சிவபோதம்மிக்கு இருத்தலே 'முத்தி' என்பதனை அறிவிப்பது. இக்கருத்தை விளக்குவதால் இந்நூலுக்கு இப்பெயர் வந்தது.

'பஃறொடை' என்பது வெண்பாவகையில் ஒன்று. வெண்பாவுக்குரிய இலக்கணம் பெற்று 4 அடிக்குமேல் 12 அடி வரை வருவது. 12 அடிக்கு மேல் ஆயின் 'பஃறொடை வெண்பா' 'கலி வெண்பா' என்று பெயர் பெறும். எனவே இந்நூல், யாப்பினால் பெயர் பெற்றது. இதில் முதற்கண் காப்பு மங்கல வாழ்த்து எனும் 2

செய்யுள் தவிர, 650 கண்ணிகள் உள்ளன. நூலில் இறுதியில் 3 தனிச் செய்யுட்களும் உண்டு.

தக்க தலைவன் – ஞானாசிரியன்; தக்க தலைவி – பரிபாகமுற்ற நன் மாணவன். தலைவி, தலைவனின் திருவடி பற்றினாள். அவனும், அவளின் பசுபோதத்தைப் பதிபோகமாக மாற்றினான். ஈசன் ஒருவனே தலைவன்; மற்ற உயிர்கள் யாவும் பெண்களே எனத் தெளிந்தாள். தேனாய்த் தித்திக்கும் சிவபெருமானின் கருணை நலம் போற்றினாள்; தன்மயமாயினாள் என்று உணர்த்தும் நூல். உலகை ஏமாற்றும் சில நெறிகள், சிவநெறிக்கு ஈடாகா என்பதை உணர்த்துவது. இந்நூலில் சிவஞானபோத நூற்பாக்கள், உதாரண வெண்பாக்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. சித்தாந்த மரபிற்குத் தக்க சான்று நூல் இது. இதனை இடைவிடாது பொருளுணர்ந்து பாராயணம் செய்தால் சிவானுபவநெறி விளையும் என்பர்.

*"... சொல்லுமலம்*
*அற்றபோ(து) அன்றோ அரன்நெறியைக் காமித்தங்*
*கிற்றுறக்க நெஞ்சம் இயல்பாகும் ..."*

என்பன போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுந்துள்ளமை காணலாம்.

## சிவஞான சித்தியார்

*அருணந்தி சிவாசாரியார்.*

சிவஞான சித்தியார் – சிவஞானத்தைப் பெறுவிப்பது. சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்று. மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் வழிநூலாகக் கொள்ளத்தக்கது. சிவஞான போதப் பொருள் நிலையை விரிவாக எடுத்து விளக்குவதை நோக்கமாகக் கொண்டது.

இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது: (1) சுபக்கம்; (2) பரபக்கம் இவ்விரண்டுமே இரண்டு நூல்கள் எனக் கொள்ளத்தக்கவை. அதற்கு ஏற்றவாறு, ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் மங்கல வாழ்த்தும், நூல் வழியும், அவையடக்கமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன.

தமிழ்மொழியில் உள்ள தலைசிறந்த ஆறுநூல்களைத் தருகிறது ஒரு பழம்பாடல். அந்த ஆறனுள் இச் 'சிவஞான சித்தியார்' நூலும் இடம் பெற்றுள்ளது.

*"வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே*
*தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை – ஒள்ளியசீர்த்*
*தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்*
*தண்டமிழின் மேலாம் தரம்"*

என்பது அப்பாடல்! இவ்வரிசையில் 'சிவஞான சித்தியார்' இறுதியில் வைக்கப்பட்டுள்ளது. எல்லா நூல்களையும் கற்றாலும் முடிவாகச் சிவஞான சித்தியாரைக் கற்ற பின்பே தமிழ்ப் புலமை நிரம்பியதாகும் என்பதாம்.

இந்நூலின் தொடக்கத்தில் பாயிரம் – 6 பாடல்கள் உட்பட, 'அளவை இலக்கணம்' முதல் 'குருசேவைப் பயன்வரை' மொத்தம் 328 விருத்தப்பாக்கள் உள்ளன.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை விரிவாகவும், சுவையாகவும், கவிதை நடையில் அழகாகச் சொல்லும் நூல் இது!

*"மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடு மிப்போல்*
*மம்மர்செய் தனுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று*
*பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்*
*இம்மல மூன்றினோடு மிருமல மிசைப்ப னின்னும்!"*

என்பது, மும்மலங்கள் உயிரைப் பந்திக்கும் முறையைக் கூறுவது. இவ்வாறே பிறவும் வரும்!

'பரபக்கம்' பிறசமயக் கொள்கைளை அவை கூறுமாறே கூறிப் பின்பு அவற்றைத் தக்க முறையில், தருக்க முறையில் மறுத்துச் செல்கிறது. எனவே இது ஒரு மறுப்பு நூல் ஆகும். படிப்போர்க்குச் சலிப்பு ஏற்படாதவாறு, பலவகைச் சந்தங்களும், பல வகை விருத்தங்களும் கொண்டது.

நூலின் தொடக்கத்தில் காப்பு – 6; அவையடக்கம் – 2; நூற்சிறப்பு முதலாயின – 3 ஆக 11 பாடல் சேர்த்து மொத்தம் 301 பாடல்கள் கொண்டது.

மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தின் வழி நூலாகக் கருதத்தக்கது.

*"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி;*
*ஆசற்ற ஆகமங்கள் அறைந்திட, அறிவு இன்று இங்கே*
*மாசற்ற மால், மாசுஆகி மாயையும் உறுவன் என்னில்*
*கூசிப்பின் கொள்ளார் நல்லோர் உனக்கரம் இக் குழப்பு நூலே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *சிவஞான சுவாமிகள் மாலை*

*பழுலை. திருநாவுக்கரசு முதலியார்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுக்கப் பட்டுப் பாடப்படுவதால் 'மாலை' எனப்பட்டது.

சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீன முனிவர்களில் முதன்மையானவர். பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் 'சிவஞானமாபாடியம்' குறிப்பிடத்தக்கது.

இம்முனிவர் புகழ்பாடுவது இந்நூல்.

தொடக்கத்தில் 'காப்பு' முதலாயின கூறும் 3 பாடல்களும்; இறுதியில் 'வாழ்த்து' 1ம் ஆக 4 தவிர, 30 பாடல்கள் கொண்டது.

*"தடுத்துரைத்தோர் வாயடங்கத் தனிவயிரக் குப்பாயம்*
*எடுத்தென்னுஞ் சொற்கியற்றி ஏத்துசிவ பக்திவலைப்*
*படுத்தியுயர் ஞானமமர் பாவலர்முன் புறமதங்கள்*
*திடுக்கிடச் செய்தென் துறைசைச் சிவஞான தேசிகனே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சிவஞான தத்துவ தீபம்

*ஆ. முத்துக்குமார சுவாமிகள்.*

சைவ மெய்ப்பொருட் குரவர் திருவாக்குகளை ஆதாரமாகக் கொண்டு, தத்துவங்களாகிய பாசங்களும், அப்பாசங்களால் கட்டுண்டு பசுவாய் நிற்கும் உயிரும், அவ்வுயிரைச் செலுத்தி நிற்கும் பதியாகிய சிவமும் என்ற இம்மூன்றின் இலக்கணங்களைப்பற்றி விளக்கிக் கூறுதற்காக இயற்றப்பட்டது இந்நூல்.

நூலின் தொடக்கத்தில் 'செய்யுள் விஷய அடக்கம்' என்ற தலைப்பில் 174 கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*"இருளாய ஆணவமலத்தால் மறைத்திடப் பட்டு*
*அறிவொடு இச்சை தொழிலாம்*
*இவை ஒன்றுமே விளங்கப் பெறாது . . ."*

என்பன போல் வரும் பாடல்களைக் காணலாம்.

## சிவஞான தீபம்

*இரேவண சித்தர்.*

சிவஞான தீபம் – சிவஞானமாகிய தீபம். அதாவது, சிவஞானத்தைப் பெறுதற்குக் கருவியாக உள்ளது என்பதாம்.

ஞானங்கள் பல. அவை: பாசஞானம், பசுஞானம், சிவஞானம் என்பன. இவற்றுள் சிவஞானமே மேலானது. இதுவே, பிறப்பு இறப்புக்களை நீக்கிப் பேரின்ப நிலையைத் தரவல்லது. எனவே சிவஞானத்தைப் பெற்ற சீவன் முத்தர், சிவமொன்றையே கண்டிருப்பர். ஏனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்த வாதனையில் பட்டு உழலமாட்டார்கள். எனவே சிவஞானமாவது யாது? அதைப் பெறுதற்குரிய சாதனங்கள் யாவை? அதனைச் சாதித்துப் பெறுதற்கு உரியவர் யாவர் என்பன போன்றவற்றுக்கு விடைகூறுமுகத்தால் விளக்கிக் கூறும் நூல் இது.

இந்நூல், 'பாயிரம் – 6; பொது இயல்பு – 41; உண்மை இயல்பு – 127; ஆக 174 செய்யுட்கள் கொண்டது. இச்செய்யுட்கள் பெரும்பாலும் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களேயாம்.

*"எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகும்;*
*இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில் . . ."*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு*

*துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.*

தால் + ஆட்டு = நாவினை ஆட்டுதல். பிள்ளைத்தமிழில் 'தாலாட்டுப் பருவம்' என்பது ஒன்று. கடவுளையோ, அடியார்களையோ குழந்தையாகக் கருதித் 'தாலாட்டு'ப் பாடுவது மரபு.

இந்நூலாசிரியர், தம் குருவான சிவஞான பாலைய சுவாமிகள் மீது 'தாலாட்டு' என்ற தனிப்பிரபந்தம் ஒன்றையும், தாலப் பருவத்தையும் பாடியுள்ளார். இவர், தம் குருவை, ஈசனின் வடிவாகக் கருதிப் பாடல் புனைந்துள்ளார்.

இத் 'தாலாட்டு' 100 தாழிசைகளால் ஆனது.

இதன்கண், குருவின் போதனை, வழிபாட்டு முறைகள், இலிங்கத்தின் சிறப்புக்கள் ஆகியன சொல்லப்பட்டுள்ளன.

> *"பொய்ம்மாயை யென்னும் புலியின்வாய்ப் பட்டேனைக்*
> *கைம்மாறி லாமற் கருணைகொடு மீட்டானோ*
> *விருப்பு வெறுப் பின்மை விளங்க வென்புன் சொல்லைத்*
> *திருப்பதங் கொள்கின்ற சிவஞான தேசிகனோ? . . ."*

என்பது அவற்றில் ஒன்று.

## *சிவஞான போதப் பிரகாசிகை*

*ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.*

சிவஞானபோதம் – சிவஞானத்தைப் பற்றிய அறிவு: பிரகாசிகை – விளக்கம்.

மெய்கண்டார் அருளிய 'சிவஞான போதம்' 12 சூத்திரங்கள் கொண்டது. ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அதன் உட்கிடையாக இருக்கும் கருத்துக்களைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உரைக்கும் நூல் இது. தியான முறையில் சிந்திக்கப் பயன்படுவது. 25 பாடல்கள் கொண்டது.

> *'அவனவள் அதுவாம் இருதிணைப் பொருளும்*
> *ஆக்கமும் காப்புமோர் அழிப்பும்*
> *சிவன் செயல் அதனால் இருதிறத் துலகும்*
> *செயற்படும் வினைமுதல் அரனே!'*

என்பன போன்ற பகுதிகள் உள்ளன.

## *சிவஞான போதம்*

*மெய்கண்ட தேவ நாயனார்.*

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்களுள் தலைமையானதாகக் கருதப்படுவது. பன்னிரு திருமுறைகளில் சொல்லப்பட்ட சைவசித்தாந்தக் கருத்துக்களின் பிழிவாக விளங்குவது. 'சிவஞான போதம்' – காரணப் பெயர். இதில், 'சிவம்,

ஞானம், போதம்' எனும் 3 சொற்கள் உள்ளன. ஞானம் – அறிவு'. அறிவு 3 வகையாய் நிகழும். அவை : ஐயம், திரிபு, உண்மை. ஒரு பொருளை 'இதுவோ அதுவோ?' என இரட்டுற அறிதல் ஐயம்; ஒன்றை மற்றொன்றாக மாறி அறிதல் 'திரிபு'. இவ்விரண்டுமின்றி ஒரு பொருளை உள்ளவாறு அறிதலே உண்மையறிவாகும். இதுவே 'ஞானம்'.

உலகிற்கு முதலாகிய கடவுளை 'முதற்பொருள்' என்றும் 'மெய்ப்பொருள்' என்றும் கூறுதல் உண்டு. 'சிவம்' என்னும் தனிப் பெயரால் கூறுதல் 'சிறப்பு நிலை வழக்கு'. சிவமாகிய முதற்பொருளை உள்ளவாறு உணரும் அறிவு 'சிவஞானம்' எனப்படும்.

'போதம்' என்பது 'போதித்தல்'. ஐயம் திரிபுகளை நீக்கித் தெளிவு உண்டாகுமாறு உணர்த்துதல். எனவே சிவத்தை உணரும் ஞானத்தைப் பக்குவமுடைய மாணவர்க்கு ஐயம் திரிபின்றி உணர்த்துவது இந்நூலாகும்.

இந்நூல் 12 நூற்பாக்கள் கொண்டது. நூற்பா, 3 அல்லது 4 அடி கொண்டது. நூற்பாக்களின் மொத்த அடிகள் 40. தொடக்கத்தில் 'பாயிரம்' உள்ளது. அதில் 'கடவுள் வாழ்த்து' – 1ம்; 'அவையடக்கம்' – 1ம் ஆக 2 செய்யுட்கள் உள்ளன. ஒவ்வொரு நூற்பாவுக்கும் கருத்துரை, பொழிப்புரை உண்டு. பொழிப்புரைக்கு 'வார்த்திகம்' என்று பெயர். ஒவ்வொரு நூற்பாவும், பொருள்நிலைக்கு ஏற்பப் பல கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதற்கு 'அதிகரணம்' என்று பெயர். ஒவ்வொரு கூறிலும் 'மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு' என்ற 3 உறுப்புக்கள் உள்ளன. 'மேற்கோள்' என்பது நூற்பாவிலிருந்து பெறப்படும் கருத்தமைவு; 'ஏது' என்பது அம்மேற்கோளை நிறுவுதற்கு ஆசிரியர் உரைப்பது, 'எடுத்துக்காட்டு' என்பது, அவ் ஏதுவை வலியுறுத்தற்காக வருவது. இம்மூன்றில், மேற்கோளும் ஏதுவும் உரைநடையில் உள்ளன; எடுத்துக்காட்டு, செய்யுள் வடிவில் உள்ளது.

இந்நூல் 'பொது அதிகாரம்', 'உண்மை அதிகாரம்' என 2 பெரிய பகுப்புக்கள் உடையது. பிரமாணஇயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என 4 இயல்களைக் கொண்டது. பொது அதிகாரம் – 6 நூற்பா; உண்மை அதிகாரம் –6 நூற்பா. இயல் 1க்கு 3 நூற்பாக்கள் வீதம் 4 இயல்கட்கு 12 நூற்பாக்கள்.

*"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா*
*அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே!"*

என்பது 12ஆவது சூத்திரம். ஆழ்ந்தகன்ற நுண் பொருளும், சைவசித்தாந்தத் தத்துவமும் கொண்ட அரிய நூல் இது!

## சிவநாம மகிமை

*துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.*

சிவநாமம் – சிவபெருமானின் திருப்பெயர்.

மகிமை – மேன்மை.

இறைவனின் திருப்பெயர்களில் எல்லாம் சிறந்து விளங்குவது 'சிவம்' என்பது. இதனை இரட்டித்துச் 'சிவசிவ' என்பர். இப்பெயரின் பெருமை ஒருசிறிது கூறும் நூல் ஆதலின் 'சிவநாம மகிமை' எனப்பட்டது.

இந்நூல் 10 கலிவிருத்தப்பாடலையும்; இறுதியில் ஓர் அறுசீர் விருத்தப்பாடலையும் கொண்டுள்ளது. பாடலின் இறுதியில், 'சிவசிவ என்மினே!' என்று முடிவது.

> *"நாக்கி னாலும் நயனங்க ளாலும்இவ்*
> *வாக்கை யானும் அருஞ்செவி யாலும்நம்*
> *மூக்கி னாலும் முயங்கிய தீவினை*
> *தீர்க்க லாகும் சிவசிவ என்மினே!"*

என்பது அவற்றில் ஒன்று.

## *சிவநேச வெண்பா*

*இராமலிங்க அடிகளார்.*

சிவபெருமானைப் பற்றிக்கூறும் வெண்பாக்களால் ஆனநூல். தொடக்கத்தில், 'விநாயகர்துதி, சுப்பிரமணியர் துதி' என்ற 2 பாடல்கள் உள்ளன. இவை தவிர நேரிசை வெண்பாக்கள் 100 உள்ளன. இவை, திருவருட்பா – 3ஆம் திருமுறையில் உள்ளன.

இந்நூலில் இறைவனின் அருட்டன்மைகள் சொல்லப்பட்டுள்ளன. சைவசித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கு இயம்பப்பட்டுள்ளன.

> *"ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால் உள்ளிருந்தே*
> *ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ – வாட்டுகின்ற*
> *அஞ்சுபுல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்*
> *நெஞ்சுபுலர்ந் தேங்கு நிலை!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## *சிவபெருமான் திருஇரட்டைமணிமாலை*

*கபிலதேவநாயனார்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. மாலைபோலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது.

இந்நூல், 'வெண்பா, கட்டளைக் கலித்துறை' என்னும் இருவகை யாப்பில் அமைந்துள்ளதால், 'இரட்டை மணிமாலை' எனப்பட்டது.

இந்நூலில் வெண்பா – 19; கட்டளைக் கலித்துறை –18 ஆக 37 பாடல்கள் உள்ளன. அந்தாதித் தொடையில் அமைந்தது.

சிவபெருமானின் பெருமை, அவர், அடியார்களுக்குச் செய்யும் அருள்திறன், அவனை வழிபடாதார்க்கு நேரும் சிறுமை, ஆகியன இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

*"மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்*
*புலர்ந்தும் புலராத போதும் – கலந்திருந்து*
*கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்*
*தெண்ணீர் சடைக்கரந்த தே!"*

என்பது இறைவனின் இயல்பு கூறுவது. இவ்வாறே பிறவும் வந்துள்ளன.

## *சிவபெருமான் திருமும்மணிக்கோவை*

*இளம்பெருமான் அடிகள்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'கோவை' என்பதும் ஒன்று! இது கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப் பெறுவது எனவே 'கோவை' எனப்பட்டது.

'அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை' எனும் இம்மூவகை யாப்பும் நிரல்படக் கோவையாகப் பாடப் பட்டிருத்தலின் 'மும்மணிக்கோவை' எனப்பட்டது.

இந்நூலில், அகவல் – 10; வெண்பா – 10, 'கட்டளைக் கலித்துறை –10' என 30 பாடல்கள் உள்ளன. இவற்றில் சிவபெருமானை முன்னிலைப்படுத்தி உரையாடி மகிழும் நிலையிலும்; அவனைக் கண்டு காமுற்ற தலைவியின் துயர் கூறும் அகத்துறையிலும் பாடல்கள் அமைந்துள்ளன.

*"சடையே, நீரகம் ததும்பி நெருப்புக் கலிக்கும்மே!*
*மிடறே, நஞ்சகம் துவன்றி அமிர்து பிலிற்றும்மே!*
*வடிவே, முளியெரி கவைஇத் தளிர்தயங் கும்மே!*
*அடியே, மடங்கல்மதம் சீறி மலர்பழிக் கும்மே!*
*அஃதான்று,*
*இனைய என்(று) அறியலம் யாமே முனைதவத்*
*தவமூன்று வகுத்த தனித்தாட்*
*கொலையூன்று குடுமி நெடுவே லோயே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *சிவபெருமான் திருவந்தாதி*

*கபிலதேவ நாயனார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல்.

ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக அமையப் பாடுவது. அவ்வாறே நூலின் இறுதிச் செய்யுளின் இறுதி முதற்செய்யுளின் முதலாவதாக அமையப் பாடுவது. இதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர்.

இந்நூலில் இவ் அமைப்புப் பொருந்த 100 நேரிசை வெண்பாக்களும், இறுதியில் 1 வெண்பாவுமாக 101 பாடல்கள் உள்ளன. இவ் அந்தாதியில், "திருவாரூர், திருவொற்றியூர், திருவண்ணாமலை, ஆலூர், திருவாமாத்தூர், திருவேங்கடம், கூடல், திருவெண்காடு, திருமறைக்காடு, சிராமலை, பூம்புகார், திருக்கானப் பேர், இடுமணல், ஆக்கூர், புறந்தை, காரோணம், திருவாடானை, திருப்புவனம், திருப்புக்கூர், மண்டளி, கோகரணம், கோப்பாடி, குற்றாலம், புகலூர், களந்தை, தலையாலங்காடு, செங்குன்றூர், முதலிய பல ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்ககாலக் 'கபிலர்' என்பவரினின்றும் வேறுபடுத்த இந்நூலாசிரியர் 'கபில தேவ நாயனார்' எனப்பட்டனர்.

*"பணியாய் மடநெஞ்சே! பல்சடையான் பாதம்*
*பணியாத பத்தர்க்குஞ் சேயன் – பணியாய*
*ஆகத்தான் செய்துமேல் நம்மை அமரர்கோன்*
*ஆகத்தான் செய்யும் அரன்!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்!

## *சிவபெருமான் திருவந்தாதி*

*பரணதேவ நாயனார்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக அமையப் பாடுவது. அவ்வாறே நூலின் இறுதிச் செய்யுளின் கடைசிச் சீரோ, அசையோ, தொடக்கச் செய்யுளின் முதலாவதாக அமையப் பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

இந்நூலில் 100 நேரிசை வெண்பாக்களும், இறுதியில் 1 வெண்பாவும் உள்ளன.

சங்க காலப் பரணரினின்றும் வேறுபடுத்தப் 'பரணதேவ நாயனார்' எனப்பட்டார்.

இந்நூலில் சிவபெருமானின் பல்வேறு சிறப்புக்கள் எடுத்தோதப்பட்டுள்ளன.

*"வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்*
*வாய்த்த அடிமுடி யுங்காணார் – வாய்த்த*
*சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்னோ*
*சலந்தரனாய் நின்றவா தாம்!"*

என்பது ஒரு பாடல். இவ்வாறே பிறவும் வரும்.

## *சிவபோக சாரம்*

*குருஞான சம்பந்தர்.*

சாரம் – சாராம்சம், சுருக்கம்.

சிவபோகம் – சிவப் பேரின்பம்.

சிவப் பேரின்பத்தைப் பற்றிச் சுருக்கமாக உரைக்கும் நூல் என்பதாம். இதன்கண், 130 பாடல்கள் உள்ளன.

*"ஆசைஅறாய்! பாசம் விடாய்! ஆனசிவ பூசைபண்ணாய்!*
*நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் – சீசீ*
*சினமே தவிராய்! திருமுறைகள் ஓதாய்ஸ்*
*மனமே உனக்கென்ன வாய்!"*

என்பனபோல் வரும்!

## *சிவப்பிரகாசம்*

*உமாபதி சிவாசாரியார்.*

சிவம் + பிரகாசம் = சிவப்பிரகாசம். பிரகாசம் – ஒளி.

பேரொளிப் பிழம்பாக விளங்கும் சிவத்தைப் பற்றிக் கூறும் நூல் என்று பொருள்.

சைவசித்தாந்த சாத்திரம் 14ல் ஒன்று. சிவஞான போதம், சிவஞான சித்தியார் ஆகிய இரண்டு நூல்களின் வழி இயன்றதாகலின் இது 'சார்புநூல்' எனப்படும். அழகிய இனிய ஆசிரிய விருத்தத்தால் ஆனது. காப்புச் செய்யுள் தவிர 100 செய்யுட்கள் கொண்டது. சைவ சமய உண்மைகளைத் தெளிவாகவும் சுவையாகவும் கூறுவது.

பொது, உண்மை என இருபகுதிகளாய் அமைந்து, கருத்துவிளக்கம் தருவது. இறை, உயிர், தளை என்ற முப்பொருள் உண்மைகளைச் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய இருநூல்களைத் தழுவிக் கூறப்படினும், அவற்றை விளக்கிக் கூறும் வகையால் அவற்றின் வேறாகத் தமக்கெனத் தனித்தன்மை வகுத்துக் கொண்டு, கருத்து விளக்கம் தருதலின் இது 'சார்பு நூல்' ஆயிற்று.

இந்நூல் கூறும் பொருளை 6 வகையாகப் பகுத்துக் காணலாம். (1) காப்பு; (2) பாயிரம்; (3) பொது அதிகாரம்; (4) உண்மை அதிகாரம்; (5) நூலது அமைவு; (6) நூல் கேட்டற்கு உரியார்.

*"பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்*
*பதிபசுபா சம்தெரித்தல்; பதிபரமே . . ."*

என்பன போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலகொண்டது இந்நூல்.

## சிவப்பிரகாச விகாசம்

*சிவப்பிரகாச சுவாமிகள்.*

விகாசம் – மறு மலர்ச்சி; சிவப்பிரகாசம் – சிவஞானப் பேரொளி.

'சிவஞானப் பேரொளியின் மறுமலர்ச்சி' என்று பொருள். இந்நூலில், 'சிறப்புப் பாயிரம், காப்பு, தற்சிறப்புப் பாயிரம்' என 3 தவிர, 332 பாடல்கள் உள்ளன.

'பதி மரபு, பதிபேத இயல், பசு மரபு, பாச மரபு, பிரளய இயல்' எனும் 5 இயல்களைக் கொண்டது.

'ஆசிரிய விருத்தம்' முதலான பல்வேறு யாப்பு வடிவில் பாடப் பட்டுள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துக்களை விரிவாக எடுத்துரைப்பது; புறச் சமய மறுப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

*"மும்மலமோடு உறுசகலன் மரபுஇயம்பின்*
*மலத்தினால் மூடம் ஆய*
*மைம்மலியும் சிற்சத்தி யுளன்ஆகி*
*அச்சித்து வயங்கு தற்குப்*
*பொய்ம்மலியும் கலாதியொடு புணர்ந்துவினை*
*போகத்தின் பொருட்டு அடைந்து*
*மெய்ம்மறையும் உயிர்சகலன் எனப்படும்என்று*
*ஆகமநூல் விளம்பும் அன்றே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சிவவாக்கியம்

*சிவவாக்கியர்.*

சிவவாக்கியரால் பாடப்பட்ட நூலாதலின் 'சிவ வாக்கியம்' எனப்பட்டது. சித்தர்களுள் தலைசிறந்தவராதலின் இவருடைய பாடல்கள் 'சித்தர் பாடல்' வரிசையில் வைக்கப்பட்டுள்ளன.

இவருடைய பாடல்களில் புரட்சிகரச் சிந்தனைகள் பல இடம்பெற்றுள்ளன.

சித்தர்பாடல் வரிசையில் இவர் பாடியனவாக 524 பாடல்கள் உள்ளன.

*"சிவாயவசி என்னவும் செபிக்கஇச் சகம்எலாம்*
*சிவாயவசி என்னவும் செபிக்கயாவும் சித்தியாம்*
*சிவாயவசி என்னவும் செபிக்கவானம் ஆளலாம்*
*சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *சிவனடி தொடுமாலை திருநூற்றுநாற்பது*

*சிவநாகனார்.*

'சிவனடி தொடுமாலை' என்ற தொடரில் 8 எழுத்துக்கள் உள்ளன. எண்குணத்தானாகிய சிவபெருமானைக் குறிக்கும். 'திருநூற்று நாற்பது' என்பதில் ஒற்றெழுத்தை நீக்கிவரும் 7 எழுத்தும், இறைவன் ஏழிசையாய் இருக்கின்றான் என்பதைக் குறிக்கும்.

இதன்கண் 140 பாக்கள் உள்ளன. அனைத்தும் இறைவனின் புகழைச் சொல்லுவன.

*"அப்பிடவே அன்று கண்ணாலே*
*கண்ணப்ப நில்லென்றாய்!*
*அப்பனாகி நின்று காலாலே*
*காலனையே செகுத்தாயே . . . !"*

என்பனபோல் வரும்!

## *சிவாச்சிரமத் தெளிவு*

*அம்பலவாண தேசிக மூர்த்திகள்.*

ஆச்சிரமம் – நிலை. சிவாச்சிரமம் – சிவத்தை அறிந்து அநுபவித்தற்காக ஆன்மாக்கள் மேற்கொள்ளத்தக்க நிலை. இது, பண்டார சாத்திரம் பதினான்கில் ஒன்று.

இது, 'காப்பு' முதலாக 70 வெண்பாக்கள் கொண்டது.

ஆன்மாக்கள் மேற்கொள்ளத்தக்க நெறி, அதற்குத் துணை செய்யும் ஆசாரியர், அந்நிலை பெற்றார் மேற்கொள்ளத்தக்க கடமைகள் ஆகியவற்றை விதிமுகத்தானும் மறைமுகத்தானும் தெளிவுபடுத்துவது இந்நூல். மேலும் தீட்சைமுறைகள், அவற்றைச் செய்விக்கும் தகுதியுடையவரின் இயல்புகள், தீட்சைபெறுவாரின் இயல்புகள், தீட்சையின் பயன் இவற்றைத் தடைவிடைகளால் விளக்குதல் என்பன இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

*"எங்கு மறிவா யெழுந்தசிவா னந்தத்தைத்*
*தங்குநய னத்தடக்கித் தான்விழிக்கப் – பங்கமுறக்*
*கற்குநிட்டை யாகுங் கருதியறி வாய்நிறைந்து*
*நிற்குட்டை யல்லவென நில்!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்!

## *சிவாலய மான்மியக் கோவை*

*ப. சோமசுந்தர தேசிகர்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கியவகை 96ல் 'கோவை' என்பதும் ஒன்று. 'காட்சி' முதலான துறைகள் முறையே கோக்கப்படுவதால் 'கோவை' எனப்படும். இது,

கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து, ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப்பெறுவது.

சிவபெருமான் திருவுருக்கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் பலவாகும். அவற்றில், 'சம்பந்தர், அப்பர், சுந்தரர்' எனும் மூவர் பாடல்பெற்ற திருத்தலங்கள் 274 ஆகும். இந்த 274 திருத்தலங்கட்கும் ஒவ்வொன்றின் பெயரும், அதன் மான்மியமும், இறைவன் இறைவி திருப்பெயர்களும் கொண்டு தனித்தனியாகப் பாடப்பட்ட 274 செய்யுட்கள் இந்நூலில் உள்ளன.

நூலின் தொடக்கத்தில் விநாயகர் துதி, பலதேவர் துதி எனும் 2 பாடல்கள் உள்ளன. சோழநாட்டுத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், தொண்டைநாட்டுத் தலங்கள் எனப் பாகுபாடும் செய்யப்பட்டுள்ளது.

*"இமையவர்க் கரசன் பழியொழித்தருள*
*லிதுமுத லறுபத்து நான்கா*
*யமைதிரு விளையாட் டியிற்றுதென் மதுரை*
*யமர்ந்துவாழ் சோமசுந் தரனே!*
*கமைதரு முள்ளத் தங்கயற் கண்ணி*
*கடிமணம் புரிந்தகா தலனே!*
*சிமையவில் லோனே யென்னையாண் டருள்வாய்*
*செல்வமே! கருணைவா ரிதியே!"*

என்பது மதுரையைப் பற்றியது. இவ்வாறே பிறதலங்களைப் பற்றியும் உள்ளன.

## *சீகாளத்திப் புராணம் (பிற்பகுதி)*

சிவப்பிரகாச சுவாமிகள்.

புராணம் – பழைய வரலாறு. *சீகாளத்தி* – திருக்காளத்தி.

திருக்காளத்தி இறைவன் மீது பாடப்பட்டது.

இந்நூலின் முற்பகுதியை அதாவது 6 சருக்கங்களைப் பாடியவர், சிவப்பிரகாசரின் இளவல் கருணைப் பிரகாசர் ஆவார். அவரது மறைவையடுத்து, இந்நூலில் கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம் எனும் 2 சருக்கங்கள் பாடியவர் சிவப்பிரகாசர்.

இது, 'கலித்துறை, ஆசிரிய விருத்தம்' முதலான பலவித யாப்புகளால் பாடப்பட்டுள்ளது. கண்ணப்பச் சருக்கம் – 178 பாடல்கள்; நக்கீரச் சருக்கம் – 137; ஆக 315 பாடல்கள் உள்ளன. கண்ணப்ப நாயனாரின் வரலாறும், நக்கீரரின் வரலாறும் இனிது இயம்பப்பட்டுள்ளன.

*"மற்றுஅவன் செருப்புக் காலால் மணங்கமழ் நமதுசென்னி*
*உற்றபூ மாற்றும் காலத்து உடம்புஎலாம் மயிர்பொ டிப்பச்*
*சிற்றிள மகன்பூங் கையால் திருமுலை வருடப் பெற்ற*
*பெற்றதாய் என்ன நெஞ்சம் பெரிதுஉரு குதுமால் அன்ப!"*

என்பது கண்ணப்பன் வரலாற்றில் நிகழும் அற்புத நிகழ்ச்சியைக் குறிப்பது. இவ்வாறே பிறவும்!

## *சீவசாட்சி மாலை*

*இராமலிங்க அடிகளார்.*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுத்துப் பாடப்படுவது. 'சீவசாட்சி' என்பது முருகப் பெருமானைக் குறிக்கும். முருகன், உயிர்களாகிய *சீவர்* இருந்து வாழும் உலகு, உடல்கள் ஆகியவற்றில் வேறுபாடின்றி *ஒன்றாய்க்* கலந்தும்; உயிர்க்கு உயிராக *உடனாயும்*, அவற்றுக்கு *வேறாக* நின்று கண்டும் காட்டியும் அருளும் இயல்பினன். எனவே அப்பெருமானைச் 'சீவசாட்சி' என்பர்.

இது, திருவருட்பா, முதல் திருமுறையில் அமைந்துள்ளது. 'எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்' பாக்கள் 28 கொண்டது.

இதன்கண், திருத்தணி முருகனது பெருமை உரைக்கப்பட்டுள்ளது. 'வேண்டுதல்' முறையில் அமைந்துள்ளது!

*"புன்புலைய வஞ்சகர்பாற் சென்று வீணே*
*புகழ்ந்துமன மயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்*
*வன்புலைய வயிறோம்பிப் பிறவி நோய்க்கு*
*மருந்தாய நின்னடியை மறந்தே னந்தோ!*
*இன்புலைய வுயிர்கொள்வான் வரினென் பாலவ்*
*வியமனுக்கிங் கென்சொல்வேன் என்செய்கேனே*
*தன்புகழ் காணருந் தணிகை மணியேசீவ*
*சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே?"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருஅருட்பா

## *சுத்த சிவநிலை*

*இராமலிங்க அடிகளார்.*

'சுத்த சிவநிலை' என்பது, சிவபெருமானின் தனி முதன்மை உயிர்களுடன் தொடர்புறும் நிலையை விளக்குவது.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது. நேரிசை வெண்பாவால் ஆனது. 47 செய்யுட்கள் கொண்டது.

*"எண்ணுகின்றேன் எண்ணங்கள் எல்லாம் தருகின்றான்.*
*பண்ணுகின்றேன் பண்ணுவித்துப் பாடுகின்றான் – உண்ணுகின்றேன்*
*தெள்ளமுதம் உள்ளந் தெளியத் தருகின்றான்*
*வள்ளல்நட ராயன் மகிழ்ந்து!"*

என்பதும் அவற்றில் ஒன்று!

பார்க்க:—

திருஅருட்பா

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

பார்க்க : சுந்தரர் தேவாரம்

## சுந்தரர் தேவாரம்

சுந்தரமூர்த்தி நாயனார்.

சைவத்திருமுறை பன்னிரண்டில் 7ஆவது திருமுறை நூல் இது. தே+வாரம் = தேவாரம். தே—தெய்வம்; வாரம் — இசைப்பாட்டு, அன்பு, உரிமை எனப்பலபொருள். தெய்வத்திற்கு இன்றமிழ் இசைப்பாட்டால் பாடப்படுவது; தெய்வத்தினிடத்தில் அன்பு காட்டத் தக்கது; இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள உரிமையைத் தெளிக்கும் நூல் என்றெல்லாம் பொருள் கொள்ளப்படும். தே+ஆரம் = தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை. சுந்தரர் பாடியவை 38,000 பதிகங்கள். அதாவது 3, 80, 000 பாடல்கள். கிடைத்தவை: 108 பதிகங்கள் அதாவது 1080 பாடல்கள் மட்டுமே. சுந்தரர் பதிகங்கள் 'திருப்பாட்டு' என்று போற்றப்படும். இவர் பாடிய தலங்கள் 84 என்றும்; பதிகங்கள் 100 என்றும், பாடல்கள் 1026 என்றும் கூறுவர். பாடிய பண்கள்: 'இந்தளம்' முதல் 'புறநீர்மை' வரை 17.

இவருடைய பாடல்களில், அகப்பொருட் செய்திகள், ஆற்றுப்படை, நெஞ்சுக்குக் கூறல், இயற்கை வருணனை, தூது, சிவபெருமானைத் தோழராகக் கருதியமை எனப் பல்வேறு செய்திகள் உள்ளன. நாளும் இத் தேவாரப் பதிகங்களைப் பாடுவார்க்கு இறையருள் கிட்டும் என்பது ஒருதலை! சைவத் திருக்கோயில்களில் நாளும் தேவாரப் பண் இசைப்பதற்கென்றே ஓதுவார்கள் உண்டு!

இவர் பாடிய 'திருத்தொண்டத்தொகை'ப் பதிகந்தான் சேக்கிழார், பெரிய புராணம் பாடுதற்கு மூல காரணமாயிற்று. 63 நாயன்மார்களின் வரலாற்றைச் சொல்லும் அற்புதப் பதிகம் இது! மேலும் சைவ சித்தாந்த நுண்பொருளைக் கூறும் பதிகங்களும் உள்ளன.

*"பொய்த் தன்மைத் தாயு மாயப்*
*போர்வையை மெய்யென் றெண்ணும்*
*வித்தகத் தாய வாழ்வு*
*வேண்டிநான் விரும்ப கில்லேன்!*
*முத்தினைத் தொழுது நாளும்*
*முடிகளால் வணங்கு வாருக்*
*கத்தன்மைத் தாகும் ஆரூர்*
*அப்பனே அஞ்சி னேனே!"*

என்பன போன்ற பாடல்கள் பலவாம்!

## செந்தில் நாயக சதகம்

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

'சதகம் = நூறு'. ஒரு நூறு பாடல்கள் கொண்ட 'சதகம்', சிற்றிலக்கிய வகை 96ல் 1.

செந்தில் – திருச்செந்தூர். இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நாயகனாகிய முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூல், எழுசீர் விருத்தப்பா, நூறு கொண்டது. இது, துதிப்பாடலாக அமைந்துள்ளது.

முருகனைப் பொதுவாகத் துதிப்பதில், சிவபிரானை முதற் பாட்டிலும், இரண்டாவது உமாதேவியையும் கூறிய முறையில், நூல் முழுவதும் இருவரையும் மாறிமாறிக் கூறி, இவர்களின் 'மைந்தனே, செந்தில் நாயகனே!' என்று ஈற்றடி அமைத்துப் பல செய்திகளும் பொருந்த இனிய நடையில் பாடியுள்ளார் அடிகள்.

இந்நூலில் 'காப்பு'ச் செய்யுள் தவிர 100 பாடலும் இறுதியில் நூற்பயனும் உள்ளன.

*"சுந்தரி குமரி யெனுமிரு மடவார்*
*துயர்களைந் தணைந்தமை கருதி*
*வந்தடைந் தருமைத் தமிழ்கொடு துதிப்பேன்*
*மனங்கொதித் தயர்வது வழக்கோ?*
*செந்தமிழ்க் குறுமா முனிக்கருள் புலமைச்*
*சிவகுரு நாதனாம் சிறுவா!*
*மந்தர மனைய முலைப்பரா பரைதன்*
*மைந்தனே செந்தினா யகனே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## சேக்கிழார் நூற்றந்தாதி

*தணிகை வேள் பாரதியார்.*

அந்தாதி, தமிழில் உள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. அந்தாதித் தொடையில் பாடப்படுவது.

திருத்தொண்டை நாட்டின்கண் வேளாண்குலத் திலகமெனத் தோன்றிச் சைவத் திருத்தொண்டர் வரலாறு பாடுவதையே தம் நோக்கமாகக் கொண்டொழுகிய பெருமான் சேக்கிழார். அத்தகைய அடியார் மீது பாடப்பட்டது இந்நூல். காப்புச் செய்யுள் ஒன்று, நேரிசை வெண்பாவாலானது. ஏனைய 100 பாடல்களும் கட்டளைக் கலித்துறையில் அமைந்தவை. நூலின் இறுதியில் வாழ்த்துப்பா ஒன்றும் உள்ளது.

*"அகமும் மகிழும் புறமும் மகிழும் அயிர்ப்பிலதாய்ச்*
*சுகமும் இயங்கும் துனிவிலை ஏதம் தொலைந்திடும் நல் . . ."*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *சேக்கிழார் பிள்ளைத்தமிழ்*

*மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.*

தமிழில் உள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களில் 'பிள்ளைத் தமிழ்' என்பதும் ஒன்று. இஃது, ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். பருவம் 1க்குப் 10 பாடல் வீதம் 100 பாடல்கள் பாடப்படுவது மரபு. 'ஆண்பாற் பிள்ளைத்தமிழா'யின், 'காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்' எனவரும். பெண்பாற் பிள்ளைத் தமிழாயின், கடைசி 3 பருவமும் கழங்கு, அம்மானை, ஊசல் எனவரும்.

இப்பிள்ளைத்தமிழில், சேக்கிழாரின் பெருமை, அவர் பாடிய 'திருத்தொண்டர் புராணச்'சிறப்பு, மற்றும் சேக்கிழாரின் குலம், குணம், அதிகாரம், கல்வி, பக்தி, ஞானம் முதலாயின சொல்லப்பட்டுள்ளன. சேக்கிழாரை ஓர் அவதார புருடராகவே போற்றுகின்றார் இந்நூலாசிரியர்!

இப்பிள்ளைத் தமிழில், முதற்கண் 'விநாயகக் கடவுள் வணக்கம்', 'குருவணக்கமும் அவையடக்கமும்' ஆகிய 2 பாடல்கள் தவிர 100 பாடல்கள் உள்ளன.

*"புண்ணிய முதலே! பொங்கொளி மணியே!*
*பொய்யாப் பெருவாழ்வே!"*

என்பது செங்கீரைப் பருவத்தில் வருவது. இவ்வாறே தமிழ்ச்சுவையும், பக்திச் சுவையும் கலந்த அற்புதப் பாடல்கள் கொண்டது.

## *சேக்கிழார் புராணம் அல்லது திருத்தொண்டர் புராண வரலாறு*

*உமாபதி சிவாசாரியார்.*

'திருத்தொண்டர் புராணம்' எனப்படும் 'பெரிய புராணம்' பாடிய சேக்கிழார் வரலாறு உரைப்பது.

முதற்கண் 'பாயிரம்' முதல் 'அவையடக்கம்' ஈறாகப் பத்துப் பாடல்கள். பின்பு 103 திருவிருத்தப் பாக்கள். இறுதியில் 1 சிறப்புப் பாயிரம்.

*"பாலாறு வளம்சுரந்து நல்கமல்கும் பாளைவிரி*
*மணம்கமழ்பூஞ் சோலை தோறும் . . .*
*குன்றத்தூரில் சேக்கிழார் திருமரபு சிறந்ததன்றேஸ்"*

எனச் சேக்கிழார் அவதரித்த குன்றத்தூரைக் குறிப்பது முதற்பாடல். இவ்வாறே தெய்வமணம் கமழும் பாடல்கள் உள்ளன.

## *சேதுபுராணம்*

*நிரம்ப அழகிய தேசிகர்*

புராணம - பழைய வரலாறு.

சேது - இராமேசுவரம். ஆங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இராமநாத சுவாமியைப் பற்றிய புராணம். இது, வடமொழியினுள்ள 'சேது மான்மியம்' என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும்.

இதன்கண், 'காப்பு, கடவுள்வாழ்த்து, அவையடக்கம்' என - 28 திருவிருத்தங்கள் உள்ளன.

'திருநாட்டுச் சிறப்பு' முதல் 'சேதுபலச் சருக்கம்' வரை 49 பகுதிகள் உள்ளன. மொத்தத் திருவிருத்தப் பாக்கள்: 3438.

இதில், 'கோடி தீர்த்தம்' முதலான பல்வேறு தீர்த்தப் பெருமை, இராமபிரான் அருச்சனை செய்து வழிபட்ட சிறப்பு முதலாயின சொல்லப்படுகின்றன.

*"தயரதன் மதலை வார்த்தை சதாகதி மதலைகேட்டு*
*மயர்விலா மகிழ்ச்சியெய்தி வடதலை யிராமநாதற்*
*கயலுறத் தாபனஞ்செய் தருச்சித்தா னன்றுதான்போய்க்*
*கயிலையங் கிரியிற்பெற்ற கண்ணுதன் மூர்த்திதன்னை!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ்

*காஞ்சிபுரம் ஸ்ரீ சிதம்பரமுனிவர்*

'பிள்ளைத் தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. கடவுளையோ, அடியார்களையோ, வள்ளல்களையோ குழந்தையாகக் கருதிப் பத்துப் பருவங்களில் பருவம் 1க்குப் 10 பாடல் வீதம் 100 பாடல்கள் பாடுவது. இஃது ஆண்பாற்பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். கடைசி 3 பருவங்கள் மட்டும் வேறுபடும்.

இந்நூல் முழுவதும் முருகனைப் பற்றியது. முருகன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள 100 திருத்தலங்கட்கும் தலம் 1க்கு 1 பாடல் வீதம் 100 பாடல்கள் உள்ளன. கழிநெடிலடி ஆசிரியப்பாவால் ஆனது. 'திருக்கயிலாயம்' முதல் 'திருக் கேதாரம்' வரையுள்ள தலங்கள் இயம்பப் பெற்றுள்ளன.

தொடக்கத்தில் 'விநாயகர்' காப்புச் செய்யுள் 1 உள்ளது.

*"செந்திலம் பதியில்வந் தாறான னத்திலொரு*
*திருமுகத் தால்மகிழ்ந்தே*
*சிங்கனொடு தாருகன் சூரபத் மாமுதல்*
*தெவ்வரையெ லாஞ் செயித்தே!"*

என்பது முதற்பாடல். இவ்வாறே பிறவும் வரும்.

## சேத்திரத் திருவெண்பா

பார்க்க : திருக்கோயில் திருவெண்பா.

## சேந்தன் செந்தமிழ்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

சேந்தன் – செந்தழல் வடிவுடையன், முருகப் பெருமான். அவனைப் பற்றிச் செந்தமிழால் பாடப்பட்ட நூல் இது.

இதன்கண் நேரிசை வெண்பாக்கள் 50 உள்ளன.

"அடியவர்களுடைய மொழிக்குத் துணை 'முருகா' எனும் பெயர்; விழிக்குத் துணை அவனின் மென்மலர்த் திருவடிகள்" என்பன போன்ற கருத்துக்களைக் கூறும் நூல்.

*"சிற்றெறும்பு நெய்யிருக்குஞ் சேர்வறிந்து சேறல்போ*
*னற்றொழும்ப ருள்ளிடத்தா னாநறிய – பொற்சிலம்புச்*
*சேந்தனையே சேர்ந்துபழந் திட்கலற நற்சுவையை*
*மாந்துவரா லென்று மகிழ்ந்து!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சொக்கநாத வெண்பா.

*ஸ்ரீ குருஞானசம்பந்தர்.*

மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளிய சொக்கநாதப் பெருமான் மீது பாடப்பட்ட வெண்பாவினால் ஆன நூல்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றாலும் சிறப்புப் பெற்றது மதுரை. சொக்கநாதப் பெருமான் 64 திருவிளையாடல் புரிந்த சிறப்புக்குரியது. தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்.

இந்நூலில் 94 வெண்பாக்கள் உள்ளன. 'இவை தவிரச் சில நூல்களில் 7 பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இது, சித்தாந்த சாத்திரங்களின் பிழிவாய், இறைவனிடம் நாம் வேண்டத்தக்க வரங்களை உள்ளடக்கியதாய், நமது உள்ளத்தில் எழும் வினாக்களுக்கெல்லாம் விடை அளிப்பதாய் விளங்குவது. பாடலின் இறுதி, 'சொக்கநாதர்' என முடிவுபெறுவது.

*"ஆறாறு தத்துவத்தும் ஆணவத்தும் கன்மத்தும்*
*மாறாதெந் நாளும் மயங்காமல் – பேறாக*
*நித்தனே நின்மலனே நின்பதத்தில் ஆள்மதுரை*
*அத்தனே சொக்கநாதா!"*

என்பது சைவ சித்தாந்தக் கருத்துக்களை உள்ளடக்கியது. இவ்வாறே பிறவும் வரும்.

## சோண சைல மாலை

*துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவதால் இப்பெயர்.

சோணசைலம் : சிவந்த அழல் வடிவுடை மலையாகிய திருவண்ணாமலை. நூலின் தொடக்கத்தில் 'விநாயகர் காப்பு' 1 பாடல் தவிர 100 பாடல்கள் உடையது. எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனது. பாடல் தோறும், 'சோண சைலனே! கைலை நாயகனே!' என்று முடிவது. முன் இரண்டு அடிகளில் வேண்டுதல்; பின் இரண்டு அடிகளில் கற்பனை வளம் அமைந்துள்ளது.

*"அண்ணல்மா புகழ்மூ வரும்புனை அரும்பா*
*அன்றியென் கவியுநின் றுனக்காம்*
*பண்ணுலாம் இருவர் இசைகொ(ன்) நின்செவியில்*
*பாணிமான் ஒலியுமேற் றிலையோ?*
*விண்ணுலாம் முடியின் மேருவின் வடபால்*
*வெயிலொரு புடையுற ஒருபால்*
*தண்ணிலா எறிப்ப வளர்ந்தெழும் சோண*
*சைலனே! கைலைநா யகனே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சோழபுர புராணம்

*ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார்.*

புராணம் – பழைய வரலாறு.

'சோழபுரம்' என்ற ஊரில் எழுந்தருளியுள்ள வாகீசப் பெருமானைப் பற்றியது.

நூலின் தொடக்கத்தில் 'காப்புச்' செய்யுள் உள்ளிட்ட 30 பாடல்கள் உள்ளன.

இந்நூலில் 'திருநாட்டுப் படலம்' முதல் 'சோழபுரப் படலம்' ஈறாக 9 படலங்கள் உள்ளன. 525 திருவிருத்தப் பாக்கள் உள்ளன.

*"வெள்ளிபொன் மணிக ளாற்செய் விழுமிய காமதேனு*
*பொள்ளறம் வளர்த்த வன்னை யூர்தர வளித்தோ ரிம்மை*
*யெள்ளரு மன்ன மாதி யெண்மையின் பார்ந்து மேலு*
*முள்ளன வெல்லாமந்தி யுமையருட் பெருக்கின் வாழ்வார்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## சோழவந்தான் - பேட்டை ஸ்ரீ மந்தார விநாயகர் பதிகம்

*சிவப்பிரகாச சுவாமிகள்*

சோழவந்தானில் எழுந்தருளியுள்ள விநாயகர் மீது பாடப்பட்டது. எழுசீரடி ஆசிரிய விருத்தப் பாக்கள் 11 கொண்டது.

*"காமமா தியவாங் கடலில்வீழ்ந் தழுந்துங்*

*கடையனே னாயினும் கருணைச்*
*சேமமார் கரத்தா லெடுத்துநின் மலர்த்தாள்*
*செழுங்கரை சேர்த்திட நினைவாய் . . .”*

என்பன போன்ற பாக்கள் உண்டு.

## *சௌந்தர்ய லகரி*

*(மொ–பெ) வீரைக் கவிராச பண்டிதர்.*

சௌந்தர்யம் – அழகு; லகரி – பெருக்கம். தேவியின் அழகின் பெருக்கைச் சொல்லுவது என்பதாம்.

தேவியைப் பற்றிய தோத்திர நூல். ஆதிசங்கரர் வடமொழியில் பாடியது; தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். தோத்திரமாதலின், இதன்கண் வணங்கும் பாங்கு, ஆசி கூறுதல், கருத்து நுட்பமறிவித்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், விளக்குதல், போற்றுதல் முதலாயின அமைந்துள்ளன.

இந்நூலில் 56 ஆசிரிய விருத்தப்பாக்கள் உள்ளன. இறுதியில், நூற்பயன் – 1 செய்யுள் உள்ளது.

*“அம்மைநின் கருணை பொங்கி*
*யலைநெறி நயனவேலை*
*மும்மணி கெழுமுன் றொண்டர்*
*மும்மலங் களைய மூழ்கச்*
*செம்மைதன் சோணை யாறு*
*தெளிகங்கை யமுனை மூன்றும்*
*தம்மயத் தொடும்வந் துற்ற*
*தன்மையீ தென்பர் மிக்கோர்!”*

என்பது இவற்றில் ஒன்று!

‘ஞ’

## ஞான மாலை

*நடுப்பட்டி நல்லசாமிப் புலவர்.*

ஈரோடு மாவட்டம் கூனம்பட்டி திருமடத்தில் 52ஆம் குருமகா சந்நிதானமாக விளங்கிய தவத்திரு. இராசலிங்க மாணிக்க வாசக சுவாமிகள் மீது பாடப்பட்டது.

'காப்பு'ச் செய்யுள் தவிர, 24 எண்சீர் விருத்தப்பாடல்கள் கொண்டது. கடைசிப் பாடலின் கடைசி அடி கிடைக்கவில்லை.

*"கடிய வஞ்ச வேரைஅறி வாலே வெட்டிக்*
*கணபதி மூலக்கனலை எழுப்பிச் சுட்டுத்*
*திடமிகு பஞ்சாட் சரத்தால் சமன் செய்து . . ."*

என்பன போன்ற கருத்துக்கள் உள்ளன.

## ஞானம் நூறு

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

சைவ சித்தாந்தம் கூறும் நெறிகள் நான்கு. அவை: சரியை, கிரியை, யோகம், ஞானம். இவற்றில் முதல் மூன்றும், ஞானத்திற்கு வழிகோலுவன.

இத்தகைய 'ஞானம்' குறித்த 100 பாடல்கள் கொண்டது.

இதன்கண், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, நேரிசை வெண்பா 100 உள்ளது. இவை, நெஞ்சுக்குக் கூறுவன போல் அமைந்துள்ளன; அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

*"இருவினைக்கு ளாகாதே! என்னுடையமை எண்ணாதே!*
*பெருகுசினம் கொண்டுபிணற் றாதே! – மருவுமலக்*
*கள்ளமெல்லாம் விட்டுக் கரைந்து கரைந்துருகி*
*உள்ளுணர்ந்து நெஞ்சேபார் ஒன்று!"*

என்பது அவற்றில் ஒன்று!

## ஞான வாக்கியம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

முருகப் பெருமானின் திருவருள் ஞானம் பெறுதற்கான வாக்கியம்.

இதில், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, ஆசிரியப்பா அடிகள் 110 உள்ளன.

'அகரத்'தில் தொடங்கி 'வைகாரத்'தில் முடிவது.

> *"அறிவுக் கறிவே யிறைசற் சொரூபம்*
> *ஆனந் தப்பொரு டானந்தப்பரன் . . . ."*

என்று தொடங்குவது.

## ஞானாமிர்தம்

*வாகீச முனிவர்.*

ஞானம் + அமிர்தம் = ஞானாமிர்தம். அஞ்ஞானமாகிய கடலில், ஆகமங்கள் என்னும் மத்தைநாட்டிக் குருநாதரின் உபதேசம் என்னும் கயிற்றால், புத்தி என்னும் கைகொண்டு கடையும் போது, 'ஞானம் ஆகிய அமிர்தம்' வெளிப்படும். எனவே இந்நூல் 'ஞானாமிர்தம்' எனப்பட்டது.

ஞானமாவது சிவநெறிபற்றிய அறிவு; சிவம், உயிர், உலகு என்ற முப்பொருளின் உண்மையும், ஒவ்வொன்றிற்கும் உள்ள இயல்பும் தொடர்பும் அறிந்து கொள்ளும் அறிவு. அமுதம், தன்னை உண்டாரை உலகில் நெடிது வாழச் செய்யும் இயல்புடையது. அதுபோலவே சிவநெறி பற்றிய அறிவாகிய ஞானம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, சிவபரம்பொருளின் திருவருள் இன்பவாழ்வில் என்றும் பொன்றாது நின்று நிலவச் செய்யும் செயல்நலம் உடையது.

இந்நூலின் தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுள் வெண்பா – 1 உள்ளது. அடுத்துப் 'பாயிரம்' –8 அகவற்பா. பின்னர்ச் 'சம்மியஞானம்–7; 'சம்மிய தரிசனம் – 3; பாசபந்தம் – 9; தேகாந்தரம் – 2; பாசானாதித்துவம் – 1; பாசச்சேதவியல் – 22; பதிநிச்சயம் – 21; பாசமோசனம் – 3 என மொத்தம் 76 அகவற்பாக்கள் உள்ளன.

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கு; அவற்றிற்கு முந்திய நூல் இது. சைவ சித்தாந்தத்திற்குச் சிறந்த பிரமாண நூலாக விளங்குவது. சிவஞான சுவாமிகள் தாம் எழுதிய 'சிவஞான மாபாடிய' நூலில் 15 இடங்களில் இந்நூலினை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

> *"யானே யின்ன னாயினே னெற்சேர்*
> *ஆனாப் பாச மறியல் விரும்பினென்*
> *அறவ வென்ன வருளோ னறையின்*
> *குறையா மும்மலக் கொத்தே முறைதோ*
> *ஆணவ மாயை கரும மாங்கவை*
> *பேணிற் செம்பிற் பெருகிருந் துகளென*
> *அறிவினை மறைத்த லணிமல மாயை!"*

என்பது மூவகை மலங்கள் பற்றிய அகவற்பா. இவ்வாறே பிறவும் வரும்!

# 'த'

## தகராலய ரகசியம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருபரதாச சுவாமிகள்*

'தகரம்' + ஆலயம் + இரகசியம் =தகராலய ரகசியம். 'ரஹஸ்யம்' தமிழில் 'ரகசியம்' ஆயிற்று. ரஹஸ்யம் = அந்தரங்கம்.

பிண்டத்தும் அண்டத்துமுள்ள தகராலயங்களின் உண்மைகளும், அவற்றுள் விளங்கும் ஆகாசங்களின் இயல்புகளுமே அந்த இரகசியமாதலின் அவற்றை எடுத்துக் கூறும் இந்நூல் 'தகராலய ரகசியம்' எனப்பட்டது.

இருதய தாமரை மலர்க்குள் பிரகாசிக்கும் அகண்டாகாசமானது, சித்துவடிவாக எத்திறக் குறைவுமின்றி அதிசூக்குமத்தோடும், மாட்சியோடும் இருக்கும் காரணத்தினால், அதனை நலமுடைத்தாய 'சிதம்' என்றும்; 'பரம்' என்றும்; 'பரதேசம்' என்றும்; 'உள்உற்ற தகராலயம்' என்றும், துக்கத்தை அறவே ஒழிக்கும் 'பொன்னம்பலம்' என்றும்; குகப் பெருமான் திருநடனம் செய்யும் 'அரங்கு' என்றும் கூறப்படும்.

இந்நூல் 2 காண்டங்கள் கொண்டது.

தொடக்கத்தில் 'பாயிரம்' முதலாக 7 செய்யுட்கள்; முதற் காண்டத்தில், 'நூல் வரலாற்றியல், பிண்டதகரவித்தையியல், அண்டதகர வித்தையியல்' என 3 இயல்கள்; 40 பாடல்கள்; 2ஆம் காண்டத்தில், 'ஐயமறுத்தருளியல், தோத்திரவியல், முடிபியல்' என 3 இயல்கள்; 70 பாடல்கள் உள்ளன.

இந்நூலுக்குச் 'சதானந்த சாகரம்' என்றதோர் உரை விளக்கம் உள்ளது. வேத, உபநிடத சுலோகங்களும் பிறவும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

*"பூவலஞ் செய்யினும் பூவுத கங்கொண்*
*டாவலொ டர்ச்சனை செய்யினு மசபா*
*மாவல மந்திர மோதினு மன்றார்*
*தேவனை யினிதெண் ணாமை யசிவமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## தசாங்க வகுப்பு

*வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்*

தசம் + அங்கம் = தசாங்கம். தசம் – பத்து; அங்கம்–உறுப்பு. திருச்செந்தூர் முருகப்பெருமானின் 10 அங்கங்களைத் தனித்தனியே வகுத்துக் கூறுவது.

அங்கங்கள் பத்தாவன:– நாடு, நகர், மலை, ஆறு, மாலை, குதிரை, யானை, ஆணை, கொடி, முரசு என்பன.

'வகுப்பு' என்பது, எடுத்துக் கொண்ட பெயருக்குஏற்பப் பல சிறப்புக்களைத் துலக்கிச் சந்தம் அமையப் பாடுவது. 'கலம்பகம்' என்ற நூலில், 'புயவகுப்பு' என்ற உறுப்பில் இத்தகைய பகுதிகளை அமைத்துப்பாடும் மரபு உண்டு.

இந்நூலில், 'காப்பு'ச் செய்யுளும், இறுதியில் 'நூற்பயனு'ம் ஆகிய 2 வெண்பாக்கள் தவிர 10 சந்தப்பாக்கள் உள்ளன.

*"பால்நிற முறுதிரு நீறணி பசுபதி*
*பாசம கலவொரு வாய்மைசொ லியதே*
*பாரதி நிகர்பல நாவல ரதுபகை*
*பாறிட ஒருவித ஆடல்செய் ததுவே..!"*

என்பது, 'தானன தனதன தானன தனதன, தானன தனதன தானன தணனா' எனும் சந்தத்தில் அமைந்தது. இவ்வாறே பிறபாடல்களும் உள்ளன.

## *தஞ்சைப் பெருவுடையார் உலா*

*கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.*

'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலிக்கிய வகை 96ல்1.

தலைவன் வீதியிடைப் பவனிவரும் சிறப்பைப் பற்றிக் கூறுவதால் 'உலா' எனும் பெயர் பெற்றது. அவ்வாறு உலா வருங்கால் 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' வரையிலான 7 பருவமகளிரும், அத்தலைவனைக் கண்டு விரும்பி மயக்கம் கொண்டனர் என்னும் பொருளமைய, அவனுடைய பல வகையான மேம்பாடுகளும் புலப்படக் 'கலிவெண்பா' யாப்பில் பாடப்படுவது, இவ் ஏழு பருவமகளிரும், 'பொதுமகளிர்' ஆவர். 'உலா' வை 'உலாப்புறம்' என்றும் கூறுவர்.

'தஞ்சைப் பெருவுடையார் உலா' என்னும் இந்நூல், தஞ்சையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள 'பிரகதீசுவரர்' எனப்படும் 'பெருவுடையார்' மீது பாடப்பட்டது.

அம்பாளின் திருப்பெயர், 'பெரிய நாயகி' என்பது.

இந்நூலின்கண், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 31 கண்ணிகள் உள்ளன. நூலிறுதியில் 'சிறப்புப் பாயிரச்' செய்யுள் 1 உள்ளது.

இவ் 'உலா' நூலில், சிவபெருமான் பெருமை; அவர் திருவுலாப் போதுங்கால், அவரைத் தொடர்ந்து வந்த அடியார்கள்; 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாகவுள்ள மகளிர் வருணனை, இறுதியில் அனைவருக்கும் காட்சி தந்து, பெருவுடையார், திருக்கோயில் சென்றடைந்தார் முதலான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

பிற உலாக்களைவிட, இவ்வுலா நூலில், சில புதிய அமைப்புக்கள்

காணப்படுகின்றன. பேரிளம் பெண், தேர்நிலைவரை சென்று திரும்பினாள், பெருவுடையார் மீண்டும் திருக்கோயில் எய்தினார், 'இஃது இன்னாருலா' என்று சுட்டிக் கூறுவது மாகியன குறிப்பிடத்தகும்.

## *தடங்கண் நாயகி பிள்ளைத் தமிழ்*

*சி.சு. கண்ணாயிரம்.*

'பிள்ளைத் தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. கடவுளையோ, அடியார்களையோ, வள்ளல்களையோ குழந்தையாகக் கருதிப் பத்துப் பருவங்களில் பருவம் 1க்குப் பத்துப்பாடல் வீதம் 100 பாடல்களால் பாடப்படுவது.

'தடங்கண் நாயகி பிள்ளைத்தமிழ்' என்பது, 'பெண்பாற் பிள்ளைத் தமிழா'கும்!

கோயம்புத்தூரின் ஒரு பகுதியாகிய உப்பார வீதியில் உள்ளது 'பேட்டைக்கோயில்'. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர்:– விஸ்வேஸ்வரர்; அம்பிகை: விசாலாட்சி. இப்பெயரையே 'தடங்கண் நாயகி' எனத் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூலில் சைவ சித்தாந்த சாத்திர அடியார்களைப் பற்றியும், இறைவனின் பல்வேறு அருட்டன்மைகள் பற்றியுமுள்ள பாடல்கள் உண்டு.

*"மந்திர வடிவ மாகி*
*மறைகளுள் உள்ள தாகி*
*மாலயர்க் கரிய தாகி*
*மழுவினன் மேல தாகி . . .*
*சுந்தர நீற்றைப் போற்றித்*
*தொழுந்தவம் தொடர்ந்து நோற்பரம்....!"*

என்பது திருநீற்றின் பெருமை கூறுவது. இவ்வாறே பிறவும் வரும்!

## *தணிகைப் புராணம்*

*கச்சியப்ப முனிவர்.*

புராணம்– பழைய வரலாறு.

'தணிகை' என்பது 'திருத்தணி' யைக் குறிக்கும்.

திருத்தணியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடப்பட்டது. இந்நூலில், சொல்வளம், சந்தம், செய்யுள்நடை, பொருட்சுவை ஆகிய பலவும் அமைந்துள்ளன.

'சீவகசிந்தாமணி' என்னும் காப்பிய நூலில் காணப்படும் சந்தமும் வனப்பும் இந்நூலில் யாண்டும் காணலாம்.

நூலின் தொடக்கத்தில் 'விநாயகர் காப்பு' முதலாகத் திருவிருத்தப்பாக்கள் 16 உள்ளன.

'திருநாட்டுப் படலம்' முதல் 'நாரதன் அருள்பெறு படலம்' வரை 19 படலங்கள்; 3161 செய்யுட்கள் உள்ளன.

*"பாடி னார்சிலர் பணிந்து தட்டமிட்*
*டாடி னார்சில ராட லோடுமுன்*
*ஓடி னார்சில ருருவ நோக்கியே*
*நீடி னார்சிலர் பலர்நெ ருக்கவே!"*

என்பனபோல் வரும் சந்தப்பாக்கள் பலவுள்ளன

## தண்டலையார் சதகம்

*படிக்காசுப் புலவர்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகைகள் 96ல் சதகமும் ஒன்று. 'தண்டலை' என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்டது. 'தண்டலை' என்ற ஊர் சோழ நாட்டில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ளது. இவ்வூரில் உள்ள இறைவனுக்கு 'நீள்நெறிநாதர்', 'நின்றறிநாதர்' என்ற பெயர்களும், அம்பிகைக்கு 'ஞானாம்பிகை' என்ற பெயரும் வழங்குகின்றன .

இக்காலத்தார் 'தண்டலைச்சேரி' என்கின்றனர். இந்நூலில், 'பிள்ளையார் வணக்கம்' கூறும் காப்புச் செய்யுள் 2ம், அவையடக்கச் செய்யுள் 1ம் ஆக 3 தவிர 100 செய்யுட்கள் உள்ளன.

ஒழுக்கத்தை வற்புறுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. திருக்குறட் கருத்துக்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

*"வரமளிக்கும் தண்டலையார் திருக்கோயி*
*லுட்புகுந்து வலமாய் வந்தே*
*ஒருவிளக்கா யினும் பசுவி னெய்யுடன்றா*
*மலைநூலி னொளிர வைத்தால்*
*கருவிளக்கும் பிறப்புமில்லை இறப்புமில்லை*
*கைலாசம் காணி யாகும்*
*திருவிளக்கிட் டார்தமையே தெய்வமளித்*
*திடும் வினையும் தீருந் தானே!"*

என்பன போன்றே நீதிநூற் கருத்துக்கள் உள்ளன.

## தனித் திருவலங்கல்

*இராமலிங்க அடிகளார்.*

அலங்கல் = மாலை. திரு–கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு அடைமொழியாக வந்துள்ளது. தனித்தனியாகப் பாடப்பட்ட சொல்மாலை ஆதலின் 'தனித்திருவலங்கல்' எனப்பட்டது.

இறைவனின் திருவருளை வியந்து பாடியது. இதன்கண், 'சாலையப்பனை

வேண்டல், மாயை நீக்கம், சிதம்பரேசன் அருள், போற்றிச் சந்த விருத்தம்' எனப் பல்வேறு உட்தலைப்புக்கள் உள்ளன. 'அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை' முதலான பல்வேறு யாப்பு வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இதில் 161 பாடல்கள் உள்ளன.

*"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்*
*தம்உயிர்போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர்அவர் உளந்தான் சுத்த*
*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம்என நான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்*
*சிந்தைமிக விழைந்த தாலோ!"*

என்பது இப்பகுதியில் வரும் பாடல்! இவ்வாறே பிறவும் வந்துள்ளன.

பார்க்க:–

திருஅருட்பா

## தனித்திரு விருத்தம்

*இராமலிங்க அடிகளார்*

'விருத்தம்' என்பது, யாப்பு வகைகளில் ஒன்று.

தனித்தனியாகப் பாடப்பட்ட விருத்தங்களின் தொகுப்பு என்று பொருள். எனினும் வேறு யாப்பு வடிவங்களும் உள்ளன.

இதன்கண், 'கட்டளைக் கலித்துறை, கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலித்துறை, தரவு கொச்சகக் கலிப்பா, கலி விருத்தம், வெண்துறை, நேரிசை வெண்பா' எனப் பலவும் வந்துள்ளன. இவை 'திருவருட்பா' 4ஆம் திருமுறையில் வந்துள்ளன.

இந்நூலில் மொத்தம் 57 பாடல்கள் உள்ளன. இறைவனின் பல்வேறு இயல்புகள் சொல்லப்பட்டுள்ளன. இறைவன்பால் முறையிடுவதாகவுள்ள பாடல்களும் உள்ளன.

*"செய்வகை அறியேன் மன்றுண்மா மணிநின்*
*திருவுளக் குறிப்பையுந் தெரியேன்!*
*உய்வகை அறியேன்! உணர்விலேன் அந்தோ!*
*உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்*
*மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்*

*வினையனேன் என்செய் விரைகேன்*
*பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுகேன்*
*புலையனேன் புகல்அறி யேனே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:-

திருஅருட்பா

## *தாயுமான அடிகள் திருப்பாடல்கள்*

*தாயுமான அடிகள்*

இவர் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை: 1452. இந்த எண்ணிக்கையைக் கூட்டினால் 12 வரும். எனவே பன்னிரு திருமறைக் கருத்துக்கள் பல இப்பாடல்களில் அமைந்துள்ளன என்பது கருத்து.

இதில், 'திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்' முதல் 'வண்ணம்' ஈறாக 56 பெருந்தலைப்புக்களில் பாடல்கள் அமைந்துள்ளன.

இந்நூலின் பெரும்பாலான பாடங்கள், திருக்குறளைப் போல், எளிதாக, யாவரும் படித்துப் பயன் கொள்ளுமாறு அமைந்துள்ளன.

இப்பாடல்களில் பல்வேறு யாப்பு வடிவங்கள் வந்துள்ளன. அவை:- ஆசிரிய விருத்தம்; குறள் வெண்செந்துறை; வெண்பா; கட்டளைக் கலிப்பா; கொச்சகக் கலிப்பா; வரிப்பாட்டுக்கள் (ஆனந்தக் களிப்பு); வண்ணம் (மெட்டு) முதலியன.

இப்பாடல்களில், சைவசித்தாந்தக் கருத்துக்களான, 'சமயம், கடவுள், உயிரியல்பு, மனவியல்பு, வினையியல்பு, தத்துவவியல்பு, வழிபாட்டியல்பு, அத்துவித இயல்பு' எனப்பலவும் அமைந்துள்ளன.

*"பண்ணேன் உனக்கான பூசைஒரு வடிவிலே*
*பாவித் திறைஞ்ச ஆங்கே*
*பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்திஅப்*
*பனிமலர் எடுக்க மனமும்*
*நண்ணேன் அலாமல்இரு கைதான் குவித்துஎனில்*
*நாணும்என் னுளம்நிற்றி, நீ*
*நான்கும்பி டும்போ தரைக்கும்பி டாதலால்,*
*நான்பூசை செய்யல் முறையோ?...."*

என்பனபோன்ற பாடல்கள்உண்டு!

## *தாயுமானேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி*

*நாகமுத்துக் கவிஞன்*

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம்—முடிவு; ஆதி—முதல்.ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப் பாடப்படுவது. அவ்வாறே நூலின்

கடைசிச் சீரோ, அசையோ தொடக்கச் செய்யுளின் முதலாக வருமாறும் பாடப் பட்டால் அதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர்.

இந்நூலில், கடைசிப் பாடல் 'சீர்களே' என முடிகிறது; நூலின் தொடக்கமும், 'சீர்வளர்' என அமைந்துள்ளது.

தமிழில் உள்ள சிற்றிலக்கியவகை 96ல் 1. பதிற்றுப்பத்து–நூறு. அந்தாதி நூலில் 100 பாடல்கள் உண்டு. 'தாயுமானேஸ்வரர்', திருச்சிராப்பள்ளி மலைக் கோயில் இறைவனின் திருப்பெயர். அவர்மீது பாடப்பட்ட அந்தாதி நூல் இது. அம்பாளின் திருப்பெயர் 'மட்டுவார்குழலி' என்பது. நூலின் தொடக்கத்தில் 'விநாயகர் துதி' முதலான 7 பாடல்கள் உள்ளன.

இந்நூலில் தாயுமானஈசுவரரின் சிறப்புக்கள் சொல்லப்பட்டுள்ளன. சைவசித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

*"மலைவுசெயு மும்மல நோயினான் மலிவாய்*
*உலைவுபடு நெஞ்ச னுனையடைவ தெக்காலம்?*
*நிலைவளருஞ் சிந்தா மணியே! நிராமயனே?*
*கலைவளருஞ் சென்னி வரைக்கண் வாழு முன்னோனே!'*

என்பது அவற்றில் ஒன்று!

## தாலாட்டு

*குமு.பழ. பழனியப்பச் செட்டியார்*

'காப்பு'ச் செய்யுள் தவிர 103 கண்ணிகள் கொண்டது. முருகன் மீது பாடப்பட்டது.

*"சாலோக சாமீப சாரூப சாயுச்ச*
*மேலாம் பதங்களுக்கு வித்தகனாய் நிற்பானோ"*

முதலான சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கூறுவது.

## திருஅருட்பா

*இராமலிங்க அடிகளார்.*

திரு+அருள்+பா=திருவருட்பா.

'திருவருளால் பாடிய பாட்டு' என்றும்; 'திருவருளைப் பெறப் பாடிய பாட்டு' என்றும் பொருள் கொள்ளப்படும்.

திரு–கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு, நூலுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

இஃது 6 திருமுறைகளைக் கொண்டது. மொத்தப்பாடல்கள்: 5818.

இந்நூலில், பக்தி, சமரசம், ஆன்ம நேய ஒருமைப்பாடு, சீவகாருணிய ஒழுக்கம், எவ்வுயிர்க்கும் இரங்கும் கருணை, சமய நல்லிணக்கம் எனப் பலவும்

இயம்பப்பட்டுள்ளன.

உவமையணி உருவக அணி, சிலேடையணி எனப்பல அணிநயம் கொண்ட பாடல்கள் பலப்பல. தெய்வமணம் கமழும் இவ் அருட்பாவில், தொட்ட இடமெல்லாம் இறைவனைப் பற்றிய உணர்வே மேலோங்கிநிற்கும்.

இசையுடன் பாடக்கூடிய பாடல்கள் பல உண்டு.

*"வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே*
*வந்தாற் பெறலாம் நல்ல வரமே! (வருவார்)*
*திருவார் பொன்னம் பலத்தே செழிக்கும்குஞ் சிதபாதர்*
*சிவசிதம் பரபோதர் தெய்வச்ச பாநாதர்! (வருவார்)*
*சிந்தைக ளிக்கக் கண்டு சிவானந்த மதுவுண்டு*
*தெளிந்தோரெல் லாருந்தொண்டு செய்யப்ப வுரிகொண்டு*
*இந்த வெளியில்நட மிடத்துணிந் தீரேயங்கே!*
*இதைவிடப் பெருவெளி இருக்குதென்றா லிங்கே! (வருவார்)........."*

என்பன போன்ற பாடல்கள் பண்ணோடு பாடத்தக்கன.

பார்க்க

1. அருட்பிரகாச மாலை
2. அருட்பெருஞ்சோதி அகவல்
3. அருள்திறத்து அலைச்சல்
4. அருள்மொழி மாலை
5. அருள் விளக்க மாலை
6. அன்புமாலை
7. ஆணிப்பொன் அம்பலக் காட்சி
8. இங்கித மாலை
9. இரங்கல் மாலை
10. எழுத்தறியும் பெருமான் மாலை
11. சற்குருமணிமாலை
12. சிகாமணிமாலை
13. சிவநேச வெண்பா
14. சீவசாட்சி மாலை
15. சுத்தசிவநிலை
16. தனித்திருவலங்கல்
17. தனித்திருவிருத்தம்
18. திருவடிப்புகழ்ச்சி
19. திருவடிப் பெருமை
20. திருவருள் முறையீடு
21. தெய்வமணிமாலை

22. நடராசபதிமாலை
23. நால்வர் அருள்மாலை
24. நெஞ்சுறுத்த திருநேரிசை
25. பிரார்த்தனை மாலை
26. பிள்ளைச் சிறுவிண்ணப்பம்
27. பிள்ளைப் பெருவிண்ணப்பம்
28. புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்
29. மகாதேவ மாலை
30. மரணமிலாப் பெருவாழ்வு
31. வடிவுடைமாணிக்க மாலை
32. விண்ணப்பக் கலிவெண்பா

## திருஇரட்டை மணிமாலை

*காரைக்கால் அம்மையார் (அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்)*

சைவத் திருமுறை 12ல் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது. 'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96 ல்1. அந்தாதித் தொடையில் அமைவது. கட்டளைக் கலித்துறை, வெண்பா எனும் ஒரவகை யாப்பில் பாடப்பட்டதால் 'இரட்டைமணி மாலை' எனப்பட்டது. மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை போல. இருவகை யாப்பினால் ஆன மாலை போன்ற நூல் என்பதாம். 'திரு' என்ற அடைமொழியுடன் அமைந்துள்ளது. "துன்பம் வந்தபோதும் இறைவனைப் போற்றுதல் வேண்டும்; அவனன்றி எதுவும் நடவாது என்று எண்ணி வழிபடும் அடியார்களை மீண்டும் பிறவாது காத்தருள்வன்" என்பன போன்ற கருத்துக்கள் இப்பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன.

*"கீழா யினதுன்ப வெள்ளக்*
*கடல்தள்ளி உள்ளுறப்போய்*
*வீழா திருந்தின்பம் வேண்டும்என்*
*பீர்!விர வார்புரங்கள்*
*பாழா யிடக்கண்ட கண்டன்,எண்*
*தோளன்பைம் பொற்கழலே*
*தாழா(து) இறைஞ்சிப் பணிந்து,பன்*
*னாளும் தலைநின்மினே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## திருஇலஞ்சி முருகன் உலா

*மேலகரம் பண்டாரக் கவிராயர்.*

தமிழில் உள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. பாட்டுடைத் தலைவன், வீதியில் பவனி வருகையில் 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாகிய ஏழு

பருவமகளிர்—அதாவது பொதுமகளிர், அவனைக் கண்டு மயங்கியதாகப் புலவரால் புனைந்து, கலிவெண்பா யாப்பில் பாடப்படுவது. இதற்கு 'உலாப் புறம்' என்ற வேறுபெயரும் உண்டு.

'இலஞ்சி' என்னும் ஊர், திருநெல்வேலியைச் சார்ந்த திருக்குற்றாலத்துக்கு வடக்கே உள்ளது. இவ்வூரில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூலில், காப்பு, வாழ்த்துச் செய்யுட்கள் 3 தவிர 460 கண்ணிகள் உள்ளன.

*"நிமிர்ந்து குனிந்து நெருங்கி விரைந்து*
*குமிந்து மயர்ந்து குலைந்தே—அமிழ்ந்தே*
*எழுந்து மிருந்து மிடங்கை பரிந்து*
*செழுங்கை வலங்கை திரிந்து......"*

என்பன போன்றே நயமான பகுதிகள் உள்ளன.

## திருஈங்கோய்மலை எழுபது

*நக்கீரதேவ நாயனார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11 ஆம் திருமுறையைச் சார்ந்தது.

திருஈங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட 70 பாடல்களைக் கொண்டது.

இந்நூலில் இறைவனின் அருட்டன்மையும், கொடிய விலங்குகளும் வழிபாடு செய்யும் சிறப்பும் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

*"கோங்கின் அரும்பழித்த கொங்கைக் குறமகளிர்*
*வேங்கைமணி நீழல் விளையாடி—வேங்கை*
*வரவதனைக் கண்டிரியும் ஈங்கோயே தீங்கு*
*வரவதனைக் காப்பான் மலை!"*

என்பது இவற்றில் ஒன்று!

## திருஎழுகூற்றிருக்கை

*நக்கீரதேவ நாயனார்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'எழுகூற்றிருக்கை' என்பது மிறைக்கவி வகைகளில் ஒன்று. 'ஒன்று' என்ற எண்ணை, முதலாகக் கொண்டு தொடங்கிப் படிப்படியே ஒவ்வோர் எண்ணாகக் கூட்டியும்; அவ்வாறே ஒன்று ஒன்றாக ஒன்று முடியக் குறைத்தும் இவ்வாறு ஒன்றுமுதல் 'ஏழ்' ஈறாக எண்ணும் நிலையில் அமைந்த செய்யுள் 'எழுகூற்றிருக்கை' எனப்படும்.

இத்தகைய பாடலை முதன்முதல் பாடியவர் திருஞானசம்பந்தரேயாவர்!

இந்நூலில் 55 அடி கொண்ட ஓர் ஆசிரியப்பாவும், ஒரு நேரிசை வெண்பாவுமாக 2 பாடல்கள் உள்ளன. இவற்றில், உமையொரு பாகனாகிய சிவபெருமானின் அருளுருவத் தோற்றம், உயிர்களின் பொருட்டு அவன் செய்த அருட்செயல்கள் ஆகியன சொல்லப்பட்டுள்ளன.

"........
*ஐம்பெருங் குன்றந் (து) அழலாய்த் தோன்றினை!*
*ஆறுநின் சடையது! ஐந்துநின் நிலையது!*
*நான்குநின் வாய்மொழி! மூன்றுநின் கண்ணே!*
*இரண்டுநின் குழையே! ஒன்றுநின் ஏறே!....*"

என்பன போன்ற கருத்துக்கள் கொண்டது இந்நூல்!

## *திருஏகம்ப மாலை*

*பட்டினத்தார். (பிற்காலத்தவர்)*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுக்கப்பட்டுப் பாடப்படுவது. 'ஏகம்பன்' என்பது, காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளிய இறைவனின் பெயர். அவர்மீது பாடப்பட்டது.

இந்நூலில் 43 பாடல்கள் உள்ளன. பாடல்தோறும் 'கச்சிஏகம்பனே!' என முடிவது.

இதன்கண் உலகியல் கூறி நீதியை வற்புறுத்தும் பகுதிகள் உள்ளன.

"*ஓயாமல் பொய் சொல்வர்! நல்லோரை நிந்திப்பர்! உற்றுப்பெற்ற*
*தாயாரை வைவர்; சதிஆயிரஞ் செய்வர்; சாத்திரங்கள்*
*ஆயார்; பிறர்க்குபகாரம் செய்யார்; தமை ஆ அண்டினார்க்கொன்*
*றீயார் இருந்தென்ன போயென்னகாண் கச்சிஏகம்பனே!*"

என்பது அவற்றில் ஒன்று!

## *திருஏகம்பமுடையார் திருவந்தாதி*

*பட்டினத்தார்.*

சைத்திருமுறை பன்னிரண்டில் 11 ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96 ல் 1.

அந்தம்+ஆதி=அந்தாதி. அந்தம்–முடிவு; ஆதி–முதல். ஒருசெய்யுளின் கடைசி, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக அமையப்பாடுவது. அவ்வாறே, நூலின் இறுதிச் செய்யுளின் ஈற்றச் சீரோ, அசையோ, தொடக்கச் செய்யுளின் முதலாவதாக வரும்படி பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

இந்நூலின் இறுதி 'மெய்த் தொண்டரே' என முடிகிறது; நூலின் தொடக்கம் 'மெய்த் தொண்டர்' என அமைந்துள்ளது.

காஞ்சி மாநகரில் 'திருஏகம்பம்' என்ற திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஏகாம்பநாதர் மீது பாடப்பட்டது. இந்நூலில், "திருவேகம்பப் பெருமானே! ஞானநெறி இதுவென உணர்கிலேன்; சரியை, கிரியை முதலாயின மேற்கொண்டேனில்லை; உன்னைப் பொய்யாகவே வணங்கினேன்!" என்று பட்டினத்தார், தம்மைத் தாழ்த்திக் கூறிவிட்டு ஏகாம்பர நாதரின் பல்வேறு சிறப்புகளை வியந்து பாடுகின்றார்.

இடையிடையே, 'தோழிகூற்று, தலைவன் கூற்று, தலைவி கூற்று, 'கண்டோர் கூற்று' என்பனவும் இடம்பெற்றுள்ளன.

*"தரித்தேன் மனத்துன் திகழ்தரு*
*நாமம் தடம் பொழில்வாய்*
*வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப*
*னே! என்றன் வல்வினையை*
*அரித்தேன்! உனைப்பணி யாதவர்*
*ஏழைமை காண்டவரைச்*
*சிரித்தேன் உனக்கடி யாரடி*
*பூணத் தெளிந்தனனே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

*கல்லாடதேவ நாயனார்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

மறம்–வீரம், கண்ணப்ப தேவர்–கண்ணப்ப நாயனார். 63 நாயன்மார்களில் கண்ணப்ப நாயனாரும் ஒருவர். அவர், தம் கண்ணையிடந்து, சிவபெருமானுக்கு அப்பினார். அது, மாபெரும் வீரச் செயல். அத்தகைய மாவீரம், 'திருமறம்' எனப்பட்டது.

இந்நூல், ஆசிரியப்பாவில் ஆனது; 38 அடிகள் கொண்டது. கடைச்சங்கப் புலவராகிய 'கல்லாடரு'ம்; 'கல்லாடம்' என்ற நூலினை இயற்றிய 'கல்லாடரு'ம், காலத்தால் முற்பட்டவர்கள்.

'கல்லாடம்' என்பது ஒரு சிவப்பதி. ஆங்குஎழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குக் 'கல்லாடர்' என்ற பெயர். இறைவனின் திருப்பெயர் தாங்கிய புலவர் 'கல்லாடர்'.

இந்நூலில், கண்ணப்ப நாயனாரின் வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

"....."

*முக்கண் அப்பனுக்(கு) ஒருகணில் உதிரம்*
*தக்கி ணத்திடை இழிதர, அக்கணம்*

*அழுது விழுந்து தொழுதெழுந்(து) அரற்றிப்*
*புன்மருந் தாற்றப் போகா தென்று*
*தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப . . .”*

என்பது ஒருபகுதி. இவ்வாறே, கண்ணப்பரின் செயல் இனிது எடுத்து மொழியப்பட்டுள்ளது.

## திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

*நக்கீர தேவ நாயனார்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

மறம் – வீரம். கண்ணப்ப தேவர் – கண்ணப்ப நாயனார். 63 நாயன்மார்களின் கண்ணப்ப நாயனாரும் ஒருவர். அவர், தம் கண்ணையிடந்து சிவபெருமானுக்கு அப்பினார். அது, மாபெரும் வீரச் செயல். அத்தகைய மாவீரத்தைச் செய்தமையால் ‘திருமறம்’ எனப்பட்டது.

இந்நூல் 158 அடிகள் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. நூலின் இறுதியில் 1 வெண்பா உள்ளது.

கண்ணப்ப நாயனாரின் வரலாறு, இந்நூலில் இடம்பெற்றுள்ளது. சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் வரும் ‘கண்ணப்ப நாயனார் புராணத்’திற்கு இந்நூலும் ஓர் ஆதாரம் என்பர்.

*“. . . . என்*
*கண்தனை இடந்து கடவுள்தன் கண்ணுறு*
*புண்ணில் அப்பியும் காண்பன் என்றொரு கண்ணிடைக்*
*கணையது மடுத்துக் கையில் வாங்கி*
*அணைதர அப்பினன் அப்பலுங் குருதி*
*நிற்பதொத் (து) உருப்பெறக் கண்டுநெஞ்(சு) உகந்து*
*மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்*
*‘நில்லு கண்ணப்ப! நில்லுகண் ணப்ப,என்*
*அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப! என்(று)*
*இன்னுரை . . . .”*

என்பன போன்ற பக்திச்சுவை ததும்பும் பகுதிகளைக் காணலாம்.

## திருக்கந்தர் திருப்பல்லாண்டு

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

இறைவனுக்குப் ‘பல்லாண்டு’ பாடுவது அடியார்கள் வழக்கம். சைவத்திலும், வைணவத்திலும் இத்தகைய ‘பல்லாண்டு’ கூறும் பதிகங்கள் உள்ளன.

திருக்கந்தர் – திருமுருகன்.

திருமுருகன் மீது பாடப்பட்ட பல்லாண்டு.

இந்நூலில் 10 பாடல்கள் உள்ளன. 'பஞ்சமம்' என்ற பண்ணில் பாடத் தக்கது.

இதில், முருகன் பெருமையும் அழகும் அருளும் இனிது மொழியப்பட்டுள்ளன.

*"நீர்வள மார்பரங் குன்றிலு நீடெழி லிமிர்திருச் செந்திலிலும்*
*சீர்வள மார்திரு வேரகந்தன்னிலும் தீதறு பழநியிலும்*
*ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு மிருந்தபடி நினைவார்க்குப்*
*பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருக்கயிலாய ஞான உலா

*சேரமான் பெருமாள் நாயனார். (அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்)*

பன்னிரு திருமுறைகளில் 11 ஆவது திருமுறையைச் சார்ந்தது. 'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

சிவபெருமான் திருவுலாப் புறப்பட்டுத் தெருவழியாகப் பவனி வந்த போது, 'பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்' ஈறாக ஏழு பருவ மகளிரும் அவரைக் கண்டு காதல் கொண்டதாகப் பாடப்பட்டது. 'உலா' நூலுக்கு 'உலாப்புறம்' என்ற வேறுபெயரும் உண்டு.

இறைவனைத் தலைவனாகவும் அவனருளை விரும்பிய மன்னுயிர்களை அத் தலைவன்பால் காதல் கொண்டு மயங்கிய பெண்களாகவும் வைத்துப் பாடப்பட்ட நூல் இது! இவ் 'உலா' வே செந்தமிழில் முதன் முதலில் தோன்றிய உலாநூல் ஆகும்!

மேலும் திருக்கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்ட இந்நூல், ஆங்குள்ள மாசாத்தனார் வாயிலாகத் திருப்பிடவூர்க்கு வந்து, தமிழ்நாட்டில் உலவுவதாயிற்று என்பர் அறிஞர்.

இந்நூலில் 197 கண்ணிகளும், நூலினிறுதியில் காப்புச் செய்யுள் 1ம் உள்ளன.

சிவபெருமானின் பெருமைகளும், அருட்செயல்களும் அழகுற இந்நூலில் இயம்பப்பட்டுள்ளன.

*"எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்*
*அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான். . . !"*

என்பன போன்றவை இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

## திருக்கருவைக் கலித்துறை அந்தாதி

*அதிவீரராம பாண்டியன்*

'கருவை' என்பது சங்கரன் கோயிலுக்கருகே உள்ள கரிவலம் வந்த நல்லூர். இவ்வூரில் எழுந்தருளியுள்ள பால்வண்ணநாதர் மீது பாடப்பட்டது. 96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. அந்தாதித் தொடையில் அமைந்தது. காப்புச்

செய்யுள், பிள்ளையார் வணக்கமாக அமைந்துள்ளது. 100 பாடல்கள் கொண்டது.

*"வாழ்த்திட நாவுண்டு பாவிக்க நீயுண்டு மண்ணிலுறத்*
*தாழ்த்திடச் சென்னியும் உண்டு கண்டாய் . . .!"*

எனத் தம் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமைந்த பாடல். இப்படிப் பல உள!

## திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

*அதிவீரராம பாண்டியன்*

'கருவை' என்பது சங்கரன் கோயிலுக்கு அருகே உள்ள கரிவலம் வந்த நல்லூர் ஆகும். அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், பால்வண்ணநாதர் மீது பாடப்பட்டது.

96வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது. காப்புச் செய்யுள் தவிர 100 செய்யுட்கள் கொண்டது. நூலின் தொடக்கம் 'சீரார் கமலச் சேவடி' என்று தொடங்கி, இறுதிச் செய்யுள் 'சீர்கள் போற்றியே" என முடிவது.

*"கிடைத்தபொருள் கரத்திருக்கக்*
*கிடைத்திலவென் றயர்வார்போல்*
*படைத்தநின தருள்பெற்றும்*
*பெற்றிலர்போற் பரிவுற்றேன்"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா

*சபாபதி முதலியார்*

'சிலேடை' என்பது ஒரு சொல்லுக்கு இருபொருள் வரும்படிப் பாடப்படுவது.

'திருக்கழுக்குன்றம்', தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. சைவ சமய குரவர் நால்வராலும் பாடப்பட்ட சிறப்பினது.

இத்தலத்து இறைவன் திருப்பெயர்: வேதகிரீசர்; அம்பாளின் பெயர் : பெண்ணின் நல்லாள்.

திருக்கழுக்குன்றத்து இறைவன் மீது பாடப்பட்டது. இதற்குக் 'திருக்கழுக்குன்றத்து வெண்பாமாலை, கழுக்குன்ற மாலை' என்ற வேறுபெயர்களும் உண்டு.

இந்நூலின்கண், 'காப்பு'ச் செய்யுள் – 2; வாழ்த்து –1. ஆக 3ம், தொடக்கத்தில் உள்ளன. சிலேடையின்றி 50ம், பின் சிலேடையாக 50ம் ஆக 100 செய்யுட்கள் உள்ளன.

இந்நூலில், இத் தலச்சிறப்பும், இறைவன் அருட்செயல்களும், நாயன்மார் வரலாறும் ஆகிய பலவும் இடம்பெற்றுள்ளன.

*"அண்டர்தொழுங் காழியர்கோன் அப்பர்திரு வன்றொண்டர்*
*கண்டுதமிழ் பாடுங் கழுக்குன்றே – தொண்டருக்குப்*
*பஞ்ச முகத்தான் படிக்கா சருளினான்*
*பஞ்ச முகத்தான் பதி!"*

என்பது இவற்றில் ஒன்று!

## திருக்கழுக்குன்றம் வேதகிரீசுரர் பதிகம்

*சிதம்பர சுவாமிகள்.*

திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் வேதகிரீசுரரைப் பற்றிப் பாடப்பட்ட 10 பாடல்கள் கொண்டது.

*"மறையா கமமுதல் எவையுந் தருமமாதிய ஓதியிடு*
*மற்றவை தம்முள் அறமும் பொருளும் மலிதுன் பத்தனவா . . . !"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## திருக்கழுமல மும்மணிக்கோவை

*பட்டினத்தார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

'இணைக்குறள் ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை' என்னும் மூவகை யாப்பில், கோவையாகத் தொடுக்கப்பட்டமையால், 'மும்மணிக் கோவை' எனப்பட்டது.

'கழுமலம்' என்பது, திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த சீகாழிக்குரிய 12 பெயர்களில் ஒன்று.

இந்நூலில் யாப்பு வகைக்கு 10 பாடல் வீதம் 3 வகைக்கு 30 பாடல்கள் இருத்தல்வேண்டும். ஆனால் கிடைத்தவை 12 மட்டுமே எஞ்சிய 18 பாடல்களை வேறு எவரோ பாடிச் சேர்த்து விட்டதாகக் கூறுவர்.

இப்பன்னிரண்டு பாடல்களில், சீகாழி இறைவன் (பிரளயவிடங்கன்); திருஞானசம்பந்தருக்கு அருள் செய்த திறம்; இறைவனின் தன்மைகள்; பிறவியின் இயல்பு கூறிப் பெம்மானை வேண்டுதல் முதலாயின சொல்லப்படுகின்றன.

*"கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்*
*காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்*
*தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை*
*அரிதின் இகழ்ந்து போக்கி . . . .*
*எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே!'*

என்பது ஒரு பகுதி. இவ்வாறே பிறவும்

## திருக்காளத்தி நாதருலா

*சேறைக் கவிராச பிள்ளை*

'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

தலைவன் ஒருவன் வீதியில் பவனி வர, அவனைப் 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாக ஏழு பருவ மகளிரும் (பொது மகளிர்) காதல் கொண்டனர் என்று. 'கலிவெண்பா' என்ற யாப்பில் பாடப்படுவது.

'திருக்காளத்தி' என்பது, இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ளது. கண்ணப்பநாயனார் அருள்பெற்ற இடம்.

'திருக்காளத்தி' யில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட உலா நூல் இது.

நூலின் தொடக்கத்தில் 'காப்புச் செய்யுள்'; இறுதியில் 2 பாடல்கள் தவிர 578 கண்ணிகள் உள்ளன.

இந்நூலில், திருக்காளத்திநாதரின் பெருங்கருணைத்திறம், தலப்பெருமை, அடியார் பெருமை, உவமை, சிலேடை முதலாய அணிகள் முதலாயின சொல்லப்பட்டுள்ளன.

"......
*அன்னைதனை யீன்றமலை யம்மானை – முன்னை நாட்*
*கொங்கையொரு மூன்றுடைய கொம்பையரு ளம்மானை*
*யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக் – கங்கையெனு*
*மம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ*
*ளம்மானை.....!"*

எனவரும் சொல்நயமுள்ள பகுதிகள் பலவுள!

## திருக்கீழ் வேளூர் உலா

*அந்தகக் கவி வீரராகவ முதலியார்.*

'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

பாட்டுடைத் தலைவன் பவனி வரும் போது, 'பேதை' முதல் 'பேரிளம்பெண்' ஈறாக ஏழு பருவ மகளிர் (பொது மகளிர்) அவனைக் கண்டு காதல் கொள்வதாகப் பாடுவது மரபு. கலி வெண்பாவில் பாடப்படும்.

இதனை (1) முதல் நிலை, (2) பின்னெழுநிலை என இரண்டாகப் பகுத்துப் பாடுவர். 'அரசன், கடவுள், அறிவுடையோர்' என மூவரையும் உலாத் தலைவர்களாகப் பாடப்படுவர் எனப் 'பன்னிரு பாட்டியல்' கூறும். இவ்விலக்கியத்தில், மகளிரின் இயற்பெயர் அமையாது, அவர்தம் காமமே மிகைபடக் கூறப்படுவதால், 'பெண்பாற் கைக்கிளை' எனப்படும்.

'திருக்கீழ் வேளூர்' என்பது, காவிரித் தென்கரைத் தலங்களில் 84 ஆவதாக வைத்து எண்ணப்படுவது. இவ்வூர், திருவாரூருக்குக் கிழக்கில் உள்ளது.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள 'கேடிலியப்பர்' என்னும் திருப்பெயர் தாங்கிய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. இறைவியின் திருப்பெயர் ; வனமுலை நாயகி. வடமொழியில் 'சுந்தர குசாம்பிகை' என்பர்.

இந்நூலில் இறைவன், இறைவியின் பல்வேறு திருப்பெயர்கள், இசைக்கருவிகள், அணிகலன்கள், பவனியில் உடன்சேர்ந்தோர், சிவனடியார்கள், பிற சிவத்தலங்கள், வழிபட்டோர், தசாங்கம் எனப் பலவும் சொல்லப்பட்டுள்ளன.

"....
*சோணாட்டிற் காடாய்த் தொழுந்தொண்டை நாடென்னும்*
*வாணாட்டின் வெற்பாய் வருபாட்டு – மாணுருப்போய்*
*முந்து பனைபழுப்ப முந்நீரிற் கல்மிதப்பச்*
*சந்துசெலச் சொன்னோர் தமிழ்ப் பாட்டும் – வந்தொருபெண்*
*ஊமைத் திருவா யுரைப்பவுரைத் தோன்பாட்டும்*
*தாமத் திருச்செவியிற் சாத்தியே. . . !"*

என்பன போல், தேவார திருவாசகம் அருளிய நால்வரைப் பற்றிய குறிப்புக்கள் வரும் பகுதிகள் உண்டு!

## திருக்குற்றாலக் குறவஞ்சி

*திரிகூடராசப்பக் கவிராயர்.*

'குறவஞ்சி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

குறத்தி ஒருத்தி குறி கூறுவதாகப் பாடப்படுவது 'குறவஞ்சி' அல்லது 'குறம்' எனப்படும். ஆனால் இவ்விரண்டிற்கும் வேறுபாடு உண்டு. 'குறம்' என்பதில் குறத்தியின் கூற்று மட்டும் இருக்கும்; 'குறவஞ்சி'யில், வேறுபலர் கூற்றுகளும் இருக்கும்.

திருக்குற்றாலம், நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கு அருகில் உள்ள ஓர் ஊர். அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருக்குற்றாலநாதர் மீது பாடப்பட்ட நூல் இது.

'குறவஞ்சி' என்ற சொல்லுக்குக் 'குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக் கொடி போன்ற இடையையுடைய பெண்' என்று பொருள். அஃது ஆகுபெயராய் அவளால் கூறப்படும் குறிக்கு ஆயிற்று.

தலைவன் ஒருவன் உலா வருவான். அவனைக் கண்ட 'பேதை' முதலான எழுவகைப் பருவப் பெண்டிர் காதல் கொள்வர். அவருள், 'தலைவி' எனப்படுப்வள், காதலால் துன்புறுவாள். அப்போது குறவஞ்சி, ஆங்கு வந்து, அத்தலைவியின் இடம் கை பார்த்துக் குறி கூறுவாள். குறி கூறும் பகுதியே மிக்க சுவை பெற்று

விளங்குவதால், நூலுக்குக் 'குறவஞ்சி' என்ற பெயர் ஏற்பட்டது.

இந்நூலின்கண் 'சொல் நயம், பொருள் நயம், தொடை நயம், அணி நயம், திருக்குற்றால நாதரின் பல்வேறு சிறப்புக்கள், அமைந்துள்ளன.

நூலின் தொடக்கத்தில் 'தற்சிறப்புப்பாயிரம்' முதல் 'அவையடக்கம்' வரை 9 பாடல்களும், இறுதியில் 'வாழ்த்து' – 1 பாடலும் நீங்கலாக 119 பாடல்கள் உள்ளன.

*"கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ் சதுர்வேதம் கிளைகள் ஈன்ற*
*களையெலாஞ் சிவலிங்கம் கனியெலாம் சிவலிங்கம் கனிகள் ஈன்ற*
*சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம் சிவலிங்க சொரூப மாக*
*விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை*
*வேண்டு வோமே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருக்குற்றாலத் தலபுராணம்

*திரிகூடராசப்பக் கவிராயர்*

புராணம் – பழைய வரலாறு

'திருக்குற்றாலம்' எனும் ஊர் தென்காசிக்கு அருகில் உள்ளது. இங்கு எழுந்தருளிய இறைவனின் திருப்பெயர்: திருக்குறும்பலா ஈசர்; அம்பாளின் பெயர்: குழல்வாய்மொழியம்மை. இங்குள்ள சித்திரசபை, அதாவது நடராசர் சபை, பஞ்ச சபைகளில் ஒன்று. தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் இது.

இஃது இரண்டு காண்டங்களையுடையது : (1) தான வைபவ காண்டம்; (2) சிவரகசிய காண்டம்.

முதற்காண்டத்தில் 18 சருக்கங்கள்; 2ஆம் காண்டத்தில் 14 சருக்கங்கள் ஆக 32 சருக்கங்கள்; தொடக்கத்தில் காப்புத் திருவிருத்தம் – 2 ஐச் சேர்த்து மொத்தம் 2070 விருத்தங்கள் உள்ளன.

இந்நூலில், 'குறுமுனி' எனப்படும் அகத்தியர் வழிபட்டது; உமாதேவி திருவவதாரச் சிறப்பு; திருக்குற்றாலத் தலப்பெருமை, மூர்த்தி விசேடம், சிவபூசை விதிகள் எனப்பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

*"சத்திபீ டத்தின் மேவுந் தாரகப் பிரமம் போன்றி!*
*முத்திதந் தருள வேண்டி முளைத்தருண் முதலே போற்றி!*
*யத்திர விழிபண் பாட வந்தரப் பேரியார்ப்பச்*
*சித்திர சபையி லாடுந் தெய்வநா யகனே போற்றி!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருக்கூவப் புராணம்

*துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்*

புராணம – பழைய வரலாறு.

'புரா, நவம்' என்ற இருசொற்களின் புணர்ப்பே 'புராணம்' என்பர். எனவே, பழமையானதும், புதுமைத் தன்மை உடையதும் 'புராணம்' எனலாம். புராணநூல்களில் அடங்கியுள்ள கருத்துக்கள் பழமையானவையே என்றாலும் கேட்கக் கேட்கப் புதியனவாகத் தோன்றுமாதலின் 'புரா நவம்' எனப்பட்டது என்பர். தொல்காப்பியர் இதனைத் 'தொன்மை' என்று குறிப்பர்.

'திருக்கூவம்' என்பது, தொண்டைநாட்டுத் திருத்தலங்களில் ஒன்று. இது, 'திருவிற்கோலம்' என்று அழைக்கப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர்கள்:– திருவிற்கோலநாதர், திரிபுராந்தக நாதர், கூவநாதர் என்பன. இறைவியின் திருப்பெயர்கள் : பையரவல்குலம்மை, திரிபுராந்தக நாயகி என்பன. 'திருவிற்கோலம்' என்பது, திரிபுராந்தகர்களை அழிக்க இறைவன், மேருவை வில்லாகக் கொண்டு நின்ற கோலம் என்று பொருள்படும்.

இந்நூல், திருத்தலச் சருக்கம், திரிபுர தகனச் சருக்கம், சந்தானகிரிச் சந்தானச் சருக்கம், அடிமுடிய தேடிய சருக்கம், செந்நெல் வைத்த சருக்கம், தாருகன் வதை சருக்கம் என்ற அமைப்பில் உள்ளது. 703 பாடல்கள் கொண்டது. இது, புராண அமைப்பு வழுவாமல் இலக்கிய நயம் மிகுந்தது.

*"கண்புனல் துளிப்ப நெஞ்சம்*
*கரைந்துஉக மெய்ம்மயிர் பொடிப்பத்*
*தண்புனல் தரித்த வேணித்*
*தம்பிரான் பூசைசெய்வான் . . ."*

என்பன போல் வரும் பாடல்கள் உண்டு!

## *திருக்கைலாயத் திருவிளையாடல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

சரவணப் பொய்கையில், தாமரை மலரின் மேல் அமர்ந்திருந்த ஆறுமுகன், திருக்கைலாயத்தில் நிகழ்த்திய திருவிளையாடல் என்பது பொருள்.

இதன்கண் 10 பாடல்கள் உள்ளன.

சிறுவர்கள் இப்பாடல்களைக் காலையிலும் மாலையிலும் பக்தியுடன் பாடினால், உடல்வன்மையும், கல்வி அறிவும் உண்டாகும்.

*"அவ்அயன்தனை அழைத்துமுன் குடிலையின் அருத்தம்*
*செவ்வன் ஓதுதிஎனக் குகன்கூற லும்,சிருட்டி*
*எவ்வம் இன்றுசெய் நான்அது என்று அயன்இயம்ப*
*உவ்வி புண்ணுறப் புடைத்தனன் அவனைஅவ் ஒருவன்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *திருக்கோகர்ணம் பெரியநாயகி பிள்ளைத்தமிழ்*

*நா. கனகராஜய்யர்*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகைகளில் 'பிள்ளைத்தமிழ்' என்பதும் ஒன்று. புலவர் பெருமக்கள்,தாம் வழிபாடுகடவுளையோ, தம்முடைய ஞானாசிரியரையோ, தம்மைப் பாதுகாத்த வள்ளல்களையோ, பிள்ளைப்பருவத்தில் வைத்துப் பத்துப் பருவங்களால் பருவம் 1க்குப் பாக்கள் 10 வீதம் 100 பாடல்களால் பாடுவது மரபு.

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

புதுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த 'திருக்கோகர்ணம்' என்ற ஊரில் கோயில் கொண்டு எழுந்தருளிய பெரியநாயகி அம்பிகை மீது பாடப்பட்டது. வடமொழியில் 'பிரஹதம்பிகை' என்று பெயர்.

இந்நூலின் தொடக்கத்தில் 'பாயிரம்' முதலான 6 செய்யுட்கள் உள்ளன. அடுத்து, "காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்" எனப் பத்துப் பருவங்கள் உள்ளன.

*"என்றுமுள தென்றமிழை முனியகத் தியனுணர ஏற்றகுரு வாக வந்தே*
*இலக்கண நெறித்துறைகள் எவையுநன் கருள்செயும்*
*இயற்றமிழ்ப் புலவனாகும்*
*மன்றினட மிடுகின்ற சிவபரஞ்சுடரினது*
*வாமத்தி னமர்தேவியே! . . ."*

என்பன போன்ற பாடல்கள் உள்ளன.

## *திருக்கோயில் திருவெண்பா*

*ஐயடிகள் காடவர்கோன் நாயனார். (சைவநாயன்மார் அறுபத்து மூவரில் ஒருவர்)*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11 ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'திருக்கோயில்' என்பது தில்லைச் சிற்றம்பலத்தைக் குறிக்கும். இந்நூலில் 24 வெண்பாக்கள் உள்ளன. இறைவனைப் பற்றியன. ஆதலின் 'திருவெண்பா' எனப்பட்டது.

இந்நூலில், 'திருக்கோயில்' எனப்படும் 'தில்லைச் சிற்றம்பலம்' பற்றிய பாடல், முதற்கண் அமைந்துள்ளது. அடுத்து, திருநாகேச்சரம், திருவையாறு, திருவாரூர், திருத்துருத்தி, திருக்கோடிக்கா, திருவிடைவாய், திருநெடுங்களம், குழித்தண்டலை, திருவானைக்கா, திருமயிலை, உஞ்சேனை மாகாளம், வளைகுளம், திருச்சாய்க்காடு, திருப்பாச்சிலாச்சிராமம், திருச்சிராமலை, திருமழபாடி, திருவாப்பாடி, திருவேகம்பம், திருப்பனந்தாள், திருவொற்றியூர், திருமயானம் என்னும் தலங்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன.

இவற்றில், யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, உற்றார் உறவினர்கள் இறுதிக் காலத்தில் கைவிடுதல், முதுமைத் துன்பம் முதலியன பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன.

*"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே, உற்றாரும்*
*கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று – நாடுகின்ற*
*நல்லசிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே*
*தில்லைச்சிற் றம்பலமே சேர்!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருக்கோவையார்

*மாணிக்கவாசகர்*

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் 8ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. அகப்பொருள் துறைகளை நிரல்படக் கோத்து அமைத்தமையால் 'கோவை' எனப்பட்டது. 'ஆர்' என்ற விகுதி சேர்ந்து 'கோவையார்' என்றாயிற்று. 'திரு' என்பதற்குப் பல பொருள் உண்டு. 'கண்டாரால் விரும்பும் தன்மை' என்ற பொருளும் உண்டு. ஈண்டு, நூலுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

இந்நூலின் பாட்டுடைத் தலைவர் – தில்லை நடராசப் பெருமானாவர்!

இதன்கண் 400 துறைகள் உள்ளன. அகப்பொருள் துறைகளைத் தழுவி இத்துறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் அதன் கருத்தை விளக்கும் 'கொளு' ஒன்று உள்ளது.

இதில், 'இயற்கைப் புணர்ச்சி' முதல் 'பரத்தையிற் பிரிவு' ஈறாக 25 கிளவிக் கொத்துகள் உள்ளன. 'கட்டளைக் கலித்துறை' என்ற யாப்பில் அமைந்துள்ளது.

அறிவன் நூற்பொருளும், உலக நூல் வழக்கும் இந்நூலில் வந்துள்ளன. மேலும் 'அறம், பொருள், இன்பம், வீடு' என்ற உறுதிப் பொருள்களும் இந்நூலில் இயம்பப்பட்டுள்ளன.

இந்நூலுக்குப் 'பேராசிரியர்' என்பாரின் பழைய உரை ஒன்று உண்டு.

சொல்லணி, பொருளணிகள்; சைவ சித்தாந்தக் கருத்துக்கள், இறைவனின் இயல்பு, அவனது சொரூபநிலை ஆகியன இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

*"மீண்டார் எனஉவந் தேன்கண்டு*
*நும்மைஇம் மேதகவே*
*பூண்டார் இருவர்முன் போயின*
*ரேபுலி யூர்எனைநின்(று)*
*ஆண்டான் அருவரை ஆளியன்*
*னானைக்கண் டேன்அயலே*

*தூண்டா விளக்கனை யாய்என்னை*
*யோ, அன்னை சொல்லியதே!"*

தன் மகளைத் தேடிச் செல்லும் செவிலி, எதிரே வரும் தலைவன் – தலைவியிடம் கேட்டதுவும்; அதற்குத் தலைவன் கூறிய மறுமொழியும் கலந்த, தமிழ்ப் பண்பாட்டைக் குறிப்பிடும் அரிய பாட்டு இது. இவ்வாறே பிறவும் வரும்!

## *திருச்சீரலைவாய்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

'திருச்சீரலைவாய்' என்பது திருச்செந்தூர். முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று.

இதன்கண் 10 பாடல்கள் உள்ளன. 'பஞ்சமம்' என்ற பண்ணில் பாடத்தகுவது. கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாவால் அமைந்தது. பாடல்தோறும் 'சரவணபவவே' என முடிவது.

இப்பாக்களில், சொல்நயம், பொருள் நயம், மூர்த்தியின் பெருமை, சரவணபவ என்ற மந்திரத்தின் பெருமை முதலாயின சொல்லப்பட்டுள்ளன.

*"கிளர்சிவக் கொழுந்தே! தவர்மனக் கரும்பே!*
*கெழுவர்உள் மாமணிக் குலமே!*
*வளர்நலக் கிழியே! அகவிளக்கு ஒளியே!*
*மனமயல் தீர்க்கும் எம்பரனே. . . !"*

என்பனபோல் வரும்.

## *திருச்செந்தில் உலா*

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'உலா' என்பதும் ஒன்று. 'திருச்செந்தில் உலா' என்பது திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

'உலா' என்பது, ஒரு தலைவன் பவனி வருங்கால் 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாக 7 பருவ மகளிர் (பொது மகளிர்) அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடுவது மரபு.

அரசனைப் பற்றி அல்லது ஒருவள்ளலைப் பற்றி 'உலா'ப் பாடி, அவர்பால் பொருள் பெறுவது புலவர்க்குரிய தொழில். ஆனால், 'திருச்செந்தில் உலா' அப்படிப்பட்டதன்று. எனவே 'பேதை' என்ற சொல் அறியாமையைக் குறிக்கும். உயிரானது, உலக மயக்கத்தில் ஈடுபட்டு, இறைவனது தன்மையை அறியாத நிலையுடையது. அதுவே 'பேதைப்பருவம்'. நூலாராய்வும், பயிற்சியும் பெற்றுப் பருவ முதிர்ந்த நிலையில், இறைவனோடு உள்ள ஈடுபாடு மிகுதியாகிறது. இன்ப அனுபவம் பெறுதற்கேற்ற பருவமுதிர்வே 'மடந்தை' முதலான பருவங்கள் எனக்

கொள்ள வேண்டும். ஆண்டவனைத் தலைவனாகக் கொள்ளும் போது, உயிர், பெண்மையுடையது. ஆண்டவன் இன்பம் தருபவன். உயிர், இன்பம் நுகரும் தன்மையது. எனவே, இந்நூலில் இவ்வியல்புகள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

இந்நூலில் முதற்கண் 'காப்புச் செய்யுள்' 1 தவிரக் 'கலிவெண்பா' யாப்பில் 92 கண்ணிகள் உள்ளன; இறுதியில் 'நூற்பயன்' கூறும் 1 வெண்பா உள்ளது.

*"சூரன் முதலாய துட்டர்களைச் சூறை கொண்ட*
*வீரம் தழுவாத வென்றியொடுஞ் சீரலைவாய்க்*
*கோயிலுக்குள் என்றும் கொலுவிருக்கக் கண்டு! . . . . ."*

என்பன போன்ற பகுதிகள் உண்டு.

## *திருச்செந்தில் சிலேடை வெண்பா*

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*

'சிலேடை' என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள் அமையுமாறு பாடப்படுவது. திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலில், முதலடியில் ஒரு பொருளைக் குறிப்பிட்டு, 2ஆம் அடியில் இருபொருளுக்கும் ஏற்ற இருபொருள் தரும் சொற்களையமைத்து, 3:4 ஆம் அடியில் செந்திற்பதியையும் பெருமானையும் அப்பொருளில் அமைய அவனது தலம், இடம் இத்தகையது என்று அழகுபெறப் பாடப்பட்டுள்ளது.

இதன் கண், 'காப்பு', 'நூற்பயன்' எனும் 2 பாடல்கள் தவிர 100 பாடல்கள் உள்ளன.

*"ஏயதமிழ்ச் சங்கத்தில் ஈரா யிரவர்மன்றில்,*
*சேயமகம் நீடுதிருச் செந்தூரே — தூய*
*முருகன் களங்கடம்பன், மொய்குழலார் வேண்டு*
*மருகன் களங்கடம்பன் மாண்பு!"*

இப்பாடலில், 'சேயமகம்' என்பது இருபொருள்படவுள்ளது.

"சே—செம்மையான; யமகம் – யமகம் என்ற கவிகள்" என்ற ஒரு பொருளும்; "சேய – கொலை; புலையற்றுச் சிறந்த; மகம் – புனித வேள்வி" என்ற வேறொரு பொருளும் தந்து 'சிலேடை' யாயிற்று.

அவ்வாறே, 'களங்கடம்பன்' என்பதுவும் சிலேடைப் பொருள் கொண்டது.

"கள் – தேன் நிறைந்த; அம்கடம்பன் – அழகிய கடப்பமாலையுடையவன் என்ற ஒருபொருளும்; களங்க – அன்பர்களைச் சோதிக்கின்ற குற்றம்: டம்பன் – ஆடம்பரம்" என்ற வேறொரு பொருளும் அமைந்துள்ளன.

இத்தகைய சிலேடைப் பாடல்கள் ஒருநூறு கொண்டது இந்நூல்!

## திருச்செந்தில் திருபந்தாதி

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.*

திரிபு + அந்தம் + ஆதி = திருவந்தாதி.

திரிபு – மாறுபாடு. ஒரு பாட்டின் இறுதிச்சீர் அடுத்தபாட்டின் தொடக்கமாகவும் அமையப் பாடப்பட்டது. மேலும் முதற்பாட்டின் முதற்சீர், நூலின் இறுதிப்பாட்டின் இறுதிச் சீராகவும் அமையப் பாடப்பட்டுள்ளது. அஃதாவது 'மண்டலித்து வருதல்' எனப்படும்.

'திரிபு' என்பதற்கேற்ப, இந்நூலின் பாடல் ஒவ்வொன்றும் முதற்சீர், 2ஆம் சீர் வரை முதலெழுத்து மட்டும் மாறுபட்டு, அந்த இரண்டுசீர் வரை ஒரே வடிவில் எதுகை அமைந்து, பொருள் வேறுபட்டுள்ள தன்மையில் அமைந்துள்ளது.

'அந்தாதி' என்பதற்கேற்ப இந்நூலில் 100 பாடல்கள் உண்டு. தொடக்கத்தில் 1 பாடல், இறுதியில் 1 பாடல் என 2 பாடல்களும் உண்டு.

*"வழுவின் றியதமிழ்ப் பாமாலை யாவும் வனையுமன்பர்*
*குழுவின் றியமனும் அஞ்சுறக் கூடிடக் கூட்டியருள்*
*முழுவின் றியன்பருள் செந்தூர னே,யென் முருகையனே*
*கழுவின் றியக்கமுன் சாரணர்க் கீந்து களித்தவனே!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி

*துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்*

'அந்தாதி' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையப் பாடுவது.

'நீரோட்டகம்' என்பது, உதடு முயற்சியால் பிறக்கும் மெய்யும், உயிரும். உயிர்மெய்யும் வராமல் பாடப்படுவது. 'யமகம்' என்பது, அடி முதல்எழுத்தோடு 2 எழுத்துக்கள் முதல், பத்து எழுத்துக்கள் வரை முதலடி போலவே நான்கு அடிகளையும் பாடுவது.

'திருச்செந்தில்' என்பது திருச்செந்தூர் ஆகும். திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூல், 'காப்புச் செய்யுள்' 1 தவிர, 30 செய்யுட்கள் கொண்டது. இக் காப்புச் செய்யுள், 'திருக்கு' என்னும் செய்யுளமைதி கொண்டது. 'திருக்கு' என்னும் செய்யுளமைதி கொண்டது. 'திருக்கு' என்பது, அடி முதலெழுத்தை நீக்கி 2 முதல் 12 எழுத்து வரை, முதல் ஒருஅடி போலவே 4 அடிகளும் வருவது.

இந்நூலில் திருச்செந்தூர் வளம், சிவபெருமான் திருமால் பெருமை, புராணக் கருத்து, முருகனின் தோற்றம், கருணை, வழிபடுவதால் ஏற்படும் பலன்கள்

ஆகியன சொல்லப்பட்டுள்ளன.

*"சரி தம் கை ஆரக் கலன்*
*தம்தனம் தரித்தார் நரகே*
*சரிதங்கையார் அக்கர் இடத்தினார்*
*தந்ததண் செந்தில்நே*
*சரிதம் கையர் அக்கணத்து இன்னல்*
*கைத்தல் சரதம், தம்சீர்ச்*
*சரிதம் கைஆரக் கசிந்து*
*இசைக்கின்ற கையினர்க்கே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருச்செந்தில் பதிற்றுப் பத்தந்தாதி

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*

'திருச்செந்தில்' என்பது திருச்செந்தூர். பத்து + பத்து = பதிற்றுப்பத்து. அதாவது நூறு. அந்தம் + ஆதி = அந்தாதி. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. திருச்செந்தூர் முருகன் மீது பாடப்பட்டது.

பத்துவித யாப்புடையதான பத்துப்பகுதிகளைக் கொண்டு, அந்தாதியாகப் பாடப்படுவது.

இந்நூலில் முருகப் பெருமானின் பல்வேறு சிறப்புக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*"ஆனேறும் பெருமாற்கும் அரியதமிழ்க் குறுமுனிக்கும்*
*மானேர்கண் ணாருருகும் வனப்பருணைப் புலவனுக்கும்*
*ஏனேன்அன் றருள்செய்தாய்! எனக்கின்றேன் இரங்குகிலாய்!*
*தானேதன் நிகராய தமிழ்ச்செந்திற் றலத்தானே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## திருச்செந்தில் யமக அந்தாதி

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*

'அந்தாதி' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

அந்தம் + ஆதி = அந்தாதி. ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப் பாடுவது.

'யமகம்' என்பது அடிமுதல் எழுத்தோடு 2 எழுத்துக்கள் முதல், பத்து எழுத்துக்கள் வரை முதலடி போலவே நான்கு அடிகளையும் பாடுவது.

பாட்டில் ஒரேவிதமான மோனைவரக்கூடிய ஒருவருக்க மொழிகொண்டு பாடுவது.

இந்நூல் 'சந்தி, திரிபுச் சொற்களின் நயம், இருபொருள் தருவதான சிலேடை,

அதற்கேற்ற எதுகை, யாப்பு, மோனை, பொருட்செறிவு, இறையருள், வரலாறு' என அமைந்து படிப்போர்க்கு இன்பந்தருமாறு பாடப்பெற்றுள்ளது.

*"தினமா தரிக்கு மொழியால் உருகித் திகைத்துவருந்*
*தினமா தரிக்குந் ததியிது காண்செந்திற் செல்வபுல்லைத்*
*தினமா தரிக்கும் பிரானுக்கும் நாடொறுஞ் செய்காத்தேந்*
*தினமா தரிக்கும் புதல்வா கலாபச் சிகண்டியனே!"*

போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருச்செந்தில் வெண்பா அந்தாதி

*அ. சிவாநந்த சாகர யோகீச்வரர்.*

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக வரும்படி பாடுவது. அவ்வாறே நூலின் இறுதிச் செய்யுளில் வரும் இறுதி அசை அல்லது சீர், தொடக்கச் செய்யுளின் முதலசை அல்லது முதற்சீரோடு பொருந்தப்பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

'திருச்செந்தில்' என்பது திருச்செந்தூர். ஆங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

*"பற்றறுத்தார்க் கின்பம் பயக்கும் பசுந்தேனை*
*நற்றவத்தோர், நாடு நறுங்கனியை – பெற்றுகடற்*
*சீரலைவாய்க் கற்பகத்தைச் சென்றுபணி யாதெவனோ*
*ஊரலைவாய் நெஞ்சே உரை!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருச்செந்தில் வெண்பா அந்தாதி

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*

'அந்தாதி' என்பது, தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. அந்தம் + ஆதி = அந்தாதி. ஒரு செய்யுளின் முடிவு, அடுத்த செய்யுளுக்கு முதலாவதாக அமையப் பாடுவது. 100 செய்யுட்கள் கொண்டது. 'வெண்பா' யாப்பில் பாடப்பட்டது எனவே 'வெண்பா அந்தாதி' எனப்பட்டது. திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

நூலின் தொடக்கத்தில் 'காப்பு', இறுதியில் 'நூற்பயன்' என 2 செய்யுள் தவிர 100 வெண்பாக்கள் உள்ளன.

இந்நூலில் முருகப் பெருமானின் பெருமை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

*"நரகம் புகுதார் நமன்கையிற் சிக்கார்*
*கிரகங்க ளால் வழுந்தார் கிள்ளை – பரவுதமிழ்ச்*

*செந்திற் குகனைத் திறமு மறவாமல்*
*சிந்திக்கப் பெற்ற சிலர்!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *திருச்செந்திற் கலம்பகம்*

*ஸ்ரீ சுவாமிநாத தேசிக மூர்த்திகள்*

'கலம்பகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

கலப்பு + அகம் = கலம்பகம். பலவகையான உறுப்புக்கள் கலந்து வருவதால் இப்பெயர் பெற்றது.

ஒரு போகும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முதற்கவி உறுப்பாக முதலில் கூறி, 'புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குலம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல்' என்னும் இப் பதினெட்டு உறுப்புக்களும் வருமாறு, 'மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம், கலித் தாழிசை, கலி நிலைத்துறை, வஞ்சித்துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை' முதலியவற்றால், இடையிடையே வெண்பாவும், கலித்துறை விரவிவர, மடக்குடைச் செய்யுளும், வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த, அந்தாதித் தொடையால் முடிவுபெற, இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடப்படுவது இதன் இலக்கணம்.

பல வகை மலர்களும் கலந்து அமைத்த மாலை 'கலம்பக மாலை' என்று சொல்லப்படுவது போலப் பலவகைப் பாக்களைக் கொண்டு பாடப்பட்ட இதுவும் 'கம்பகம்' எனப்பட்டது எனலாம்.

இந்நூலில், அகத்துறைச் செய்யுட்களும், புறத்துறைச் செய்யுட்களும் வந்துள்ளன.

'திருச்செந்திற் கலம்பகம்' என்னும் இந்நூல், திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்றது. இதில் 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 100 பாடல்கள் உள்ளன.

இந்நூலில், திருச்செந்தூர்த் தலச்சிறப்பு, அகப்பொருட் செய்திகள், அணிநயங்கள், பல்வகைச் சுவைகள் அமைந்துள்ளன.

*"அருமறை முறையிட, அறைகழல் பறையிட*
*அடியருள் நினைவதுன்னடி*
*ஒருமையின் இருமையும் உதவிய மதியென*
*ஒளியொடு குளிர்வதுன்முகம்!"*

என்பன போன்ற பகுதிகளைக் காணலாம்.

இக்கலம்பகத்திலுள்ள சில செய்யுட்களை, முருகப் பெருமான் பள்ளியறைக்கு எழுந்தருளும்போது, தல ஓதுவார் தோத்திரம் செய்வது இன்றும் வழக்கமாயுள்ளது

என்பர். இதனால் இந்நூலின் பெருமை புலனாகும்.

## திருச்செந்திற் கோவை

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்*

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

'திருச்செந்தில்' என்பது திருச்செந்தூர். திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலில் முதற்கண் துதிப்பாடல்கள் 4 தவிர 436 துறைகள் பற்றிய பாடல்கள் உள்ளன. சொல்வளம், பொருள் வளம் பொதிந்து, முருகனின் சிறப்பை அகப்பொருள் மரபு பொருந்தப் பாடப்பட்டது.

*"ஆயுந்தமிழ்த் திருச்செந்தூர்க் குமர ணணிவரையி*
*லேயும் பசுங்கிள்ளை நேர்தைய லேயெனக் கிச்சைநல்கு*
*நீயுமென் னெஞ்சுமொன் றானதின்றேற்கன நித்திரையிற்*
*றோயுங் கலவிக் கனவெய்து மோவதி சூட்சமிதே!"*

என்பது 'நெஞ்சொடு கலந்தமை நிகழ்த்தல்' என்ற துறை. இவ்வாறே பிறவும் வரும்.

## திருச்செந்தூர் அகவல்

*திருச்சிற்றம்பல நாடிகள்*

'அகவல்' என்பது 'ஆசிரியப்பா'. யாப்பு வகைகளில் ஒன்று. திருச்செந்தூர் முருகனைப் பற்றியது.

தொடக்கத்தில் 'காப்பு வெண்பா' ஒன்று உண்டு. மொத்தம் 426 அடிகள் உண்டு.

இதில், முருகன் பெயரைச் சொல்லித் துதித்தல்; அறுபடை வீடுகள்; சைவானுட்டானம்; சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஆகிய பலவும் சொல்லப்பட்டுள்ளன.

*". . . . .*
*குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்*
*நிரை மலர் அநாதியின் நீங்கி நிற்றலின்*
*அறைகுவன் சிவன்என அறிவின் மேலவர்*
*இறைஅவன் பெருமையை யாவர் கூறுவார். . ."*

என்பது அவற்றில் ஒன்று!

## திருச்செந்தூர்த் தலபுராணம்

*வென்றிமாலைக் கவிராச சிரோமணி*

புராணம் – பழைய வரலாறு.

திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளிய முருகனைப் பற்றிய

புராணம.

இதன்கண், முதலில் காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து என 15 பாடல்கள் தவிர, 898 திருவிருத்தங்கள் உள்ளன.

'பதிகம்' தொடங்கி, 'நைமிசாரணியத்திற் சூதமுனிசென்ற அத்தியாயம்' முதல், 'சுகப்பிரமரிஷி பூசையண்ணின அத்தியாயம்' வரை, 18 அத்தியாயங்கள் உள்ளன.

*"முருகன் என்று மொழிந்து மொழிந்துளத்(து)*
*உருகும் அன்பினர்க்கும் உருகா நிற்போர்*
*அருகு சென்றிடும் அன்பர்க்கும் காமமாம்*
*பெருகுமாறும் செலாதுளம் பேதுறும்!"*

என்பது, வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயத்தில் வருவது. இவ்வாறே பிறவும் உள்ளன.

## திருஞான சம்பந்தர் தேவாரம்

*பார்க்க :*

சம்பந்தர் தேவாரம்

## திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்

*ஸ்ரீ மாசிலாமணி தேசிகமூர்த்தி*

'பிள்ளைத்தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று! கடவுளையோ, அடியார்களையோ தலைவராகக் கொண்டு, பிள்ளையாகக் கருதிப் பாடப்படுவது. இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். 'காப்பு' முதலாகப் பத்துப் பருவங்கள்; பருவம் 1க்குப் பாக்கள் 10 வீதம் 100 பாடல்களால் பாடப்படுவது. கடைசி 3 பருவங்கள் மட்டும் வேறுபடும்.

திருஞான சம்பந்தர், தேவாரம் பாடிய மூவரில் முதலாமவர். அவர்மீது பாடப்பட்டது இப்பிள்ளைத்தமிழ்.

இந்நூலில் சம்பந்தப் பெருமானின் தோற்றம்முதல் அனைத்தும் இன்றமிழால் எடுத்துரைப்பட்டுள்ளது.

'முருகனுக்குத் துணைவன்' என்று ஒரு செய்யுளில் உரைக்கப்பட்டுள்ளது; எனினும் பல இடங்களில், 'முருகனே' எனவும் இறைவன் இறைவி அருளிய குழவி எனவும் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது.

## திரு ஞானப்பாவை

*ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுருசுவாமி*

இது, 'சிவா அமிர்தம் ஆத்மஞானம்' என்ற நூலின் ஒருபகுதி. 30 பாடல்கள். ஒவ்வொன்றும் 'எம்பாவாய்' என முடிவது.

*“ஏற்றிப் பணியவும் நாம் இன்பசுகம் தந்தசிவன்*
*ஆற்றல் அணியும் அவர்பெருமை என்னேடி”*

போன்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## *திருத்தணிகைத் திருப்பதிகம்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருபரதாச சுவாமிகள்*

தொண்டைநாட்டைச் சேர்ந்த திருத்தலங்களில், ‘திருத்தணிகை’யும் ஒன்று. ‘தணிகை’ என்பது ‘திருத்தணி’ ஆகும். ஆங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடப்பட்டது.

ஆரனோடு போர்செய்த காரணமாக முருகனுக்கு உண்டான கோபமும்; வள்ளியம்மையை உடன் அழைத்துச் செல்லும் போது வந்து தடுத்த நம்பிராசனும் வேடர்களும் செய்த போரினால் ஏற்பட்ட கோபமும் தணிந்து, வள்ளியம்மையுடன் முருகன் எழுந்தருளியுள்ள திருத்தலம் என்பதால் இது ‘தணிகை’ எனப்பட்டது.

இந்நூலில் 6 பாடல்களே உள்ளன. இதில், முருகனின் பல்வேறு சிறப்புக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*“ஆதி முதலாக உனை அண்டிஎன் உள்ளம் அதை*
*அறிவித்து நின்ற நிலையும்*
*அதன்பின்னர் நான்பட்ட அவதியால் இந்நேரம்*
*அறிவித்து நிற்கும் நிலையும் . . . . !”*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *திருத் தொடையல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

தொடையல் – மாலை

திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு அடைமொழியாக வந்துள்ளது.

இதன்கண் 30 பாடல்கள் உள்ளன. அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆனவை. முருகப் பெருமானைப் பற்றியது.

*“நித்தியத்தை யுடைய பசுக் களைமாயை*
*கன்மமென நிகழ்ந்தே பற்று*
*நித்தியத்தை யுடையஇருள் மலப்பாச*
*மகற்றியின்ப நீங்கா முத்தி . . . !”*

எனச் சைவசித்தாந்தக் கருத்துடைய பாடல்கள் பலவுள்ளன.

## *திருத்தொண்டர் சதகம்*

*மலைக்கொழுந்து நாவலர்*

சதகம் - நூறு. தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'சதகம்' என்பதும் ஒன்று.

இந்நூலில், 'கணபதி காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 'அவையடக்கம்' முதலாகக் கொண்ட 103 செய்யுட்கள் உள்ளன.

ஒவ்வொரு செய்யுளின் கடைசி 'சிவதை நகர் மாணிக்க மலை நாதனே!' என முடிவு பெறுகிறது.

இந்நூலில், "நாயனார் தொகை, மரபு, குருவருளால் முத்தி பெற்றோர், இலிங்கத்தால் முத்தி பெற்றோர், வேடத்தால் முத்தி பெற்றோர்" என்ற பாகுபாடு காணப்படுகின்றது.

*"பண்குலவு கயிலையிற் பணிவிடை யகன்றுதென்*
*பால்நாவ லூர்ச்சடை யனார்*
*பாலரென வுற்றருட் டுறைமண முடிக்குமுன்*
*பரமனுக் கடிமை யாகி... !"*

என்பது, சுந்தரரைப் பற்றியது. இவ்வாறே பிறவும்!

## திருத்தொண்டர் திருநட்சத்திரம்

*மாதவச் சிவஞான சுவாமிகள்*

63 நாயன்மார்களுக்குரிய நட்சத்திரம் கூறுவது இது. தொடக்கத்தில் 1 வெண்பா; அடுத்து 78 அடிகள் கொண்டது.

*'தண்டமிழ் அப்பர் தகரிற் சதயம்'*

என அப்பருக்குரிய நட்சத்திரம் 'சதயம்' என்கிறது. இவ்வாறே பிற நாயன்மார்கட்கும் நட்சத்திரம் சொல்லப்பட்டுள்ளது.

## திருத்தொண்டர் திருநாமக் கோவை

*மாதவச் சிவஞான சுவாமிகள்*

முதலில் 'காப்புச் செய்யுள்' தவிர 21 கண்ணிகள் கொண்டது.

'தில்லைவாழ் அந்தணர்' முதல் 'இசைஞானியார்' வரை சிவனடியார் பெயர்களைக் குறிப்பிடும் நூல்.

*"... இந்தத் திருநாமக் கோவைதனை*
*மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து – நைந்துருகி*
*மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்*
*கைதவமும் புல்லறிவும் கற்பனையும் – மையலுந் தீர்ந்(து)*
*அத்துவிதா னந்த அகண்டபரி பூரணத்தில்*
*நித்தியமா வாழ்வார் நிசம்"*

என இதனை ஓதுவார் பெறும் பயனைக் கூறுகின்றது.

# திருத்தொண்டர் திருவந்தாதி

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் – முடிவு. ஆதி முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப் பாடப்படுவது. அவ்வாறே நூலின் இறுதிச் செய்யுளின் இறுதிச் சீரோ அசையோ, தொடக்கத்தில் உள்ள முதற் பாடலின் முதற்சீர் அல்லது அசையாக வரும்படி பாடப்படும். அதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர். பொதுவாக 100 பாடல்களால் பாடப்படுவது மரபு. ஆனால் இந்த நூலில், 'நூற்பயன்' உள்ளிட்ட 89 பாடல்களே உள்ளன.

திருவாரூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமான், 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரமூர்த்தி நாயனார், 'திருத்தொண்டத்தொகை' பாடினார்.

நம்பியாண்டார் நம்பி, அத் திருத்தொண்டத் தொகையை விரித்து, அதனை முதனூலாகக் கொண்டு, இத் 'திருத்தொண்டர் திருவந்தாதி'யைப் பாடினார். சேக்கிழார் பாடிய பெரிய புராணத்துக்குத் 'திருத்தொண்டத் தொகை' யும், இத் 'திருவந்தாதி'யும் ஆதாரமாக அமைந்தன.

'கட்டளைக் கலித்துறை' என்ற யாப்பில் இவ் அந்தாதி அமைந்துள்ளது.

இந்நூலில், தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும், தனியடியார் அறுபது பேரும், தொகையடியார் ஒன்பது பேரும் ஆகிய இவர்களின் ஊர், நாடு, மரபு முதலியனவும், அவர்கள் மேற்கொண்டொழுகிய திருத்தொண்டின் நெறியும், அதனால் அவர்கள் பெற்ற பேறும் ஆகியன கூறப்பட்டுள்ளன.

திருத்தொண்டத் தொகையில் 11 பாடல்கள் உள்ளன. அவற்றில் 'ஆரேன் ஆரூரில் அம்மானுக்காளே' எனச் சுந்தரர், தம்மைக் குறித்துத் 'தொண்டர்க்குத் தொண்டன்' என்கின்றார். இத் திருவந்தாதியிலும், சுந்தரரைக் குறித்துப் போற்றும் 11 பாடல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தகும்.

சம்பந்தர், அப்பர், சேரமான் பெருமாள் நாயனார், கோச்செங்கட்சோழர் ஆகியோரின் வரலாறுகள் இரண்டிரண்டு பாடல்களிலும்; ஏனைய நாயன்மார் வரலாறுகள் ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தனியடியார், தொகைபாடியார் இத்துணையர் என்பது ஒரு பாடலிலும்; அத் திருப்பதிகத்திலுள்ள பாடல்களின் முதற்குறிப்பு ஒருபாடலிலும், இந்நூலை ஓதுவதால் வரும் பயன் ஒருபாடலிலும் சொல்லப்பட்டுள்ளன.

*"தொழுதும் வணங்கியும் மாலயன்*
*தேடரும் சோதிசென்றாங்(கு)*

*எழுதும் தமிழ்ப்பழ ஆவணம்*
*காட்டி எனக்குன்குடி*
*முழுதும் அடிமைவந்(து) ஆட்செய்*
*எனப்பெற்ற வன்முரல்தேன்*
*ஒழுகு மலரினற் றார்எம்பி*
*ரான்நம்பி யாரூரனே!"*

என்பது சுந்தரரைப் பற்றியது. இவ்வாறே பிற நாயன்மார் வரலாறும் சொல்லப்பட்டுள்ளது.

## திருத்தொண்டர் புராண சாரம்

*உமாபதி சிவாசாரியார்*

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூல்களை அடியொற்றி இந்நூல் பாடப்பட்டது.

76 திருவிருத்தங்கள் கொண்டது. சில பிரதிகளில் மேலும் சில பாடல்கள் காணப்படுகின்றன.

'சுந்தர மூர்த்தி சுவாமிகள்' முதல் 'இசைஞானியார்' வரை திருத்தொண்டர்கள் வரலாறு சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

*"தண்கயிலை அதுநீங்கி நாவலூர்வாழ் சைவனார்*
*சடையனார் தனயனாராய் . . ."*

என்பது சுந்தரர் வரலாறு கூறுவது. இவ்வாறே பிற அடியார்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது.

## திருத்தொண்டர் புராணம்

பார்க்க : பெரியபுராணம்

## திருநாகைக் காரோணப் புராணம்

*மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.*

புராணம் – பழைய வரலாறு.

'நாகை' என்பது நாகப்பட்டினத்தைக் குறிக்கும்.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்! காயாரோகணப் பெருமான். அம்பிகையின் பெயர் : கருந்தடங்கண் அம்மை.

இந்நூலில் 'கடவுள் வாழ்த்து' முதலானவை – 29 பாடல்; அவையடக்கம் – 12; சிறப்புப்பாயிரம்–2 நீங்கலாக, 'திருநாட்டுப்படலம்' முதல் 'நைமிச முனிவர் பூசித்த படலம்' ஈறாக 61 படலங்கள், 2506 திருவிருத்தங்கள் உள்ளன.

*"வெண்பளிங்கிற் றிருவுருவும் வெண்ணீறும் வெள்விடையும்*
*வெண்பிறையு மொருகுரண்ட வெள்ளிறகும் பசுந்தும்பை*

*வெண்மலரும் வெண்புனலும் வெண்மணியும் விழைந்தாற்கு*
*வெண்ணிறமே பொருத்தமென விளர்த்ததுயர் திருக்கயிலை!"*

என்பன போன்ற நயமான பாடல்கள் உண்டு!

## *திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை*

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

இரட்டை – இரண்டு. வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் இருவகை யாப்பும், மணிகள் கோத்த மாலை போல அமையப் பாடப்பட்டது. ஆதலின், 'திரு இரட்டை மணிமாலை' எனப்பட்டடது.

திருநாரையூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள 'பொள்ளாப் பிள்ளையார்' மீது பாடப்பட்டது. 'பொள்ளாப் பிள்ளையார்' என்பது உளியால் பிளவுபடாத – தானாக முளைத்த பிள்ளையாரைக் குறிக்கும். உண்மையறியாதோர் 'பொல்லாப் பிள்ளையார்' என்பர்.

இந்நூலில், யாப்பு வகை 1க்குப் பத்துப் பாடல்வீதம், இருவகைக்கு 20 பாடல்கள் உள்ளன.

இவற்றில், "சிவபிரான் மகிழும் யானை முகத்தான்; செந்தீ உடம்பினன்; ஆணவமலம், நெருப்பினருகே எறும்பு அணுக முடியாதது போல் தூர விலகிவிடும்" என்பன போன்ற கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*"மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்*
*பொருப்பை,அடி போற்றத் துணிந்தால் – நெருப்பை*
*அருந்தஎண்ணு கின்ற,எறும் பன்றே அவரை*
*வருந்தஎண்ணு கின்ற மலம்!"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்!

## *திருநாவுக்கரசர் தேவாரம்*

*பார்க்க*

அப்பர் தேவாரம்.

## *திருநாவுக்கரசுதேவர் திருஏகாதச மாலை*

*நம்பியாண்டார் நம்பி.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது.

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. பாடல்கள் மாலை போலத் தொடுக்கப்படுவனவாதலின் இப் பெயர் ஏற்பட்டது.

ஏகாதசம் – பதினொன்று. இந்நூலின்கண் அமைந்த பாடல்கள் பதினொன்று

ஆதலின் இப்பெயர் அமைந்தது.

'திருநாவுக்கரசு தேவர்' என்பது சைவசமய நாயன்மார் அறுபத்து மூவரில் தேவாரம் பாடிய அப்பர் பெருமானைக் குறிக்கும்.

இப்பாடல்களில், திருநாவுக்கரசரின் வரலாறு, அவரை வழிபடுவதால் உண்டாகும் நன்மைகள், அவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களின் சிறப்பு ஆகியன சொல்லப்பட்டுள்ளன.

*"நன்று மாதர நாவினுக் கரைசடி*
*நளினம் வைத்(து)உயின் அல்லால்*
*ஒன்று மாவது கண்டிலம் உபாயம் மற்(று)*
*உள்ளன வேண்டோமால்...!"*

என்பன போன்ற பகுதிகள் உள்ளன!

## திருநிறைந்த சிவம்

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

சிவம் – சிவபெருமான். திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. முருகப் பெருமானையே 'சிவம்' எனப் போற்றுகின்றார். அவனின் திருவருளை வியந்து போற்றுவது. அந்தாதித் தொடையில் அமைந்தது. 'கலிவிருத்தம்' என்ற யாப்பில் பாடப்பட்டது. 50 பாடல்கள் கொண்டது.

*"எந்தப் பூசனை செய்யினு மென்னுழல்*
*சிந்தை யொன்று திடப்படிற் சித்தியென்*
*றந்த வேத மறைந்திட வில்லையோ*
*கந்த னே!கரு ணைப்பிர காசமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருப்பதிகக் கோவை

*உமாபதி சிவாசாரியார்.*

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவத்தலம் தோறும் சென்று தேவாரம் பாடினர். அவ்வாறு அவர்கள் சென்ற தலங்களைப் பற்றியும் அத்தலங்களுக்குரிய பதிகங்கள் எத்தனை என்பது பற்றியும் பாடப்பட்ட நூல். 14 திருவிருத்தம் கொண்டது.

தலந்தோறும் பாடப்பட்ட பதிக எண்ணிக்கை அமைந்துள்ளதால் இது 'பதிகக் கோவை' எனப்பட்டது.

*"பன்னுசிவ தலம் ஒருநூற் றைம்பதிற்று மூன்று பதிகம் ஒன்றாம்..."*

என பதிகப் பட்டியல் தரப்பட்டுள்ளது.

## *திருப்பதிக் கோவை*

*உமாபதி சிவாசாரியார்.*

சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவரும் சென்று தேவாரம் பாடிய திருத்தலங்களைப் பற்றிக் கூறும் நூல். 14 திருவிருத்தப் பாக்கள் உள்ளன.

*"கோயில், திருவேட்களம், நெல் வாயில், கழிப் பாலை ..."*

எனப் பட்டியல் தொடர்கின்றது.

## *திருப்பரங்கிரி*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

'திருப்பரங்கிரி' என்பது மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றமாகும். இது, ஒற்றைக்கல் மலையாகும். இஃது ஒரு குடைவரை கோயில். எனவே இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானுக்கு அபிடேகம் இல்லை; அவருடைய வேற்படைக்குத்தான் அபிடேகம்!

இதன்கண் 10 பாக்கள் உள்ளன. கழிநெடிலாசிரிய விருத்தத்தால் ஆனவை.

முருகனின் திருப்பெயர் ஓதுதலின் பயன், திருவடிப் பெருமை, பதிஞானத்தை அடைதல், வினை ஒழிக்க வேண்டுதல், திருவருளைச் சிந்தித்தல் எனப்பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

*"ஆணவ மலத்தினில் அமிழ்ந்திய பசுக்களை*
*அனாரதம் தன்னகத்தே*
*ஐக்கியம் கோடற்கு அருந்தொழில்கள் ஐந்துநனி*
*ஆற்றும் ஐம்முகன் ஆகிநீ . . . !"*

என்பனபோல் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடம்பெறும் பாடல்கள் உண்டு!

## *திருப்பல்லாண்டு*

*சேந்தனார்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது. தேவாரம் போல் பண்ணோடு பாடுதற்குரியது.

திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும்போது இத்'திருப்பல்லாண்டை'யும் சேர்த்துப் பாடுவது மரபு.

இத் திருப்பல்லாண்டு 13 பாடல்கள் கொண்டது. தில்லை நடராசப் பெருமானைப் பற்றியது.

இறைவனைப் 'பல்லாண்டு வாழ்க!' என வாழ்த்துவதாக அமைந்தது.

*"மன்னுக தில்லை வளர்கநம்*
*பத்தர்கள் வஞ்சகர் போயகலப்*
*பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து*

*புவனி யெல்லாம் விளங்க*
*அன்னநடை மடவாள் உமைகோன்*
*அடியோ முக்கருள் புரிந்து*

*பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## *திருப்பழநிமலைத் திருவிளையாடல்*

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

பழநியில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

இதன்கண் பத்துப்பத்துக் கொண்ட 8 பத்துப்பாடல்கள் உள்ளன. 'கலி விருத்தம்', ஆசிரிய விருத்தம்' எனப் பலவித யாப்பில் அமைந்துள்ளது. முருகனின் திருவிளையாடல்களைக் கூறுவது. சந்தத்துடன் பாடத்தகுவது. இவை தவிர, பழநி, திருவாவினன் குடி பற்றிய சந்தப்பாக்களும் உள்ளன.

*"அமரர்சிறை விடுதலைசெய் விமலா!*
*அடியவர்க டுயரமுறி னதனையடு மமலா!*
*சமநிலையர் நினைவிலுறு பொருளே!*
*தகுதகையர் தொழுவிமல மலையமுனி யருளே. . . !"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## *திருப்புகழ்*

*அருணகிரிநாதர்*

முருகப் பெருமானின் புகழைப் பாடும் நூல் ஆதலின் 'திரு' என்ற அடைமொழியுடன் 'திருப்புகழ்' எனப்பட்டது.

நோயின் மிகுதியால் துன்புற்ற அருணகிரிநாதர், திருவண்ணாமலையில் வல்லாள மன்னன் புதுக்கிய கோபுரத்தின்மீது ஏறி 'மாள்வேன்' எனக் கீழே உருண்டார். பண்டைத் தவமிகுதியால், முருகப் பெருமான், குருவாக வந்து, அவரைத் தாங்கி விடுத்துச் 'சும்மா இரு' என மவுன மறையை உபதேசித்து மறைந்தருளினார். 'அருணகிரி! நீ நம் திருப்புகழைப் பாடுக!' என்று பணித்து, 'முத்தி' என்று பாடுக என்றும் அடியெடுத்தும் கொடுத்தார்.

அவ்வாறே அருணகிரிநாதரும்,

*'முத்தைத்தரு பத்தித் திருநகை'*

என்று தொடங்கும் முதற்பாடலைப் பாடினார்.

இவர் பாடிய திருப்புகழ் பதினாறாயிரம் என்றும் கிடைத்தவை 1329 என்றும் கூறுவர்.

சிவத்தலங்கள் – குறிப்பாக முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று 'திருப்புகழ்' பாடினார் அருணகிரியார். அனைத்துப் பாடல்களும் சந்தப் பாக்கள்! பண்ணோடு பாடத்தக்கன.

*"சந்ததம் பந்தத் – தொடராலே*
*சஞ்சலம் துஞ்சித் திரியாதே!*
*கந்தனென் னென்றுற் – றுனைநாளும்*
*கண்டுகொண் டன்புற் – றிடுவேனோ!*
*தந்தியின் கொம்பைப் புணர்வோனே!*
*சங்கரன் பங்கிற் – சிவைபாலா!*
*செந்திலங் கண்டிற் – கதிர்வேலா!*
*தென்பரங்குன்றிற் – பெருமாளே!"*

என்பது திருப்பரங்குன்றத்தைப் பற்றியது. பாடல்தோறும் 'பெருமாளே!' என முடியும்!.

## *திருப்பூவண நாதருலா*

*கந்தசாமிப்புலவர்*

'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. தலைவன் ஒருவன் தெருவில் பவனிவர, அவனைக் கண்டு, 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாக ஏழு பருவ மகளிர் (பொது மகளிர்) காதல் கொண்டதாகப் பாடுவது. இவ் 'உலா', 'கலிவெண்பா' என்ற யாப்பில் பாடப்படும்.

'திருப்பூவணம்', என்பது மதுரைக்கு அருகில் உள்ள சிவத்தலம். தேவாரப் பாடல் பெற்ற சிறப்பினது. கருவூர்த் தேவர் பாடிய 'திருவிசைப்பா'வும் இத்தலத்திற்கு உண்டு. தமிழிலும் வடமொழியிலும் இத்தலத்திற்கெனப் புராணங்கள் உண்டு.

இறைவன் : திருப்பூவணேசர்; இறைவி : அழகிய நாயகி.

இந்நூலின் தொடக்கத்தில், 'காப்பு'ச் செய்யுள் – 1; இறுதியில் 2 ஆக 3 செய்யுள் தவிர, 469 கண்ணிகள் உள்ளன. இந்நூலுக்குத் 'திருப்பூவை உலா' என்ற வேறுபெயரும் உண்டு.

இந்நூலில், தலப்பெருமை, வழிபாடியற்றிப் பேறு பெற்றோர், 'சம்பந்தர்' முதலான சமய குரவர்கள் பற்றியன; உவமை முதலான அணிகள் ஆகியன அழகுதமிழில் பாடப்பட்டுள்ளன.

"....

*வேணு புரக்கோலம் வீழி மிழலையிடைப்*
*பேணும் வகைபார்த்த பிள்ளையும் – பூணுமருண்*
*மெய்யாக் கயிலைமலை வீற்றிருந்த தன்கோல*
*மையாற்றிற் கண்டருளென் னப்பனு – மெய்யாம*

*லாடிச் சிவக்கு மடியைத்தென் னாரூரிற்*
*பாடிச் சிவப்பேற்றும் பாவலனும் . . .*"

என்பன, சம்பந்தர், அப்பர், சுந்தரர் வரலாறு உரைப்பன. இவ்வாறே பிறவும் வரும்!

## திருப்பேரூர்க் கலம்பகம்

*கந்தசாமி சுவாமிகள்*

'கலம்பகம்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1. பலவகையான மலர்களை வரிசைப்பட அமைத்துத் தொடுக்கப்பட்ட மாலைக்குக் 'கலம்பகம்' என்று பெயர். இக்காலத்தார் 'கதம்பம்' என்பர்.

பலவகைப் பொருள்களும், அகப்புறத்துறைகள் பலவும், பல யாப்புக்களும் விரவிக் கலந்து தொடுக்கப்படுவதால் 'கலம்பகம்' எனும் பெயர் பெறுவதாயிற்று.

பொதுவாகக் 'கலம்பகத்'தில், 'புறம், தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம்,தழை, இரங்கல், சம்பிரதம், தூது' எனப் பதினெட்டு உறுப்புகள் இடம் பெறும். ஆனால் சிலவற்றில் வேறு சில உறுப்புக்களும் சொல்லப்பட்டுள்ளன.

இக்கலம்பக நூலில் 23 உறுப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

நூலின் தொடக்கத்தில் 'காப்பு', 'குருதுதி' எனும் 2 பாடல்களும் இறுதியில் 'நூற்பயன்' 1 பாடலுமாக 3 தவிர, 100 பாடல்கள் உள்ளன.

கலம்பகத்தின் முதற்செய்யுள் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா; அடுத்த 2ம் முறையே நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை என அமைய வேண்டும்; மேலும் அந்தாதித் தொடையிலும் இருக்க வேண்டும்.

திருப்பேரூர், கோவைக்கு அருகே உள்ள சிவத்தலம். இத்தலத்தில் பற்றிய குறிப்புக்கள் தேவாரப் பதிகம் சிலவற்றில் காணப்படுகின்றன.

இத்தலத்து இறைவன் பெயர்: பட்டீசர், பட்டிநாதர், பட்டிப் பெருமான், அம்மையின் பெயர்: பச்சை நாயகி.

இந்நூலில் அகப்பொருட் செய்திகள், தலவரலாறுகள், நாயன்மார்களைப் பற்றிய செய்திகள், சாத்திரக் கருத்துக்கள், உவமை முதலான அணி நயங்கள் ஆகியன அழகாகச் சொல்லப்பட்டுள்ளன.

"*கடிதிருந்து கண்டலே யிடிபொருந்து கொண்டலே*
*கதிரியங்கு சங்கமே மதியுயங்கு மங்கமே*
*பொடியிசைந்த புளினமே வடிவசைந்த நளினமே*
*போதுநின்ற புன்னையே போதுநின்ற தென்னையே . . .!*"

என்பது 'தலைவி இரங்கல்' எனும் உறுப்பாகும். இவ்வாறே பிறவும் வரும்.

## *திருப்பேரூர்க் கிள்ளைவிடு தூது*

*கந்தசாமி முதலியார்.*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'தூது' என்பதும் ஒன்று. கிள்ளை – கிளி. திருப்பேரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பட்டிப் பெருமான்பால் கிளியைத் தூது விடுப்பதாக அமைந்தது.

அச்சான நூலில், 38ஆம் 'கண்ணி' முதல் 580ஆம் கண்ணி வரையில் உள்ளன; இவற்றிலும் பல நூறு கண்ணிகள் இல்லை.

> "....
> *சைவத்தைப் போலாஞ் சமயமொன்றுந் சங்கரனாந்*
> *தெய்வத்தைப் போலான தெய்வமொன்றும் வையகத்தில்*
> *ஆதித்தன் போலா யனைத்திருளை யும்துறக்கும்*
> *சோதி தனியாஞ் சுடரொன்றும் ...*"

என்பன போன்ற பகுதிகள் உண்டு!

## *திருப்பேரூர் போற்றிக் கலிவெண்பா*

*கந்தசாமி முதலியார்*

கோவைக்கு அருகில் உள்ளது 'பேரூர்'. ஆங்கு எழுந்தருளியுள்ள பட்டிப்பெருமான் மீது, 'கலிவெண்பா' என்ற யாப்பில் 'போற்றி, போற்றி' எனும்படி அமைத்துப் பாடப்பெற்றது.

இதில், தொடக்கத்தில் 'காப்புச் செய்யுள் 1 தவிர, 46 கண்ணிகள் உள்ளன. இத்தலத்தின் பல்வேறு சிறப்புக்கள் மொழியப் பட்டுள்ளன.

> "*..... மன்னரென்று*
> *நாற்றிக்கும் போற்றுதமிழ் நாவலூரர் நம்பிக்காய்*
> *நாற்றுநடும் பள்ளநடை போற்றி!*"

என்பன போல் வரும் பகுதிகள் உண்டு!

## *திருப்பேரூர்ப் புராணம்*

*கச்சியப்ப முனிவர்*

புராணம் – பழைய வரலாறு. திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு அடைமொழியாக வந்தது. பெருமை பெற்ற ஊர் 'பேரூர்'. கோவைக்கு அருகில் உள்ள சிவத்தலம். இறைவன், பட்டிப் பெருமான்; இங்கு எழுந்தருளியுள்ள இறைவன், சுயம்புமூர்த்தி. இக்கோயிலில் உள்ள கனகசபை நடராசர் திருவுருவம் அற்புதமானது.

இந்நூலில் 36 படலங்கள் உள்ளன; இங்குள்ள நடராசர் திருக்கோயில் மண்டபத்திலும் 36 தூண்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை,

தத்துவங்களோடு தொடர்புடையன. 'காவலர் வழிபடு படலத்'தில் சிவமூர்த்தங்கள் 24 குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மூர்த்தத்தையும் வழிபடுவதால் உண்டாகும் நன்மைகளும் சொல்லப்பட்டுள்ளன. கற்பனை, இலக்கியச்சுவை, தத்துவக் கருத்து முதலாயின நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

*"அற்றை யிரவு புலர்காலை யணிநீர்க் காஞ்சி நதியாடி*
*முற்று மருளுஞ் சிவலிங்க முறையி னிறுவிப் பூசித்துப்*
*பற்றும் பொறிகள் அகத்தடக்கிப் பயிலும் யோகத் திருக்குநாட்*
*பெற்ற முயர்த்த பெருமானார் பெருவா னிடையே வெளிநின்றார்!"*

என்பது, விசுவாமித்திரர் வரம்பெறு படலத்தில் வரும் ஒரு செய்யுள். இவ்வாறே பிறவும் வரும்!

## *திருப்போரூர்ச் சந்நிதிமுறை : அடைக்கலப் பத்து*

*சிதம்பர சுவாமிகள்*

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் மீது பாடப்பட்டது. பாடல்தோறும் 'அடியேன் உன்றன் அடைக்கலமே!" என முடிவது. 20 பாடல்கள் கொண்டது.

*"ஏது செயினுங் கொடியேனுக்*
*கிரங்கி யாண்ட பெருந்தாதாய்!*
*தீத னிவனென் றெனையிகழ்ந்தாற்*
*சிறியேற் குயுமோர் நெறியுன்தோ?*
*ஓது மதிபோல் அருளமிர்தம்*
*உதவும் ஆறு முகப்பெருமான்*
*ஆதி புதல்வா போரூரா*
*அடியே னுன்றன் அடைக்கலமே!"*

என்பன போல் வரும்!

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை ; அலங்காரம்*

*சிதம்பரசுவாமிகள்*

அலங்காரம் – அணி.

'திருப்போரூர்' என்னும் ஊர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது. முருகன் உறையும் பதி. அப்பெருமான் மீது பாடப்பட்ட நூல்.

இந்நூலில் 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 101 பாடல்கள் உள்ளன. முருகப் பெருமானின் சிறப்புக்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

*"எல்லார்க்கு மேலவன் நீயென் றறிந்துனை பேத்தியன்பாய்ப்*
*பொல்லாக் கருமலம் தீர்ந்தான் பொதியப் புகழ்முனிவன்*
*சொல்லாற் புனைதொங்கல் நக்கீரன் சாத்தித் துனிகடந்தாள்*
*நல்லார்க்கு நல்லவ னே!சம ராபுரி நாயகனே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : ஊசல்*

*சிதம்பர சுவாமிகள்*

திருவாசகத்தில், 'திருப்பொன்னூசல்' என்ற ஒரு பகுதி உண்டு. ஈண்டுத், திருப்போரூர் முருகப் பெருமானுக்கு 'ஊஞ்சல்' தனியே பாடப்பட்டுள்ளது.

இதில் 10 பாடல்கள் உள்ளன. பாடல்தோறும் 'ஆடீர் ஊசல்' என முடிவது.

*"பொதியமுனி குருபரரே யாடீ ரூசல்!*
*புவிவாழ அருள்பவரே யாடீ ரூசல்!*
*முதியதமிழ் உரைத்தவரே யாடீ ரூசல்!*
*முத்தியெனக் களித்தவரே யாடீரூசல்!*
*அதிகவடி வழகினரே யாடீ ரூசல்!*
*அகிலமறை நிகர்ப்பவரே யாடீ ரூசல்!*
*ததையுமலர்த் தாரினரே யாடீ ரூசல்!*
*சமரபுரி நாயகரே யாடீ ரூசல்!"*

என்பன போல் வரும்.

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : எச்சரிக்கை*

*சிதம்பர சுவாமிகள்*

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சண்முகப் பெருமான் மீது பாடப்பட்டது.

13 பாடல்கள்; பாடலின் இறுதி 'எச்சரிக்கை' என முடிவது. சந்தப் பாக்களாக உள்ளன.

*"பூவேபரி மளமேமறைப் பொருளேமயி லேறுங்*
*கோவேசுரர் தேவேபோரி வாழ்வே எச்சரிக்கை!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : கிளிப்பத்து*

*சிதம்பர சுவாமிகள்*

சிற்றிலக்கியங்களில் 'தூது' என்பதும் ஒன்று. கிளியைத் தூது அனுப்புவதாகப் பாடப்படுவது 'கிள்ளை விடுதூது' எனப்படும்.

ஈண்டு, திருப்போரூர் முருகப் பெருமானின் புகழைச் சொல்வாயாக கிளியே என்ற பொருளில் 10 பாடல்கள் வந்துள்ளன.

*"இன்பக் கடலே சரணென்றும்*
*எண்குண மலையே சரணென்றும்*

*அன்பர்க் கமுதே சரணென்றும்*
*ஆருயிர் முதலே சரணென்றும்*
*அன்புக் கறிவே சரணென்றும்*
*வளர்பிர ணவமே சரணென்றும்*
*கொன்பெற் றுறுபோ ரூரிறையைக்*
*கோலக் கிளியே ஓதுவையே!"*

என்பன போன்ற பாடல்கள் உள்ளன.

## *திருப்போரூர் சந்நிதிமுறை: குயிற்பத்து*

*சிதம்பர சுவாமிகள்*

குயிலைப் பார்த்துக் கூறுவதாகப் பாடப்படுவது. திருவாசகத்தில் ஒருசிறு பகுதியாக வருவது; ஈண்டுத் தனியாக அமைந்துள்ளது. திருப்போரூர் முருகப் பெருமான் மீது பாடப்பட்டது. 10 பாடல்கள் கொண்டது. பாடல்தோறும் 'கூவாய் குயிலே!' என முடிவது.

*"சூர னுரங்கிர வுஞ்ச பொருப்புத்*
*துணிபட வடிவேல் விடுவோய் என்றுந்*
*தாரணி பன்னிரு புயனே யென்றும்*
*சரவண னே!சண் முகனே யென்றும்;*
*தோர்நவ வீரர்கள் துணைவா என்றும்*
*தேவர்கள் சேனா பதியே என்றும்*
*கூரறி வினர்புகழ் போரூ ரிறையைக்*
*கூவாய் வரநீ கூவாய் குயிலே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : சித்தொளி*

*சிதம்பர சுவாமிகள்*

சித்து – அறிவு; சித்தொளி – அறிவுப் பிரகாசம்.

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானிடம், தன் அறிவு நிலையைக் கூறுவதாகப் பாடப்பட்டது.

கட்டளைக் கலிப்பா –10; கொச்சகக் கலிப்பா – 10 ஆக 20 பாடல்கள் கொண்டது.

*"பாலுக்குள் வெண்ணெயெழு பான்மைபோல் என்னுளத்தின்*
*சீலத்தை யெல்லாந் தெளிவிப்ப தெந்நாளோ?*
*வேலுக் கரசே! விறல்மா மயிற்கரசே!*
*தாலத் தரசே! சமரபுரி நாயகமே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை : சிற்சுகம்

*சிதம்பர சுவாமிகள்*

சித் + சுகம் = சிற்சுகம். சித் – அறிவு.

திருப்போரூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டது. (1) விருத்தக் கலித்துறை – 10; (2) அட்டகம் – 8; (3) பெருங்கழிநெடிலடி விருத்தம் – 10; (4) குறுங்கழிநெடிலடி விருத்தம் – 103; (5) சந்தக் கழிநெடில் விருத்தம் –10; (6) கட்டளைக் கலித்துறை – 33; (7) நேரிசை வெண்பா – 10 ஆக 184 செய்யுட்கள் கொண்டது.

*"தஞ்சமென வந்துன் சரணடைந்த நாயினேன்*
*வஞ்ச மனநினைவால் வாடினேன் – வஞ்சமனம்*
*நீக்கித் திருப்போரூர் நின்மலா நின்னடிமை*
*ஆக்கி யெனையாளு வாய்!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை : சின்னகட்டியம்

*சிதம்பர சுவாமிகள்*

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளிய கந்தக் கடவுள் மீது பாடப்பட்டது. இறைவன் எழுந்தருளி வரும்போது 'கட்டியம்' கூறுவது உண்டு.

இதன்கண் 10 + 10 = 20 பாடல்கள் உள்ளன. சந்தப் பாடல்கள் கொண்டது.

*"ஆறுமதி சூடியருள் பாலா! – ஆறஅரு ளாறுமுக வேலா!*
*தேறுகலை பேசுகுண சீலர்! – சீர்ச்சமர மாநகரி லீலா!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## திருப்போரூர்ச் சந்நிதி முறை : தாலாட்டு

*சிதம்பர சுவாமிகள்*

பிள்ளைத்தமிழின் ஒரு பகுதியாக வருவது 'தாலப்பருவம்'. அதனையே தனியாக அமைத்துப் பாடப்பட்டது இது. 'திருப்போரூர்' செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது; முருகன் உறையும் பதி.

இந்நூலில், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிர, 41 கண்ணிகள் உள்ளன.

"....

*ஞானக் கரும்போமெய்ஞ் ஞானானந் தக்கடலோ*
*தானற்றார் போற்றுஞ் சமரபுரித் தண்ணளியோ?*
*என்றென்றே தாலாட்டி யெல்லோரும் இன்பமுற*
*நன்றருளே செய்யுமெங்கள் நாதன்போ ரூர் இறையே!"*

என்பன போன்ற பகுதிகள் உள்ளன.

## *திருப்போரூர்ச் சந்நிதிமுறை : திருப்பள்ளியெழுச்சி*

*சிதம்பர சுவாமிகள்*

'திருவாசகம்' போன்ற நூல்களில், இறைவனை எழுப்புவதாகக் கற்பனை செய்து பாடப்பட்ட 'திருப்பள்ளியெழுச்சி' உண்டு. அதுவே பின்னர்த் தனியாகப் பாடப்படுவதாயிற்று. அவ்வகையில் திருப்போரூரில் எழுந்தருளியுள்ள கந்தக் கடவுளை எழுப்புவதாகப் பாடப்பட்டது இது.

'திருப்போரூர்' என்பது, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது. முருகன் உறையும் பதி.

இந்நூலின்கண் 10 பாடல்கள் உள்ளன.

"....
*இன்றெனை யாண்டுகொண் டருளிய போரூர்*
*இறைவ னேபள்ளி யெழுந்தரு ளாயே?"*

என்பது அவற்றில் ஒன்று. பாடல்தோறும், "இறைவனே! பள்ளி எழுந்தருளாயே!" என முடிவது.

## *திருப்போரூர்ச் சந்நிதிமுறை : திருவடிப் பற்று*

*சிதம்பர சுவாமிகள்*

"இறைவனது திருவடியைப் பற்றிக் கொள்ளவேண்டும்" என்பதாகப் பாடப்பட்டதால் 'திருவடிப் பற்று' எனப்பட்டது.

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சமராபுரி நாயகனாம் முருகப் பெருமான் மீது பாடப்பட்டது.

இந்நூலில், (1) வண்ணத் தாழிசைப் பாக்கள் – 10; (2) மட்டு விருத்தம் – 10; (3) கலி விருத்தம் – 10; (4) பெருங்கழிநெடில் விருத்தல் – 10; ஆக 40 பாடல்கள் உள்ளன.

*"எண்ணி லாத நெடுங்காலம்*
*எண்ணி லாத பலபிறவி*
*எடுத்தே யிளைத்திங் கவைநீங்கி*
*இம்மா னிடத்தில் வந்துதித்து*
*மண்ணின் வாழ்க்கை மெய்யாக*
*மயங்கி யுழன்றா லடியேனுன்*
*மாறாப் பெருமை தரும்பாத*
*வனசத் துணையென் றடைவேனே . . . !"*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : பிள்ளைத்தமிழ்*

*சிதம்பர சுவாமிகள்*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'பிள்ளைத் தமிழு'ம் ஒன்று. 'திருப்போரூர்' என்ற ஊர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது. முருகன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலம். முருகப் பெருமான் மீது பாடப்பட்டது இப் 'பிள்ளைத்தமிழ்'. கடவுளையோ, அடியார்களையோ குழந்தையாகப் பாவித்துக் 'காப்புப் பருவம்' முதல் 10 பருவங்களால் பருவம் 1க்குப் பத்துப் பாக்கள் வீதம் 100 பாடல்களால் பாடப்படுவது. இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். கடைசி 3 பருவங்கள் மட்டும் வேறுபட்டுவரும்.

இந்நூலின் தொடக்கத்தில் 'வேம்படி விநாயகர் காப்புச் செய்யுள்' 1 தவிர 100 பாடல்கள் உள்ளன.

இந்நூல், முருகப்பெருமானின் திருவருட்டிறம், சைவசித்தாந்தக் கருத்துக்கள் முதலாயின இடம் பெற்றுள்ளன.

*"நனவில்வரு கனவிற் சுழுத்தியிற் பொறிகரண*

*வினவலுறும் உபசாந்தம் அதனில்மா மாயையும்*
*மிகுசொருபம் அதனிலிருளும்*
*விள்ளுமென வுரைசெய்தென் உள்ளமலம் அகலஅருள்*
*விழிவழிப் பொழியு முகிலே . . . !"*

என்னும் சப்பாணிப் பருவப் பாடலில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

## திருப்போரூர்ச் சந்நிதி முறை : பெரிய கட்டியம்

*சிதம்பர சுவாமிகள்*

இறைவன் எழுந்தருளிப் பவனி வருங்கால் 'கட்டியம்' கூறுதல் உண்டு.

'திருப்போரூர்' என்பது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது; முருகன் திருத்தலம்.

இந்நூலில் 10 + 10 = 20 பாடல்கள் உள்ளன.

சந்தப்பாக்கள் கொண்டது.

*"வடவைவிழி பிறையெயிறு குடவயிறு தடியுதடு*
*மலியலகை பசியையடு வேலா!*
*அடியும் நெடு முடியும்அரி அயினும்அறி வரியசிவன்*
*அகமகிழ மழலைமொழி பாலா. . . .!*

என்பன போன்ற பாடல்களைக் காணலாம்.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை : மாலை

*சிதம்பரநாத சுவாமிகள்*

'மாலை' என்பது சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று. மாலை போலத் தொடுத்துப் பாடப்படுவது. 'திருப்போரூர்' என்பது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள, முருகனுக்குரிய திருத்தலம்.

இந்நூலில் 'காப்பு'ச்செய்யுள் 1 தவிர, 102 வெண்பாக்கள் உள்ளன. இவை, 'வேண்டுதல்' முறையில் அமைந்துள்ளன.

*"ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்*
*தீது புரியாத தெய்வமே! – நீதி*
*தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்*
*பிழைக்கின்ற ஆறுநீ பேசு!"*

என்பது இவற்றில் ஒன்று!

## *திருப்போரூர்ச் சந்நிதி முறை : வண்டுவிடுதூது*

*சிதம்பரசுவாமிகள்*

'தூது' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

வண்டைத் தூதாக அனுப்புவது 'வண்டுவிடுதூது'.

"வண்டுகளே! திருப்போரூர் முருகனிடம் சென்று என் நிலை உரைத்திடுக!" என்று தூது அனுப்புவதாக அமைந்தது. 10 பாடல்கள் உள்ளன.

*"மாமலைச் சேணிலத் தேதுஞ்சி*
*வார மனைபுகுந் துண்டுபின்*
*கோமலர்க் காமுக சாலையிற்*
*கூடும் அரசிள வண்டுகோள்!*
*தேமலர்த் தார்புனை மார்பனைச்*
*செஞ்சிறை யஞ்சேவ லாளனைக்*
*காமணக் குந்திருப் போரிவாய்க்*
*கண்டெனை யாண்டிடச் சொல்மினே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## *திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ்*

*சிதம்பரசுவாமிகள்*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 'பிள்ளைத்தமிழு'ம் ஒன்று. இஃது (1) ஆண்பாற் பிள்ளைத்தமிழ்; (2) பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். கடவுளையோ, அடியவர் முதலானோரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'பிள்ளைத்தமிழ்' பாடுவது மரபு. இப்பிள்ளைத்தமிழ், 10 பருவங்களால் பருவம் 1க்குப் பத்துப்பாக்கள் வீதம் 100 பாடல்களால் பாடப்படும். பருவங்களாவன:– காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி; சிறுபறை; சிற்றில் சிறுதேர். இவை ஆண்பாலுக்குரியன. பெண்பாலாயின், கடைசி 3 பருவம் மாறுபடும்.

கழங்கு, அம்மானை, ஊசல் எனவரும். குழந்தை பிறந்த 2ஆம் மாதத்தில் 'காப்பு'ப் பருவம் தொடங்கப் படுவதாகப் பாடப்படும். பிள்ளைத் தமிழுக்குப் 'பிள்ளைப் பாட்டு' என்ற வேறுபெயரும் உண்டு.

திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருமுருகன் மீது பாடப்பட்டது இப் பிள்ளைத் தமிழ்!

இதன்கண் வரும் 'அம்புலிப் பருவத்'தில், 'சாம, பேத, தான, தண்டம்' எனும் நால்வகை உபாயங்கள் அமையப் பாடுவது மரபு.

*"விரவுபல அண்டங்கள் இவன்உட்டை யெனவைத்து*
*விளையாடு பைங்கழற்காய்!*
*விரிகருவி யாறாறும் இவன்ஏவல் தலைகொண்ட*
*வீறாழி யக்காரராம்!*
*பொருவரிய இருமாயை யிவனுளம் நினைத்தபடி*
*புரிகின்ற தாதியர்களாம் . . .!"*

என்பன போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைக் காணலாம்!

## திருமந்திரம்

*திருமூலர்*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 10ஆவது திருமுறை.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி' மந்திரம் எனப்படும். 'திரு' என்னும் அடைமொழியோடு 'திருமந்திரம்' எனப்பட்டது.

'திருமந்திர' நூல், தமிழ் ஆகமமாக விளங்குவது. சிவாகமங்கள், 'தந்திரம், மந்திரம், உபதேசம்' எனும் மூவகைக் கலைகளை உடையன. இவற்றுள், 'தந்திரக்கலை', அனுட்டான நடைமுறைகளைக் கூறுவது. 'மந்திரக்கலை', இறைவனை வழிபடும் முறைகளை விரித்துரைப்பது. 'உபதேசக்கலை' பதி, பசு, பாசங்களின் தன்மைகளை விளக்கமாகக் கூறுவது.

இத் 'திருமந்திர'த்திற்கு 'மந்திரமாலை' என்ற வேறுபெயரும் உண்டு. இந்நூல், 9 தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் நாற்சீரடி நான்கு கொண்ட கலிவகை யாப்பினால் ஆனது. இந்நூல் இயல்பாக 3000 பாடல்களைக் கொண்டுள்ளதால் 'தமிழ் மூவாயிரம்' என வழங்கப்படுகிறது. 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்று நூலாசிரியர் திருமூலரே கூறியுள்ளார். எனினும் சில பதிப்புகளில் 3100 பாடல்கள் காணப்படுகின்றன. ஒருகால் இடைச்செருகலாக இருக்கலாம் என்பர் அறிஞர்.

நூலின் தொடக்கத்தில் விநாயகர் காப்புச் செய்யுள் ஒன்று உள்ளது. ஆனால் இதனை வேறு யாரோ பாடிச் சேர்த்திருக்கலாம் என்பர்.

இந்நூலில் அமைந்துள்ள பொருட்கூறுகள் மூன்று. அவை: மூவாயிரம் தமிழ்;

முந்நூறு மந்திரம்; முப்பது உபதேசம். இதற்கு ஏற்ப, இந்நூலின் முதல் தந்திரத்தின் தொடக்கத்தில் 'உபதேசம்' என்ற தலைப்பில் 30 பாடல்கள் உள்ளன.

'முந்நூறு மந்திரம்' என்பது 4ஆம் தந்திரத்தில் உள்ள, பின்வரும் தலைப்புக்களில் வரும் பாடல்களின் தொகையாக இருக்கலாம் என்பர் அறிஞர்.

| | | |
|---|---|---|
| திருவம்பலச் சக்கரம் | – 89 | பாடல்கள் |
| வயிரவி மந்திரம் | – 50 | ” |
| ஏரொளிச் சக்கரம் | – 36 | ” |
| வயிரவச் சக்கரம் | – 6 | ” |
| சாம்பவி மண்டலச் சக்கரம் | – 10 | ” |
| புவனாபதிச் சக்கரம் | – 12 | ” |
| நவாக்காரிச் சக்கரம் | – 100 | ” |
| ஆக | 303 | ” |

சிவாகமங்கள் 28. அவற்றுள் காரணாகமம், காமிகாமகம், வீராகமம், சிந்தியாகமம், வாதுளாகமம், யாமளாகம், காலோத்தராகமம், சுப்பிராகமம், மகுடாகமம் என்னும் இவ் ஒன்பது ஆகமங்களையும் நந்தியெம் பெருமானிடம் உபதேசமாகப் பெற்று, அவற்றின் சாரமாகவே திருமூலர் இந்நூலைச் செய்தருளினார் என்பர்.

இவ் இருபத்தெட்டு ஆகமங்களின் நுண்பொருள்களை 9 தந்திரங்களாக வகைப்படுத்தி, 3000 பாடல்களில் வைத்துத் திருமூலர் இந்நூலைச் செய்துள்ளார்.

இத் 'திருமந்திர நூல்', பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையினையும் இயல்பினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நன்னெறிகளையும் அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்நூலில் உள்ள சொற்கள் எளியனவாயினும், ஆழ்ந்த தத்துவப் பொருள் கொண்டவை.

இஃது ஒரு திருமுறையாகக் கொள்ளப்பட்டாலும், சாத்திர நூலாகவும் அமைந்துள்ளது.

*"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே!"*

## திருமயிலைத் திரிபந்தாதி

*இராமையர்*

'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

திரிபு + அந்தம் + ஆதி = திருவந்தாதி. அந்தம் – முடிவு; ஆதி – முதல். ஒரு செய்யுளின் இறுதி, அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையப் பாடுவது. அவ்வாறே நூலின் இறுதி, முதற்செய்யுளின் முதலசை அல்லது முதற்சீரோடு பொருந்துமாறு பாடுவதும் உண்டு. அதற்கு 'மண்டலித்தல்' என்று பெயர்.

இந்நூலின் இறுதிச் செய்யுளின் ஈற்றுச்சீர் 'பூ தலத்தே' என வந்துள்ளது. நூலின் தொடக்கம் 'பூ மனை' என வந்துள்ளது 'மண்டலித்தல்' எனப்படும்.

சொல்லணியாகிய 'திரிபு' இந்நூலில் அமைந்துள்ளதால் 'திருபந்தாதி' எனப்பட்டது. ஒவ்வோர் அடியின் முதலெழுத்துத் தவிரப் பிற எழுத்துக்கள் சிலவும் பலவும் ஒத்துப், பொருள் வேறுபட்டு வருவது திரிபாகும். 'திரிபு'க்குத் 'திருகல்' என்ற வேறுபெயரும் உண்டு.

இக்காலத்து 'மாயூரம்' என்பது முன்னர், 'மயிலை' என்று பெயர் பெற்றிருந்தது. 'மயிலாடுதுறை' என்றும் வழங்கப்பெறும். 'மயிலாடுதுறை' என்பதன் 'மரூஉ' வே 'மயிலை'!

சென்னைக்கருகே 'மயிலாப்பூர்' என்ற பகுதி உள்ளது, அதுவும் 'மயிலை' எனப்படும். இவ்விரு 'மயிலை' நகர்களில் சென்னைக்கருகில் உள்ளது 'வடமயிலை'; மாயூரம் எனப்படும் மயிலை, 'தென்மயிலை' என்றும் சொல்லப்படும்.

தேவாரப் பாடல்பெற்ற பெருமையுடையது இத்'தென்மயிலை'!

இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு 'மாயூர நாதர்' என்றும், அம்பிகைக்கு 'அஞ்சல் நாயகி' என்றும் பெயர்.

திருமயிலையில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்ட நூல் இது.

இதன்கண், தொடக்கத்தில் காப்புச் செய்யுள் 1ம், நூலின் இறுதியில் 'சிறப்புப்பாயிரம்' 1ம் ஆக 2 தவிர, 100 செய்யுட்கள் உள்ளன. கட்டளைக் கலித்துறை என்ற யாப்பில் அமைந்தவை.

இவற்றில், தலப்பெருமை, இறைவனின் இயல்புகள், அகத்துறை – புறத்துறைச் செய்திகள் எனப் பலவும் இடம் பெற்றுள்ளன.

*"இனியன கைக்கு மிளநில வங்கி யெனச்சுடுமென்*
*கனியன கைக்கும் வளைகணில் லாவெனுந் தையலைத்தாய்*
*முனியன கைக்குமிவ் வூர்தனிப் பாயிவண் மோகத்தைநீ*
*தனியன கைக்கும ணாளா மயிலையிற் சங்கரனே!"*

என்பது பாங்கி கூற்றாகும்.

மாயூர நாதரைக் கிளவித் தலைவராகக் கொண்டு பாடப்படும் இத்தகைய பாக்கள், புறப்பொருள் இலக்கணத்தில் சொல்லப்படும் பாடாண் திணையிலுள்ள 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' எனப்படும்.

இவ்வாறே பலபாக்கள் இடம்பெற்றுள்ளன.

## *திருமயிலை யமக அந்தாதி*

*தாண்டவராய கவிராயர்*

அந்தம் + ஆதி = அந்தாதி. ஒரு செய்யுளின் முடிவு, அடுத்த செய்யுளின் முதலாவதாக அமையப் பாடுவது. அவ்வாறே ஒரு நூலின் இறுதி அசையோ, சீரோ, தொடக்கச் செய்யுளின் முதலாவதாக அமையப் பாடுவது 'மண்டலித்தல்' எனப்படும்.

இந்நூலிலும் 'மண்டலித்தல்' அமைந்துள்ளது. 'அந்தாதி' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

செய்யுட்பாக்களில் அமைந்த 'எதுகை' பற்றி இரண்டு வகை அந்தாதிகள் உண்டு: (1) திரிபந்தாதி; (2) யமக அந்தாதி. இவற்றில் 4 அடிகளிலும் முதலில் முதல் எழுத்துத் தவிர ஏனை எழுத்துக்கள் பல ஒன்றிவரின் அது 'திரிபு அந்தாதி'. அம் முதல் எழுத்தும் ஒன்றிவரின் 'யமக அந்தாதி'யாகும். இங்ஙனம் வரும் 'யமகம்', சொல்லணிகளில் இடையிட்டு வந்த ஆதிமடக்கின்பாற்படும்.

'திருமயிலை' என்பது சென்னைக்கருகில் உள்ள, தேவாரப் பாடல் பெற்ற தலம். 'மயிலாப்பூர்' என வழங்கும். ஆங்கு எழுந்தருளியுள்ள கபாலீசுவரர் மீது பாடப்பெற்றது இது. அம்பாளின் திருப்பெயர்: கற்பகவல்லி.

இந்நூலின்கண், 'காப்பு, வாழ்த்து' எனும் இரண்டு தவிர, 100 செய்யுட்கள் உள்ளன; கட்டளைக் கலித்துறையில் அமைந்தவை.

இவற்றில், இத்தலத்தைப் பற்றிய செய்திகள், நாயன்மார் வரலாறுகள், மதுரைத் திருவிளையாடல்கள் ஆகியன சொல்லப் பட்டுள்ளன. மேலும், புறத்துறையில் சொல்லப்படும் 'கடவுள் – மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தபக்கம்' பற்றிய செய்திகளும் உள்ளன.

*"ஆயத்தி னான்மறைச் சூதாடு மூர்க்கரை யாண்டவுன்னி*
*யாயத்தி னான்மறை புக்கேன் கவுணிய னன்று முப்பி*
*ராயத்தி னான்மறை செந்தமிழ்ப் பாடவைத் தாயருள்சே*
*யாயத்தி னான்மறை வேட்டாய் மயிலைகண் ணைம்முகனே!"*

என்னும் பாடலில், "மூர்க்கநாயனார், திருஞான சம்பந்தர், முருகப் பெருமானிடம் பிரணவப் பொருளை விரும்பிய ஈசன்" என்பன போன்ற கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறே பிறவும்!

## *திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்*

*கவிராச பண்டாரத்தையா*

'பிள்ளைத் தமிழ்' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

கடவுளையோ, அடியார்களையோ, வள்ளல்களையோ குழந்தையாகக் கருதிப்

பத்துப் பருவங்களில் பருவம் 1க்குப் பாடல் 10 வீதம் 100 பாடல்களால் பாடப்படுவது. இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என 2 வகைப்படும். பருவங்களில் கடைசி 3ம் வேறுபடும்.

'திருமலை' என்னும் ஊர், தென்றமிழ் நாட்டின் தெற்குப் பகுதியாகிய செங்கோட்டையை அடுத்து அமைந்துள்ளது. ஆங்கு எழுந்தருளியுள்ள முத்துக்குமாரக்கடவுள் மீது பாடப்பட்டது. நூலின் தொடக்கத்தில், 'காப்பு' – 1; அவையடக்கம் – 1 ஆக 2 செய்யுள் தவிர, 100 பாடல்கள் உள்ளன.

முருகப் பெருமானின் பல்வேறு சிறப்புக்களை அழகு தமிழில் விளம்புவது.

*"அழிந்து புவனம் ஒழிந்திடினும்*
*அழியாத் தோணி புரத்தின்மறை*
*யவர்கள் குலத்தி னுதித்தரனோ*
*டம்மை தோன்றி அளித்தவள்ளச்*
*செழுந்தண் முலைப்பால் குடித்து முத்தின்*
*சிவிகை யேறி மதுரையில் போய்ச்*
*செழியன் பிணியுஞ் சமண்பகையுந்*
*தேவி துயருந் தீர்த்தருளி*
*வழிந்து நறுந்தேன் உகுவனபோல்*
*மதுரங் கனிந்து கடைதுடிக்க*
*வடித்துத் தெளிந்த செந்தமிழ்த்தே*
*வாரப் பாடல் சிவன்கேட்க*
*மொழிந்து சிவந்த கனிவாய்ச்சண்*
*முகனே முத்தம் தருகவே!*
*முத்துக் குமார திருமலையின்*
*முருகா முத்தம் தருகவே!"*

என்பது முத்தப்பருவப் பாடல். இவ்வாறே பிறவும்!

## திருமுகப்பா

*சாது அருள்சோதி சுவாமிகள்*

திருமருதூர் என்னும் நயினார் கோயில் நாகநாத சுவாமி மீது பாடப்பட்டது. 'விநாயகர் துதி' நீங்கலாக 12 ஆசிரிய விருத்தப் பாக்களும், நூலின் இறுதியில் 'வாழி' என்ற பாடலும் உள்ளன.

*"வந்தியின் பக்திக் கிரங்கியே பாட்டுக்கு*
*வைகையில் மண்சுமந் தாய்!"*

போன்ற கருத்துக்கள் உள்ளன.

## திருமுகப் பாசுரம்

*திருவாலவாயுடையார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையில் முதலாவதாக இடம் பெற்றுள்ளது.

'திருவாலவாயுடையார்' என்பது சிவபெருமானைக் குறிக்கும். இறைவனே எழுதிய 'பாமடல்' இது.

தமிழ்ச் சங்கத் தலைவராக வீற்றிருந்தருளிய இறைவன், சேரமான் பெருமாள் நாயனாருக்கு அனுப்பிய மடல். இதில், அனுப்புநர், பெறுநர், செய்தி முதலாயின நிரல்படச் சொல்லப்பட்டுள்ளன.

"என்பால் பேரன்பு கொண்ட யாழிசைப் புலவன் பாணபத்திரன். அவனுக்குப் பொருள் கொடுத்து அனுப்புக" என்பது மடலின் செய்தி.

*"... மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம் ...*
*பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்*
*தன்போல் என்பால் அன்பன் ..."*

என்பது பாடலின் ஒரு பகுதி.

## *திருமுருகாற்றுப்படை*

*நக்கீர தேவ நாயனார்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது. எனினும் இது, சங்க இலக்கியமாகிய 'பத்துப்பாட்டி'ல் முதலாவதாக வைக்கப் பெற்றுள்ளது. இதன் நடையும் அமைப்பும் முதலாயின கொண்டு இதனைப் பாடிய நக்கீரர், சங்க காலத்தைச் சார்ந்தவர் என்றும், அவரின் வேறுபட்ட பிற்காலத்தவரே 'நக்கீர தேவ நாயனார்' என்றும் கூறுவர்.

ஆற்றுப்படை – வழிப்படுத்துதல்

திரு + முருகு + ஆற்றுப்படை = திருமுருகாற்றுப்படை.

திருமுருகனின் திருவருளைப் பெற்ற ஓர் அடியார், அதனைப் பெறாதாராகிய மற்றோர் அடியவரை, அம் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டது.

இதற்குரிய இலக்கணம், 'தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ளது.

*"பெற்ற பெருவளன் பெறாஅர்க்கு அறிவுறீஇச்*
*சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும் ..."*

என்பது இதற்கான விதி.

இந்நூலில், முருகன் கோயில் கொண்டு எழுந்தருளிய 6 படைவீடுகளான

திருவேரகம் (சுவாமி மலை), குன்று தோராடல், பழமுதிர்சோலை (அழகர்கோயில்) இவற்றைப் பற்றியும், முருகனின் பல்வேறு சிறப்புக்கள் பற்றியும் அழகான தமிழ் நடையில் பாடப்பட்டுள்ளன.

இந்நூல், ஆசிரியப்பாவால் ஆனது; 317 அடிகள் கொண்டது. நூலின் இறுதியில் தனி வெண்பாக்கள் 10 உள்ளன. முதலாவது 'திருப்பரங்குன்றம்' எனும் பகுதி 77 அடிகளையுடையது.

"தன்னை அடைந்த அடியார்களைத் தாங்குபவன்; தெய்வயானையின் கணவன்; கடலுக்குள் ஒளிந்து கொண்ட சூரனை வென்ற வேலினையுடையவன்; இத்தகைய முருகப் பெருமானின் திருவடியைத் தேடிச் சென்றால் நீ, நினைத்த காரியங்களை இப்போதே பெறுவாய்!" என்பன போன்ற கருத்துக்கள் முதற்படை வீடாகிய 'திருப்பரங்குன்றத்'தில் சொல்லப்படுகின்றன.

2ஆம் பகுதியாகிய, 'திருச்சீரலைவாய்' 48 அடிகள் கொண்டது. "தன்னை அன்பினால் மகிழ்ந்து வரும் அடியார்க்கு அவர் வேண்டும் வரம் கொடுத்து அருளுவது ஒரு திருமுகம்!" என 6 திருமுகங்கள் பற்றியும்; "வானத்தில் மழை பொழிவிப்பது ஒரு தீக்கை" எனப் பன்னிரு திருக்கை பற்றியும் விரித்துரைப்பது இப்பகுதி.

3ஆம் பகுதியாகிய 'திரு ஆவினன் குடி', 51 அடிகள் கொண்டது.

"வெறுப்பற்ற அறிவையுடைய இருடிகளும், யாழ் இசைக்கும் கந்தருவர்களும், தேவேந்திரனும் ஆகியோர், வள்ளிநாயகியுடன் வீற்றிருக்கும் முருகப் பெருமான், எழுந்தருளியுள்ள திருவாவினன் குடி" என்ற கருத்து அமைந்துள்ளது.

'திருவேரகம்' என்ற பகுதி 13 அடிகள் கொண்டது. முப்புரி நூல் அந்தணர்கள், முருகனுக்குரிய திருமந்திரமாகிய ஆறெழுத்தை அடக்கிய அரிய வேதத்தை நாவால் பாடி வணங்குதற்குரிய திருவேரகம் என்ற கருத்து இடம் பெற்றுள்ளது.

'குன்றுதோறாடல்' என்ற பகுதி 28 அடிகள் கொண்டது.

"ஆடவரும் பெண்டிருமாகச் சேர்ந்து ஆடும் குரவைக் கூத்தில் தானும் ஒருவனாக விளங்குபவன் முருகன். அவன் மலையிடங்கள் தோறும் விளங்குபவன்" என்ற கருத்துச் சொல்லப்பட்டுள்ளது.

இறுதிப் பகுதியாகிய 'பழமுதிர்சோலை' 100 அடிகள் கொண்டது.

"முருகப் பெருமானை நீ பலவாறு ஏத்திப் பரவுக; நீ, கருதிச் சென்ற பொருளினை விண்ணப்பம் செய்தற்கு முன்பே, நீ நினைத்ததை அவனே திருவுள்ளம் பற்றி அருளுவன்!" போன்ற கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*". . . . மாலை மார்ப! நூலறி புலவ!*
*செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!*
*அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை!*
*மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!*
*மணங்கமழ் தெய்வத்(து) இளநலம் காட்டி*
*அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவு . . . !'*

என்பன போன்ற கருத்துக்கள் உள்ளன.

## திருமுறை கண்ட புராணம்

*கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார்.*

இது, 45 திருவிருத்தப்பாக்கள் கொண்டது. தில்லைத் திருக்கோயிலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மூவர் தேவார ஏடுகளைச் சோழ மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் பெற்ற வரலாறு உரைப்பது இந்நூல். அப்போது ஏடுகள் பல செல்லரித்திருப்பது கண்டு கவலை கொண்ட போது,

*"... வேதச் சைவநெறித் தலைவரெனும் மூவர் பாடல்.*
*வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்"*

என்னும் ஓர் அசரீரி எழுந்தது. அதன் பின்னரே திருமுறைகள் வகுக்கப்பட்டன.

*"திருநாவுக் கரையரெனும் செம்மையாளர்*
*தீஅமணர் சிறைநீங்க அதிகைமேவும்*
*குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலை*
*கொடுங் 'கூற்றா யின'என்ன எடுத்துக் கோதில்*
*ஒருமானைத் தரிக்குமொரு வரையுங் காறும்*
*ஒருநாற்பத் தொன்பதினா யிரம தாகப்*
*பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்*
*பிஞ்ஞகனார் அடியிணைகள் பெற்று ளாரே!"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருவங்கமாலை

*ஸ்ரீ காருடை. சூரியமூர்த்திப்பிள்ளை*

நாவுக்கரசர் பாடிய 'தலையே நீ வணங்காய்' என்ற பதிகம் போல், மாதவச்சிவஞான சுவாமிகள் மீது பாடப்பட்டது.

சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீன முனிவர்களில் முதன்மையானவர். பல நூல்கள் பாடியவர்.

இத் 'திருவரங்க மாலை'யில் 'தலை' முதலான உறுப்புக்களுக்கு அறிவுரை கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது. 12 பாடல்கள் உள்ளன.

*"ஆக்கை யால்பயனென் – அன்பின்*
*அத்து விதம யக்கம்*
*போக்கும் சிவஞானப் புனிதன் பணிசாரா*
*ஆக்கையால் பயனென்"*

என்பது அவற்றில் ஒன்று!

## திருவடிப் புகழ்ச்சி

*இராமலிங்க அடிகளார்*

இறைவனின் திருவடிப் புகழை எடுத்தியம்புவது 'திருவடிப் புகழ்ச்சி'யாகும். அவ்வாறு இயம்பினால் இருவினைத் தொடர்பு நீங்கும்.

'திருவருட்பா'வில் மூன்றாம் திருமுறையில் வரும் முதற்பகுதி இது.

இதன்கண் தொடக்கத்தில் 1 வெண்பா உள்ளது. அடுத்து 192 சீராலான கழிநெடி ஆசிரிய விருத்தப்பா அமைந்துள்ளது. 128 வரிகள் உள்ளன.

*"பரசிவஞ் சின்மயம் பூரணஞ் சிவபோக*
*பாக்கியம் பரமநிதியம்"*

என்று தொடங்குகின்றது. இறைவனின் திருவடி, அவனின் ஒரு பகுதி. எனவே அத்திருவடியை முழுமுதற் பொருளாகவே கூறுகின்றார் அடிகளார். இவ்வாறே பிற அடிகளும் வந்துள்ளன.

பார்க்க:-

திருவருட்பா

## *திருவடிப் பெருமை*

*இராமலிங்க அடிகளார்.*

சிவத்தின் பெருமை அப்பெருமானின் திருவடிமேல் ஏற்றி உரைக்கப்பட்டமையால் 'திருவடிப் பெருமை' எனப்பட்டது.

பசுகரணங்கள் யாவும், பதிகரணங்களாக மாறப்பெற்ற தலைவி, தலைவனான சிவபெருமானின் பெருமையை எடுத்துரைப்பது. சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல இடம்பெற்றுள்ளன.

இது, திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் உள்ளது. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவால் ஆனது. 45 பாடல்கள் கொண்டது.

*"திருவாளர் கனகசபைத் திருநடஞ்செய் தருள்வார்*
*தேவர்சிகா மணிஎனக்குத் திருமாலை கொடுத்தார்!*
*உருவாளர் அருவாகி ஒளியாகி வெளியாய்*
*ஓங்குகின்றார் என்னுடைய உயிர்த்துணைவர் அவர்தம்*
*பெருவாய்மைத் திறம்சிறிதும் பேசமுடி யாதே*
*பேசுவதார் மறைகள் எலாம் கூசுகின்ற என்றால்*
*துருவாமல் இங்கெனக்குக் கிடைத்ததைஎன் சொல்வேன்*
*சொல்அளவல் லாதசுகம் தோன்றுவதென் தோழி!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

பார்க்க:-

திருவருட்பா

## *திருவருட்பயன்*

*உமாபதி சிவாசாரியார்.*

திரு + அருள் + பயன் = திருவருட்பயன்.

இறைவனது திருவருளைப் பற்றியும், அதனது பயனைப் பற்றியும் விளக்கும் நூல். சைவ சித்தாந்த சாத்திரம் 14ல் ஒன்று.

இது, திருக்குறளைப் போலப் பத்துப்பத்துப் பாடல்கள் கொண்ட அதிகாரங்கள் 10 கொண்டது. எனவே 100 பாடல்கள். நூலின் தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுள் ஒன்று உண்டு. பத்து அதிகாரங்களாவன:- பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மலநிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத்து அருள்நிலை, அணைந்தோர் தன்மை. இவற்றில் முதல் 5 அதிகாரமும் 'பொது' என்றும்; பின்னைய 5 அதிகாரமும் 'சிறப்பு' என்றும் கூறப்படும்.

இந்நூலில் உள்ள முதல் 3 அதிகாரமும், முறையே 'இறை, உயிர், தளை' ஆகிய முப்பொருள் இலக்கணங்களைக் கூறும்; 4ஆம் அதிகாரம் - இறைவனின் திருவருளே உலகில் சிறந்ததும் உயர்ந்ததும் ஆகும் என்று கூறும்; 5ஆம் அதிகாரம் - அந்த அருளே உயிர்களிடத்து வைத்த கருணையால், எழுந்தருளி வந்து, உயிர்க்கு உறுதி தரும் என்று கூறும். 6ஆம் அதிகாரம்! அறிவிக்க அறியும் உயிர், அறியும் நிலையை விளக்குவது; 7ஆம் அதிகாரம் - அதனால் உயிர்பெறும் விளக்கத்தைக் கூறுவது; 8ஆம் அதிகாரம் - விளக்கம் பெற்ற உயிர் இன்புறும் விதத்தைக் கூறுவது; 9ஆம் அதிகாரம் - பெற்ற இன்பத்தை நெகிழவிடாமல், தொடர்ந்து நின்று பயன்பெறுதற்குத் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும் என்கிறது; 10ஆம் அதிகாரம், இவ்வாறு திருவருளால் படிப்படியாக உயர்ந்த உயிர், இறைவனது திருவடியில் அணுகியபின் எந்நிலையுறும் என்பதைக் (அதாவது அணைந்தோர் தன்மை) கூறுகின்றது.

*"சிவம் முதலே ஆமாறு சேருமேல் தீரும்*
*பவம் இதுநீ ஓதும்படி"*

என்பன போன்ற பாக்கள் உள்ளன.

## திருவருணைக் கலம்பகம்

*சைவ எல்லப்ப நாவலர்.*

'திருவண்ணாமலை'யை 'அருணை' என்றும், 'அருணகிரி' என்றும் வழங்குவர். 'புயவகுப்பு' முதலிய 18 உறுப்புக்களும், பல பாக்களும் கலப்பாகக் கூறப்படுவது. 'காப்பு'ச் செய்யுள் 2 தவிர, 100 பாடல்கள் கொண்டது.

*"அடியவர் சிந்தையில் இனிதுறை சங்கரர்*
*அருணை வளம்பதி யன்னாரே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## திருவருணை யமக அந்தாதி (முதற்பாகம்)

*திம்மப்ப அந்தணனார்.*

'அருணை' என்பது திருவண்ணாமலையைக் குறிக்கும்.

இதில், 'காப்பு'ச் செய்யுள் 1 தவிரக் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 33 உள்ளன. வந்த சொல்லே திரும்பத் திரும்ப வந்து, வெவ்வேறு பொருள் தருவது, 'யமக'த்தின் இலக்கணம். இவ்விலக்கணத்தோடு, பாடல்கள் அனைத்தும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

*"சேயரி யோடயன் சென்றிறைஞ் சும்பெருஞ் சீர்மைமிக்கார்*
*சேயரி யோடயில் வேனய னத்தர்வீழ் தீங்கருறாச்*
*சேயரி யோடயில் வண்டினஞ் சூழ்பொழிற் சீரருணைச்*
*சேயரி யோடயி லார்படைத் தேவரைச் சேருமினே!"*

என்பன போன்ற யமக அந்தாதிப் பாடல்கள் உள்ளன.

## திருவருள் முறையீடு

*இராமலிங்க அடிகளார்.*

முறையீடு – விண்ணப்பம். இறைவனின் திருவருளைப் பெறுதற்கான முறையீடு என்பது பொருள். 232 பாடல்கள் உள்ளன.

திருவருட்பா, 3ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. இதன்கண் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

*"குருந்தாமென் சோக மனமான*
*பிள்ளைக் குரங்குக் கிங்கே*
*வருந்தா ணவமென்னு மானிடப்*
*பேயொன்று மாத்திரமோ*
*பொருந்தா மதமென் றிராக்கதப்*
*பேயும் பிடித்ததெந்தாய்*
*திருந்தா அதன்குதிப் பென்ஒரு*
*வாய்கொண்டு செப்பரிதே!"*

என்பது அவற்றில் ஒன்று!

பார்க்க:–

திருவருட்பா

## திருவலங்கற்றிரட்டு (முதற்கண்டம்)

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

அலங்கல் – மாலை; திரட்டு – தொகுப்பு.

திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு நூலுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

இது, முருகவேளுக்குரிய பாமாலைத் தொகுதி.

இந்நூல், 'தேவாரம்' போல் பண்ணோடு பாடுதற்குரியது. பத்துப் பத்துப்பாக்கள் கொண்ட பதிகங்களாலானது.

தொடக்கத்தில், 'காப்பு', 'தௌத்தியம்' என்ற தலைப்பில் 21 பாடல்கள் உள்ளன. அடுத்து, 'திருவருளடிமைப் பிரார்த்தனை' முதல் 'திருக்கந்தர் பல்லாண்டு' வரை 58 பதிகங்கள் 580 பாடல்கள் உள்ளன.

*"திருமலி முதுமறை நுவல்பொருளுந்*
*தினசைவ முறைமுறை யிடுபொருளும்*
*பொருண்மலி மிருதிகள் புகல்பொருளும்*
*புகரில்பு ராதன சரிதமறை*
*அருமறை பலநவில் கிறபொருளு*
*மறிஞர்க ளறைதிரு மொழிபொருளும்*
*தெருண்மலி குகனென மொழிபொருளும்*
*சிவசிவ சிவசிவ சிவசிவவே!"*

என்பது 'பஞ்சமப் பண்'ணில் அமைந்தது. இவ்வாறே பிறவும் வரும்!

## திருவலங்கற்றிரட்டு (இரண்டாம் கண்டம்)

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்*

அலங்கல் – மாலை; திரட்டு – தொகுப்பு.

திரு – கண்டாரால் விரும்பப்படும் தன்மை. ஈண்டு நூலுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

இந்நூலுக்கும் 'பல்சந்தப் பரிமளம்' என்ற வேறுபெயரும் உண்டு. இதன்கண், 'நேரிசை வெண்பா' முதல், 'வாயுறை வாழ்த்து மருட்பா' வரை பல்வேறு யாப்பு வடிவங்களும் இடம் பெற்றுள்ளன; இரத பந்தங்களும் உள்ளன.

இந்நூலில், 'வெள்ளியல் (வெண்பாவியல்), ஆசிரியவியல், கலியியல், வஞ்சியியல்' என 4 பிரிவுகள் உள்ளன. 532 செய்யுட்கள் உள்ளன. பல பாடல்கள், சந்தப்பாக்கள். முருகப் பெருமானின் பெருமை, அருட்டன்மைகளைக் கூறும் நூல்

*"புனல் கொண்டும் பூக்கொண்டும் பூரணனைப் பூசித்துத்*
*தினமிளிரு முடறானே திருவுடையா ருடலென்றும்*
*இழிவற்ற புகழ்கூறி யிணையற்ற மனுவோது*
*தொழினித்த முளநாவே சுசியுடையார் நாவென்றும்*
*நனவதிலும் கனவதிலு நாயகனை நனிநினையும்*
*மனமதுநன் மனமென்று மகிழ்நெடிய வேலோய் கேள்... !"*

என்பது 'வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா' வின் தொடக்கம். இவ்வாறே பிறவும் வரும்!

## திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

*நக்கீரதேவநாயனார்*

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96 ல் 1.

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்தது. ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் மூவகை யாப்பில் அமைந்து, கோவையாகத் தொடுக்கப்பட்டதால் 'மும்மணிக்கோவை' எனப்பட்டது.

'திருவலஞ்சுழி' என்னும் தலம், சோழநாட்டில், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தேவாரப் பாடல் பெற்றது. ஆங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்றது.

இந்நூல் ஆசிரியப்பா – 5; வெண்பா – 5; கட்டளைக் கலித்துறை – 5 என மொத்தம் 15 பாடல்களே உள்ளன. அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

இந்நூலில், திருவலஞ்சுழியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் கண்டு, அவனின் பேரழகில் ஈடுபட்டுக் காதல் கொண்டு வருந்தும் தலைவியின் நீங்கா அன்பின் திறத்தைப் புலப்படுத்தும் பாடல்களும், அவ் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் போற்றும் அகத்துறைப் பாடல்களும் உள்ளன.

*"அண்ணலது பெருமை கண்டனம் கண்ணுதற்*
*கடவுள் மன்னிய தடமல்கு வலஞ்சுழிப்*
*பனிப்பொருட் பயந்து பல்லவம் பழிக்கும்*
*திகழொளி முறுவல் தேமொழிச் செவ்வாய்த்*
*திருந்திருங் குழலியைக் கண்டு*
*வருந்திஎன் உள்ளம் வந்தவப் போதே!"*

என்பது, தலைவியைக் கண்டுவந்த பாங்கன், அவளது சிறப்பைத் தலைவனுக்குக் கூறியதாக அமைந்த பாடல். இவ்வாறே பிறவும் உள்ளன.

## திருவாசகம்

*மாணிக்க வாசகர்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 8ஆவது திருமுறையைச் சார்ந்தது. மெய்கண்டார் அருளிய 'சிவஞானபோதம்' 8ஆம் சூத்திரத்தோடு இஃது இயைபுடையது.

திரு + வாசகம் – திருவாசகம். வாசகம் = சொல். ஈண்டு, சொல்லாகிய நூலைக் குறிக்கும். 'திரு' என்பதற்குப் பலபொருள் உண்டு. 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை' என்ற பொருளும் உண்டு. இங்கு, நூலுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

திரு – வீடு. ' திருவாசகம் – வீடளிக்கும் அருள்மொழி. வீடு விரும்புபவரின் உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருட்பாடல்களால் ஆகிய நூல் என்றும் பொருள் கொள்ளலாம்.

மாணிக்கவாசகர் பாடத் தில்லை நடராசப் பெருமானே தம் கைப்பட எழுதி, 'மாணிக்கவாசகன் சொல்ல, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது' எனத் தம் கைச்சாத்தும் இட்டுத் தில்லைப் பொன்னம்பலத்திலுள்ள பஞ்சாக்கரப்படி மீது வைத்தான் என்று சொல்லப்படுகின்றது.

'திருவாசகம்' பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. கல்நெஞ்சும் கனிந்துருகும் படியான பாடல்களையுடையது. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. இதில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்த மேலைநாட்டுக் கிறித்துவப் பாதிரியார் டாக்டர் ஜி.யு. போப் ஐயர், இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூலில் வரும் திருவெம்பாவைப் பாடல்களைச் 'சயாம்' 'இந்தோனேசியா' முதலான நாடுகளிலும் பாடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்கண், 'சிவபுராணம்' முதல் 'அச்சோப்பதிகம்' ஈறாக 51 திருப்பதிகள் – 658 பாடல்கள் உள்ளன. மேலும் சில பாடல்கள் சில பிரதிகளில் இடம்பெற்றுள்ளன.

இத் 'திருவாசகம்' பாடப்பெற்ற திருத்தலங்கள்: திருப்பெருந்துறை, தில்லை, உத்தரகோச மங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருத்தோணிபுரம், திருவாரூர் முதலியன. இந்நூலில் அமைந்துள்ள யாப்பு வகைகள்:– கலிவெண்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, வெண்டளையால் வந்த இயல்தரவிணைக் கொச்சகக் கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர் ஆசிரிய விருத்தங்கள், கலித்தாழிசை, கலி விருத்தம், நேரிசை வெண்பா, கொச்சகக் கலிப்பா முதலியன.

முதலில் அமைந்துள்ள 'நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' எனும் பதிகம், சைவப் பெருமக்களால் நாள்தோறும் பாராயணம் செய்தற்குரிய சிறப்புடையது.

சிவன்கோயில்களில் நாள்தோறும் அதிகாலையில் ஓதப்படுவது, இந்நூலில் இடம்பெற்றுள்ள 'திருப்பள்ளியெழுச்சி'யாகும். அவ்வாறே, இரவு 'அர்த்த சாமத்'தின் போது, மணிவாசகர் மொழிந்த 'திருப்பொன்னூசல்' பாடப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் மார்கழித்திங்களில், 'திருவெம்பாவை' ஓதுவதற்கெனச் சிலநாட்கள் ஒதுக்கப்படும். அது, அத்திங்கள் 'திருவாதிரை' நாளன்று நிறைவுபெறும். இந்த நாட்கள் 'தேவாரம்' உள்ளிட்ட பிற திருமுறைகளைப் பாடுதல் இல்லை. இதனால் திருவாசகச் சிறப்பு ஒருவாறு புலனாகும்.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்று தொடங்கும் 'திரு அண்டப்பகுதி', அறிவியலோடு தொடர்புடையது என்பர் அறிஞர். மேலும் இதில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைந்த தெய்வீகத் திருப்பாடல்கள் கொண்ட இந்நூலில், எந்த ஒரு பாடலைப் படித்தாலும் கற்கண்டின் சுவையை விடத்

தித்திக்கும் என்பது உண்மை. 'வேதத்தை விடத் திருவாசகம் சிறந்தது' என்பர் சிவப்பிரகாச சுவாமிகள்.

> *"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்*
> *பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்*
> *விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத் தீசன்*
> *கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*
> *மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு*
> *புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!"*

என்பது, திருவம்மானையில் வருவது. எல்லாம் வல்ல முழுமுதற்பொருளாகவுள்ள சிவபெருமானே, மாணிக்க வாசகருக்காக மண் சுமந்து கூலி கொண்டு, பாண்டியனால் பிரம்படிபட்டான் என்பது உலக வரலாற்றில் எங்கும் காணாத புதுமை.

நூல் முழுதும் இத்தகைய பாடல்களைக் காணலாம்.

## திருவாதவூரர் புராணம்

*கடவுண் மகா முனிவர்*

புராணம் – பழைய வரலாறு. திருவாதவூரர் – மாணிக்கவாசகர்.

மதுரைக்கு அருகில் அமைந்துள்ளது திருவாதவூர். இங்குத் தோன்றியவர் மாணிக்கவாசகர். சமயகுரவர் நால்வரில் ஒருவர். திருவாசகமும், திருக்கோவையாரும் அருளிச் செய்தவர். இவருக்காக மதுரைச் சொக்கநாதப் பெருமான் செய்த திருவிளையாடல்கள் பலவாம்.

இந்நூலில் 'சிறப்புப் பாயிரம்' – 7 செய்யுட்கள் தவிர, 454 திருவிருத்தப்பாக்கள் உள்ளன. 'மந்திரிச் சருக்கம்' முதல் 'திருவடிபெற்ற சருக்கம்' ஈறாக 7 சருக்கங்கள் உள்ளன.

இதன்கண், மாணிக்க வாசகரின் திருவவதாரம், பாண்டியனுக்கு முதலமைச்சராயிருந்தது. குதிரை வாங்கச் சென்றது, குருந்த மர நீழலில் இறைவன் ஆட்கொண்டது, அரசனின் தண்டனை, மாணிக்க வாசகருக்காக இறைவன் குதிரைச் சேவகனாகப் பிட்டுக்கு மண் சுமந்தவனாகத் திருவிளையாடல் புரிந்தது எனப் பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

> *"அண்டருக் கரியாய் போற்றி! அடியவருக் கெளியாய் போற்றி!*
> *வண்டமிழ் பாண்டிநாடு வாழமண் சுமந்தாய் போற்றி!*
> *கண்டனக் கினியமேனி நாட்டியென் சென்னிமீது*
> *முண்டகத் திருத்தாள்வைத்த முத்தனே! போற்றி போற்றி!"*

என்பது 'மண் சுமந்த சருக்கத்'தில் வருவது. இவ்வாறே பிறவும் வரும்!

## திருவாரூருலா

*அந்தகக்கவி வீரராகவ முதலியார்.*

'உலா' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று.

ஒரு தலைவன், 'பேதை' முதல் 'பேரிளம் பெண்' ஈறாகிய ஒரு பருவ மகளிர், தன்னைக் கண்டு காதல் கூரும்படி, வீதியில் பவனி போந்தான் என்று, கலிவெண்பாவில் பாடவேண்டும் என்பது இலக்கணம்.

தாம் வழிபடுதற்குரிய கடவுள் மீதும், தம்மை ஆதரித்த தலைவர் மீதும் இத்தகைய 'உலாப் பாடுவது மரபு.

'திருவாரூர் உலா' என்னும் இந்நூல், திருவாரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்டது. இதில் உள்ள கண்ணிகள் : 528.

பாட்டுடைத் தலைவராகிய திருவாரூர்ப் 'புற்றிடங் கொண்ட பெருமானு'டைய பெருங்கருணைத்திறம், 'தியாகேசர்' எனும் மற்றொரு திருப்பெயர் கொண்ட அவரின் திருவிளையாடல்கள்; இங்கே வழிபட்டுப் பேறு பெற்றவர்கள், தேவார திருவாசகம் முதலான திருமுறைப் பாடற்கருத்துக்கள், நாயன்மார்களின் அரிய செயல்கள், உவமை முதலான அணிநலன்கள் முதலாயின இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூலின் தொடக்கத்தில் 'காப்பு'ச் செய்யுளும், 'அவையடக்கமு'ம் என 3 பாடல்கள் உள்ளன.

*"....விடுபரிதித்*
*தேருந் தியாகேசர் தெய்வத் திருத்தேரும்,*
*ஊரும் பெருவீதி யுட்போதக் – காரிகையும்*
*வந்து தொழுதெழுந்து மாணிக்கப் பேரழகை*
*முந்து விழியின் முகந்துண்டாள்!..."*

என்பன போன்ற பகுதிகள் உள்ளன.

## *திருவாரூர்த் தியாகராச லீலை*

*மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை*

'லீலை' என்பது 'திருவிளையாடலை'க் குறிக்கும்.

திருவாரூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமான் மீது பாடப்பட்டது.

'தியாகராச லீலை' என்பது 'சங்கர சேவகன்' எனும் சோழ அரசனது வேண்டுகோளைத் திருவுளம் பற்றித் தியாகேசர், அரசவடிவம் கொண்டு அருளிப், பல ஆண்டு அரசாட்சி செய்த திவ்விய சரித்திரங்களாகிய 360 லீலைகளை உணர்த்துவது. அவற்றில், முதலில் உள்ள 13 லீலைகளும் 14ஆம் லீலையின் முதற்பாகமும் கொண்டதே இத் 'தியாகராச லீலை' எனும் நூல்!

இதற்குத் 'திருவாரூர்த் திருவிளையாடல்' என்ற வேறுபெயரும் உண்டு.

நூலின் தொடக்கத்தில் 'கடவுள் வாழ்த்து' முதலான தலைப்புக்களில் 53 திருவிருத்தங்கள் உள்ளன. இவை தவிர, 699 திருவிருத்தப்பாக்கள் உள்ளன. இந்நூலில், 'திருநாட்டுப் படலம், திருநகரப்படலம், நைமிசப் படலம்' தவிர, 'முதலாவது லீலை' முதல் '14ஆவது லீலை' வரை 14 லீலைப் பாடல்களும் உள்ளன.

*"புற்றிடங் கொண்ட மூர்த்தி பூசைகைக் கொண்டு பன்னூல்*
*கற்றிடங் கொண்ட நெஞ்சீர் கருப்பைசா ராதொழிந்தோர்*
*மற்றிடங் கொண்ட வாரி மணலினும் வயங்க வானத்*
*துற்றிடங் கொண்ட வெண்ணி லுடுவினும் பலரான் மன்னோ!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## *திருவாரூர் நான்மணிமாலை*

*குமரகுருபர அடிகளார்*

'மாலை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் ஒன்று!

வெவ்வேறு வகையான நான்கு மணிகளைத் தொடுத்தமைத்த மாலை போல, 'வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா' என்பவை முறையே அந்தாதியாக அமைய, 40 செய்யுட்களால் அமைவது 'நால்வர் நான்மணி மாலை' யாகும்.

இத் 'திருவாரூர்' நான்மணிமாலை'யில் அகத்துறைச் செய்யுட்கள் பல விரவி வருகின்றன.

முதற்கண் 'காப்பு' – 1 செய்யுள்; வெண்பா – 10; கட்டளைக் கலித்துறை – 10; ஆசிரியவிருத்தம் – 10; ஆசிரியப்பா – 10 என 40 செய்யுட்கள் உள்ளன.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகேசப் பெருமானைப் பற்றிய நூல். ஆதலின் தியாகேசரின் சிறப்புக்கள் எடுத்தோதப்படுகின்றன. சொல்நயம், பொருள்நயம், பல்வேறு அணி நயங்கள் ஆகியன காணலாம்.

*"பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானும்*
*கருமா னுரியதளுங் கச்சும் – ஒருமானும்*
*சங்கத் தடங்காதுந் தார்மார்பும் கண்டக்கால்*
*அங்கத் தடங்கா தவா!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## *திருவாரூர் மும்மணிக்கோவை*

*சேரமான் பெருமாள் நாயனார். (அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்)*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 11ஆம் திருமுறையைச் சார்ந்த நூல்.

'அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை' எனும் மூவகை யாப்பில் அமைந்த பாடல்கள், வரிசையாகச் கோக்கப்பட்டுள்ளமையால் 'மும்மணிக் கோவை' எனப்படும். தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் கோவை என்பதும் ஒன்று!

30 பாடல்கள் உள்ளன. திருவாரூரில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்டது. ஆதலின், 'திருவாரூர் மும்மணிக் கோவை' எனப்பட்டது.

இந்நூலைப் பாடிய சேரமான் பெருமாள் நாயனார், இதனைத் திருவாரூர்ப் பூங்கோயிலில், சுந்தரமூர்த்தி நாயனார் தலைமையில் அரங்கேற்றம் செய்தார்.

இந்நூலில், சிவபெருமானின் பல்வேறு அருட்செயல்கள் சுவைபடச் சொல்லப்பட்டுள்ளன.

*"..... வார்சடைக் கடவுள்*
*அரிவை பாகத்(து) அண்ணல் ஆரூர்*
*எல்லையில் இரும்பலி சொரியும்*
*கல்லோ சென்ற காதலர் மனமே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

*காரைக்கால் அம்மையார்*

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றில் 11ஆம் திருமுறையைச் சார்ந்த நூல் இது.

'சம்பந்தர், அப்பர், சுந்தரர்' ஆகிய இம்மூவர் பாடியது தேவாரப் பதிகம். ஆயினும் இவர்கட்கு முன்பே காரைக்காலம்மையார் பாடிய 2 பதிகங்கள், காலத்தால் முற்பட்டமையால் 'மூத்த திருப்பதிகம்' எனப்பட்டன. 'மூத்த' என்பதற்கு 'முதன்மையான' என்ற பொருளும் கொள்வர். 'பதிகம்' என்பது 10 பாடல் கொண்டது. சிலவற்றில் 11 பாடலும் உண்டு. இவை, பண்ணோடு பாடத்தக்கவை.

இப்பாடல்களில் சிவபெருமானின் தன்மைகள் பேசப்படுகின்றன. பதிகங்களின் இறுதியில் அம்மையார், தம்மைக் 'காரைக்கால் பேய்' என்று கூறிக் கொள்வதுடன், முதற்பதிகத்தைக் கற்பவர்கள் 'சிவகதி சேர்வர்' என்றும்; 2ஆம் பதிகத்தை ஓதுபவர்களுக்குப் 'பாவம் நாசமாகும்' என்றும் கூறுகின்றார்.

*"சூடும் மதியம் சடைமேல்*
*உடையார் சுழல்வார் திருநட்டம்*
*ஆடும் அரவம் அரையில்*
*ஆர்த்த அடிகள் அருளாலே*
*காடு மலிந்த கனல்வாய்*
*எயிற்றுக் காரைக் கால்,பேய்தன்*
*பாடல் பத்தும் பாடி*
*ஆடப் பாவம் நாசமே!"*

என்பது இறுதிப்பாடல்!

சைவ நாயன்மார்களில், காரைக்காலம்மையாரும் ஒருவர் என்பது

குறிப்பிடத்தக்கது.

## திருவாவடுதுறைக் கோவை

*தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்*

'கோவை' என்பது தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகை 96ல் 1.

'காட்சி' முதலான துறைகள் முறையே கோக்கப்படுவதால் 'கோவை' எனப்படும்.

தமிழில் உள்ள ஐந்து இலக்கணங்களில் பொருளின் பகுதியாகிய அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைவது. 'குறிஞ்சித்திணை' முதலிய ஐந்திற்கும் உரிய 'முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்' வாயிலாகத் தலைவன், தலைவியருடைய ஒழுக்கங்களைத் தெரிவிப்பது. எனவே, இந்நூலுக்கு 'ஐந்திணைக் கோவை' என்ற பெயரும் உண்டு.

இந்நூல், கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் பாடப்படுதல் மரபு. செய்யுள் எண்ணிக்கையும் 400க்குக் குறையாமலிக்க வேண்டும்.

தாம் வழிபடுதற்குரிய கடவுள் மீதும், தம்மை ஆதரிக்கும் வள்ளல்கள் மீதும் இத்தகைய 'கோவை' பாடுதல் மரபு.

'திருவாவடுதுறைக் கோவை' என்னும் இந்நூல், திருவாவடுதுறையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மாசிலாமணி ஈசர்மீது பாடப்பட்டது. அம்பாளின் பெயர், 'ஒப்பிலாமுலையம்மை', 'ஒப்பிலாள்' என்பது.

இந்நூலில் 'விநாயக வணக்கம் – 2பாடல்; நூலினிறுதியில் 'வாழ்த்து – 1 பாடல் என 3 போக, 456 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன.

இதில், தலவிசேடங்கள், சிவபெருமான் திருவிளையாடல்கள், சைவநூற் கருத்துக்கள், அணிநயங்கள் முதலாயின சொல்லப்பட்டுள்ளன.

*"முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவருஞ்*
*சத்தி யென் னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ?"*

என்பன போன்ற கருத்துக்களைக் காணலாம்.

## திருவிசைப்பா

*கண்டராதித்த தேவர்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது.

தேவாரம் போல் பண்ணோடு பாடத்தக்கது.

10 பாடல்கள் கொண்டது. திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும் போது, இத் திருவிசைப் பாவையும் சேர்த்துப் பாடுவது மரபு. 'கோயில்' எனப்படும் சிதம்பரத்தைக் குறித்த பாடல்கள் இவை. தில்லைப் பெருமானைக் காணும் வேட்கை மிகுதியை உரைப்பன.

*"மின்னார் உருவம் மேல்வி ளங்க*

*வெண்கொடி மாளி கைசூழப்*
*பொன்னார் குன்றம் ஒன்று வந்து*
*நின்றது போலும் என்னாத்*
*தென்னா என்று வண்டு பாடும்*
*தென்தில்லை அம்ப லத்துள்*
*என்னார் அமுதை எங்கள் கோவை*
*என்றுகொல் எய்துவதே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு.

## திருவிசைப்பா

*கருவூர்த்தேவர்*

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் 9ஆம் திருமுறையைச் சார்ந்தது. தேவாரப்பதிகம் போல் இசையுடன் பாடத்தக்கது. 10 பதிகங்கள்: 103 பாடல்கள். திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும் போது, திருவிசைப்பாவையும் சேர்த்துப் பாடுவது மரபு.

கோயில் (சிதம்பரம்), திருக்கரந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம். திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர் எனும் 10 திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்டவை.

முதற்பதிகத்தில், "சிவபெருமானுக்குச் சிறந்த கோயிலாய் விளங்குவது தில்லைச் சிற்றம்பலமே!" என்பது சொல்லப்பட்டுள்ளது. இறைவனைக் காதலித்த ஒருத்தியின் கூற்றாய் அமைந்துள்ளது 2ஆம் பதிகம். மற்றொன்றில் தோழி ஒருத்தி, தலைவனிடம் கூறும் கூற்றாகவும், தலைவி கூற்றாகவும் ஒருபதிகத்தில் வந்துள்ளன; எஞ்சிய பாடல்களில் இறைவனின் சிறப்புக்கள் சொல்லப்பட்டுள்ளன.

*"மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்*
*முகத்தலை அகத்தமர்ந்(து) இனிய*
*பாலுமாய், அமுதாப் பன்னகா பரணன்*
*பனிமலர்த் திருவடி இணைமேல்*
*ஆலயம் பாகின் அனையசொற் கருவூர்*
*அமுதுறழ் தீந்தமிழ் மாலை*
*சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்*
*சிவபதம் குறுகிநின் றாரே!"*

என்பன போன்ற பாடல்கள் உண்டு!

## திருவிசைப்பா

*சேதிராயர்.*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது. தேவாரம் போல் பண்ணோடு பாடத்தக்கது.

10 பாடல்கள் கொண்டது. திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும்போது இத் 'திருவிசைப்பா'வையும் சேர்த்தே பாடுவர்.

இப்பதிகம், தில்லைப் பெருமான் மீது கொண்ட காதலால், மெலிகின்ற ஒருத்தியின் ஆற்றாமையைச் செவிலி, அப்பெருமான் முன் சென்று விண்ணப்பித்துக் கொண்டதாகப் பாடப்பட்டது. மேலும் அந்தாதித் தொடையிலும் அமைந்துள்ளது.

*"சேலு லாம்வயல் தில்லையு ளீர்!உமைச்*
*சால நாள்அயன் சார்வதி னால்இவள்*
*வேலை யார்விடம் உண்டுகந் தீர்என்று*
*மால தாகும்என் வாணுதலே!"*

என்பது இவற்றில் ஒன்று!

## *திருவிசைப்பா*

*சேந்தனார்*

சைவத்திருமுறை 12ல் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது.

தேவாரப்பதிகம் போல் இசையுடன் பாடத்தக்கவை.

பதிகம் : 3 பாடல் : 34.

திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும்போது, இத் திருவிசைப்பாவையும் சேர்த்துப்பாடுவது மரபு.

திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் மூன்று திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது பாடப்பட்ட பதிகங்கள் இவை. இவற்றுள் முதற்பதிகம் தவிர, எஞ்சிய 2ம் செவிலி கூற்றாகப் பாடப்பட்டுள்ளன.

இப்பதிகங்களில் சிவபெருமானின் பெருமை, அவனை அடைக்கலமாக அடைந்தால், வலிய வினைகளும் வந்துசேர மாட்டா, முதலான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

*"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்*
*கரையிலாக் கருணைமா கடலை*
*மற்றவர் அறியா மாணிக்க மலையை*
*மதிப்பவர் மனமணி விளக்கைச்*
*செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்*
*திருவீழி மிழலைவீற் றிருந்த*
*கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்*
*குளிரஎன் கண்குளிர்ந் தனவே!"*

என்பன போன்ற, இறைவன் பெருமைகூறும் பாடல்களைக் காணலாம்.

"என் மகள், வெள்ளிய திருநீற்றை அணிவதும், திருவைந்தெழுத்தைச் செபிப்பதும் அல்லாமல் வேறொன்றும் செய்யத் தெரியாதவளாக இருக்கின்றாள். என்மகளுக்கு அருள்புரிவாயாக!" என்று செவிலி கூறுவதாக அமைந்துள்ள பாடல்கள்!

*"திலக நுதல்உமை நங்கைக்கும்*
*திருவா வடுதுறை நம்பிக்கும்*
*குலக அடியவர்க்(கு) என்னையாட்*
*கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்*
*அலதொன்(று) அறிகின்றி லேம்எனும்*
*அணியும்வெண் ணீ(று)அஞ் செழுத்தலால்*
*வலதொன் றிலன்இதற்(கு) என்செய்கேன்?*
*வயலந்தண் சாந்தையர் வேந்தனே!"*

என்பன போல் சுவையான பாடல்களைக் காணலாம்.

## திருவிசைப்பா

*திருமாளிகைத் தேவர்.*

சைவத்திருமுறை பன்னிரண்டில் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது.

திரு + இசை + பா = திருவிசைப்பா. கடவுள் தன்மை பொருந்திய இசைப்பாடல்கள் என்று பொருள். தேவார ஆசிரியர்கள் அருளியவாறே திருவிசைப்பாப் பாடல்களும் இசையுடன் பாடத்தக்கவை. 4 பதிகங்கள் – 45 பாடல்கள் கொண்டது. திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும்போது, இத் திருவிசைப்பாவையும் சேர்த்துப் பாடுவது மரபு.

திருவிசைப்பாவில் அமைந்த பண்கள்: காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம், பஞ்சமம் எனும் ஆறாகும். இவற்றுள் 'சாளரபாணி' தவிர எஞ்சிய 5ம் தேவாரத் திருப்பதிகங்களில் பயின்ற பண்களே.

இத் திருவிசைப்பா முழுதும், தில்லைக் கூத்தப் பெருமானைப் பற்றியே அமைந்துள்ளது. 2ஆம் பதிகத்தில், நடராசரின் திருவுருவம் 'பாதாதி கேசமாக'ப் (அதாவது 'திருவடி' முதல் 'திருமுடி' வரை) பாடப் பெற்றுள்ளது.

3ஆம் பதிகத்தில், தில்லை நடராசப் பெருமானைக் காதலித்துத் தன்வயம் இழந்தாள் ஒருத்தியது நிலையைக் கண்டு அவளின், செவிலித்தாய் கூறும் முறையில் பாடப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு திருப்பாட்டிலும் மகேந்திர மலையும், பலபாடல்களில் அருச்சுனனுக்காகச் சிவபெருமான் வேடவடிவம் கொண்ட வரலாறும் குறிக்கப்பட்டுள்ளது.

நான்காம் பதிகத்தில், தில்லைப் பெருமானிடத்தும் அவனுடைய அடியாரிடத்தும்

அன்பு செய்ய மாட்டாதவர்களது இழிவு உணர்த்தப்படுகின்றது; அத்தகையோரைக் காணுதலும், அன்னவரோடு பேசுதலும் கூடாதென உணர்த்தப்பட்டுள்ளது.

*"சிறப்புடை அடியார் தில்லைச்*
*செம்பொன்அம் பலவற்(கு) ஆளாம்*
*உறைப்புடை யடியார் கீழ்க்கீழ்*
*உறைப்பர்சே வடிநீ(று) ஆடார்*
*இறப்பொடு பிறப்பி னுக்கே*
*இனியராய் மீண்டும் மீண்டும்*
*பிறப்பரைக் காணா கண்வாய்*
*பேசா(து)அப் பேய்க ளோடே!"*

என்பது அவற்றில் ஒன்று. இவ்வாறே பிறவும்.

3ஆம் பதிகத்தில், தில்லைக் கூத்தப் பெருமானைக் காதலித்துத் தன்வயம் இழந்தாள் ஒருத்தியது நிலையைக் கண்டு, அவளின் செவிலித்தாய் கூறும் முறையில் அமைந்துள்ளது.

4ஆம் பதிகத்தில், தில்லைப் பெருமானிடத்தும் அவன் அடியாரிடத்தும் அன்பு செய்ய மாட்டாரது இழிவு உணர்த்தி, அத்தகையோரைக் காணுதலும் அவரோடு பேசுதலும் கூடா என உணர்த்துவதாக அமைந்துள்ளது.

## திருவிசைப்பா

*திருவாலி யமுதனார்*

சைவத் திருமுறை பன்னிரண்டில் 9ஆவது திருமுறையைச் சார்ந்தது. தேவாரம் போல் பண்ணோடு பாடத்தக்கது.

4 பதிகங்கள் – 42 பாடல்கள் கொண்டது. திருக்கோயில்களில் 'பஞ்சபுராணம்' பாடும் போது, இத்திருவிசைப்பாவையும் சேர்த்துப் பாடுவது மரபு.

இந்த 4 பதிகமும் 'கோயில்' எனப்படும் தில்லையில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானைப் பற்றியன. இவற்றுள் முதற்பதிகம், நடராசப் பெருமானின் திருவுருவைப் பாதாதி கேசமாக வருணிப்பது; 2ஆம் பதிகம், தலைவனைக் காதலித்த தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது; அந்தாதித் தொடையில் அமைந்தது; 3ஆம் பதிகம், கூத்தப் பெருமானின் சிறப்பைப் புகழ்ந்து கூறுவது; 4ஆம் பதிகம், தில்லைப் பெருமான் மேல் காதல் கொண்டு, அவனைக் காண விரையும் ஒருத்தி கூற்றாக அமைந்துள்ளது. அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

*"இறைவனை என்கதியை*
*என்னுள்ளே உயிர்ப்பாகி நின்ற*
*மறைவனை மண்ணும் விண்ணும்*
*மலிவான் சுடராய் மலிந்த*